
திருச்சி ஜெயில்





‘ஜெயிலைச் சீர்திருத்துவதற்கு ஒரே வழிதான் உண்டு. — ஜெயிலையே அழித்து விடுவதுதான் அந்த வழி.’

— கிரபாட்கின் பிரபு

திருச்சி ஜெயில்

எல். எஸ். கரையாளர், எம். எல். ஏ.

நவயுகப்பிரசுராலயம்

ஜார்ஜ் டவுன், சென்னை

 [ரு. 1-12-0

‘நாம் இருக்கும் நாடு நமது
　　என்பது அறிந்தோம் — இது
நமக்கே உரிமையாம்
　　என்பது அறிந்தோம் — இந்தப்
பூமியில் எவர்க்கும் இனி
　　அடிமை செய்யோம்!’

—பாரதி

‘ நிரபராதிகள் வெளியில் தெரியாமல் ஜெயில்களுக்குள் அநுபவிக்கும் துன்பத்தின் மூலமாகவே ஸ்வராஜ்யம் வரும்.

‘ ஏட்டிகளின் முன்பும் ஒற்றுமையாய் நில்லுங்கள் ! குண்டு மழை பொழிந்தாலும் சத்தியமாக நடவுங்கள் !’

— மகாத்மா காந்தி

‘ நான் ஸ்வராஜ்யத்தைப் பற்றி ஏன் சிந்தனை செய்கிறேன்? ஏனெனில், இந்தியாவில் ஸ்வராஜ்யத்திற்காகச் சிந்தனை செய்யாமல் இருப்பது மகா பாவம்.’

— விநோபா பாவே

பரிசய வார்த்தை

எனது நண்பர் எல். எஸ். சட்டநாதக் கரையாளருக்கும் எனக்கும் இதுதான் முதல் சிறைவாசம். சிறையில் இருக்கும்போது, தம்முடைய நேரத்தை என்னைப் போல் வீணாகக் கழிக்காமல், எனது நண்பர், கண்டதும் கேட்டதுமான விஷயங்களைத் தொகுத்து இந்தப் புத்தகத்தை எழுதியிருக்கிறார். இதற்கு ஒரு முகவுரை நான் எழுதவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். எங்களுடன் இருந்த அநேக சிநேகிதர்கள் ஜெயில் வாசத்தைப்பற்றி மிகவும் அறிந்தவர்களாயிருந்தும், என்னை இம் முகவுரை எழுதவேண்டுமென்று ஏன் கேட்டுக்கொண்டார் என்பது எனக்கு விளங்கவில்லை. தம்மைப் போல் முதல் முதல் சிறை புகுந்தவர்தான் இதற்குத் தகுதியானவர் என்று நினைத்தார் போலும்!

எனக்குக் கஷ்டம் கொடுக்கக் கூடாது என்று எண்ணி, அவரே இப்புத்தகத்திலுள்ள பலபாகங்களை எனக்கு வாசித்துக் காண்பித்தார். இதில் எங்களுடனிருந்த பல நண்பர்களைப் பற்றி அவரது அபிப்பிராயத்தை எழுதியிருக்கிறார்.

சிறையில் வசிப்பதால் ஓர் அரிய சந்தர்ப்பம் நமக்குக் கிடைக்கின்றது. இம்மாதிரி நமது நண்பர்களுடன் நெருங்கிப் பழகும் தருணம் நமக்குக் கிடைப்பது மிகவும் அரிது. சிறையில் எவ்வளவு சௌக்கிய

மிருந்தாலும், நாம் உரிமை பறிக்கப்பட்டவர்கள்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. இவ்விடத்தில் தான் மனிதனின் மனப்பான்மையை நன்ருய்த் தெரிந்து கொள்ளலாம். எனது நண்பர் இதை நன்ருகக் கவனித்து ஆலோசித்து, ஒவ்வொருவரைப் பற்றியும் தமது அபிப்பிராயத்தை இதில் எழுதியிருக்கிருர் என்பது எனது எண்ணம். இந்நாலே வாசிப்பவர்களில் அநேகம் பேர் நமது தலைவர்களை அறிந்தவர்கள். இவர் சொல்வது பொருத்தமா இல்லையா என்பதை அவர்களே ஊகித்துக்கொள்ளலாம்.

கரையாளர் என்னுடன் வேலூர் சிறையிலும் திருச்சி சிறையிலும் இருந்தவர். வேலூரில் உடம்பு ஆரோக்கியம் குன்றி, அங்கிருந்து நாங்களெல்லோரும் வந்த சில நாட்களுக்குப் பின்புதான் இவர் திருச்சி சிறை வந்து சேர்ந்தார். ஜெயில் ஆஸ்பத்திரியில் இன்னின்ன நடப்பதென்பது எனக்குத் தெரியாது. ஆஸ்பத்திரிக்குப் போகும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. மற்ற விஷயங்களில் கரையாளர் அனுபவமும் எனது அனுபவமும் ஒருவாறு ஒன்ருய்த் தான் இருக்கிறது. ஜெயிலில் தினந்தோறும் நடக்கும் விஷயங்களை வெளியிலிருக்கும் நண்பர்கள் நன்ருக அறிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தினுல் தான் இப் புத்தகத்தை இவர் எழுதியிருக்கிருர்.

எதற்காக இந்தச் சத்தியப் போர் தொடங்கியது என்பதைப் பற்றி நமது ஜனங்களுக்கு நாம் சொல்ல வேண்டுவதில்லை. புனு தீர்மானமும் அதை அரசாங் கத்தார் அவமதித்ததும், அதற்குப் பின் பம்பாயில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடி காந்திஜியே

இந்தப் போராட்டத்தை நடத்தவேண்டும் என்று தீர்மானித்ததும் எல்லோரும் அறிந்த விஷயம்.

மகாத்மாவுக்கு அஹிம்ஸையில் பூர்ண நம்பிக்கை உண்டென்பதை நமது மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டுவதில்லை. அதையொட்டி இந்த சத்தியப் போரை அவர் நடத்துகிறார். இந்திய மக்களைக் கேட்காமலே போரில் சேர்த்ததற்காக அவர்களின் வருத்தத்தைப் பற்றி, நமது தலைவர் ராஜாஜி சென்னைச் சட்டசபையில் பேசும்போது நன்றாக விவரித்துச் சொல்லியிருக்கிறார்.

ஐரோப்பாவில் நடக்கும் யுத்தத்தை இந்தியர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையென்று உலகத்திற்கு விளக்குவதற்காகவே இப் புனிதப் போர் நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் காந்திஜி அரசாங்கத்திற்கு இந்தத் தருணத்தில் தொந்தரவு கொடுக்கக் கூடாது என்கிற மனப்பான்மை யுள்ளவர். உலகில் ரத்த வெள்ளம் ஓடுவது அவருக்கு எவ்வளவு துன்பத்தைக் கொடுக்கிறது என்பதை அவருடன் கூடிப் பழகுகிறவர்களே நன்கறிவர். அவர் 'எல்லா ஆங்கிலேயர்களுக்கும்' என்று எழுதிய கட்டுரையிலிருந்தே அவரது எண்ணம் நன்கு வெளியாகின்றது. அவர் ஓர் அவதாரமென்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்த யுத்த முடிவில் நடக்கும் ஒப்பந்தங்களில் அவர் கலந்துகொள்வார் என்கிற நம்பிக்கை எனக்குப் பூர்ணமாக இருக்கிறது. அப்படி ஒப்பந்தம் நடந்தால்தான் பின்னால் உலகத்திற்குத் தொந்தரவில்லாமல் இருக்கும். வெர்சேயில்ஸ் ஒப்பந்தம் நடந்த

சமயத்தில் அமெரிக்கத் தலைவர் வில்ஸன் நல்லெண்ணத்துடன் அதில் கலந்துகொண்டார். அதற்காகத்தான் சர்வதேச சங்கம் ஸ்தாபிப்பதில் அவர் பங்கெடுத்துக்கொண்டார். ஆனால், அவர் நினைத்தபடி நடைபெறவில்லை. சில வருஷங்களுக்குப் பிறகு, மீண்டும் பழைய மாதிரியே உலகம் சுழல ஆரம்பித்துவிட்டது. அதனால்தான், 1914-ஆம் வருஷம் எப்படி ஆரம்பித்ததோ, அதே மாதிரியான நிலைமை 1938-ஆம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் ஏற்பட்டது.

அப்போதே இன்னொரு மாபெரும் யுத்தத்திற்கு ஐரோப்பா தயாராகிவிட்டது என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இது தெரிந்திருந்தும், நமது ஆங்கிலேய நண்பர்கள், அதற்குத் தகுந்தபடி நமக்குச் சுதந்திரமளித்து, நம்மை இந்த யுத்தத்தில் தங்களுக்கு உதவியாக வைத்துக்கொள்ளாதது ஆச்சரியப்படத் தக்க விஷயம். அப்படி யிருந்தும், நமது காங்கிரஸ் தலைவர்கள் எவ்வளவு பொறுமையுடன் இருந்தார்கள், இன்னும் இருக்கிறார்கள் என்பது உலகமே அறிந்த விஷயம். சரித்திராசிரியர்கள் இதை முக்கியமாக எழுதுவார்கள் என்பதைப் பற்றி எனக்குச் சந்தேகமில்லை. எவ்வளவோ கஷ்டங்கள் நேரிட்டும், இன்று இந்தியாவின் விஷயத்தில் பழைய மாதிரியே ஆங்கிலேயர்கள் இருக்கிறார்கள் என்பதைப் பற்றி நினைத்தால் மனம் வருந்தாமல் எவ்வாறிருக்க முடியும்?

அமெரியவர்கள் பேசும் போதெல்லாம் சுயமரியாதையுள்ள இந்தியர்கள் மனம் நொந்துபோகும்படியாகத்தான் பேசுகிறார். இதனால் ஏற்பட்ட பலன் என்ன? நமது தேசத்தைப் பிரிட்டிஷார் சொந்தச்

சொத்தாகத்தான் பாவிக்கிறார்கள்; ஜனங்களின் அபிப்பிராயத்தை அனுசரித்து அவர்கள் நடப்பதாக இல்லை என்று, காங்கிரஸ்வாதிகள் மட்டுமல்லாமல், இதர ராஜீயவாதிகளும் நன்றாய் அறிந்துகொண்டுவிட்டார்கள். ஆயினும் நமக்குள் ஒற்றுமை யில்லை. இதற்குக் காரணம், நம்முடைய சொந்த அரசாங்கம் இல்லாததுதான். காந்திஜி கேட்பது காங்கிரஸ் அதிகாரம் நடத்தவேண்டும் என்பதல்ல; இந்தியர்கள் தங்களது நாட்டில் தாங்களே அதிகாரம் நடத்த வேண்டும் என்பதே. அதைக்கூட அவர் இப்போது கேட்கவில்லை. அஹிம்ஸையைப் பரப்புவதற்குத்தான் சுதந்திரம் வேண்டுமென்று கேட்கிறார். இதைக்கூட அரசாங்கத்தார் கொடுப்பதற்கு மறுத்துவிட்டார்கள்.

இம்மாதிரியே நான் எழுதிக்கொண்டு போனால், முகவுரை எழுதச் சொன்னால் ஏதோ புஸ்தகமே எழுத ஆரம்பித்துவிட்டார் என்று கரையாளரே நினைத்து விடுவார். ஆயினும் சிறைவாசத்திற்கும் நான் முன்பு எழுதியதற்கும் சம்பந்தம் உண்டென்பதை யாரும் மறுக்க முடியாது. நமது சுதந்திரத்தை காந்திஜியினால் நாம் அடையப்போகிறோம் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. இப்படி நமது அருமைத் தலைவர்கள் தங்கள் காரியங்களை விட்டுவிட்டுச் சிறையிலிருப்பதே இதற்கு ஓர் அத்தாட்சியாகும். நிற்க......

ராஜாஜியை நான் நன்றாக அறிந்தவன். அப்படியிருந்தும் அவருடன் சிறைவாசம் செய்தது எனக்கு ஒரு புதுப் படிப்பு. நுட்பமும் கூர்மையும் நிறைந்த அவருடைய புத்தி எனக்கு முன்பே தெரியும். அப்படியிருந்தாலும், அவருடன் தினமும் கூடவே

யிருந்ததால், அநேக விஷயங்களை நான் தெரிந்து கொண்டேன். திருக்குறள் அவருடன்கூட வாசித் ததே ஒரு பெரிய அதிருஷ்டம். ராஜாஜி திருக்குறளை நன்ருய் அறிந்திருக்கிருர். அநேக நுட்பமான விஷ யங்களை அதிலிருந்து அவர் கிரகித்திருக்கிருர். பகவத் கீதையிலும் ஸம்ஸ்கிருதத்திலும் எனக்கு ஒருவாறு ஆசை ஏற்பட்டிருப்பதற்கு அவர்தான் காரணம். ஒரு நாளாவது அவர் கோபித்ததை இந்த ஐந்து மாதத்தில் நான் கண்டதே யில்லை. சிறைவாசத்தில் இப்படி யிருப்பது மிகவும் அபூர்வம். நமது நண்பர்கள் பல பேர், 'ஏன் ஜெயிலில் இது செய்திருக்கக் கூடாது; அது செய்திருக்கக் கூடாது?' என்றுசொல்லுவார்கள். ஆனுல் அவர் இதைப் பற்றி வருத்தமோ கோபமோ கொள்ளவில்லை. இதைப் பற்றி நான் அதிகம் சொல்ல அருகனல்ல. ராஜாஜி, நமது மாகாண அரசாங்கத் தையோ, அல்லது இந்திய அரசாங்கத்தையோ நடத் தாமல், சிறையிலிருப்பது வேறு எந்த நாட்டிலும் நடந்திராத சம்பவம். இவரது புத்தி நுட்பத்தை உபயோகித்துக்கொள்ள முடியாத ஆங்கிலேய அர சாங்கத்தின் மனப்பான்மையைப் பற்றி நான் என்ன சொல்லுவேன்!

நாஜீயத்தை நமது நாட்டிலோ ஐரோப்பாவிலோ மிகவும் திறமையுடன் எதிர்த்தவர் எனது ஆப்த நண்பர் பண்டித ஜவாஹர்லால் நேரு. அவருக்கு நான்கு வருஷம் சிறைவாச மென்ருல், நாம் என்ன சொல்லக்கூடும்? அவருடைய சக்தியை இச் சம யத்தில் ஆங்கிலேயர்கள் தங்களுக்கு உபயோகப் படுத்திக்கொண்டிருக்கலாம். அவரை அரசாங்கத்தில்

சேர்த்துக்கொண் டிருக்கலாம். அவர் இருந்தால், இந்தியாவின் உதவி இந்த யுத்தத்தில் பூர்ணமா யிருந்திருக்கும். அவரது உலக-அன்பை ஆங்கி லேயர்கள் தங்களுக்கு உபயோகப்படுத்திக்கொண் டிருக்கலாம். ஆனல், இப்படி நான் பிதற்றுவதில் என்ன பிரயோசனம்? ஆங்கிலேயர்களுக்கு இந்த எண்ணமே கிடையாது.

நமது காங்கிரஸ் அக்கிராசனர் அபுல் கலாம் ஆஜாத் இஸ்லாம் மதத்தின் மகத்தான பெரிய தலைவர். அரசாங்கத்தார் முஸ்லிம் நாடுகள் தங்க ளுக்கு உதவி செய்வதற்கு இவரையும் ஓர் ஆதார மாக வைத்துக்கொண்டிருக்கலாம். ஆனல் இவரும் சிறைவாசம் செய்கின்றார். இதையெல்லாம் நினைக்கும் பொழுது ஆங்கிலேயர்களிடத்தில் வாஞ்சை எப்படி யுண்டாகும்? ஆயினும் என்னைப் பொறுத்த மட்டில் வாஞ்சை இன்னும் நீங்கவில்லை. எப்படி யாவது நமக்கும் அவர்களுக்கும் ஓர் உடன்படிக்கை வேண்டும்; மகாத்மா காந்தி ஒப்பந்தம் நடக்கும் காலத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் மாறவில்லை. இப்பொழுதாவது ஆங்கிலேயர்கள் அதை அறிந்துகொள்வார்களா? இல்லாவிட்டால், உலகத்துக்கும் நாகரிகத்துக்கும் அழிவு காலம் வந்து விட்டது என்றே நினைக்கவேண்டும்.

மற்ற நண்பர்களைப் பற்றி கரையாளர் இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிறார். அதைப் பற்றி நான் அதிகம் சொல்லவேண்டுவதில்லை. ஆயினும், சுமார் ஐந்து மாத காலம் சிறைவாசத்தில் எப்படிக் கழிந்த தென்று நான் ஆச்சரியப்படவேண்டியது அவசியம்.

சிறையிலிருந்த நண்பர்களுடைய பிரியமும் வாஞ்சையும்தான் எனது சிறைவாசத்தை சுலபமாக்கியது. நண்பர்களின் பெயர்களைச் சொல்வது தகுதியல்ல. ஆயினும், கரையாளர் இருந்த இடத்தில் உடனிருந்த நண்பர்களை நான் நினைக்காமல் இருக்க முடியாது. நான் வேறோரிடத்தில் இருந்தபோதிலும், கரையாளர் இருந்த இடத்தில்தான் பகல் நேரம் முழுதும் வசித்து வந்தேன். நான் சிறைபுகும் முன்பே மட்டப்பாறைச் சிங்கத்தை நன்ருய்த் தெரியும். அவர் என்னிடம் அளவுகடந்த அன்புள்ளவர். அதைச் சிறையில்தான் நன்ருய் அறிந்துகொண்டேன். எனது நண்பர் சொக்கலிங்கம் சிறை வந்த பிறகுதான் என்னைப் பற்றி எவ்வளவு நல்லெண்ணம் வைத்திருக்கிருர் என்பது எனக்கு நன்கு புலப்பட்டது. இது தவிர குமாரசாமி ராஜா, ராமசந்திர ரெட்டியார், எனது சுற்றத்தாரான நாச்சியப்ப கவுண்டர், வி.சி. பழனிசாமி கவுண்டர், வி. கே. பழனிசாமி கவுண்டர், ஸி. பி. சுப்பய்யா முதலியார் இவர்களெல்லோரும் எனது சிறைவாசத்தை நான் சுகமாக அனுபவிப்பதற்கு முக்கிய காரணஸ்தர்கள். இவர்களாலேயே எனது காலம் சுகமாகக் கழிந்தது. ஸ்ரீ. நாடிமுத்துப் பிள்ளை, ரத்தினவேலுத் தேவர், டாக்டர் ராஜன் முதலியோர் என்னுடனேயே இருந்தவர்கள். இவர்களைப் பற்றி அதிகம் சொல்லவேண்டியதில்லை. அரசியலில் எனக்கு வலது கையாயிருந்து உதவி செய்தவர் நாடிமுத்துப் பிள்ளை. அவருடன் சகோதரரைப் போல் பல வருடங்களாய் இருந்து வந்திருக்கிறேன். சிறையில் அவர் எனக்கு மிகவும் உதவி செய்தாரென்று சொன்னல் அது மிகையாகாது. மற்றவர்

களுக்கும் எனக்கும் சிறையில் என்னென்ன செளகரியங்கள் செய்யவேண்டுமோ அவ்வளவையும் அவர் செய்தார். காலேயில் காப்பி முதலிய விஷயங்களில் அம்மாபேட்டை வெங்கடராமய்யர் மிகவும் உதவி செய்தார். இவர்களுடன் இருந்தது எனது அதிர்ஷ்டமே.

இந்தப் புத்தகத்தை அநேகம் பேர் வாசித்து இன்புறுவார்கள் என்று நம்புகிறேன். ஈசன் அருளால் கரையாளர் பல காலமிருந்து தேசத் தொண்டு புரிவாராக!

திருச்செங்கோடு
26-5-41

ப. சுப்பராயன்

முன்னுரை

1940, டிஸம்பர் மாதம் 4-உ நான் கைது செய்யப்பட்டேன். 1941, மேமீ 23-உ விடுதலை யடைந்தேன். இதற்கிடையே, நான் கண்டதும் கேட்டதும், நான் அனுபவித்த சுகமும் கஷ்டமும்தான் இந்நூலாக வெளிவந்திருக்கிறது.

செங்கோட்டை
1 - 6 - 41

எல். எஸ். கரையாளர்

பொருளடக்கம்

உருவப் படங்கள்

திருச்சி கேம்ப் ஜெயிலுக்குள் போன சத்தியாக்கிரகிகளும் அவர்கள் கைதி நம்பர்களும்

கைதி நம்பர்	பெயர்
1	ச. ராஜகோபாலாசாரியார்
2	டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்
3	டி. பிரகாசம்
4	பி. கோபால் ரெட்டி
5	வி. வி. கிரி
6	டாக்டர் ப. சுப்பராயன்
7	வி. ஐ. முனிசாமி பிள்ளை
8	எம். பாபி நீடு
9	பி. ராமஸ்வாமி ரெட்டியார்
10	கே. வெங்கடசாமி நாயுடு
11	என். ஜி. ரங்கா
12	பி. ஆர். தேவர்
13	எம். பல்லம் ராஜு
14	எம். ஜி. நடேசன் செட்டியார்
15	வி. கே. கோதண்டராம ரெட்டி
16	டி. என். ராமகிருஷ்ண ரெட்டி
17	பி. ரங்கா ரெட்டி
18	பி. எல். என். ராஜு
19	என்.வி.நாடிமுத்துப் பிள்ளை
20	எஸ். கே. சடகோப முதலியார்
21	எஸ். சிதம்பர அய்யர்
22	பி. பி. ராமகிருஷ்ண ராஜு
23	கே. ஆர். கரந்த்
24	ராகவ மேனன்
25	பி. எஸ். குமாரசாமி ராஜா
26	எம். வி. வீரபாகுப் பிள்ளை
27	டி. எஸ். சொக்கலிங்கம்
28	டி. நாராயண ராஜு
29	வி. கே. பழனிசாமி கவுண்டர்
30	பி. எஸ். மூர்த்தி
31	வி. ஸி. பழனிசாமி கவுண்டர்
32	ஏ. கே. ஏ. ராமசந்திர ரெட்டி
33	என். ரங்கா ரெட்டி
34	எல். சுப்பராமி ரெட்டி
35	ஏ. பி. ஷெட்டி
36	ஏ. ஆர். ஏ. எஸ். துரைசாமி நாடார்
37	பி. வீராசாமி
38	டாக்டர் எம். ரங்கையா
39	பி. வீரபத்ரஸ்வாமி
40	எச். சீதாராம ரெட்டி
41	கே. சந்திர மௌலி
42	டாக்டர் நாராயண மூர்த்தி
43	பி. டி. வெங்கடாசாரி
44	கே. ஏ. நாச்சியப்ப கவுண்டர்

கைதி நம்பர்	பெயர்
45	டி. கதிரப்பா
46	ஏ. ராமி ரெட்டி
47	செங்கம் பிள்ளை
48	மட்டப்பாறை ஆர். எஸ். வெங்கடராம அய்யா
49	பி. அனந்தாச்சாரி
50	பி. பெருமாள் நாயுடு
51	கே. லிங்க ராஜு
52	எஸ். நாகையா
53	பி. வெங்கடாசலம் பிள்ளை
54	ஸி. துரைசாமி
55	வி. வி. நரசிம்மம்
56	எஸ். ஸி. பாலகிருஷ்ணன்
57	ஸி. பெருமாள்சாமி ரெட்டியார்
58	பி. எம். ஆதிகேசவலு நாயக்கர்
59	எம். துரைக்கண்ணு
60	கே. ஈச்வரன்
61	கே. குலசேகர தாஸ்
62	டி. எஸ். பிரஸாத்
63	பி. புச்சப்ப நாயுடு
64	கே. ஷண்முகம்
65	என். எஸ். வரதாச்சாரி
66	ஜி. வெங்கண்ணு
67	கே. கோட்டி ரெட்டி
68	பி. வி. பாலிகா
69	வி. எஸ். மல்லய்யா
70	எம். திருமலை ராவ்
71	கே. எஸ். அப்துல் காதர்
72	டி. நாகி ரெட்டி
73	டபிள்யு. எஸ். ஸ்ரீனிவாச ராவ்
74	என். அனந்தசயனம்

கைதி நம்பர்	பெயர்
75	ஏ. வேதரத்தினம் பிள்ளை
76	டாக்டர் ஆர். நாகண்ண கௌடா
77	ஆர். வெங்கடப்ப நாயுடு
78	மாரின சுப்பாராவ்
79	டி. வி. ராமஸ்வாமி
80	வி. கூர்மையா
81	ஸி. வெங்கட ரெட்டி
82	கே. சந்தானம்
83	புட்டா சுப்பையா [சார்லு
84	ஆத்மகூரி கோவிந்தா
85	எம். நடராஜன்
86	டி. எஸ். அவிநாசிலிங்கம்
87	ஸி. பி. சுப்பையா
88	பி. ராம சாஸ்திரி
89	என். சங்கர ரெட்டி
90	கே. வி. ஆர். ஸ்வாமி
91	ஸி. எச். சூர்யநாராயணு
92	எம். மாரிமுத்து
93	வி. ஜே. குப்தா
94	ஏ. ஜோகி நாயுடு
95	கிருஷ்ண குடும்பன்
96	இ. கண்ணன்
97	பி. எம். காரியப்பா
98	பி. ஐ. பெல்லியப்பா
99	கே. ஸி. கரும்பையா
100	கே. எம். தேவய்யா
101	ஸி. எம். பூனச்சா
102	எம். ஆர். வெங்கடராமன்
103	எம். பக்தவத்சலம்
104	என். சஞ்சீவி ரெட்டி
105	கே. நடராஜன்
106	வி. ராகவையா
107	ஜி. வெங்கட ரெட்டி

கைதி நம்பர்	பெயர்
108	எஸ். குருவுலு
109	என். ஜி. ராமசாமி
110	கே. சக்திவடிவேலு கவுண்டர்
111	டி. கோவிந்த தாஸ்
112	அப்துல் சத்தார்
113	கே. எஸ். பெரியசாமி கவுண்டர்
114	என். அண்ணுமலேப்பிள்ளை
115	கே. வெஙகடரமணுசார்லு
116	கருணுகரம் சுப்பாராவ்
117	எம். பி. பெரியசாமி
118	பி. வெங்கட நாராயண ரெட்டி
119	எம். பி. தாமோதரன்
120	அம்மாபேட்டை பி. வெங்கடராம அய்யர்
121	எஸ். நாகப்பா
122	கே. ராமகோடீஸ்வர ராவ்
123	டி. ராமசுப்பா ரெட்டி
124	டி. ராமலிங்க ரெட்டி
125	ஏ. சுப்பிரமணியம்
126	கே. குழந்தைவேல் நாயஞர்
127	முஹைதீன் குட்டி
128	டாக்டர் பி. எஸ். ஸ்ரீனிவாசன்
129	டாக்டர் ஏ. சந்து
130	எல். கிருஷ்ணஸ்வாமி பாரதி
131	டி. விஸ்வநாதம்
132	கல்லூர் சுப்பாராவ்
133	ஏ. கருணுகர மேனன்
134	கே. வரதாச்சாரியார்

கைதி நம்பர்	பெயர்
135	ராஜா சிதம்பர ரெட்டியார்
136	கே. கேளப்பன்
137	வி. பூவராகன்
138	வி. வி. கருணுகர நாயர்
139	ஓ. எம். எஸ். நம்பூத்ரிபாட்
140	டி. ஸி. உமர்
141	எம். வெங்கடாசாரி
142	அரங்கில் தாமோதரன்
143	எச். மஞ்சுநாத ராவ்
144	யு. முத்துராமலிங்க தேவர்
145	பிரபல கிருஷ்ணமூர்த்தி
146	பி. எஸ். சாம்பசிவம்
147	என். வெங்கையா
148	கே. சுப்பிரமணியம்
149	பி. ஸ்ரீனிவாச ராவ்
150	பால தண்டாயுதம்
151	ஏ.கே. ஏ. எம். முஹைதீன் மரைக்காயர்
152	பி. லக்ஷ்மணஸ்வாமி
153	என். நாகராஜ அய்யங்கார்
154	எல். எஸ். கரையாளர்
155	டி. ஸ்ரீனிவாச அய்யங்கார்
156	ஆர். மருதை
157	பி. சுப்பராஜு
158	ஆர். நாதமுனி ரெட்டி
159	கே. ஸ்ரீனிவாஸலு செட்டி
160	மோஹன்லால் மேதா
161	டி. ஆர். எல்லமந்த ரெட்டி
162	கே. சேஷாசாரி
163	ஜே. சி. நாகி ரெட்டி
164	ஜி. வெங்கட ரெட்டி (அனந்தப்பூர்)
165	ஏ. சிதம்பர ரெட்டி

கைதி நம்பர்	பெயர்
166	காந்திதாஸ் கே. கிருஷ்ண மூர்த்தி
167	ஆர். எஸ். மாணிக்கம்
168	கே. கணேசன்
169	பி. சத்யநாராயணமூர்த்தி
170	எஸ். சத்தியமூர்த்தி
171	பி. என். அப்பாராவ்
172	பல்ல பெருமாளு
173	எம். வெங்கடரத்னம்
174	ஆர். வெங்கட நாயுடு
175	டி. ராமசந்திர ரெட்டி
176	ஆர். சத்யநாராயணு
177	பி. ஸ்ரீராமுலு
178	எஸ். ராமஸ்வாமி சௌதிரி
179	எம். மாணிக்யராவ்
180	பி. சுப்பாராவ்
181	கே. கோபால ராவ்
182	டி. எம். பாஷ்யம்
183	எஸ். ராமமூர்த்தி
184	தரியா கான்
185	வி. சீதாராமையா
186	டி. பி. முத்துக்குமார ஸ்வாமி
187	எஸ். எல். காந்தா ராவ்
188	ஆர். வி. சுவாமிநாதன்
189	பி. குட்டி சங்கரன் நாயர்
190	கே. பி. மாலிகார்ஜுனுடு
191	ஜி. சன்யாச ராவ்
192	லக்ஷிமி நாராயண நாயக்
193	ஏ. வெங்கடேசம்
194	ரங்கசாயீ
195	டாக்டர் என். அண்ணாஜி
196	ஆர். கிருஷ்ணமூர்த்தி
197	வி. ஆர். பெருமாள் செட்டியார்
198	டி. ஆர். வரதன்
199	டி. பி. சுப்பிரமணிய பிள்ளை
200	ஆர். கிருஷ்ணமூர்த்தி (கும்பகோணம்)
201	பொன்னம்பல கவுண்டர்
202	டாக்டர். வி. சுப்ரமணியம்
203	எஸ். எஸ். ஆர். முத்துக் குமாரஸ்வாமி
204	ஏ. ஆர். கோபாலஸ்வாமி
205	ஷண்முகசுந்தர முதலியார்
206	டி. வி. சடகோபாசாரியார்
207	எச். ஸர்வோத்தம் பாய்
208	பி. சுப்பண்ணு ஷெட்டி
209	பி. ஆர். நாராயண அய்யங்கார்
210	ஆர். கணபதி ரெட்டியார்
211	கே. ஸ்ரீனிவாஸலு நாயுடு
212	டி. குப்புஸ்வாமி அய்யங்கார்
213	எஸ். டி. சின்னசாமி ரெட்டியார்
214	எம். ராமகிருஷ்ண ரெட்டி
215	அப்துல் ரஜாக் ஸாஹிப்
216	பி. சுப்ரமணிய சாஸ்திரி
217	மஞ்சுநாத நாயக்
218	கே. கோபால கிருஷ்ண காமத்
219	என். எஸ். பாய்
220	வெங்கடேச பிரபு
221	கந்தசாமி செட்டியார்
222	கே. வாசுதேவன்

கைதி நம்பர்	பெயர்
223	டாக்டர் எப். எச். வோடியார்
224	வி. குப்புசாமி பிள்ளை
225	ஸ்ரீரங்கம்
226	[நெ. 151 பார்க்க, ஒரு முறை வெளியே போய்த் திரும்ப வந்தவர்]
227	கே. கோவிந்தசாமி பிள்ளை
228	ஆர். சின்னையா பிள்ளை
229	ஸி. எல். ஆராவமுத அய்யங்கார்
230	பி. கே. ரத்னஸ்வாமி காளிங்கராயர்
231	ஆக்கூர் அனந்தாசாரியார்
232	கிருஷ்ணஸ்வாமி ரெட்டியார்

கைதி நம்பர்	பெயர்
233	வி. ரகுநாத ராஜாளியார்
234	[நெ. 191-பார்க்க]
235	எம். யக்ஞ நாராயண
236	திருப்பதி ராஜு
237	குட்லா வெங்கடராம மூர்த்தி
238	ஜி. செஞ்சையா ரெட்டி
239	புலுசு வெங்கடேச்வரலு
240	சட்டி ஆனந்தம்
241	நந்தூரி பிரசாத ராவ்
242	மதகுபட்டி வேலாயுதம் செட்டியார்
243	வி. கே. எஸ். எம். முஹைதீன் லப்பை
244	கிருஷ்ணசாமி பாகவதர்
245	வி. ஸ்ரீனிவாச நாயக்

☆


Memo Repente Fuit Turpissimus

Central Jail 1865

'திடீரென எவரும்
தீயோர் ஆவதில்லை'

செண்ட்ரல் ஜெயில் 1865

[திருச்சி சிறை வாயிலிலுள்ள வாசகம்]



டாக்டர் ப. சுப்பராயன்,

எம்.எல்.ஏ.



வி. ஐ. முனிசாமி பிள்ளை,

எம்.எல்.ஏ.



டி. பிரகாசம்,
எம்.எல்.ஏ.



டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்,
எம்.எல்.ஏ.



டி. எஸ். சொக்கலிங்கம்,

எம்.எல்.ஏ.



எல். எஸ். கரையாளர்,

எம்.எல்.ஏ.

1. சத்தியாக்கிரகம்

1936-ஆம் வருஷம் நவம்பர் மாதம் ஒருநாள் பகல் பன்னிரண்டு மணி.

'உங்களுக்கு வயதென்ன?'

'இருபத்தாறு.'

'ஜெயிலுக்குப் போவீர்களா?'

'போவேன்.'

'கல்யாணம் ஆகிவிட்டதா?'

'இல்லை.'

'கல்யாணம் ஆனால்—'

'ஆனாலும் போவேன்—'

இக் கேள்விகள் திருச்சினாப்பள்ளிச் சிறையில் இப்போது* நம்பர் 1 கைதியாயிருக்கும் ஸ்ரீ. ராஜகோபாலாசாரியாரால் என்னிடம் கேட்கப்பட்டன. இச்சம்பவத்தை ஒருநாள் சாயங்காலம் நான் ஸ்ரீ. பி. கோபாலரெட்டியிடம் சொன்னேன். அவர் சிரித்துக்கொண்டே, 'நாமெல்லோரும் இப்பொழுது (1940-ஆம் வருஷம்) ஜெயிலுக்கு வர வேண்டுமென்று 1936-ஆம் வருஷத்திலேயே அவருக்கு எப்படித் தெரிந்தது?' என்று கேட்டார்.

'எப்படியோ!' என்றேன் நான்.

இப்போது நடக்கும் சத்தியாக்கிரக இயக்கத்திற்கும் 1936-ஆம் வருஷம் என்னிடம் கேட்கப்பட்ட கேள்விக்கும்

---

*1941

நான் சம்பந்தம் கற்பிக்கவில்லை. ஆனால் சட்டசபைக்குச் செல்வதற்கு முன்பே ஜெயிலுக்குப் போவதற்கு அதுதான் முதல் படி என்பதை எனக்குக் காட்டியவர் ஸ்ரீ. ராஜகோபாலாசாரியார்தான்.

1940-ஆம் வருஷம் டிஸம்பர் மாதம் 5-ஆம் தேதிக்குள் சத்தியாக்கிரகம் செய்வது நல்லது என்ற அபிப்பிராயத்தைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தாமே ஒவ்வொரு சத்தியாக்கிரகியையும் நேரில் சந்தித்து அறிவித்திருந்தார். டிஸம்பர் மாதம் 4-ஆம் தேதி காலை நான் சத்தியாக்கிரகம் செய்வதென ஏற்பாடாகியிருந்தது. தென்காசித் தாலூகா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் என்ற முறையில் தென்காசியிலேயே நான் சத்தியாக்கிரகம் செய்வதாகத் தீர்மானித்திருந்தேன். ஆனால், நவம்பர் 30-ஆம் தேதியன்று தென்காசித் தொகுதியின் அஸெம்பிளி அங்கத்தினர் தென்காசி வந்து யுத்த எதிர்ப்பு லிகிதங்கள் அனுப்புவதன் மூலம் சத்தியாக்கிரகம் செய்வதெனத் தீர்மானித்தார். எனவே, நான் என் தொகுதியான சங்கரன்கோவிலில் சத்தியாக்கிரகம் செய்வதென்று தீர்மானிக்க வேண்டியதாயிற்று.

டிஸம்பர் மாதம் 20-ஆம் தேதி, திருநெல்வேலி ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கு நான் அடியில்கண்ட லிகிதம் எழுதி, நேரில் அன்னார் காரியாலயத்தில் கொண்டுபோய்க் கொடுத்தேன் :

திருநெல்வேலி
2—12—40

அன்பார்ந்த ஐயா,

வருகின்ற டிஸம்பர் மாதம் 4-ந் தேதி காலை பத்தரை மணிக்கு சங்கரநயினார்கோயில் கோமதி அம்மன் சந்நிதானத்தின் முன்பு யுத்த எதிர்ப்புக் கோஷங்கள் செய்யப் போகிறேன். காந்திஜியின்

உத்தரவின்படி இந்த முறையில் நான் சத்தியாக்கிரகம் செய்யப் போகிறேன் என்பதைத் தங்களுக்கு அறிவிக்கிறேன்.

தங்கள் அன்பன்,

எல். எஸ். கரையாளர்.

செங்கோட்டையில் என் நண்பர்களிடத்திலும் உற வினர்களிடத்திலும் நான் விடைபெற்றுக்கொண்டேன். 'ஜெயிலுக்குப் போக விடை கொடு' என்றால் யாருமே சந் தோஷமாக விடை கொடுப்பதில்லை. ஆனால் நான் ஜெயி லுக்குப் போகத்தான் வேண்டும் என்பதை மாத்திரம் எல் லோரும் உணர்ந்தார்கள். எனது சிறிய தகப்பனருடைய மனைவியார் என்னை ஆசீர்வதித்து, குங்குமத் திலகமிட்டு, சீக் கிரமே சுகமாகத் திரும்பி வரும்படி வாழ்த்தி அனுப்பினர்.

4வ காலை 9-30 மணிக்கு நான் சங்கரநயினர் கோவில் ரயில்வே ஸ்டேஷன் போய்ச் சேர்ந்தேன். ஸ்ரீ. எஸ். என். அம்பலவாண பிள்ளையும் அங்கு வந்திருந்தார். சரியாகப் பத்தரை மணிக்கு, கோமதி அம்மன் சந்நிதானத் தில் போய் நின்றேன். மூன்று வருஷங்களுக்கு முன்னால் இதே சந்நிதானத்தில்தான் முதன் முதலாகத் தேர்தல் பிரசாரம் ஆரம்பிக்கும்போது நான் சொன்னது எனக்கு இன்னும் நன்றாக ஞாபகம் இருக்கிறது.

'தெய்வ சந்நிதானத்தில் சொல்லுகிறேன். உங்கள் முன்னிலையில் சொல்லுகிறேன். காங்கிரஸ் கிழித்த கோட்டை நான் தாண்டமாட்டேன்.' அன்று நான் சொன் னது இதுதான். அன்று நான் பேசிய கூட்டத்திற்கும் இன்று நான் கண்ட கூட்டத்திற்கும் வித்தியாசம் இருந்தது. அன்று நான் பார்த்த கூட்டம் ஆரவாரக் கூட்டம்; தேர்தலில் காங்கிரஸ் கலந்துகொள்ளவேண்டுமென்று உணர்ச்சி மிகுதி யுடன் வந்து ஒலித்துக்கொண்டிருந்த கூட்டம்; அடிக்கடி

கைதட்டி என்னை உற்சாகப்படுத்திய கூட்டம்; வெற்றி எனக்கே என்பதை உறுதிப்படுத்துவதற்கு அறிகுறியாக வந்த கூட்டம்.

இன்றைக் கூட்டம் அப்படியன்று. அங்கு கூடியிருந்த ஒவ்வொருவர் முகத்திலும் உணர்ச்சி ததும்பியிருந்தது. பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் இருந்தும், அமைதி ஆச்சரியப்படத்தக்கதா யிருந்தது. அடுத்த நிமிஷம் ஒருவர் கைதியாகிறார் என்ற எண்ணம் இந்திய மனப்பான்மைக்கு ஒத்ததன்று என்று சாதாரணமாகச் சொல்லுவார்கள். ஆனால் அந்தப் பெரிய கூட்டத்தில் நான் கைது செய்யப்படும் தருவாயில் இருக்கிறேன் என்பது எல்லோருக்கும் தெரியும். கைது செய்வதற்குவேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் நடந்திருக்கின்றன என்பது அந்தக் கூட்டத்தைப் பார்த்தால் தெரியும். நான் வரும் வழியெல்லாம் போலீஸ். சுற்றுமுற்றும் எங்கணும் போலீஸ். கூட்டம் நடக்குமிடத்தில் ஸ்தல போலீஸ் உத்தியோகஸ்தர் அனைவரும் வந்திருந்தனர். மோட்டாரும் தயாராயிருந்தது.

கூட்டத்தில் மூச்சு விட்டால் சப்தம் கேட்கும். அவ்வளவு அமைதி. எனக்கும் உணர்ச்சி அதிகமாகத்தான் இருந்தது. சரியாகப் பத்தரை மணிக்கு நான் சொன்னதாவது:

'பிரிட்டிஷாரின் யுத்த முயற்சிக்குப் பணத்தாலோ ஆள் பலத்தாலோ உதவி செய்வது தவறு. அஹிம்ஸா முறையிலேயே எல்லா யுத்தங்களையும் எதிர்ப்பதே சரியான வழியாகும்.'

முதலில் இதை ஆங்கிலத்திலும், பிறகு தமிழிலும் சொன்னேன். போலீஸ் உத்தியோகஸ்தர்கள் ஒரு கணம் திகைத்தார்கள். இவ்வளவு கூட்டத்தினிடையே ஒருவரைக் கைது செய்வது அவர்களுக்குக் கொஞ்சம் அரு

வருப்பாக இருந்திருக்கலாம். அல்லது இவ்வளவுதான் காங்கிரஸ் 'ஸ்லோகன்' என்று தெரியாமலும் இருந்திருக்கலாம்.

'நான் கடமையைச் செய்துவிட்டேன். இனி போலீஸ்காரர்கள்தான் கடமையைச் செய்யவேண்டும்' என்று ஞாபக மூட்டினேன். போலீஸ் உத்தியோகஸ்தர்கள் என்னை அணுகினார்கள்.

'போகலாமா?'

'எங்கே?'

'பின்னால் கார் இருக்கிறது!'

'எங்கே போகவேண்டும்?'

'போலீஸ் ஸ்டேஷனுக்கு.'

'வாரண்டு இருக்கிறதா?'

'போகலாமே!'

ஆகவே, நான் கைது செய்யப்பட்டேன். அமைதியே உருவாக இருந்த கூட்டம் அப்படியே ஆரவாரித்து எழுந்தது. ஒரு காரில் அரை நிமிஷத்தில் நான் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகப்பட்டேன். அன்று பிற்பகல் மூன்று மணிக்கு, கோவில்பட்டி ஸப்-டிவிஷனல் மாஜிஸ்டிரேட் முன்பு என்னை ஆஜர் செய்வித்து, போலீஸார் இரவு 8 மணி வரை ரிமாண்டு வாங்கினர். கோவில்பட்டியில் ரிமாண்டில் இருக்கும்போது நான் சிப்பிப்பாறை கந்தசாமி நாயகரைச் சந்தித்தேன். அவருக்கு முப்பத்திமூன்று வயதிருக்கும். பல மாதங்களாகத் திருநெல்வேலி ராமநாதபுரம் ஜில்லாக்களில் பயங்கரமான புயல் காற்றின் வேகத்தில் பல கொள்ளை கொலைக் குற்றங்களுக்குக் காரணமாக இருந்ததாகச் சொல்லப்பட்ட இவர் பார்ப்பதற்கு ரொம்பவும் சாதுவாயிருந்தார். கறுப்பு நிறம், கம்பீரமான பார்வை; அரையில் ஒரு கதர் வேஷ்டி. உடம்பு முழுதும் மறைக்கும்படி ஒரு கதர் சால்வை. இவர் இரண்டு ஜில்லாக்களிலும்

நூற்றுக்கணக்கான கிராமங்களை ரிஸர்வ் போலீஸாரின் கையிலேயே ஒப்படைக்கவேண்டிய அளவுக்குப் பீதி உண்டாக்கியவர். இவர் சம்பந்தமாக ரிஸர்வ் போலீஸார் கையாண்ட முறையைக் கண்டித்துத் திருநெல்வேலி ஜில்லா மாஜிஸ்டிரேட்டிடம் நான் முறையிட்டிருக்கிறேன்.

இதே கந்தசாமி நாயகர் கொலைக் குற்றத்திற்காகத் தூக்குத் தண்டனை கொடுக்கப்பட்டு ஹைகோர்ட்டு உத்தரவை எதிர்பார்த்துத் திருச்சி சிறையில் 'கண்டத்திலே'* வைக்கப்பட்டுப் பிறகு தூக்கிடப்பட்டார்.

இரவு 8 மணி வரை ரிமாண்டு செய்யப்பட்ட நான் ராத்திரியே ஒருவேளை விசாரணை நடக்குமென்று நினைத்தேன். ஆனால் மறுநாள் காலைவரை ஒன்றுமே நடைபெறவில்லை. சங்கரன்கோவிலில் என்னை ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டிருப்பதாக மறுநாள் காலை 11 மணிக்கு என்னிடம் அறிவிக்கப்பட்டது. போலீஸார் சார்ஜ்ஷீட் தயாரிக்கவில்லை. ஏனென்று கேட்டதில், அவர்கள் மேலும் விசாரித்துவருகிறார்கள் என்று சொல்லப்பட்டது. எதைப்பற்றி என்றுதான் எனக்குப் புரியவில்லை. யுத்த எதிர்ப்புக் கோஷம் செய்தது தவறு என்றால் அதைத்தான் நானே ஒப்புக்கொள்வேனே! பின் எதற்காகப் போலீஸார் வழக்கு சம்பந்தமாக இவ்வளவு பிரயாசை எடுத்துக்கொள்ளவேண்டும்? ஆகையால் என்னுடைய ரிமாண்டு பின்னால் வரும் சத்தியாக்கிரகிகளுக்கு ஒரு படிப்பினையாக இருக்கவேண்டுமென்றே இவ்வாறு போலீஸார் செய்கிறார்கள் என்று நினைப்பது சகஜம்தானே!

பின்னால் விசாரித்ததில், சென்னை அரசாங்கத்தாரிடமிருந்து அனுமதி வந்துதான் சார்ஜ்ஷீட் போடப்போகிறார்

---

* கண்டம் என்பது 'Condemned' என்ற ஆங்கில வார்த்தையின் தமிழ் உருவம். தூக்குத் தண்டனை பெற்றவர்களைப் பலத்த பாராவுடன் சிறையில் வைக்கும் இடம்.

கள் என்று தெரியவந்தது. வேணுமென்று என்னைக் கஷ்டப்படுத்தவே இந்த ஏற்பாடு என்று நினைத்தேன். திருநெல்வேலி ஜில்லாவில் முதலில் கைது செய்யப்பட்ட சத்தியாக்கிரகி நான்தான். எனக்கு நாலைந்து நாட்களுக்கு முன்பே சத்தியாக்கிரகம் செய்தும் கைது செய்யப்படாமலிருந்தார் சென்னைச் சட்டசபை அங்கத்தினர் ஸ்ரீ. டி. எஸ். சொக்கலிங்கம்.

என்னைக் கஷ்டப்படுத்தும் நோக்கத்துடன்தான் ரிமாண்டு என்று நான் முன்னால் நினைத்தது தவறு. அந்தப் பத்து நாளும் எல்லா அதிகாரிகளும் என்னைக் கௌரவமாகவும் கண்ணியமாகவும் நடத்தினார்கள். தாங்களாகவே சகல சௌகரியங்களும் செய்து கொடுத்தார்கள்.

இந்தியப் பாதுகாப்புச் சட்டத்து விதிகளின்கீழ் ஹெட் கான்ஸ்டேபிள் வாரண்டில்லாமல் ஒரு சத்தியாக்கிரகியைக் கைது செய்யலாம். யாரிடமும் கேட்காமல் சார்ஜ்ஷீட் கொடுக்கலாம். கைதியானவர் தண்டிக்கப்படலாம். ஆனால், போலீஸ் இன்ஸ்பெக்டர், ஜில்லா மாஜிஸ்டிரேட்டையும் ஜில்லா போலீஸ் சூப்பிரண்டையும் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்று நினைத்தால், அவர்கள் அரசாங்கத்தைக் கேட்கவேண்டும் என்பார்கள். அரசாங்கம் சாவதானமாகவே பதில் அனுப்பும். நாட்கள் ஆகிவிட்டன என்று அரசாங்கத்திற்கு ஞாபகமூட்டுவது ஐ. ஸி. எஸ். வர்க்கத்தாரின் வமிசத்திலேயே கிடையாது. கூடப் பத்து நாள் நான் ரிமாண்டில் இருக்கக்கூடாது என்பதற்காக வழக்கத்தை மாற்றுவது முடியுமா?

13-ஆம் தேதி காலை சார்ஜ்ஷீட்டுடன் என்னைக் கோவில்பட்டியில் ஆஜர் செய்யவேண்டுமென்று சங்கரன்கோவிலுக்குத் திடீரென ஒரு தகவல் வந்தது. போலீஸார் அவ்வாறே செய்தனர். மாஜிஸ்டிரேட்டுக்கு யாரிடமிருந்து உத்தரவு

கிடைத்ததோ தெரியவில்லை. ஆனால் போலீஸாருக்கு மட்டும் அன்று என்னை விசாரிப்பார்கள் என்ற நினைப்பே கிடையாது.

கோவில்பட்டி ஸப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்குப் போலீஸார் என்னைக் கொண்டுபோகும்போது ஸப்-டிவிஷனல் மாஜிஸ்டிரேட் எதிரே வந்துவிட்டார். திடீரென்று என்னைத் தண்டித்துவிட வேண்டுமென்று எதற்காக இவ்வளவு ஆவல் என்று எனக்குத் தெரியவில்லை.

கோவில்பட்டி கோர்ட்டை அடைந்தோம். கைதி, போலீஸார், மாஜிஸ்டிரேட் எல்லோரும் தத்தம் கடமையை நிறைவேற்றும் ஒரே நோக்கத்துடன் மட்டும் அங்கே இருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரிந்தது. போலீஸ் இன்ஸ்பெக்டர் சாட்சியம் கொடுத்தார். மாஜிஸ்டிரேட் என்னைப் பார்த்து, 'தாங்கள் ஏதாவது சொல்லிக்கொள்ள வேண்டுமா?' என்றார்.

'சொல்வதற்கு ஒன்றுமில்லை' என்றேன்.

குற்றப் பத்திரிகை வாசித்துவிட்டு, 'இப்பொழுது ஏதாவது சொல்லவேண்டுமா?' என்று மாஜிஸ்டிரேட் மீண்டும் கேட்டார்.

'நான் குற்றவாளி என்பதை ஒப்புக்கொள்கிறேன். வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை' என்றேன்.

'நான் தங்களைக் குற்றவாளி என்று தீர்மானிக்கிறேன். தங்களுக்குத் தண்டனை கொடுக்கவேண்டியிருப்பதற்காக நான் வருந்துகிறேன். ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கிறேன்.'

'வந்தனம்.'

வேலூர் ஸெண்ட்ரல் ஜெயிலுக்கு என்னைக் கொண்டுபோக உத்தரவிட்டார்கள். இரண்டாவது வகுப்பு வண்டிப் பிரயாணம் வேண்டாமென்று நான் சொல்லவே, அன்றிரவு


ரயிலிலேயே வேலூருக்குப் புறப்பட ஏற்பாடாயிற்று. மறு நாள் மாலை நான்கு மணிக்கு வேலூர் போய்ச் சேர்ந்தோம்.

சில நிமிஷங்களில் சிறைவாயிலை அடைந்தோம். சிறை வாயிலிலே அரைமணி நேரத்திற்கு அதிகமாகக் காத்திருக்க வேண்டியதாயிற்று. எனினும் உள்ளே அனுமதிக்கும் டெபுடி ஜெயிலர் கௌரவத்துடனே நடந்துகொண்டார். சாமான்களெல்லாம் என்னிடமிருந்து வாங்கிக்கொள்ளப்பட்டன.

சிறையின் பிரதான வாயில் திறந்தது. நான் உள்ளே நுழைந்தேன். என் பின்னால் கதவு சாத்தப்பட்டது.

ஜெயில் காற்று என்மீது வீசியது.

ஜெயில் மணி சரியாக ஐந்தடித்தது.



2. வேலூர் சிறை

சென்னை மாகாணத்தில் மொத்தம் ஐந்தாறு மத்திய சிறைகளே உண்டு. அவைகளில் ஒன்று வேலூர் சிறை. மத்திய சிறைகளையே ஆங்கிலத்தில் 'ஸெண்ட்ரல் ஜெயில்' என்று சொல்லுகிறார்கள். மற்ற சிறைகளை ஜில்லா சிறைகள் என்றே சொல்லவேண்டும். மத்திய சிறைகளில் 1000, 1500 கைதிகளுக்குக் குறையாமல் எப்போதும் இருப்பார்கள்.

வேலூர் சிறை மத்தியிலே 'டவர்' என்ற கட்டடம். அதைச் சுற்றிலும் பிளாக்குகள். 'டவர்' மேல் நின்று கொண்டு பார்த்தால் ஒவ்வொரு பிளாக்கின் மூலை முடுக்கும் தெரியும். ஒவ்வொரு பிளாக்கிலும் நூற்றுக்கணக்கான கைதிகள் வைக்கப்படுகின்றனர்.

சிறையில் ஒரு பள்ளிக்கூடம் உண்டு. உபாத்தியாயர்கள் வெளியிலிருந்து வந்து கைதிகளுக்கு எழுதப் படிக்கக் கற்றுக்கொடுக்கிறார்கள். ஒரு வைத்தியசாலையும் இருக்கிறது. இரண்டு டாக்டர்கள் அங்கு வேலை பார்க்கிறார்கள். தச்சு வேலை செய்வதற்கு ஒரு கட்டடம். செருப்புத் தைப்பதற்கு மற்றொரு கட்டடம். சமையல் செய்வதற்கு இன்னொரு கட்டடம். இதற்கு அடுகை என்று பெயர். ஜெயில் சாமான்கள் துணிமணி இவைகள் வைப்பதற்குப் பெரிய அறைகள், ஜெயில் காரியாலயம் — இவையெல்லாம் சேர்ந்ததுதான் ஜெயில்.

ஒரு கோடியில் காவல் கைதிகளை வைத்திருந்தார்கள். மற்றொரு கோடியில் சத்தியாக்கிரகிகள். எங்களை வைத்திருந்த உள்-ஜெயில் (க்ளோஸ் பிரிஸன்) கைதிகள் பாஷையிலே 'கஞ்சி ஆபீஸ்' என்ற பெயருடன் விளங்கிற்று.. எப்

படி இந்தப் பெயர் கிடைத்ததென்று எனக்குத் தெரியாது. ஜெயிலுக்கு வெளியே உள்ள கட்டடம் 'வெளிக் கோரங்கி'* என்று ஜெயில் பாஷையில் வழங்கப்படும் கோரண்டைன் என்பது.

உள்-ஜெயிலில் அனுமதிக்கப்படுவதற்கு முன் இந்த வெளிக் கோரங்கியில் பதினைங்கு நாட்கள் தங்கவேண்டுமென்பது சிறை விதி. வெளியிலிருந்து ஏதாவது தொத்து நோயை உள்ளே கொண்டுபோகாமல் தடுப்பதற்குத்தான் இந்த ஏற்பாடு. ஆனால் சத்தியாக்கிரகிகளைக் கோரங்கியில் வைக்கவில்லை. நேரே உள்ளே கொண்டுபோய்விட்டார்கள். காரணம், மற்ற நோய்கள் எப்படி யிருந்தாலும், சத்தியாக்கிரகிகளிடமிருந்து அரசியல் நோய் ஏனையோருக்கும் பரவ வேண்டாமென்பதுதானே என்னவோ?

வேலூர் சிறைக்கு முதல் முதல் கொண்டுபோகப்பட்ட சத்தியாக்கிரகி திருச்சினைப்பள்ளி முனிஸிபல் சேர்மென் ஸ்ரீ. பி. ரத்தினவேலுத் தேவர். சிறைக்குள் புகுந்ததும் நான் முதலில் சந்தித்தது ஸ்ரீ. தேவரைத்தான். அப்பொழுது அவர் தம் தாயாரைச் சந்தித்துப் பேசுவதற்காகச் சிறைக்கு வெளியே வந்துகொண்டிருந்தார்.

இவ்வளவு துணிவுள்ள ஒரு மனிதரை நான் பார்த்ததே இல்லை. மனத்தில் தோன்றியதை அப்படியே — அதுவும் கடுமையான பாஷையிலேயே — என்ன வரும் என்பதைக் கொஞ்சமும் கவனிக்காமல் சொல்லும் தனி இயல்பு ஸ்ரீ. தேவருக்கு உண்டு. எதிர்ப்பு இருந்தால் அவருக்கு உக்கிரமும் உணர்ச்சியும் தோன்றும். தமிழ்நாட்டில் தனி மனிதன் ஒருவன் அதை எதிர்த்து நிற்கமுடியாது என்பதை நான் நிச்சயமாய் அறிவேன். அவரைப் பார்த்தால் இவர்தானா தேவர் என்று கேட்கவேண்டியிருக்கும்! நடப்பதற்கும்

* Out-quarantine.

சக்தியில்லாதவராகவே தோன்றுவார். உள்ளத்தைக் கவர்வதற்கோ, மதிப்பைத் தூண்டுவதற்கோ அவருடைய உருவத்தில் ஒன்றுமே கிடையாது. கொஞ்சம் பேசிப் பார்த்தால் நீங்கள் அவரை மதிக்காமல் இருக்க முடியாது. வயிற்றுக் கோளாறு காரணமாக சிகிச்சையின் பொருட்டு அவர் சிறையிலிருந்து சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டார். அடிமை நாட்டில் அவருடைய அரிய குணங்களுக்கு இடமேது? 54-வயதுதான் ஆகிறது. நாடு நமதானால் ஸ்ரீ. தேவருக்குத் தனிச் சிறப்பு உண்டு. அந்தச் சிறப்பைச் சீக்கிரமே நான் பார்க்க விரும்புகிறேன்.

வேலூரில் உள்-ஜெயில் நாலாபக்கமும் பெரிய மதிலால் சூழப்பட்டிருக்கிறது. சாதாரணமாக வெளியிலுள்ள கைதிகளுக்கும் எங்களுக்கும் தொடர்பு இருக்கக் கூடாது என்ற நோக்கத்துடன்தான் இப்படி ஜெயிலுக்குள்ளே யுள்ள குட்டி ஜெயிலில் எங்களை அடைத்துவைத்திருந்தார்கள் என்று நினைக்கிறேன்.

நான் உள்-ஜெயிலுக்குள் நுழைந்த நேரம் சாப்பாட்டு நேரமாயிருந்தது. சிறை வாயிலிலேயே கம்பீரமாக நடந்து கொண்டிருந்தார் மலையாளத்து மஞ்சுநாதராவ். நன்றாகத் தேகப்பயிற்சி செய்து வலுவடைந்த சரீரம். நிமிர்ந்த நடை. பார்த்தாலே உடம்பில் நல்ல வலிமை இருப்பது தெரியும். நாற்பது வயதென்று சொல்லலாம். ஆனால் 32 வயதுதான் ஆகிறது. ஐந்து ஆண்பிள்ளைகளும் நாலு பெண்களும் பிறந்த குடும்பத்தில் கடைக்குட்டி இவர். கோழிக்கோட்டிலே பெரிய தங்க வியாபாரி. சென்ற சட்டமறுப்பு இயக்கத்திலே இவரைக் கைதுசெய்த போலீஸார் சாட்சியம் கொடுக்கும்போது, 'இவர் இன்று மலபாரில் அரசாங்கத்தாருக்கு விரோதமாக ஒரு சொந்தத் தபால் இலாகா நடத்து

கிறார். போட்டி அரசாங்கத்தை நடத்தும் வல்லமையும் செல்வாக்கும் உள்ளவர். அயர்லாந்திலே டிவேலரா மாதிரி மலபாரிலே இவர்!' என்று சொன்னார்கள். கேட்கவேண்டுமா இப்பேர்ப்பட்டவரைப் பற்றி? இவருக்குச் சிறைவாசம் கிடைத்தது.

இம்முறை சத்தியாக்கிரகம் ஆரம்பிப்பதற்கு முன்பே தடை உத்தரவை மீறியதற்காக இவருக்கு இரண்டு வருஷக் கடுங் காவல் தண்டனையும், ரூபாய் 2000 அபராதமும் விதிக்கப்பட்டது. இந்தியாவிலேயே தற்காப்பு விதிகளின் கீழ் இதுவரை யாருக்கும் 2000 ரூபாய் அபராதம் விதிக்கப்படவில்லை. பஞ்சாப் மாகாணக் காங்கிரஸ் கமிட்டித் தலைவரான இப்திகாருதீன் அவர்களுக்கு 6000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டபோதிலும், அப்பீலில் ரூபாய் 1500 ஆகக் குறைக்கப்பட்டது. மஞ்சுநாதராவ் எல்லோராலும் ‘மஞ்சு’ என்று அன்பாக அழைக்கப்படுகிறார். கபடமற்ற உள்ளம், சதா சிரித்த முகம்.

அவர் என்னைப் பார்த்து, ‘நீங்கள் சீக்கிரமாகப் போனால்தான் சாப்பாடு கிடைக்கும். போங்கள்!' என்று சொன்னார்.

நான் முதலில் கண்ட காட்சி இதுதான். சுமார் நூறு பேருக்குமேல் மரங்களுக்கு அடியில் உட்கார்ந்திருந்தார்கள். ஒவ்வொருவரும் ஓர் அலுமினியத் தட்டில் சாதமும் இன்னொரு தட்டில் குழம்பும் கறியும் வைத்துக்கொண்டு சாப்பிடுவதற்குத் தயாராகிக்கொண்டிருந்தார்கள். நானும் கலந்துகொண்டேன்.

ஜெயிலில் புதிதாக ஒரு சத்தியாக்கிரகி வந்துவிட்டால் எல்லோருக்கும் சந்தோஷம்தான். வெளியுலகத்திற்கும் உள்ளே இருக்கும் சத்தியாக்கிரகிகளுக்கும் அப்பொழுதுதான் ஒரு தொடர்பு ஏற்படுகிறது.

'வெளியில் ஜனங்கள் எப்படியிருக்கிறார்கள்? இன்னும் எத்தனை பேர் உங்கள் ஜில்லாவில் சத்தியாக்கிரகம் செய்யத் தயாராயிருக்கிறார்கள் ?' இவை போன்ற கேள்விகள் கேட்பார்கள்.

நான் ஜெயிலில் நுழைந்த தினம் ஞாயிற்றுக்கிழமையாதலால், சாப்பிட்டதுமே 'லாக்-அப்' செய்வதற்கு வார்டர்கள் தயாராகிவிட்டார்கள். ஆகவே என் வாசஸ்தலத்தைப் பார்வையிடுவதற்குப் போதிய நேரமில்லை.

எனக்குக் கொடுத்த அறையின் நீளம் 12அடி இருக்கும்; அகலம் 6அடி. அறையின் இடது பக்கத்தில் சுமார் 20அங்குலம் உயரமும், 6 அடி நீளமும், $2\frac{1}{2}$ அடி அகலமும் உள்ள ஒரு மேடு. அது சுவரோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது. அதை நகர்த்த முடியாத கட்டில் என்று சொல்லலாம். அதன் தலைப்பக்கம் இன்னும் அரையடி உயர்த்திக் கட்டப்பட்டிருந்தது. தலையணைக்குப் பதிலாக அவ்வாறு அமைக்கப்பட்டிருந்தது. அறைக்குப் பின்னால் காற்று வீசுவதற்குச் சதுரமான ஒரு சிறிய துவாரம். நேர் மேலே, வெளியே உள்ள எதையும் பார்க்கமுடியாத ஒரு ஜன்னல். ஜன்னலுக்கு இரும்புக் கம்பிகள். இரும்புக் கம்பிகளுக்குப் பின்னால் இரும்பு வலை. ஒவ்வொரு அறைக்கும் இரும்புக் கம்பிகளால் ஆக்கப்பட்ட பலமான கதவு.

உள்ளே கால்வைத்து நடந்தால் நீளத்தில் 5 அடிகள் எடுத்து வைக்கலாம். குறுக்கே நடக்க முடியாது. இந்த அறையில் மாலை ஐந்தரை மணிக்கு அடைத்தால் மறுநாள் காலை ஐந்தரை மணிக்குத்தான் வார்டர்கள் வந்து திறப்பார்கள்.

குளிர் காலத்தில் மாலை ஐந்தரை மணிக்குமேல் ஆறு மணிக்குள்ளும், கோடை காலத்தில் ஆறு மணிக்குமேல் ஆறரை மணிக்குள்ளும் கைதிகளைப் பூட்டவேண்டும். காலை

சூரியன் உதிக்கும்போது திறந்துவிடவேண்டும். ஆனால் ஞாயிற்றுக்கிழமைகளில் காலையில் நேரங் கழித்துத் திறந்து மாலையில் வெகு சீக்கிரமாக மூடிவிடுவார்கள்.

அறைக்கு வெளியே ஒரு ஹரிகேன் விளக்கு இரவு ஒன்பதரை மணிவரை எரிய அனுமதி கொடுக்கலாம். இது ஜெயில் அதிகாரிகள் கடமையன்று. இந்தச் சலுகையை வேண்டுமானால் அவர்கள் செய்யலாம். அரசாங்கத்தார் இதை ஜெயில் அதிகாரிகளுடைய யுக்தானுசாரத்திற்கு விட்டிருக்கிறார்கள். இந்தச் சலுகை எங்களுக்குத் தரப் பட்டது.

இரவு பன்னிரண்டு மணிநேரம் ஓர் அறையில் தன்னந் தனியே அடைக்கிறார்கள். கையில் கொண்டுபோன புத்தகங்களெல்லாம் ஜெயிலுக்குள் நுழையும்போதே தற் காலிகமாகப் பறிமுதல் செய்யப்பட்டன. ஜெயில் புத்தக சாலையில் உள்ள புத்தகங்களோ சத்தியாக்கிரகக் கைதிகளைப் போன்ற படித்தவர்களுக்கு ஏற்றவையல்ல. பேசுவதற்கோ நண்பர்கள் இல்லை. ஆகையால் நான் தன்னந் தனியாயிருந்து அவஸ்தைப்பட நேர்ந்தது.

தனி அறையில் அடைக்கப்பட்டதும் முதலில் ஞாபகத் திற்கு வருவது என்ன தெரியுமா? நாம் எதற்காக ஜெயி லுக்கு வந்திருக்கிறோம் என்பதும், நம் தேசத்தின் நிலைமை யும்தான். முதல்நாள் 'லாக்-அப்பில்' தூக்கம் வராது. ஒன்றன்பின் ஒன்றாய்ப் பல விஷயங்கள் மூளையில் உதிக்கும். சிறைவாசம் புதிய அனுபவமாய் இருப்பவர்களைப்பற்றிக் கேட்பானேன்! சிறைவாசம், சித்திரவதை, தூக்குமேடை என்றால் எல்லோருக்கும் பயந்தானே! இம்மூன்றில் சிறை வாசம் முதல் படி. இதில் சந்தேகமில்லை. மறுநாள் காலை எழுந்ததும் என் நண்பர்களிடம், 'நீங்கள் முதல் நாள் சிறை யில் தூங்கினீர்களா?' என்று கேட்டேன். ஒரு சிலர் தவிர

ஏனையோர் அனைவரும் நன்ருகத் தூங்கவில்லை என்றே பதில் சொன்ஞர்கள்.

காலை அறையைவிட்டு வெளிவந்த பிறகே ஜெயிலை நன்ருகப் பார்க்க முடிந்தது. நான்கு வரிசை அறைகள், முதல் வரிசையில் சுமார் முப்பது, ஏனைய வரிசைகள் ஒவ்வொன்றிலும் ஐம்பது அறைகள். அறைகளெல்லாம் ஒரே அளவு உள்ளவை.

நான் போகும்போது நமது மாகாணத்தின் பல்வேறு பாகங்களிலிருந்து வந்திருந்த நூறு சத்தியாக்கிரகிகள் இருந்தார்கள். வேலூர் சிறைக்கு சத்தியாக்கிரகிகள் வருவதற்கு முன்பே அங்கிருந்தவர் நாலு பேர்களே.

முதலில் வந்திருந்தவர் அகில இந்திய கிஸான் இயக்கத் தலைவர் ஸ்ரீ. என். ஜி. ரங்கா. முதலில் இவரைப் பார்த்த பொழுது கண்டுகொள்ள முடியாதபடி மாறியிருந்தார். இயற்கையிலேயே மெலிந்த உருவம் ஜெயில் வாசத்தால் இன்னும் மெலிந்திருந்தது. மடமடவென்று பேசுவார். சார்லீ சாப்ளின் மாதிரி யிருக்கும் முகம். அல்லும் பகலும் உழைப்பார். மாலையில் வெகுநேரம் உலாவிக்கொண்டிருப்பார். சிறை வாசம் அவருடைய உடம்பை வெகுவாகப் பாதித்திருந்தது. பின்னல் அவர் திருச்சி ஜெயிலில் வைக்கப்பட்டிருந்தார். அங்கிருந்து அவர் விடுதலையானது வெகு விநோதம். எப்படி விடுதலையானர் தெரியுமா? திருச்சி ஜெயிலில் கைதியா யிருந்த அவர் வேலூர் ஜெயிலுக்குள் காவல் கைதியாக விடுதலையானர்! அவர் விஷயத்தில் 'விடுதலை' என்பது வெறும் சிறைமாற்றமாகவே ஆயிற்று.

இரண்டாவதாகப் பசும்பொன் பிரமசாரி முத்துராமலிங்கத் தேவர். மதுரையை விட்டுப் போகக்கூடாது என்ற தடையுத்தரவை மீறி ஒன்றரை வருஷம் கடுங்காவல் தண்டனை யடைந்தவர். தமிழில் சிறந்த பிரசங்கி. அவருடைய

பேச்சில் தீப்பொறி பறக்கும். ஜனங்களைக் கிளப்பிவிடுவ தில் நிபுணர். அவர் விவாத முறையைப் பின்பற்றுபவரல்லர். உணர்ச்சி ஊட்டுவதில் தமிழ் நாட்டில் அவருடைய பிரசங் கத்திற்கு ஈடு வேறில்லை. அவர் சந்நியாசியாகத் தோற்ற மளிப்பார்; மாமிசம் புசிக்கமாட்டார்; ஸோப்பு உபயோ கிக்கமாட்டார். ஆனால் பல்லுக்கு 'டூத் பேஸ்டு' தேய்க் கிறார். அவர் அகில இந்திய முன்னணிக் கட்சியில் நிர்வாக சபை அங்கத்தினர். மனத்தில் தோன்றுவதைப் பட்டவர்த் தனமாகச் சொல்லுபவர். 32-வயதான அவர் எதிர்காலத்தில் அரசியலில் எவ்விதப் போக்கை அனுசரிப்பார் என்று இப் பொழுது ஒன்றும் சொல்வதற்கில்லை. பலர் அவரை அபேத வாதி என்று நினைக்கிறார்கள். ஆனால் அவர் அபேதவாதி யல்ல. தீவிர தெய்வபக்தி உடையவர். அவர் தந்தையின் பெயர் ஸ்ரீ. உக்கிரபாண்டியத் தேவர்.

மூன்றாவதாக, பங்களூரில் பிறந்த ஸ்ரீனிவாசராவ். முப்பத்தேழு வயதேயுள்ள இவர் இதுவரை ஏழு தடவை ஜெயில் தண்டனை அடைந்திருக்கிறார். தீவிர அபேதவாதி. நடுத்தர உயரம். துணிவு காட்டும் முகம். திடமான அபிப் பிராயமுடையவர். 1932-ல் ஒரு தடவை எவ்விதக் காரணமும் இல்லாமலே கைதுசெய்யப்பட்டார். இவர்தான் 'தினமணி' வேலைநிறுத்தத்திலும் சம்பந்தப்பட்டவர். இரண்டு வரு ஷம் கடுங்காவல் தண்டனை அனுபவித்துவிட்டு, தற்போது வேலூர் சிறையில் காவல் கைதியாக இருந்துவருகிறார்.

இன்னொருவர் கடப்பை சுப்பிரமணியம். தமிழ் பேசு கிறார். ஆந்திரர் என்று சொல்லுகிறார். விலாசம் கேட்டால், 'நம்பர் 124, கிராண்டு டிரங்கு ரோடு, கல்கத்தா' என்கிறார். இவருக்கு ஒரு வருஷத் தண்டனை.

வேலூர் சிறையில் டிஸம்பர் மாதம் 14-ஆம் தேதிமுதல் 23-ஆம் தேதிவரை இருந்தேன். முதல் ஏழெட்டு நாட்கள்

வரை ஜெயில் உடுப்பு கொடுக்கப்படவில்லை. போதுமான அளவுக்குச் சொந்த உடைகளும் தரப்படவில்லை. இதற்குள் திங்கட்கிழமை வந்தது. பிரதி வாரத்திலும் திங்கட்கிழமை யன்று 'சரிபார்த்தல்' என்று ஒரு சடங்கு நடக்கும். அன்று சூப்பிரண்டு கைதிகளை வந்து பார்த்துக் குறைகளை விசாரிப்பதாக ஓர் ஐதீகம். இந்த விசாரணையின் பயனாக எனது சாமான்களில் ஸோப்புத் தவிர மற்றவைகள் கொடுக்கப்பட்டன.

வேலூர் சிறை சூப்பிரண்டு மேஜர் ஜில்சிங் அநுபவம் முதிர்ந்தவர். எவ்வளவு நெருக்கடியான சந்தர்ப்பத்தையும் சமாளிக்கக்கூடியவர். ஆனால் ஜெயில் விதிகளில் கொஞ்சமும் சலுகை காட்டமாட்டார். கண்டிப்பான பேர்வழி. ஆனால், அந்தக் கண்டிப்பு கண்டிப்பாகவே தோன்றாது.

'நீங்கள் அப்பீல் செய்யப் போகிறீர்களா?' என்று என்னைக் கேட்டார்.

நான் இரண்டு நிமிஷங்கள் உரக்கச் சிரித்துவிட்டேன்.

'வட இந்திய மாகாணங்களி லெல்லாம் சிகரெட்டுகள் கூடச் சிறையில் அநுமதிக்கிறார்களே. இங்கே வெற்றிலை பாக்காவது கொடுக்கக்கூடாதா?' என்று கேட்டேன்.

'அவைகளெல்லாம் கௌரவமான மாகாணங்கள். இது உங்கள் மாகாண மாச்சே!' என்று சொல்லி ஒரு குறும்புச் சிரிப்புச் சிரித்தார். அர்த்தம் என்னவென்றால், 'உங்கள் மந்திரிகள் அதிகாரத்தில் இருந்தபோது அவர்கள் இந்த விதிகளை ஏன் செய்திருக்கக்கூடாது?' என்பதுதான்.

இந்தச் சிறையில் இருக்கும்போது எனக்கு ஜுரம் கண்டது. இரண்டு நாட்கள் சமாளித்தேன். மூன்றாவது நாள் ஜுரம் அதிகமாய்விட்டது. என்னைப் பார்த்துவிட்டு டாக்டர் ராஜன் நான் உடனே ஜெயில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தார்.

ஜனவரி மாதம் 23-உ நான் ஜெயில் ஆஸ்பத்திரியில் 102 டிகிரி ஜுரத்துடன் நோயாளியாகப் போய்ச் சேர்ந்தேன்.

ஜனவரி 23, 24, 25-ஆம் தேதிகளில் வேலூர் சிறையில் உள்ள சத்தியாக்கிரகிகளைத் திருச்சி சிறைக்கு மாற்றி விட்டார்கள்.



3. ஜெயில் ஆஸ்பத்திரி

எனக்கு டைபாயிட், நிமோனியா, மலேரியா அல்லது சாதாரண ஜுரம் எதுவாகவும் இருக்கலாம் என்று ஆஸ்பத்திரியில் முடிவு செய்தார்கள். இரண்டு டாக்டர்கள் கூப்பிரண்டு இவர்கள் சேர்ந்து முடிவுசெய்த விஷயம் இது. சில நாட்கள் ஆஸ்பத்திரியில் வைத்துப் பார்க்கலா மென்று சொன்னார்கள். இரத்தத்தைப் பரிசீலனை செய்து பார்த்தார்கள். நான்கு நாட்களில் ஜுரம் தணிந்துவிட்டது. உடம்பிலே சூடில்லாமல் இருக்கும் பொழுது, என்னிடம் வந்து எனக்கு மலேரியாவோ, டைபாயிடோ இல்லையென்று சொன்னார்கள். நிமோனியாவும் இல்லையென்று நான் சொன்னேன். ஜுரம் தணிந்து இரண்டு நாட்கள் ஆனபிறகே இவ்வளவும் நடந்தது.

ஆஸ்பத்திரிக்கு நான் போகுமுன்பு அங்கே 'ஏ' வகுப்புக் கைதிகளான ஸ்ரீ. சத்தியமூர்த்தியும், நாமக்கல் ஸ்ரீ. நாகராஜ அய்யங்காரும் இருந்தார்கள். 'பி' வகுப்புக் கைதி நிவர்த்தி வெங்கடசுப்பையாவும் இருந்தார்.

மாஜி சென்னை மேயர் ஸ்ரீ. சத்தியமூர்த்தியைத் தமிழ்நாடு நன்கறியும். சிறந்த அரசியல்வாதி. அரசியல் போக்கை அநுசரித்துத் தம்மைத்தாமே பழக்கிக்கொள்வதிலும் கைதேர்ந்தவர். சென்ற சட்டமறுப்பு இயக்கத்தில் சிறை சென்று ஆஸ்பத்திரியில் பலநாள் சிகிச்சை செய்யப்பட்டார். இந்தத் தடவையும் அப்படியே.

'என் ஹிருதயம் கெட்டது' என்று அவர் சென்னை மாகாண பிரதம மாஜிஸ்டிரேட் முன்பு சொன்னதற்கு,

'உங்கள் ஹிருதயம் நல்லது என்பதை நான் அறிவேனே! பலஹீனமாயிருக்கிறதா?' என்று கேட்டார் மாஜிஸ்டிரேட். 'ஆம், பலஹீனம் என்றுதான் சொல்லுகிறேன்' என்று சொன்னார் ஸ்ரீ. அய்யர்.

நான் ஆஸ்பத்திரிக்கு வருவதற்கு முன்தினம், ஜெயில் ஆஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். தம் மனைவியிடத்தும் ஒரே மகளிடத்தும் அவர் அளவுகடந்த பிரேமையுள்ளவர். ஆகவே வாராவாரம் அவர்கள் வரவை எதிர் பார்த்து ஏங்கிக்கொண்டிருப்பார். மதத்தின்மீதும் கடவுளின் மீதும் அவர் தீவிர நம்பிக்கையுடையவர்.

ஜெயிலில் சதா பூஷணிக்காயும், உருளைக்கிழங்கும் போடுவார்கள். காலையிலும் மாலையிலும் இவைதான். சலித்துப்போய், ஒருநாள் சாப்பாடு கொண்டுவருபவனிடம், 'கத்தரிக்காய், வாழைக்காய், முருங்கைக்காய் இப்படிப் பெயருள்ள காய்கறிகளெல்லாம் வேலூரில் கிடைக்குமென் பதை ஜெயில் சூப்பிரண்டுக்குத் தெரிவி. ஒருவேளை அவர் மறந்துபோயிருப்பார்!' என்று சொன்னார் ஸ்ரீ. சத்திய மூர்த்தி. மறுநாள் அவரைக்காய்க் கறிகூடக் கிடைத்துவிட்டது! பின்னால் மற்றொரு நாள், 'எப்பொழுதும் வெறுமனே பகவத்கீதையும் திருக்குறளும்தானா படிக்கவேண்டும்? அரசியல் விஷயங்களை நாம் இங்கே அலசக்கூடாதா?' என்று கேட்டார் ஸ்ரீ. சத்தியமூர்த்தி. இன்னொரு நாள், 'எதற்காக அந்நிய நாட்டு விவகாரங்களில் மண்டைகளை உடைத்துக்கொள்ள வேண்டும்? இந்தியா என்று ஒன்று இருக்கிறது என்பதை நாம் மறந்துவிட்டோமே!' என்று வருந்தினார்.

53-வயதிலேயே அவர் மிகவும் சலிப்புடன் தோன்றுகிறார். ஆனால் ஜெயிலுக்கு வெளியே வந்தால் பழைய சுறுசுறுப்பு வந்துவிடுமென்று நம்புகிறேன். நோய் காரண

மாகவே அவர் சென்னை ஆஸ்பத்திரியில் நெடுங்காலம் இருக்க நேர்ந்தது.

ஸ்ரீ. நாகராஜ அய்யங்கார் வயது மிகுந்து ஆறிப்போன பெரிய மனிதர். சாவதானமாகப் பேசுவார். சாவதானமாகக் காரியங்கள் செய்வார். ஆனால், சாப்பாட்டு நேரத்தில் சாப்பிட்டுவிடவேண்டும்; தூங்க வேண்டிய நேரத்தில் தூங்கிவிட வேண்டும்; மற்றவைகளெல்லாம் எப்பொழுது வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம் என்ற நியதி உடையவர். நல்ல அறிவாளி. ஒரு கொடிய பிளவை இருந்தும் பொருட்படுத்தாமல் ஜெயிலுக்கு வந்தவர். பிளவை சௌக்கியமாகித் திருச்சி சிறையில் ஒரு வருஷத் தண்டனை அனுபவித்து வந்தார்.

நாலாவது கட்டிலில் படுத்திருந்தவர் ஸ்ரீ. நிவர்த்தி வெங்கட சுப்பையா. எப்பொழுதும் படுத்துத்தான் இருப்பார். சந்தோஷத்துடன் இருக்கும் முகம். 7 மாதத் தண்டனை அடைந்த அன்று இரவு, வேலூருக்குக் கொண்டுவரப் படுவதற்கு முன்பு, போலீஸாரால் ஒரு சத்திரத்தில் வைக்கப் பட்டிருந்தார். தேளோ, பாம்போ அவரைக் கடித்துவிட்டது. கால் வீக்கத்துடனும் ஜுரத்துடனும் ஜெயிலுக்கு வந்த மறுதினம் ஆஸ்பத்திரியில் வந்து சேர்ந்தார். நடக்கவே முடியாது. எனினும் நன்றாகப் பேசிக்கொண்டிருப்பார். இப்பொழுது சௌக்கியமாகியிருக்குமென்று நம்புகிறேன்.

வேலூர் ஜெயில் ஆஸ்பத்திரியை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம். முதல் பாகத்திலேதான் சத்தியாக்கிரகிகளாகிய நாங்கள் இருந்தோம். ஒருபுறம் ஆஸ்பத்திரி மருந்துகளும் டாக்டர்களும். எங்களைச் சேர்ந்தாற்போல் அடுத்த கட்டடத்தில் சாதாரணக் கைதிகள் — பல வியாதிகளால் பீடிக்கப்பட்டவர்கள் — இருந்தார்கள். அதற்கடுத்த பிரிவில் கொஞ்சம் மோசமான வியாதியஸ்தர்கள் இருந்தார்கள்.

னிமோனியா முதலிய ஜுரங்கள், ஹிருதயக் கோளாறு கள், இன்னும் பலவிதமான நோய்களால் கஷ்டப்படுப வர்களும் அங்கே இருந்தார்கள். மூன்று பிரிவுகளும் சேர்ந்தது ஆஸ்பத்திரிக் கட்டடம். சுற்றிலும் ஒரு வராந்தா உண்டு.

இந்த ஆஸ்பத்திரி சூப்பிரண்டு மேஜர் ஜில்ஸிங், ஐ. எம். எஸ். மேற்பார்வையில் இருந்தது. அவருக்குக் கீழே இரண்டு டாக்டர்கள். சாதாரணமாக கவர்ன்மெண்ட் டாக்டர்கள் 3 வருஷங்கள் ஜெயில் ஆஸ்பத்திரிகளில் வேலை பார்க்கவேண்டும். ஜெயில் ஆஸ்பத்திரிகளில் வேலைபார்க்க டாக்டர்கள் விரும்புவதில்லை. விருப்பமில்லாமல் சம்பளத் திற்காக மாத்திரம் செய்யும் வேலைகளில் ஜெயில் டாக்டர் வேலை ஒன்று. இந்த டாக்டர்களுக்குக் கீழே ஒரு கம்பவுண் டர். ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் ஏனைய ஆட்களெல் லோரும் கைதிகளே!

நெஞ்சில் ஈரமில்லாத கைதிகளிடத்திலே மருந்து வாங் கிச் சாப்பிடவேண்டும். கொடிய நோய்வாய்ப்பட்டு அபாய தசையிலிருக்கும் சந்தர்ப்பத்திலும்கூட அவர்கள் விரும் பினால்தான் நமக்கு ஏதாவது உதவி செய்வார்கள். அவர் களுக்கு இஷ்டமில்லை யென்றால் நாம் என்ன கூச்சல் போட்டாலும் நமக்கு உதவி கிடைக்காது. ஜனவரி மாதம் முதல் வாரத்தில் நடந்த ஒரு சம்பவம் என்னை வெகு வாக வருத்தியது. 4உ இரவு என்று நினைக்கிறேன். 'தண்ணீர், தண்ணீர்!' என்ற கூச்சல் கேட்டது. தண்ணீர் கொடுப்பார் யாருமில்லை. எழுந்து போய்ப் பார்த்தால் வரண்ட உடம்புடன் படுத்திருந்த ஒருவன் தண்ணீர் கேட் கிறான். தண்ணீர் கொடுத்தபின் திரும்பவும் படுத்துத் தூங்கி விட்டான் என்று நினைத்தேன். காலையில் பார்த்தால் கட்டிலி லிருந்து கீழே விழுந்து இறந்து கிடந்தான். இந்தக் கைதி

இன்னும் சுமார் 3 வருஷம் தண்டனை அனுபவிக்க வேண்டியிருந்தது.

இறப்பது உலகத்திலே சகஜந்தான். அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் தன்னுடைய பெண்டு பிள்ளைகளை விட்டு வந்திருக்கும் ஒருவன், அபாயகரமான நிலைமையில், தண்ணீர் கொடுக்கவும் ஆளில்லாமல், இறந்து பல மணி நேரம் கழிந்துதான் இறந்துபட்டான் என்று தெரியக்கூடிய நிலைமையில் ஆஸ்பத்திரி இருக்கிறதென்றால் அது மிகவும் கண்டிக்கத் தகுந்தது.

ஆனால் டாக்டர்களைக் குற்றம் சொல்வதற்கில்லை. இரவில் டாக்டர்கள் ஆஸ்பத்திரிக்குள்ளே வரமுடியாது. ஏன்? ஜெயில் விதிகளில் இடமில்லை! பகலெல்லாம் யாராவது ஒரு டாக்டர் ஜெயிலில் இருக்கவேண்டுமென்று விதி இருக்கிறது. இரவு 10 மணியிலிருந்து காலைவரை ஒரு டாக்டர் ஜெயிலுக்குள்ளே இருக்கவேண்டுமென்று விதியிருக்கிறது. அவர் கையிலேதான் ஆஸ்பத்திரிச் சாவிகளும் இருக்கவேண்டும். ராத்திரி ஒருவேளை ஆஸ்பத்திரியைத் திறக்கவேண்டி வரும் என்றுதான் சாவிகள் வைத்திருக்கிறார். ஆனால் திறக்க வேண்டுமானால் ஜெயில் அதிகாரி ஒருவர் இல்லாமல் திறக்க முடியாது. நிச்சயமாய் முடியாது. ஆஸ்பத்திரிக்கு உள்ளே இருப்பவர்கள் அனைவரும் கைதிகள்தான். நோய் முற்றினால் பக்கத்திலே டாக்டர் இருந்தும் சாகவேண்டுமென்பது கைதியின் விதி! கைதி கைதிதானே! அபாயமான நோயுடன் 12 மணி நேரம் வைத்திய வசதி யில்லாமல் ஒரு மனிதனை அடைத்து வைப்பதென்றால், கைதியைத் தானே அப்படிச் செய்ய முடியும்.

ஆஸ்பத்திரியில் விதவித நிறமான குப்பிகள் வைத்திருக்கிறார்கள். அந்தக் குப்பிகளிலிருந்து கைதிகள் தினந்தினம் தாங்களே மருந்து சாப்பிடுகிறார்கள். நேற்றுக் குடித்த

மருந்துதான் இன்றும்; இதேதான் நாளையும். நோய் குணமானால் குணமாகும்; குணமாகவில்லையானால் இல்லை. வயிற்றோட்டம் இருந்தால் கண்டிப்பாக ஜெயில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட வேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனால் எப்பொழுதும் இது நடப்பதில்லை. ஆஸ்பத்திரியில் போதிய இடம் இல்லை. இருக்கும் இடத்தில்கூட, மற்றக் கொட்டறைகளில் இடம் போதாமல் கைதிகளை இரவில் அங்கே கொண்டுவந்து அடைத்துவைக்கிறார்கள். இரவில் சுமார் 30 நோயாளிகளும், நாலைந்து கைதி - வேலையாட்களும், 75 சாதாரணக் கைதிகளும் வேலூர் ஆஸ்பத்திரியில் அடைக்கப்படுகிறார்கள்.

ஒன்றிரண்டு ஆண் 'நர்ஸ்கள்' கண்டிப்பாய் ஜெயில் ஆஸ்பத்திரிகளுக்கு வேண்டும். சரியாகக் கவனித்தால் எத்தனையோ உயிர்களைப் பிழைக்கவைக்கலாம். வேறு எந்த ஆஸ்பத்திரியில் ஆண் 'நர்ஸ்கள்' வைக்கலாமோ வைக்கக் கூடாதோ எனக்குத் தெரியாது. ஆனால் ஜெயில் ஆஸ்பத்திரிகளில் அவர்கள் நிச்சயமாக வேண்டும்.

வேலூர் ஜெயில் ஆஸ்பத்திரியிலே இன்னும் ஓர் அதிசயம் நான் கண்டேன். ஒருநாள் ஒரு கைதி கையிலே காகிதத்தில் மடித்த ஒரு சிறிய பொட்டணம் வைத்திருந்தான். என்ன என்று கேட்டேன். என் கையிலே கொடுத்தான். திறந்து பார்த்தால் கஞ்சா! வட ஆற்காடு ஜில்லாவிலே மதுவிலக்கு என்பது எனக்குத் தெரியும். மதுவிலக்கு என்றால் கஞ்சாவும் விலக்குத்தான். வெற்றிலை பாக்குக்கூட அனுமதிக்கப்படாத ஜெயிலில், மதுவிலக்கு அமுலிலுள்ள ஜில்லாவில், கஞ்சா விற்கப்படுகிறது! ஜெயில் அதிகாரிகளை என்ன சொல்ல இருக்கிறது? மனிதனுடைய அபூர்வமான சக்திகளெல்லாம் இந்தக் கெட்ட வழிகளில் தானா வேலை செய்யவேண்டும்!


வேலூர் ஜெயிலில் நான் இருக்கும் பொழுது இரண்டு 'ஸி' வகுப்புக் கைதிகள் அங்கிருந்தார்கள். ஆந்திராவி லிருந்து வந்திருந்த ஸ்ரீ. காமேஸ்வரராவ் எமனுலகு ஏகும் சந்தர்ப்பத்தை அணுகிக்கொண்டிருந்தார். என்ன நேர்ந் ததோ! திண்டிவனத்திலிருந்து வந்த மற்றொருவர் 'பால், பால்' என்று பரிதபித்துக்கொண்டிருந்தார்.

'எல்லாம் ரொம்ப மோசம்' என்று அடிக்கடி சொல்லு வான் எங்களைக் கவனித்துக்கொண்டிருந்த கைதி - வேலை யாள் ராஜு. மூன்றாவது வகுப்புக் கைதிகளுக்குக் கொடுக் கும் 'குரோட்டன்ஸ்' சாம்பார் முழு மோசம்.

ஜெயிலே மோசம். அதிலும் ஆஸ்பத்திரி ரொம்ப மோசம். ஜெயில் டாக்டர் ஒருவர் அங்கே மனச்சாட்சியுடன் மிகவும் போராடிக்கொண்டிருந்தார். என்னிடம் ஒருநாள் சொன்னார்: 'பூலோகத்திலே நரகம் என்றால் இதுதான்! வேறு நரகம் போய்ப் பார்க்கவேண்டியதில்லை!'

'உண்மை!' என்று நான் ஒப்புக்கொண்டேன்.

ஜெயிலே கஷ்டம். அதிலும் நோய் வந்தால் சொல்ல வேண்டியதில்லை. சிறை செல்பவர்களுக்கு நோய் வாராமல் ஆண்டவன்தான் காப்பாற்றவேண்டும். வந்தாலும் அவன் தானே காக்கவேண்டும்! வந்தபின் காப்பதைவிட வாராமலே காப்பானாக!





எச். மஞ்சுநாத ராவ்



வ. வெங்கடேசம்

4. 'கமான்'

'கமான்' என்பது முற்றிலும் கைதிகள் அகராதியில் உள்ள ஒரு வார்த்தை. ஜெயில்களுக்கு வெளியே இந்த வார்த்தையை நீங்கள் கேட்டிருக்க முடியாது. ஒருவேளை 'கமாண்ட்' என்ற வார்த்தை 'கமான்' ஆகியிருக்கலாம். அல்லது ஜெயிலில் உருவகமாகிக்கொண்டு வரும் பாஷையில் ஒரு தனி அர்த்தத்துடன் விளங்கும் தனி வார்த்தையாக இருக்கலாம். 'கமான்' என்ற ஜெயில் வார்த்தைக்கு அர்த்தம் ஒரு ஜெயிலிலிருந்து இன்னொரு ஜெயிலுக்குக் கொண்டு போவது.

ஒரு ஜெயிலிலிருந்து இன்னொரு ஜெயிலுக்கு எதற்காகக் கொண்டுபோக வேண்டும் என்ற சந்தேகம் சாதாரணமாக எல்லோருக்கும் எழலாம். நிர்வாக சம்பந்தமாகச் செய்யப்படும் மாறுதல்களைத் தவிர வேறு சில காரணங்களும் இருக்கின்றன. விடுதலைக் 'கமான்' என்பது சிக்கனத்தை உத்தேசித்துச் செய்யப்படுவது. மதுரை ஜில்லா ஜெயிலிலிருந்து ஒரு வருஷத்துக்குமேல் தண்டனையடைந்த கைதிகளை அழைத்துவரும் போலீஸ்காரர்களிடம் திருச்சியிலிருந்து சமீபத்தில் விடுதலையடையக்கூடிய மதுரைக் கைதிகளை மதுரை ஜெயிலுக்கு அனுப்பிவிடுவதும் உண்டு.

ஒரு கேஸில் தண்டனை யடைந்தவர்களை ஒரே ஜெயிலில் வைத்தால் அவர்களுக்கு அநுகூலமாக இருக்குமென்று அவர்களைப் பிரித்து வைப்பதுண்டு. அரசியல் கைதிகளையெல்லாம் கூடுமானவரையில் தனியே வைத்துவிடுவது வழக்கம். அவர்கள் மற்றக் கைதிகளைச் சந்திக்க விடுவது

கிடையாது. ஜெயில் அதிகாரிகளைப் பற்றியும் கைதிகள் நடத்தப்படும் விதத்தைப் பற்றியும் யாராவது உத்தியோகப் பற்றற்ற விஸிட்டர்களிடம் புகார்செய்தால் அந்தக் கைதிகளைக் 'கமான்' எடுத்துவிடுவார்கள். சென்ற சட்டமறுப்பு இயக்கத்தில் ஸ்ரீ. நாகராஜ அய்யங்கார் இப்படிக் கஷ்டப்பட்டிருக்கிறார்.

ஜெயில் அதிகாரிகளுடன் உத்தியோகப் பற்றற்ற விஸிட்டர் ஒருவர் வந்தார்.

'இவர்களுடன் நீங்கள் வந்தால் உங்களிடத்தில் நாங்கள் எப்படி எங்கள் குறைகளைத் தெரிவிக்க முடியும்? நீங்கள் தனியே வந்தால் நன்றாயிருக்குமே!' என்றார் ஸ்ரீ. நாகராஜன். அவ்வளவுதான். மறுநாள் காலை பெட்டி படுக்கையுடன் ஸ்ரீ. நாகராஜ அய்யங்கார் வேறு சிறைக்கு மாற்றப்பட்டார். இந்தக் கமானில் மிகவும் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், திடீரென்று ஆபீஸுக்கு அழைத்துச் செல்வார்கள். அங்கேதான் வேறு ஜெயிலுக்கு மாற்றப் போகிறார்கள் என்பது நமக்குத் தெரியும். நண்பர்களிடத்தில்கூட விடை பெற்றுக்கொள்ள முடியாது. அவ்வளவு திடீரென்று எதிர்பாராத விதத்தில் இதைச் செய்வார்கள். இதனால் அநேகம் கைதிகளுக்கு 'கமான்' எடுத்து அனுப்பிவிடுவார்கள் என்ற பயம் எப்பொழுதும் இருந்து வருகிறது.

உத்தியோகப் பற்றற்ற விஸிட்டர்கள் என்று சொல்லப்படுவோர்களே ஒரு தனி ரகம். அரசாங்கத்தின் செல்லப் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் உத்தியோகம் இந்த விஸிட்டர் பதவி. ஒவ்வொரு ஜெயிலிலும் அவர்களைப் பார்த்தால் அவர்களுடைய நிலைமைக்கு வருந்தாமல் இருக்க முடியாது. பரிதாபகரமான தோற்றம். அவர்களுக்கு உத்தியோகம் இருக்கிறதென்று ஒரு பெருமை. 'ஒன்றும் செய்யத்தான் உங்களுக்கு முடியாதே!' என்ற நோக்கத்துடன்

காம் அவர்களைப் பார்க்கும்பொழுது முகத்தில் அசடு வழியும்.

ஜில்லா கலெக்டரால் நியமிக்கப்படும் இந்த வகுப்பார் எந்தக் கைதியாவது செய்யும் புகாரைப்பற்றி ஜெயில் புஸ்தகத்தில் குறிப்பிடுவார்கள். அந்தப் புகார் காரணமில்லாமல் செய்யப்பட்டது என்று ஜெயில் சூப்பிரண்டு 'அபிப்பிராயப் பட்டால்' அவரே அந்தக் கைதிக்கு என்ன தண்டனை விதிக்க உத்தேசித்திருக்கிறார் என்பதை விஸிட்டர்களுக்கு எழுதி அனுப்புவார். எந்தக் கைதியாவது இந்த விசித்திர மனிதர்களிடம் சொல்லி எந்தவிதமான அநுகூலமாவது பெற முடியுமா?

அநேகமாக அரசியல் கைதிகள் இருக்கும் இடத்திற்கு இந்த விஸிட்டர் வர்க்கத்தார் வருவது கிடையாது. தங்கள் சுயமரியாதையைக் காத்துக்கொள்ள இந்த விதத்திலாவது நடந்துகொள்வதைப் பாராட்டத்தான்வேண்டும்!

வேலூர் சிறையிலிருந்து ஜனவரி மீ 6உ காலை நாகராஜ அய்யங்காரையும் என்னையும் திருச்சி சிறைக்கு மாற்ற ஏற்பாடாயிருந்தது. எங்களுடன் இருந்த 150 அரசியல் கைதிகளை டிஸம்பர் 23, 24, 25-ஆம் தேதிகளில் திருச்சிக்கு மாற்றிவிட்டார்கள். ஆகவே திருச்சிக்கு என்று போவது என்று நான் துடித்துக்கொண்டிருந்தேன். ஜனவரி மீ 2உ முதல் பலமுறை நான் சூப்பிரண்டிடம் என்னைத் திருச்சிக்கு அனுப்பும்படி சொல்வதுண்டு. அவர், 'தங்களை மாத்திரம் அனுப்ப முடியாது. இன்னொருவரையும் சேர்த்துத்தான் அனுப்ப முடியும்' என்று சொல்லிவிடுவார். வேலூர் சிறையிலிருந்து திருச்சி சிறைக்குச் சென்ற மாஜி மந்திரி ஒருவர் இரண்டு பெட்டிகளுடன் கைது செய்யப்பட்டிருந்தார். திருச்சி சிறைக்கு மாற்றப்படும் பொழுது அந்த இரண்டு பெட்டிகளில் அவர் சாமான்கள் பிடிக்கவில்லை!

6வ சாயங்காலம் மணி 6 ஆகிவிட்டது. எந்தவித மான தகவலும் கிடையாது. அன்றும் பயணமில்லை என்று நான் முடிவுசெய்துவிட்டேன். சில நிமிஷங்களில் ஜெயில் அதிகாரி ஒருவர் வந்து எங்களை அழைத்துக்கொண்டு போனர். ஜெயில் ஆஸ்பத்திரியைவிட்டு வரும்பொழுது எங் களுக்கு வேலை செய்துவந்த ராஜுவை மிகவும் துக்கத்துடன் நான் பிரிந்தேன். மிகுந்த அன்புடன் எனக்குப் பணி விடை செய்திருக்கிறன் அவன். உண்மையாக அவன் ஜெயி லுக்கு வரவேண்டிய கீழ்த்தரமான மனிதன் அல்ல. நல்ல குடும்பத்திலுள்ளவன், பெருந்தன்மையானவன். ஜெயிலில் நடக்கும் அட்டூழியங்களைக் கண்டு மனம் தாங்காதவன். எல் லோர்மீதும் அன்புடையவன்.

ஜெயில் சடங்குகளெல்லாம் முடிந்து ஜெயில் வாச லுக்கு வந்ததும் ஒரு வெள்ளைக்கார ஸார்ஜன்டும், முஹம் மதிய ரிஸர்வ் ஹெட்கான்ஸ்டேபிள் பாஷாவும் எங்களை அழைத்துச் செல்லத் தயாராயிருந்தார்கள். லாரியில் ஏறிய தும், 'எங்களுடைய வழிச்சாப்பாடு முதலியவைகளுக்குப் பணம் வாங்கிக்கொண்டீர்களா ?' என்று போலீஸாரைக் கேட்டேன்.

'உங்கள் பணம் என் கையில்தான் இருக்கிறது. ஆனல் சாப்பாட்டுக்கோ, சிற்றுண்டிக்கோ செலவழிக்க எனக்கு அதிகாரமில்லை' என்றார் ஸார்ஜன்ட்.

'இன்றிரவும், நாளைக் காலையும் நான் பட்டினியா ?' என்று கேட்டேன்.

'இப்பொழுது சாயங்காலம் நீங்கள் சாப்பிட்டாகிவிட் டது. காலை 8 மணிக்குத் திருச்சி சிறையில் உங்களைச் சேர்ப் பித்துவிடுகிறேன்.'

'முடியாது, காலையில் நான் திருச்சி ஸ்டேஷனில் சிற் றுண்டி சாப்பிட வேண்டும்.'

'எனக்கு உத்தரவில்லை.'

'நான் திரும்பவும் ஜெயில் ஆபீஸுக்குப் போக வேண்டும்.'

'போகக் கூடாது.'

'போயேதீருவேன்!'

'நானும் கூட வருகிறேன்.'

வெள்ளைக்கார ஸார்ஜண்ட் தணிந்துவிட்டார். ஜெயில் ஆபீஸில் போய், காலை திருச்சி ஸ்டேஷனில் என் சொந்தச் செலவில் நான் காப்பி குடித்துக்கொள்ளலாம் என்று உத்தரவு வாங்கி வந்தேன்.

இவ்வளவு ஆடம்பரத்துடன் ஆரம்பித்த அந்த ஸார்ஜண்ட் ரயிலில் எனக்கு அத்தியந்த நண்பராகிவிட்டார். அன்றியும் அவருடைய சொந்தச் செலவிலும் எனக்குச் சாமான்கள் வாங்கிக் கொடுத்தார்.

முதன் முதலில் சண்டையுடன் ஆரம்பிக்கும் சிநேகம் வெகு சீக்கிரத்தில் விருத்தியடைவதை நான் இதற்கு முன்பும் கண்டிருக்கிறேன்.

வேலூர் கண்டோன்மெண்ட் ஸ்டேஷன் வந்ததும் எங்களை லாரியிலேயே வைத்துவிட்டு டிக்கட் வாங்கிக் கொண்டுவர ஸார்ஜண்ட் போய்விட்டார். சில நிமிஷங்களில் ரயில்வே பிளாட்பாரத்தை அடைந்தோம். ரயிலும் வந்து விட்டது.

முதல் வகுப்பு வண்டியிலே அமர்ந்தோம். எங்களுக்கு அடுத்தாற்போலுள்ள இரண்டாவது வகுப்பு வண்டியில் சித்தூரிலிருந்து தண்டிக்கப்பட்டு அதே ரயிலில் நேராகத் திருச்சி சிறைக்குக் கொண்டுபோகப்படும் ஸ்ரீ. டி. ஸ்ரீனிவாசய்யங்கார் இருந்தார்.

'எதற்காக முதல் வகுப்பு?' என்று அந்த ஸார்ஜண்டைக் கேட்டேன்.

'நாம் நாலு பேருக்கும் இரண்டாவது வகுப்பில் இடமில்லை' என்றார்.

'மூன்றாவது வகுப்பில் போகக் கூடாதா?' என்றேன்.

'நான் மூன்றாவது வகுப்பில் ஏன் பிரயாணம் செய்ய வேண்டும்? நீங்கள் தான் எதற்காகப் பிரயாணம் செய்ய வேண்டும்?'

வேலூரிலிருந்து திரும்பிய நாங்கள் இரவு சுமார் 11-மணிக்கு விழுப்புரத்தை அடைந்தோம்.

விழுப்புரத்தில் இரண்டாவது வகுப்பு வண்டியில் ஏறினோம். எங்கள் ரயிலிலேயே வந்த ஸ்ரீ. டி. ஸ்ரீனிவாசய்யங்காரும், கூடவந்த ஸப் இன்ஸ்பெக்டரும், ஜவானும் பிளாட்பாரத்திலேயே நின்றுகொண்டிருந்தார்கள். 'நீங்கள் வரவில்லையா?' என்று ஸப் இன்ஸ்பெக்டரைக் கேட்டேன்.

'நாங்கள் போட் மெயிலில் வருகிறோம்.'

'ஏன்?'

'"இன்டர்" வகுப்பில் வரப் போகிறோம்.'

'ஆனால் போட்மெயில் தஞ்சாவூர் வழியாக வருகிறதே. திருச்சிக்குப் போவதற்குத் தஞ்சாவூர் போக வேண்டாமே!'

'உங்கள் ரயிலில் "இன்டர்" வகுப்பு இல்லையே!'

'இல்லையானால் என்ன? இரண்டாவது வகுப்பிலேயே வருகிறதுதானே!'

'இல்லை. "இண்டர்" வகுப்பில் கொண்டுபோகவேண்டுமென்பதுதான் ஜெயில் விதி!'

விதிகளில் 'ஏ, பி' வகுப்புக் கைதிகளை 'இன்டர்' வகுப்பில் கொண்டுபோகவேண்டும் என்றும், 'இன்டர்' இல்லையானால் இரண்டாவது வகுப்பில் போகலாம் என்றும் குறிப்பிட்டிருக்கிறது.

'அந்த விதி எனக்கு இல்லையா?'

'உங்களுடன் வருபவன் வெள்ளைக்கார ஸார்ஜண்ட், ஸார்! அவன் என்ன வேணுமானாலும் செய்யலாம். நான் செய்தால் என் வேலையைக் காப்பாற்ற வேண்டாமா ?'

இந்திய அதிகாரிகள் மனப்பான்மைக்கு இது ஒரு 'ஸாம்பில்'.

மறுநாள் காலை இந்த ஸப் இன்ஸ்பெக்டர் தம்முடன் வந்த ஜவானை எங்கேயோ காணவில்லை என்று சொல்லிக் கொண்டு திருச்சி ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தார்.

திருச்சி சிறைக்குச் சென்ற நண்பர்களை மீண்டும் பார்ப்பதற்கு எனக்கு ஆவல் அதிகமாக இருந்தது. என்னுடன் ஸ்ரீனிவாசய்யங்காரும் லாரியில் ஏறினார். ஸ்ரீனிவாசய்யங்கார் சித்தூரில் ஓர் அட்வகேட். ஜில்லா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி. தீவிரமான வாலிபர். சதா வேலை செய்து கொண்டே இருக்கவேண்டுமென்று பிரியப்படுபவர். ஜெயில் வாசம் அவரைக் கொஞ்சம் கஷ்டப்படுத்துகிறது. எனினும் சந்தோஷத்துடன் இருக்கிறார்.

ஒருவேளை என்னுடன் வந்த வெள்ளைக்கார ஸார்ஜண்ட் போலீஸ் லாரிக்கு டெலிபோன் செய்யாவிட்டால் ஸ்ரீனிவாசய்யங்காரை ஸெண்ட்ரல் ஜெயிலுக்கு 5-மைல் தூரமும் நடத்தியே அழைத்துச் சென்றிருப்பார் சித்தூர் ஸப் இன்ஸ்பெக்டர்.

ஏன் ?

விதிகளில் போலீஸ் லாரிக்கு டெலிபோன் செய்ய வேண்டுமென்று எங்கே குறிப்பிட்டிருக்கிறது ?

5. திருச்சி ஜெயில்

நான் ஜெயிலுக்குப் புதியவன். மகாத்மா காந்தி, ராஜாஜி முதலியோரைப் போல நான் 'கறுப்புக் குல்லாய்' அல்ல. 'கறுப்புக் குல்லாய்' என்றால் பலமுறை தண்டனை யடைந்து சிறைக்கு வரும் ஆசாமிக்குப் பெயர்.

ஜெயிலுக்குப் போகிறவர்களுக்கு முதலாவது ஏற்படும் பெரிய மாற்றம் ஒன்று உண்டு. அவர்களுடைய பெற்றோர் வைத்த பெயர்கள், நண்பர்கள் அழைத்த பெயர்கள் எல்லாம் போய், அவர்கள் சிறை வாயிலிலேயே வெறும் 'நம்பர்கள்' ஆகிவிடுவார்கள். நாம் தொழுக்களிலே அடைக்கும் மாடு களுக்குக்கூட நம்பர் கொடுப்பதில்லை. 'மயிலைக் காளை' 'சிவலைக் காளை' என்றெல்லாம் அருமையாகப் பெயர் வைப் போம். ஆனால் சிறைக்குச் செல்லும் மனிதர்களுக்கோ, உள்ள பெயர்களும் எடுக்கப்பட்டு, நம்பர்கள் கொடுக்கப் படுகின்றன! ஆயிரக்கணக்கான கைதிகளைக் கும்பலாக அடைத்து ஆண்டுவருவதற்கு முதலாவதாகச் செய்யப்படும் ஏற்பாடு இந்த நம்பர் கொடுப்பது.

இவ்வாறு நான் நம்பர் 154-ஆக ஆகிவிட்டேன். நான் மட்டுமா? உங்கள் ராஜாஜி நம்பர் 1. உங்கள் மாஜி ஜெயில் மந்திரி நம்பர் 6. நம்பர் 27 யார் தெரியுமா? 'தினமணி' ஆசிரியர்!

திருச்சி ஜெயிலுக்கு அரசியல் கைதிகள் வருவதற்கு முன்னே அங்கே 72 ஸிவில் கைதிகள் இருந்தார்கள். அவர் களுடன் 67 மரங்களும் இருந்தன. ஸிவில் கைதிகள் என் றால், வாங்கின பணத்தைத் திரும்பக் கொடுக்க முடியாமல்,

அல்லது கொடுக்காமல் இருந்த காரணத்திற்காகக் கடன் கொடுத்தவர்களால் ஜெயிலுக்கு அனுப்பி வைக்கப்பட்டவர்கள். கடன் கொடுத்தவர்கள், தங்களுடைய பணம் போன பிறகும், மேற்கொண்டு இவர்களுடைய ஜெயில் வாசத்திற்கும் மாதா மாதம் ஒழுங்காகப் பணம் கட்டவேண்டும். இவர்களை ஜெயிலுக்கு அனுப்பிவைப்பதற்கு கடன் கொடுத்தவர்களுக்கு ஏன் இவ்வளவு அக்கரை! இதற்கு ஒரே காரணம்தான் உண்டு. இவர்கள் ஜெயிலில் இருப்பதைச் சகியாது பந்துக்களாவது நண்பர்களாவது பணத்தைக் கொடுத்துவிடுவார்களாம்! நண்பர்களும் பந்துக்களும் இந்தக் காலத்தில் அவ்வளவு தாராளமாக இருப்பதில்லை. எனவே, திருச்சி சிறையில் சாதாரணமாக சராசரி 75 ஸிவில் கைதிகள் இருந்துகொண்டே இருக்கிறார்கள்.

இந்த ஸிவில் கைதிகள் அபூர்வமான மனித வர்க்கம். சூப்பிரண்டு தீர்மானம் செய்யக்கூடிய நேரத்தில்தான் அவர்கள் ஸ்நானம் செய்யவேண்டுமாம்! அவர்களை வேலை செய்ய வேண்டுமென்று ஜெயில் சூப்பிரண்டுகூடக் கட்டாயப்படுத்த முடியாது! அவர்கள் வெளியிலிருந்து சாப்பாடு கொண்டுவந்து சாப்பிடலாம். மது வகைகள் தவிர மற்றதெல்லாம் அவர்களுக்கு அநுமதிக்கப்படுகிறது.

வாங்கிய கடன் 50 ரூபாயாகவோ அதற்குள்ளாகவோ இருந்தால், அவர்களை 6 வாரம் ஜெயிலில் வைக்கலாம். 50 ரூபாய்க்கு அதிகமானால் 6 மாதம் ஜெயிலில் இருக்கும்படி செய்யலாம். இந்தக் கடன்காரர்கள் - ஜெயிலில்தான் அரசியல் கைதிகள் எல்லோரும் இருக்கிறார்கள். தஞ்சை ஸ்ரீ. நாடிமுத்துப் பிள்ளையும் இங்கேதான் இருந்தார்!

இந்த ஸிவில் ஜெயிலை இப்பொழுது 'கேம்ப்' ஜெயில் என்று சொல்லுகிறார்கள். 'கேம்ப்' ஜெயில் என்பது பெரிய ஜெயிலின் அனுபந்தம். இதற்குச் சுற்றிலும் வெளியே

மதில் சுவர் கிடையாது. சுற்றிலும் இரும்பு முள்வேலி இருக்கும். உள்ளேயிருந்து வெளியே பார்க்கலாம். இந்த வசதிகளும், நல்ல காற்றும் வேண்டுமென்றுதான் சத்தியாக்கிரகிகளை இங்கே கொண்டுவந்து வைத்ததாக இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஸ்ரீ. கண்ட்ராக்டரே சொன்னாராம். ஆனால் நாங்கள் வந்ததும் சுற்றிலும் எட்டடி உயரம் பிரம்புத் தட்டிகள் அடிக்கவேண்டுமென்று ஏற்பாடாகி வந்தது. நாங்கள் எல்லோரும் இதை எதிர்த்தோம். டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் (நமது மாஜி சுகாதார மந்திரி) சுகாதாரத்திற்கு இது மிகவும் கெடுதலாக இருக்குமென்று சென்னை அரசாங்கத்திற்கு ஒரு மனு அனுப்பினார். இருந்தாலும் தட்டிகள் அடிக்கப்பட்டன. வெளியிலே காலையிலும் மாலையிலும் பசுக்களை மேய்க்க ஓட்டிக்கொண்டு போகும் காட்சியைக்கூட நாங்கள் பார்க்க முடியாது போயிற்று. சிறு குழந்தைகள் பள்ளிக்கூடம் போவதையும் காணமுடியாது. நாங்கள் கைதிகள்தான் என்பதை அடிக்கடி ஞாபக மூட்டின இந்தத் தட்டிகள். மாடுகளையும் குழந்தைகளையும் பார்ப்பதில் என்ன ஆனந்தம் வந்துவிடும் என்று யாரும் எண்ணவேண்டாம். 6 மாதம் சிறைக்குள் இருந்தால் உண்மை தானாகவே விளங்கிவிடும். சிறையிலுள்ள கைதிகள் விடுதலையாகும்வரை யார் யாரைப் பார்க்கிறார்கள்? எங்கு திரும்பினாலும் சோகத்துடனுள்ள வேறு கைதிகள். தப்பினால் கைதிகளை மேய்க்கும் வார்டர்கள்! ஒரு சிறு குழந்தையை ஜெயிலுக்குள் கொண்டுபோனால் நூற்றுக் கணக்கான கைதிகள் அதைக் கையில் வாங்கிவைத்துக் களிப்படைவார்கள். ஏனென்றால் மாதக்கணக்காக, வருஷக்கணக்காக, அவர்கள் கண்ணுக்கினிய காட்சி எதையும் கண்டதில்லை. ஜெயிலுக்குள் ஒரு நாய்க் குட்டியைக்கூடக் காண முடியாது. பெரிய மதில்சுவர்களைத் தாண்டிப்

பறவைகள்மட்டும் வரும். அவைகள் வருகிற நேரத்தில் கைதிகள் தொழிற்சாலைகளில் அடைக்கப்பட்டிருப்பார்கள். பறவைகள் கூடுகளுக்குத் திரும்பிய பிறகு, கைதிகள் தத் தம் கூடுகளில் அடைபட்டுவிடுவார்கள்.

கேம்ப் ஜெயில் சுமார் 500 அடி நீளமும், 500 அடி அகலமும் கொண்ட ஒரு சதுரம். திருச்சியிலிருந்து புதுக் கோட்டைக்கு மோட்டார் மார்க்கமாகப் போகும் பொழுது இந்த ஜெயிலைப் பார்க்கலாம். ஜெயிலுக்குள்ளே வந்ததும் இரண்டு பக்கமும் இரண்டு பெரிய வார்டுகள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் பின்னால் இன்னும் இரண்டு வார்டுகள் இருக்கின்றன. ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு சிறிய பிளாக்குகள் இருக்கின்றன. ஒவ்வொரு பிளாக்கிலும் எவ்வளவு பேர்கள் இருக்கவேண்டும் என்பதை ஜெயில் அதிகாரிகள் முதலில் தீர்மானம் செய்யவில்லை. ஆகவே கூட்டம் அதிகமாகவே இருக்கும்படி நேர்ந்தது.

இந்த ஜெயிலில் சிறிய பிளாக்கில் பாதியை ஜெயில் சமையலறையாக உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

இரண்டு ஸ்நான கட்டடங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கட்டடத்திலும் 20 பேர் ஸ்நானம் செய்வதற்கு சுமார் 30அடி நீளம், 3 அடி அகலம், 2 அடி ஆழம் கொண்ட இரண்டு தொட்டிகள் உண்டு. தொட்டிகளைச் சுற்றிலும் 4 அடி உயர முள்ள துண்டுச் சுவர்கள் கட்டிவிடப்பட்டிருக்கின்றன. வெளியிலிருந்து தண்ணீர் வருகிறது. இந்த நேரம் வரும் என்றில்லை. எப்பொழுதாவது தண்ணீர் வரும். நிச்சயமாக ஒருவரும் சொல்ல முடியாது. தண்ணீர் வந்ததும் சத்தியாக்கிரகிகள் ஸ்நானம் செய்வதற்குக் கையில் வாளிகளுடன் ஓடும் காட்சி மிகவும் வேடிக்கையாக இருக்கும். ஏப்ரல் மாதம் முதல் தேதி முழுதும் தண்ணீரே வரவில்லை. 200 பேர்கள் ஸ்நானம் செய்வதற்கு என்ன செய்வார்கள்? வரு

கிற தண்ணீர்கூட நல்ல தண்ணீர் அன்று. மாதக்கணக் காகப் பச்சைப் பாசி பிடித்ததாகவே இருந்தது. 'இந்தத் தண்ணீரைத் தப்பித் தவறி வாயில் விட்டுவிடாதீர்கள்!' என்று ஒருநாள் ராஜாஜி சொன்னது எனக்கு ஞாபக மிருக் கிறது.

ஸ்நானத் தொட்டிகளைச் சுத்தப்படுத்துவது ஜெயில் அதிகாரிகள் கடமையென்பதை அவர்கள் மறந்துவிட்டார் கள். சுத்தத்திற்குப் பேர்போன மலபார் மாஜி ஜில்லா போர்டுத் தலைவர் ஸ்ரீ. கேளப்பனும், மாஜி வைஸ்பிரசிடென் டும் அஸெம்பிளிஅங்கத்தினருமான ஸ்ரீ. கண்ணனும் இந்தத் தொண்டைச் செய்து வந்தார்கள்.

ஸ்ரீ. கேளப்பன் மலபாரில் மதிப்பு மிகுந்த தலைவர். காந்தீயத்தின் நெறி தவறாதவர். 1921-ஆம் வருஷம் முதல் ஐந்து முறை சிறைவாசம் செய்திருக்கிறார். பரம சாதுவாக இருக்கிறார். மிகுந்த அடக்கமுள்ள தியாகி. குருவாயூர் கோவிலுக்குள் ஹரிஜனங்களை அனுமதிக்கவேண்டுமென்று உண்ணாவிரத மிருந்தவர். பின்னால் மகாத்மா காந்தியின் வேண்டுகோளின் பேரில் அவ்விரதத்தை நிறுத்திக்கொண் டார்.

'நீங்கள் எத்தனை வருஷம் கேரள மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்திருக்கிறீர்கள்?' என்று நான் அவரைக் கேட்டேன். 'எத்தனை என்பது எனக்குத் தெரி யாது. சில வருஷங்கள் இருந்திருக்கிறேன்' என்றார். அவ்வளவு ஆடம்பரமற்ற உத்தமர். மலபாரில், திரூர் போலீஸ் லாக்-அப்பில் நடந்த சம்பவம் ஒன்றை அவர் எனக் குச் சொன்னார். மாப்பிள்ளைக் கலக சமயம் சிறிய கொட் டடிகளில் கைதிகளைத் தாராளமாக அடைத்து வைப்பார் கள். சாப்பிடும் தட்டுகளைக் கழுவுவதற்குத் தண்ணீர் கிடையாது. திரும்பவும் அதே தட்டுகளைக் கழுவாமல் உப

யோகப்படுத்த வேண்டும். வாரத்தில் ஒருமுறைகூட ஸ்நானம் கிடையாது. 12 அடி நீளம் 8 அடி அகலம் உள்ள அறையில் 50 பேர்கள் வரை இரவில் அடைத்து வைத்து விடுவார்கள். இப்படி 13 நாட்கள் நின்று கொண்டே தூங்க வேண்டுமாம். ஒருவர் காலில் இன்னொருவர் மிதித்துக் கொண்டிருப்பார். காலை எடுத்து நகர்த்தி வைக்க வேண்டுமானல் முடியாது. சாப்பாட்டுக்குத் தவிர வேறென்றுக்கும் அவர்களை வெளியில் கொண்டுவருவதில்லை. அப்பால் அவர்களைக் கண்ணனூர் சிறைக்கு 'கூட்ஸ்' வண்டியிலே கொண்டுபோனார்களாம். 'கல்கத்தா இருட்டறை' சம்பவம் வெள்ளைக்காரரின் வெறும் கட்டுக்கதை. ஆனல், திரூர் 'இருட்டறை' ஸ்ரீ. கேளப்பன் அநுபவித்த உண்மை.

இப்பொழுது 51-வயதான ஸ்ரீ. கேளப்பனின் முகத்திலே சாந்தமும் சத்தியமும் பிரகாசிக்கின்றன. அவர் ஒரு வருஷச் சிறைவாசம் அனுபவித்து வருகிறார்.

தொட்டி சுத்தம்செய்யும் இன்னொருவர் ஸ்ரீ. கண்ணன். வயது 40. அவர் செய்யும் சில காரியங்களைப் பார்த்தால் பாரதியார் கண்ணனைப் பற்றிப் பாடியது ஞாபகத்திற்கு வரும். அவர் ஏதாவது ஒன்று செய்துகொண்டே இருப்பார். ஜெயிலிலுள்ளவர்களுக்கு 'நீலம்' போட்டு வேஷ்டிகளை நன்றாகச் சுத்தம் செய்யச் சொல்லித் தந்தவரும் கண்ணன்தான். கண்ணனுடைய செய்கைகளிலே குறும்பும் இருக்கும். ஆனல் யாருக்கும் தமாஷாகத்தான் இருக்கும்.

குடிக்கும் தண்ணீர் திருச்சி முனிசிபாலிட்டியால் ஜனங்களுக்கு அளிக்கப்படும் நீர்தான். சிறையில் ஒரே தொட்டிதான் இருந்தது. அநேக நாட்களாகக் குடிதண்ணீர் போதாது என்று எல்லோரிடத்திலும் முறையிட்டதன் பயனக இன்னொரு தொட்டி கட்டிக்கொடுத்தார்கள்.

எங்கள் ஜெயில் முட்களும் புதர்களும் நிறைந்த பிர தேசம். கீழே தரையெல்லாம் செம்மண். ஆரோக்கியத்திற்கு லாயக்கில்லாத இடம். வெயில் கொடுமை தாங்க முடியாது. சிற்சில சமயங்களில் பெருங் காற்று. மற்ற நாட்களில் மரத் திலுள்ள ஓர் இலைகூட அசையாது.

ஸெண்ட்ரல் ஜெயில், டிஸ்டிரிக்ட் ஜெயில், ஸ்பெஷல் ஜெயில் என ஜெயில்கள் மூன்று வகைப்படும். திருச்சி ஸெண்ட்ரல் ஜெயில் முதல் வகுப்பு ஜெயில். அதாவது 1000 கைதிகளுக்கு அதிகமாக வைக்கக்கூடிய ஸெண்ட்ரல் ஜெயிலை முதல் வகுப்பு ஜெயில் என்று சொல்லுகிறார் கள். நமது மாகாணத்தில் ராஜமஹேந்திரபுரம், வேலூர், சேலம், கோயம்புத்தூர், சென்னை ஆகிய இடங்களில் முதல் வகுப்பு ஜெயில்கள் இருக்கின்றன. பெல்லாரியிலும் விசாக பட்டணத்திலும் இரண்டாவது வகுப்பு ஜெயில்கள். மற்றவை மதுரையி லிருப்பது போன்ற டிஸ்டிரிக்ட் ஜெயில் கள். கூடலூரிலும் ஒரு டிஸ்டிரிக்ட் ஜெயில் இருக்கிறது. பெண்களுக்காக நமது மாகாணத்தில் வேலூரில் ஒரு தனி ஜெயில் இருக்கிறது.

கேம்ப் ஜெயிலில் இடமில்லாமல் போகவே அதற்கடுத் தாற்போலுள்ள வெளிக் கோரங்கி (Out - quarantine) திறந்துவிடப்பட்டது. 94 கொட்டடிகள் கொண்ட கட் டடம் இது. இது கேம்ப் ஜெயிலுக்கு அடுத்தாற்போ லிருக் கிறது. இரண்டுக்கும் ஒரு வழி திறந்துவிட்டிருக்கிறார் கள். கொஞ்சம் அமைதியாக இருக்கவேண்டுமென்று விரும்பு பவர்களுக்கு இந்த அறைகள் பிரயோசனமாயிருக்கும். எப் பொழுதும் நண்பர்களுடன் இருக்கவேண்டுமென்று நினைப் பவர்களுக்கு பிளாக்குகளே ஏற்றவை.

வெளிக் கோரங்கியில் கிழக்கு மூலையில் உள்ள அறை களில் கீழ்ப்பக்கம் உள்ள ஜன்னல்கள் வழியாக வெளியே

பார்த்தால் உலகத்தின் ஒரு பகுதி தோற்றமளிக்கும். ஜெயில் வார்டர்கள், ஏனைய சில்லறை அதிகாரிகள் வீடுகளெல்லாம் இங்கேதான் இருக்கின்றன. மாடுகள் நின்றுகொண்டிருப்பதைப் பார்க்கலாம். குழந்தைகள் விளையாடுவதையும் காணலாம். சில குழந்தைகள் எங்கள் அறைப் பக்கங்களில் வரும். வந்து பேசவும் செய்யும்!



6. ஜெயில் அதிகாரிகள்

ஜெயிலுக்குள்ளே நாம் தினம் பழக வேண்டியவர்கள் ஜெயில் ஏணியில் கடைசியிலுள்ள வார்டர்கள் என்னும் உத்தியோகஸ்தர்கள். இந்த உத்தியோகஸ்தர்களில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் விகிதம் கொஞ்சந்தான்.

சதா ராட்டையில் நூல் நூற்றுக்கொண்டிருப்பதைப் பார்த்து ஒரு வார்டர், 'ஏன் சாமி, இதில் என்ன பிரமாதமாகச் சம்பாதித்துவிடப் போகிறீர்கள்?' என்று கேட்டான்.

வார்டர் கூட்டத்தின் சராசரி புத்திசாலித்தனத்தை இந்தச் சம்பவத்திலிருந்து நாம் தீர்மானித்துக்கொள்ளலாம்.

18 ரூ. மாதச் சம்பளம். முட்டுக்கு மேல் ஒரு காக்கிச் சராய். காக்கி கோட்டு ஒன்று. அதில் கிரீடம் பதிப்பித்த மூன்று பொத்தான்கள். இடது பக்கத்திலே விஸில் வைப்பதற்கு ஒரு சிறிய ஜேபி. சங்கிலியுடன் ஒரு விஸில். கால்களிலே கருநீலப் பட்டிகள், பாதரக்ஷைகள். தலையிலே கருநீலத் தொப்பி. ஒரு பெல்ட்டு. கையில் ஒரு குறுந்தடியும் உண்டு.

வார்டருடைய தொப்பியிலே இரண்டு கட்டு வெற்றிலை வைக்கலாம். அவ்வளவு பெரியது. 'வார்டரின் தொப்பிதான் கைதிகளின் கடை' என்று சாதாரணக் கைதிகள் சொல்லுவது வழக்கம். அதாவது அந்தத் தொப்பி மூலமாகவே கடைச் சரக்குகள் வருமென்று அர்த்தம்.

ஜெயில் வாசலில் கைகளில் துப்பாக்கி தாங்கிக் காவல் புரிவதும் இவர்களே. உள்ளே காவலிலிருக்கும் கைதிகள் இரவில் ஓடிப்போகாமல் பார்த்துக்கொள்வதும் இவர்களே.

பெரிய ஜெயிலில் சுமார் நூறு வார்டர்கள் இருப்பார்கள். திருச்சி ஜெயிலிலே நூற்றுக்கு அதிகமாகவே இருக்கிறார்கள்.

இவர்களுடன் சேர்ந்த வகுப்பார்தான் காணிக் வார்டர்களும். கைதி என்ற பொருளுள்ள, 'கான்விக்ட்' என்பது ஜெயில் பாஷையிலே காணிக்காக மாறியிருக்கிறது. இந்தக் காணிக் வார்டர்களும் கைதிகள்தான். ஒரு வேளை இவர்கள் ஏனைய கைதிகளைக் கண்காணிப்பதால் 'காணிக்' என்று சுருக்கமாகப் பெயர் வைத்திருந்தால் இந்தப் பெயர் மிகவும் பொருத்தமே. ஆனால் ஜெயிலில் இவ்வளவு கூர்ந்து அர்த்தம் பார்த்துப் பெயர் வைக்கும் முறை கிடையாது.

'காணிக்' ஓவர்ஸியராகவோ காணிக் வாச்மேனாகவோ ஆறு மாதம் இருப்பவர்கள்தான் 'காணிக்' வார்டராக முடியும். அவர்களுடைய தண்டனையில் பாதி அனுபவித்திருக்க வேண்டும். நல்ல நாணய முள்ளவர்களாக இருக்கவேண்டும். அவர்கள் வேலைக்காகத் தண்டனையில் மாதம் எட்டு நாள் வஜா செய்யப்படுகிறது. புகையிலை, பொடி, பீடியும் கிடைக்கும். கோர்ட்டில் உணவுக்குக் களிதான் போடவேண்டு மென்று தீர்மானமாகி யிருந்தாலும், அவர்களுக்கு அரிசிச் சோறு கிடைக்கும். சாப்பிடுவதும் ஸ்நானமும் மற்றக் கைதிகளுடன் செய்யவேண்டியதில்லை. வண்ணான் துணி வெளுத்துக் கொடுப்பான். என்ன குற்றம் செய்தாலும் அவர்களுக்குச் சவுக்கடி கிடையாது. கால் கைகளுக்கு விலங்கு கிடையாது. மாதம் ஒரு முறை கடிதம் எழுதலாம். ஒரு கடிதம் பெறலாம். மாதம் ஒரு முறை தம் நண்பர்களையோ, பந்துக்களையோ பார்க்கலாம்.

கூட இருப்பவர்கள் குற்றம் செய்வதைக் காட்டிக் கொடுக்கும் யோக்யர்களுக்கு இந்த வெகுமதிகள். தலையிலிருந்து கால்வரை இவர்கள் அணிந்திருக்கும் வெள்ளை உடை

எவ்வளவு தூய்மையானதோ, அவ்வளவு தீயதாக அமைந் திருக்கிறது இவர்கள் உள்ளம். சட்டையும் கால்சட்டையும் சலவையினால் வெண்மையா யிருப்பினும், இவர்களுடைய தொப்பி வெள்ளைவெளே ரென்று இருப்பது மிகவும் ஆச்சரி யம். ஆனால் கிட்ட நெருங்கிப் பார்த்தால் தொப்பி முழு தும் சுண்ணும்பு பூசியிருப்பது தெரியும். சுண்ணும்புக்கு இப்படி ஓர் உபயோகமிருப்பது அநேகருக்குத் தெரியாது.

'ஏ' கிளாஸ் அரசியல் கைதிக்குக் கூட வெற்றிலை பாக் கும், புகையிலையும், பொடியும் ஜெயிலிலே கிடையாது. அப் படி யிருக்க, காட்டிக்கொடுக்கும் 'காணிக்' வார்டர்களுக்குக் காட்டப்படும் சலுகை எத்தகையது என்பதை உணர்ந்து கொள்ளலாம். பம்பாய் மாஜி மந்திரி படீலும் மாதம் ஒரு லிகிதம்தான் எழுதலாம். திருச்சி ஜெயிலிலுள்ள கொலைகார 'காணிக்' வார்டரும் மாதம் ஒரு லிகிதம் எழுதலாம்!

'காணிக்' வார்டர்களுக்கு மேல் வார்டர்கள். வார்டர் களுக்கு மேல் ஹெட்வார்டர்கள், சீப் ஹெட்வார்டர்கள். அவர்களுக்கு மேல் டெபுடி ஜெயிலர், அப்பால் ஜெயிலர், சூப் பிரண்டு - இவர்கள்தான் ஜெயில் உத்தியோகஸ்தர்கள்.

'ஏ' அல்லது 'பி' கிளாஸ் கைதிகளுக்குக் கொடுக்கப் படும் ஜெயில் உடைகள் விநோதமானவை. கோட்டு, கால் சட்டை, ஷர்ட், பனியன், தூங்கும் பொழுது அணிவதற்குக் கால்சட்டை, ஷர்ட், தொப்பி, பாதரக்ஷை, துண்டுகள், லங் கோடு, தலையணை, தலையணை உறை, கைக்குட்டை, மெத்தை விரிப்பு, மெத்தை உறை - இவைகள் ஒவ்வொன்றிலும் இரண் டும், சீப்பு, பாய், மெத்தை, கம்பளி - இவைகளில் ஒவ்வொன் றும் கொடுப்பார்கள்.

ஏராளமான சத்தியாக்கிரகிகள் திடீரென்று வந்துவிட் டவே அவர்களுக்கு இவ்வளவு சாமான்களும் கொடுக்க முடிய வில்லை.



கே. வரதாச்சாரி,

பி. ஏ., பி. எல்., எம். எல். ஏ.



எம். வெங்கடாசாரி, எம். ஏ.

இத்துடன் 'ஏ' கிளாஸ் கைதிகளுக்கு ஒரு நாற்காலியும், மேஜையும், கட்டிலும் கொடுக்கப்படுகின்றன. வேலூர் சிறையில் 200 நாற்காலிகள், 200 மேஜைகள், 200 கட்டில்கள் இரவும் பகலுமாகச் செய்துகொண்டிருந்தார்கள். எல்லோருக்கும் 'ஏ' வகுப்புக் கொடுப்பதாக இருந்ததோ என்னவோ! 'ஏ' கிளாஸ் கைதிகள் 15 நாட்களுக்கு ஒருமுறை கடிதம் எழுதலாம்; ஒருமுறை நண்பர்-சுற்றத்தாரைப் பார்க்கலாம். 'பி' கிளாஸ் கைதிகள் மாதத்தில் ஒரு முறைதான் கடிதம் எழுதவும், அன்பரைச் சந்திக்கவும் முடியும்.

'ஏ' கிளாஸ் கைதிகள் சொந்தச் செலவிலே வெளியிலிருந்து சாமான்கள் வரவழைத்துக்கொள்ளலாம். 'பி' வகுப்புக் கைதிகளுக்கு இந்தச் சலுகை கிடையாது.

கடுங்காவல் விதிக்கப்பட்டவர்களுக்குத்தான் ஜெயில் உடைகள் உண்டு. அந்த உடைகள் ஒவ்வொரு கைதிக்கும் அளவு பார்த்துத் தைக்கப்பட்டவை அல்ல. எல்லோருக்கும் ஒரே அளவுள்ள உடைகள்தான்! கடுங்காவல் இல்லாதவர்கள் தங்கள் சொந்த உடைகளை அணிந்துகொள்ளலாம். ஆனால் அவைகளிலும் ஒவ்வொன்றிலும் இரண்டுதான் அநுமதிக்கப்படும். பின்னால் பெப்ருவரி மாதத்தில் 'ஏ' வகுப்புக் கைதிகள் எல்லோரும் தங்கள் சொந்த உடைகளை உடுத்திக்கொள்ளலாம் என்று கவர்ண்மெண்டு உத்தரவு வந்தது.

ஜெயில் உடையில் அளவு கடந்த ஒரு ஹாஸ்ய உணர்ச்சிக்குக் காரணமாயிருந்தவர் ஜனாப் அஹமத் தம்பி முஹம்மது மொஹைதீன் மரைக்காயர். அவர் மாஜி பார்லிமெண்டரி காரியதரிசி. ஸர். அஹமத் தம்பி மரைக்காயரின் குமாரர். ஜெயிலுக்கு வருவதற்கு உடல்நிலை கொஞ்சமும் இடங்கொடுக்காமலிருந்தும் சிறைக்கு வந்த தியாகி அவர். சென்னை ஆஸ்பத்திரிக்குச் சென்று ரணசிகிச்சை செய்து

கொண்டு திரும்பி வந்தார். ஒருநாள் தமக்குச் சரியாக மருந்து கொடுக்கவில்லை என்று ஜெயிலையே அதிர அடித்து விட்டார். உண்ணாவிரதம்கூட ஆரம்பித்துவிட்டார். உடனே ஜெயில் அதிகாரிகள் வழிக்கு வந்துவிட்டார்கள். அவர் இருக்கும் இடத்தில் சதா சங்கீதமும் சிரிப்புமாக இருக்கும். தாராள சிந்தனையுடையவர். ஜெயிலுக்கு வெளியே தாராளமாயிருக்கலாம். ஜெயிலுக்குள்ளும் அவர் எல்லோரிடத்திலும் காட்டிய தாராளம் உண்மையாகவே அதிசயிக்கத் தக்கது. அவருடைய விசாலமான உள்ளத்திலே நல்லவர் கெட்டவர் எல்லோருக்கும் இடம் இருக்கிறது. 45-வயதிலே பாட்டுப் பாடுகிறார். பாட்டுடன் ஆடவும் செய்கிறார். எதிர்காலத்திலே அவரை மாகாண மந்திரியாகப் பார்க்கவேண்டுமென்று எனக்கு ஓர் ஆசை. வருங்காலத்தில் என்ன நடக்குமென்று இப்பொழுது எப்படிச் சொல்லமுடியும்? ஆனால், ஆசைப் படவும் கூடாதா?

ஜெயில் உடையில் பார்த்து அனுபவிக்க வேண்டிய மற்றொருவர் சித்தூர் ஸ்ரீ. கே. வரதாச்சாரி. சென்னை ஸ்ரீ. என். எஸ். வரதாச்சாரி அல்ல என்பதற்காக இவரை சங்கீத வரதாச்சாரி என்று ஜெயிலில் அழைப்பதுண்டு. இவர் ஜெயிலுக்கு வரும்பொழுது 202 பவுண்டு கனம் இருந்தார். அவ்வளவு கனம் யாருமே இருந்ததில்லை. பின்னால் மெலிந்துவிட்டார். 185 பவுண்டுதான் இருந்தார்! 50 வயதான இவர் பாடும் பாடல்கள் நம்மை மெய்மறக்கச் செய்கின்றன. தம்மைத் தாமே மறப்பதற்கு இவருக்கு சங்கீதம் துணைபுரியுமென்று நம்புகிறேன். இல்லையானால் பல குழந்தைகளுக்குத் தந்தையான இவர் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்க எப்படி முடியும்?

ஸ்ரீமான் கே. வரதாச்சாரியை ஜெயில் உடையில் பார்த்தால் எவ்வளவு ஹாஸ்யமாக இருக்குமோ அவ்வளவு

பரிதாபமாய் இருக்கும் ஸ்ரீ. எம். வெங்கடாசாரியைப் பார்த்தால். 29 வயதான ஸ்ரீ. வெங்கடாசாரி தீவிர ஸோஷலிஸ்ட். 18 வயதாவதற்கு முன்பே தண்டிக்கப்பட்டு, தஞ்சை போர்ஸ்டல் பள்ளிக்கூடத்திற்கு* அனுப்பப்பட்டவர். 1930-ல் திருச்சி ஜெயிலில் இருக்கும்பொழுது க்ஷயரோகம் கண்டு மதனப்பள்ளிக்குத் தூக்கிக்கொண்டு போகப்பட்டார். 11 வருஷங்களுக்குப் பின்னுல் இன்னும் அந்த வியாதியினுல் கஷ்டப்படுகிறுர். இன்னெருவர் இந்த நிலைமையில் அரசியலில் சம்பந்தம் வைத்துக்கொள்ளுவதே சந்தேகம். இவர் தீவிரமாக இருக்கிறுர். நன்ருகப் படித்த அறிவாளி. ஹிந்தியையும் சமஸ்கிருதத்தையும் கரைத்துக் குடித்திருக்கிறுர். உடம்பும் கரைந்துகொண்டே வருகிறது. இவருடைய எடை இப்பொழுது 85 பவுண்டுதான். இவரை அரசாங்கத்தார் விடுவிக்காதது பரிதாபகரமான விஷயம்.

மனிதருடைய எடையைப் பற்றிப் பேசும்பொழுது, சராசரியாக ஒருவர் எத்தனை பவுண்டு இருக்கவேண்டுமென்று ஒரு கணக்கு இருக்கிறது. உயரத்தைக் கணக்குப் பார்த்து இவ்வளவு உயரத்திற்கு இவ்வளவு கனம் இருக்கவேண்டுமென்று வைத்தியர்கள் கணக்கெடுத்திருக்கிறுர்கள். இந்தக் கணக்கெல்லாம் தெரியாதவர்கள் வேறெரு வழியில் இதை எளிதாகக் கண்டுகொள்ளலாம். ஸ்ரீ. கே. வரதாச்சாரியின் எடையையும், ஸ்ரீ. எம். வெங்கடாசாரியின் எடையையும் கூட்டி, இரண்டாக வகுத்தால் சராசரி இருக்கவேண்டிய எடை தெரிந்துவிடும்.

---

* இளைஞரை அடைத்துவைக்கும் தனி ஜெயில்.

7. சாப்பாட்டு மணி

1932-ஆம் வருஷம், பொங்கல் தினத்திற்கு இரண்டு நாட்கள் இருக்கின்றன. கூடலூர் அரசியல் கைதி ஒருவர் தமக்கு அன்று விடுதலையென்று மிகுந்த சந்தோஷத்துடன் உலாவிக்கொண்டிருந்தார். பொங்கலுக்கு வீட்டுக்குப் போய்விடலாமென்று முகமலர்ச்சியுடன் இருந்தார். விடுதலை தினத்தன்று காலையில் ஒவ்வொரு கைதியும் ஜெயில் ஆபீஸுக்கு அழைத்துச் செல்லப்படுவது போல் அவரும் ஆபீஸுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கே சூப்பிரண்டு, 'தாங்கள் பொங்கல் கழித்துத்தான் போக முடியும்! தங்களுக்குக் கொடுத்திருந்த விசேஷ வஜா நாட்களை* ரத்துச் செய்திருக்கிறேன்!' என்று சொன்னார்.

'இது என்ன அநியாயம்?'

'அநியாயம் ஒன்றுமில்லை. பொங்கலுக்கு உங்கள் சமையல்தான் இருக்கவேண்டுமென்று அரசியல் கைதிகள் எல்லோரும் ஏகமனதாக அபிப்பிராயப்பட்டு என்னிடத்தில் வேண்டிக்கொண்டார்கள். ஆகவே நான் இப்படி முடிவு செய்தேன்!'

இவ்வாறு, விடுதலை வந்தும் விடுதலை யாகாமலிருந்தவர்தான் ஆர்க்காடு பஞ்சாயத்து போர்டுத் தலைவர் ஸ்ரீ. டபுள்யு. ஸ்ரீனிவாசராவ்.

இப்படிக் கூடலூர் கைதிகள் அன்று ஏன் செய்தார்கள் என்பதைத் திருச்சி சிறையில் அவருடைய சமையலைச் சாப்பிட்டு அனுபவித்துப் பார்த்த பின்புதான் எனக்குத் தெரிந்தது. அவர்கள் செய்தது சரியே.

---

* கைதிகளின் நன்னடத்தையைப் பாராட்டி சூப்பிரண்டு தண்டனை நாட்களைக் குறைத்து வஜா செய்ய அதிகாரமுண்டு.

இரும்புப் பாத்திரங்கள்தான் ஜெயிலில் சமையலுக்குக் கொடுக்கப்படுபவை. சாமான்களோ மிகவும் கொஞ்சம். ஜெயிலில் உடலைவிட்டு உயிர் பிரிந்துவிடக் கூடாது என்ற ஒரே காரணத்திற்காகத்தான் சாப்பாடு கொடுக்கிறார்கள் போலிருக்கிறது. 18 அவுன்ஸ் அரிசி, 5 அவுன்ஸ் பருப்பு, 1 அவுன்ஸ் புளி, $\frac{3}{4}$ அவுன்ஸ் கறிப்பொடி, 1 அவுன்ஸ் உப்பு, 1 அவுன்ஸ் வெங்காயம், 8 அவுன்ஸ் காய்கறி, 4 அவுன்ஸ் உருளைக்கிழங்கு, $\frac{1}{4}$ அவுன்ஸ் கடுகு, $\frac{1}{4}$ அவுன்ஸ் கொத்தமல்லி, 1 அவுன்ஸ் எண்ணெய் — இவைகள்தான் 'ஏ' வகுப்புக் கைதிகளுக்கு நாளொன்றுக்கு இரண்டு வேளைகளுக்குக் கொடுக்கப்படும் சாப்பாட்டுச் சாமான்கள். இவற்றைச் சமைப்பதற்கு 2 பவுண்டு விறகும் கொடுப்பார்கள்.

இந்தச் சாமான்கள் வேண்டுமென்று 'டென்டர்கள்' வரவழைத்தபின் அவற்றின்படி சாமான்கள் வந்து சேரும். சாதாரணமாக 'ஏ' வகுப்பு 'பி' வகுப்புக் கைதிகளுக்கு அரசாங்கத்தார் நாள் ஒன்றுக்கு எட்டணு செலவு செய்கிறார்கள் என்று நினைப்பது தவறு. இந்தச் சாமான்களெல்லாம் $2\frac{1}{2}$ அணுவிலேயே அடங்கிவிடும். 8 அவுன்ஸ் காய்கறி என்று சொல்லுகிறார்களே தவிர, அது என்ன காய்கறியாக இருக்க வேண்டுமென்பதில்லை. ஆகவே காய்கறி என்றால் 'பூஷணிக்காய்' என்றுதான் ஜெயிலில் அர்த்தம். எத்தனை வருஷங்களானாலும் பூஷணிக்காய்தான் கிடைக்கும்.

ஜெயிலில் எங்கு பார்த்தாலும் பூஷணிக் கொடிகள் படர்ந்து கிடக்கின்றன. எங்கள் பிளாக்குகளுக்கு முன்னால் புளிய மரங்கள் ஏராளமாக வளர்ந்திருக்கின்றன. எனவே காய்கறியையும் புளியையும் 'டென்டர்'ருக்கு விடுவது கிடையாது. ஜெயிலில் இல்லாத காய்கறிகளைத்தான் வெளியிலிருந்து வரவழைக்கவேண்டும். ஜெயிலிலுள்ள காய்கறி

பூஷணிக்காய்தான். கத்தரிக்காயும், முருங்கைக்காயும்,வாழைக் காயும் 'காய்கறி'தான் என்பதை ஜெயில் அதிகாரிகள் உணர்வது அபூர்வம். எனவே காய்கறி என்பதை, நாள் ஒன் றுக்கு இத்தனை அவுன்ஸ் கத்தரிக்காய் வாழைக்காய் என் றெல்லாம் தெளிவாக அரசாங்கத்தார் மாற்றி அமைத்தா லும் நல்லதுதான். 'ஸி' வகுப்புக் கைதிகளுக்குத் தனி யாகக் காய்கறி ஒன்றும் கிடையாது. ஒரு குழம்பிலேயே ஏதாவது காய்கறியைப் போட்டுக் கொடுப்பார்கள். பெரும் பாலும் வருஷம் முழுதும் இந்தக் 'காய்கறி' என்பது ஜெயிலில் விளையும் முள்ளங்கிக் கிழங்காய்த்தா னிருக்கும். முள்ளங்கிக் கிழங்கு என்றால் வெறுங் கிழங்கு என்று எண்ண வேண்டாம். முள்ளங்கி இலை, பக்கத்தில் வளர்ந்துள்ள புல், குரோட்டன்ஸ் இலைகள்கூட அடிக்கடி குழம்பில் கலந்து வரும் என்பது மாஜி 'ஸி' வகுப்புக் கைதிகளை விசாரித் தால் தெரியும். விதிப்படி அளிக்கப்படும் பொருள்களை வைத்துக்கொண்டு, கரும்பொன்னாக விளங்கும் இரும்பு அண்டாக்களில் இரண்டு வேளையும் ருசியான உணவு சமைத் துக் கொடுப்பதென்றால் அது ஸ்ரீனிவாசராவைத் தவிர வேறு யாராலும் முடியாது.

பார்வைக்கு அவர் சர்வ சாதாரணமாகத் தோன்றுவார். உச்சிக் குடுமி; கொஞ்சம் உலர்ந்த சரீரம். அதிகமாகப் பேச மாட்டார். ஜெயில் அதிகாரிகளைக் கவனிக்கவே மாட்டார். சமையல் நிர்வாகத்திற்கு இந்தக் குணம் அவசியம் என் பதை நான் பின்னால் அறிந்தேன். இவர் 'ஸி' வகுப்பி லிருந்து 'பி' வகுப்புக்கு வந்து, பிறகு 'ஏ' வகுப் புக்கு மாற்றப்பட்டிருக்கிறார். சென்ற முறை கூடலூரில் 'பி' வகுப்பிலிருந்தார். அரசாங்கத்தார் இந்த வகுப்புக்களை நிர்ணயம் செய்வதற்கு எந்த முறையைக் கையாளுகிறார்கள் என்பதே பெரிய மர்மமாக இருக்கிறது!

டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் மேல்பார்வையில்தான் சாப்பாடு தயாராகிவந்த தென்றாலும், சமையலறைக்குள்ளே எப்பொழுதும் இருந்தவர், ஒன்று ஸ்ரீனிவாசராவாக இருக்கும், அல்லது அம்மாபேட்டை ஸ்ரீ. வெங்கடராமய்யராக இருக்கும். அம்மாபேட்டை வெங்கடராமய்யரை சென்னைச் சட்ட சபையில் சந்திக்கும் பொழுதெல்லாம் அவருக்குச் சமையல் நன்றாகத் தெரியும் என்று எனக்குத் தெரியாது.

திருச்சி சிறைக்கு வந்தபின் ஸ்ரீ. ஸ்ரீனிவாசராவும் ஸ்ரீ. வெங்கடராமய்யரும் போட்டி போட்டுக்கொண்டு சமையல் செய்துவந்தார்கள். ஒரு மாதம் ஸ்ரீனிவாசராவ், இன்னொரு மாதம் வெங்கடராமய்யர் என்றிருந்தது. பின்னால் ஒவ்வொருவர் ஒவ்வொரு வாரம் என்று திட்டம் போட்டு நடத்தி வந்தார்கள். மேமீ நான் விடுதலையாகும் வரை இந்த ஏற்பாடுதான் அமுலில் இருந்தது.

நாகூர் தர்க்காவுக்கு நீங்கள் போயிருந்தால் அங்கே பக்கிரிகள் வைத்திருக்கும் 'லோட்டா'வைப் பார்த்திருப்பீர்கள். அந்தமாதிரி லோட்டா ஒன்று, ஓர் அலுமினியத் தட்டு, இரண்டு சிறிய டம்ளர்கள் — இவைகள்தான் 'ஏ' வகுப்புக் கைதிகளுக்கு அளிக்கப்படும் சாமான்கள். இவைகளிலே தான் சாப்பாடும்.

காலையிலே ஒரு ரொட்டியும் கொஞ்சம் காப்பியும் கொடுப்பார்கள். $10\frac{1}{2}$ மணிக்குச் சாப்பாடு. சாயங்காலம் $6\frac{1}{2}$ மணிக்குத் திரும்பவும் சாப்பாடு.

சாப்பிடுவதற்கு வசதியான பெரிய கட்டடம் ஒன்றும் கிடையாது. வெட்ட வெளியிலே மண்ணிலே உட்கார்ந்து சாப்பிட வேண்டும். மத்தியானம் மரங்களின் கீழே உட்கார்ந்திருக்கும் பொழுது மழை வந்தால் நனைய வேண்டும். ஒருநாள் நனைந்தும் போனோம். வெயிலில் காய வேண்டும். காற்றடித்தால் மண்ணும் மணலும் கலந்து சாப்பிட வேண்டி

யதுதான். கொஞ்சம் பலமாகக் காற்றடித்தால் மண்ணுடன் கலந்த கொஞ்சம் சோற்றைச் சாப்பிட்டாக வேண்டும்.

சில மாதங்களுக்குப் பின்னுல் அரசாங்கத்தார் சிமிண்டுத் திண்ணைகள் இரண்டு கட்டி வைத்தார்கள். ஒவ்வொன்றும் தரையிலிருந்து ஆறு அங்குல உயரமிருக்கும். அகலம் மூன்று அடி. அரசியல் கைதிகள் சாப்பிடுவதற்குப் பெரிய 'பிளாட்பாரங்கள்' கட்டியிருப்பதாகச் 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் நீங்கள் பார்த்திருப்பீர்கள். அந்தப் 'பிளாட்பாரங்கள்'தான் இவை!

ஒரு நாள் காலை. 'பார்வை' நாள். அதாவது திங்கட்கிழமைதோறும் சூப்பிரண்டு, ஜில்லா மெடிகல் ஆபீஸர், ஜெயிலர், ஜெயில் டாக்டர்கள் இவர்கள் எல்லோரும் சேர்ந்து ஜெயிலிலுள்ள ஒவ்வொரு கைதியையும் நேரில் 'பார்ப்பதாக' அர்த்தம். கைதிகளுடைய தேக ஸ்திதியையும், அவர்கள் சொல்லும் புகார்களையும் நேரில் அறிந்துகொள்ள அளிக்கப்படும் சந்தர்ப்பம் இது. ஒரு திங்கட்கிழமை இந்தப் பார்வை நடந்துகொண்டிருக்கும் பொழுது மாஜி பார்லிமெண்டரி காரியதரிசி ஸ்ரீ. டி. விஸ்வநாதன் சூப்பிரண்டிடம், 'எவ்வளவு மோசமான ரொட்டி எங்களுக்குக் கொடுக்கப்படுகிறது! இதோ நிற்கும் இந்த நாய்க்கு இந்த ரொட்டித் துண்டைப் போடுகிறேன். அது சாப்பிடுகிறதா, பாருங்கள்!' என்று ஒரு ரொட்டித் துண்டில் கொஞ்சம் வெண்ணெய் தடவி நாயிடம் போட்டார். சூப்பிரண்டு கவனித்துக் கொண்டிருந்தார். நாய் வெண்ணெயை மாத்திரம் நக்கித் தின்றுவிட்டு ரொட்டியைப் போட்டுவிட்டது. ஒரே சிரிப்பும் கொம்மாளமுமாக ஆகிவிட்டது. சூப்பிரண்டு அங்கிருந்து போன இடம் தெரியவில்லை.

ஸ்ரீ. டி. விஸ்வநாதன் ஜெயிலில் உணவு பரிமாறினவர்களில் ஒருவர். அநேக நாட்கள் சாப்பாட்டு நேரத்தில்

றெய் விட்டவர் இவர்தான். இவருக்குக் கொஞ்சம் அதிக மாகவே சிறைவாசம் அளிக்கப்பட்டிருக்கிறது. பதினெட்டு மாதம்! இவருக்கு வயது 44. ஆனால் முகத்தைப் பார்த்தால் இளமையான ஒரு காலேஜ் மாணவர் முகமாகத் தோன்றும். வயது முகத்திலே தெரியவில்லை. ஜெயிலிலே எத்தனையோ பேர்கள் நூல் நூற்கிறார்கள். ஆனால், ஒரு பவுண்டு பஞ்சு ஆறு ரூபாய் விலைக்கு வாங்கி, அதை நூற்றிருபது சிட்டங்களாக நூற்பதென்றால் — இது எனக்கு அவ்வளவு எளிதாகப் புரியாத விஷயந்தான். இவரைப் பார்க்கிலும் அதிகமாகவும் வேகமாகவும் நூற்பவர்கள் ஜெயிலில் இருக் கிறார்கள். ஆனால் இவரைப் பார்க்கிலும் நயமாக நூல் நூற்பவர்கள் யாருமே இல்லையென்பதை நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன்.

உணவு பரிமாறுவதிலும் சமையலிலும் முக்கியமாக நான் குறிப்பிடவேண்டியவர் ஹோசூர் அசெம்பிளி அங்கத் தினர் ஸ்ரீ. பி. டி. வெங்கடாசாரி. இவர் கைதி நம்பர் 43. இவர் காலை, முற்பகல், சாயங்காலம் மூன்று வேளைகளிலும் சலிப்பில்லாமல் வேலை செய்தவர். வேலை செய்வதற்குரிய தேகக்கட்டு உடையவர்தான். அதற்கு ஏற்ற மனமும் வேண்டுமே! உவப்புடன் வேலை செய்த இவருக்கு ஜெயில் அதிகாரிகள் 10 நாள் வஜா செய்த பொழுது நான் உண்மை யாகவே சந்தோஷப்பட்டேன்.

சென்னை மாஜி மேயர் ஸ்ரீ. கே. வெங்கடசாமி நாயுடுவும் சில சமயங்களில் தொண்டு செய்தார். பெரிய குடும்பத்திலே பிறந்து, எப்பொழுதும் பல பந்துக்களுக்கிடையே இருந்து வேலையே செய்தறியாத இவருக்கு வேலை செய்வதில் அலாதி யான ஒரு சந்தோஷம் இருப்பதை நான் கண்டேன். மெல் லிய தேகம். எல்லோரையும் சந்தோஷப்படுத்த வேண்டு மென்ற எண்ணம். முகத்தில் கோபக் குறியே காண முடி-

யாது. அவ்வளவு மெல்லிய சரீரமுடையவருக்கு எத்தனை கௌரவ உத்தியோகங்கள் என்பதை நினைக்கும்பொழுது ஆச்சரியமாக இருக்கிறது. ஜெயிலில் இருக்கும்போழுதே சென்னை ஸெனட்டுக்கு அபேட்சகராகத் தாக்கல் செய்தார். ஜெயிலில் சந்தோஷமாகவே இருந்தார். தினமும் அவருடைய பூஜை ஒழுங்காக நடந்தது. இவ்வளவு தெய்வப்பற்றுள்ள ஒரு வைஷ்ணவரைப் பார்ப்பது இந்தக் காலத்தில் கஷ்டம். 'திருவாய்மொழி' தினமும் படிப்பார்.

'ஜெயிலுக்குள்ளே ஒரு கைதியாக வந்த பின்புதான் ஜெயில் விஸிட்டர்கள் எப்படித் தங்கள் கடமையைச் செய்ய வேண்டும் என்பது தெரிகிறது. நான் சென்னை பயித்தியக் கார ஆஸ்பத்திரிக்கு விஸிட்டராக இருந்த பொழுது சரியாக வேலை பார்த்தேனு என்ற சந்தேகம் இப்பொழுது வருகிறது' என்று ஒரு நாள் ஸ்ரீ. நாயுடு என்னிடம் சொன்னுர்.

'ஜெயில் வாசம் எப்படி யிருக்கிறது?' என்று ஒருநாள் அவரிடம் கேட்டேன்.

'நான் இப்பொழுது சுந்தர காண்டம் படிக்கிறேன். சீதாதேவி கைதியாயிருக்கும் கட்டம். தேவியின்மீது கடுமை யான முரட்டுச் சக்தி உபயோகிக்கப்படுகின்றது. அதுவும் மிகவும் கேவலமான எண்ணத்துடன். அந்தத் தேவியின் கஷ்டத்தை நினைக்கும்பொழுது நம் கஷ்டம் ஒரு கஷ்டமா?' என்றுர்.

'உண்மைதான்' என்றேன்.

ஸ்ரீ. வெங்கடசாமி நாயுடுவுக்கு இந்தச் சக்தியும் உறுதி யும் என்றென்றும் வளர வேண்டும். இந்த வலிமையுள் ளவர் எந்த வேலையிலும் உதவியாளராக இருக்க வேண்டிய அவசியமே யில்லை. ஆனல் இன்னும் கவுன்ஸிலில் உப தலைவராகத்தான் இருக்கிறுர்.

சாப்பாட்டு நேரத்திலே தொண்டு செய்த இன்னொருவர் 75-ம் நெர். கைதி, ஸர்தார் வேதரத்தினம் பிள்ளை. அரசியல் கைதிகள் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று என்னைக் கேட்டால், 'ஸ்ரீ. வேதரத்தினம் பிள்ளையைப் பார் !' என்றே நான் சுட்டிக் காட்டுவேன். இவர் 1913-ஆம் வருஷத்தி லிருந்தே சுதேசி இயக்கத்தில் பற்றுக்கொண்டவர். நான்கு தடவைகள் ஜெயிலுக்கு வந்திருக்கிறார். பெல்காம் காங்கிரஸி லிருந்து ஹரிபுரா காங்கிரஸ்வரை ஒவ்வொரு காங்கிரஸுக்கும் போய் வந்திருக்கிறார். ஹிந்தி, வங்காளி, தமிழ், தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம், குஜராத்தி இத்யாதி பாஷைகளில் பேசுவார், எழுதுவார், படிப்பார். ஜெயிலில் எத்தனையோ பேர்களுக்கு ஹிந்தி கற்றுக்கொடுத்துக்கொண்டிருந்தார்.

இவர் நல்ல சங்கீத வித்வான். காங்கிரஸில் சேரு வதற்கு முன்பு, சங்கீதக் கச்சேரி யென்றால் பதினைந்து இருபது மைல்கூட நடந்து போவாராம்.

1930-ஆம் வருஷம் சட்ட மறுப்பில் ரூ. 30,000 பெருமதியுள்ள இவருடைய உப்பளத்தைப் பறிமுதல்செய்து ஏலத்துக்கு விட்டார்கள். யாருமே ஏலம் கேட்கவில்லை. அரசாங்கத்தார் நேரிலே பார்க்க வேண்டியதாயிற்று.

இவர் நன்றாக விஷயம் தெரிந்தவர். அமைதியே உரு வாகத் தோன்றுகிறார். இவ்வளவு தன்னடக்கமுள்ள இன் னொருவரை நான் திருச்சி ஜெயிலில் பார்த்ததில்லை.


'இந்த வயதிலே உங்கள் தலையெல்லாம் நரைத்து விட்டதே !' என்று ஒரு நாள் கேட்டேன்.

'1932-ஆம் வருஷம் "ஸி" கிளாஸில் இருந்ததின் பலன் !' என்று சொன்னார்.

'இதற்கு முன்னிலிருந்த ஜெயில் வாசத்திற்கும் இப் பொழுது இருப்பதற்கும் என்ன வித்தியாசம் காண்கிறீர் கள்?' என்று ஒரு முறை கேட்டேன்.

'முன்னெல்லாம், அதுவும் முக்கியமாக, சென்ற முறை கூடலூரி லிருந்தபொழுது, அரசியல் கைதிகள் மன்னிப்புக் கேட்பதற்குத் தூண்டப்படுவார்கள். இப்பொழுது அது இல்லை. அதிகாரிகள் ஆசை காட்டுவார்கள். சத்தியாக்கிரகிகளுக்குள்ளே பிளவு ஏற்படுவதற்காக முயற்சி செய்வார்கள். ஒருமுறை கூடலூரில் புதிதாக ஜெயிலுக்கு வந்த ஒருவரிடத்தில் மன்னிப்புக் கேட்க ஏற்பாடு செய்யப்பட்டது. அவரும் மன்னிப்புக் கொடுக்க ஒப்புக்கொண்டார். அவருக்கு ஜெயிலில் ராஜோபசாரம் நடந்துகொண்டிருப்பதை நான் பார்த்தேன். தனிமையாக அவரை அழைத்து, "நானும் மன்னிப்புத் தந்துவிடுகிறேன். இரண்டு பேரும் ஒன்றாகச் செய்யலாம்!" என்று சொன்னேன். எனக்கு இதற்கு முன்னால் மறுக்கப்பட்ட புஸ்தகங்களெல்லாம் கொடுக்கப்பட்டன. காலை மாலை வார்டர் வந்து விசாரித்து வேண்டியதெல்லாம் கொடுத்தான். ஒரு நாள் இந்த மன்னிப்புச் சடங்குக்காக ஆபீஸுக்கும் அழைத்துச்செல்லப்பட்டோம்!'

'உங்களுக்கும் இதுதானா வேலை? மன்னிப்பு வாங்குவதற்கு நீங்கள் ஜெயில் விதிகளுக்குப் புறம்பாக நடக்கிறீர்களே! தேசபக்திதான் இல்லை; யோக்யப் பொறுப்பும் இல்லையா?' என்று ஸர்தார் கேட்க ஆரம்பித்தாராம். உடனே அதிகாரிகள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தார்கள். பக்கத்தில் நின்றுகொண்டிருந்த கைதியை இழுத்துக்கொண்டு வார்டர் பின்னாலே ஓடிவர, ஜெயிலுக்குள்ளே ஓடிவிட்டார் ஸர்தார். இந்த மன்னிப்புக் கதையைக் கேட்டு நான் ஆச்சரியப்பட்டேன். முதன் முதலாக ஜெயிலுக்கு வந்து கொஞ்சம் ஆட்டம் கொடுக்கும் சத்தியாக்கிரகிகளை ஜெயிலில் வேரூன்றச் செய்வதற்கு இந்தச் சூழ்ச்சி செய்திருக்கிறார் ஸர்தார்.



அ. வேதரத்தினம் பிள்ளை,

எம். எல். ஏ.



ஸி. பி. சுப்பையா முதலியார்,

எம். எல். ஏ.

திருச்சி சிறையில் 86-ஆம் நம்பர் கைதியின் முன்னால் சில நண்பர்களுடன் போட்டிப் பந்தயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.

'போட்டிப் பந்தயம் என்றால் என்ன?' என்று கேட்டார் அந்த நண்பர்.

'போட்டிப் பந்தயம்கூட உங்களுக்குத் தெரியாதா? முதலில் மனிதனுடைய அறிவையும் புத்திசாலித்தனத்தை யும் கொண்டு நிர்ணயிக்கக்கூடிய சில பிரச்னைகளுக்கு விடை தந்தவர்களுக்குச் சில பத்திரிகைகளில் பரிசு கொடுத்தார் கள். அமெரிக்கா தேசத்துச் சரக்கு இது. இப்பொழுது இந்த நாட்டில் ஏராளமான வாரப் பத்திரிகைகளால் இம் முறை ஆதரிக்கப்படுகிறது. நீங்கள் எவ்வளவு ஆலோசித்து விடைகள் எழுதினாலும் அவைகள் சரியாக இருக்கமாட்டா. தமிழ்நாட்டுப் பெண்கள்கூட இவைகளுக்கு விடை எழுதி இப்பொழுது பணம் சம்பாதிக்கும் எண்ணத்துடன் பாழாகி வருகிறார்கள்.

'பந்தயம் போடும் பத்திரிகாசிரியருக்குத் திடீரென்று ஜாஸ்தி பணம் வேண்டுமென்றால் முதல் பரிசு ரூ. 10,000 என்று போட்டால் சுமார் லட்ச ரூபாய் லாபம் கிடைக்கும். முதல் பரிசு ரூ. 1000 என்று போட்டால் லாபமே கிடை யாது. குதிரைப் பந்தயத்திலாவது கொஞ்சம் புத்திசாலித் தனத்திற்கு இடம் உண்டு. இதில் அதுவும் கிடையாது?' என்று நான் சொன்னேன்.

இந்த நண்பர்தான் கோவை ஸ்ரீ. டி. எஸ். அவிநாசி லிங்கம் செட்டியார். இவர் ரொம்பவும் உயர்ந்த மனிதர். பல மணி நேரம் உலகத்தை மறந்து இருப்பார். தமிழ்நாட்டிலே பிரபலமாயுள்ள ராமகிருஷ்ண வித்தியாலயம் என்றால் அது ஸ்ரீ. அவினாசிதான். மத்திய சட்டசபையில் இவர் அங்கத்தி னர். பார்த்தால் பெரும் பதவி வகிப்பவராகத் தெரியாது.

பேசினாலும் அப்படித்தான். அவர், 'உங்களுக்கு மோர் வேணுமா?' என்று கேட்கும் பொழுதும் அப்படித் தெரியாது. ஏன், சும்மா சொல்வானேன்? அவரை எப்பொழுது பார்த்தாலும் நீங்கள் அப்படி நினைக்க முடியாது. டில்லியிலே மத்திய சட்டசபையில் அங்கத்தினர்களுடன் அமர்ந்திருக்கும் பொழுதுதான் அவர் பதவி தெரியும். அவ்வளவு சாதாரணமாக எல்லோரிடத்திலும் நடந்துகொள்வார் ஸ்ரீ. செட்டியார். ஜெயிலில் அவரிடம் எனக்கு அத்தியந்த அன்பு ஏற்பட்டது. அவர் பரிமாறும்பொழுது, ஏதாவது வேண்டுமா என்று கேட்டால், எனக்கு உண்மையாகவே வேண்டாமென்றாலும்கூட, 'ஆஹா, வேண்டும்' என்று சொல்லிக் கொஞ்சம் வாங்கிக்கொள்வேன்.

ஜெயிலில் ஒருவருக்கொருவர் உடம்பு சவுக்கியமா என்று சாதாரணமாக விசாரிப்பது கிடையாது. உடம்பு சவுக்யமில்லாமல் மருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தால் 'உடம்புக்கு என்ன?' என்று கேட்பது வழக்கம். ஸ்ரீமான் செட்டியார் எப்பொழுதும், 'உடம்பு சவுக்கியமா?' என்று கேட்பார். 'ராத்திரித் தூங்கினீர்களா?' என்றும் கேட்பார்.

ஸ்ரீ. செட்டியார் மே மீ 21-உ விடுதலையானார். அதற்குப் பின்னால் திருச்சி ஜெயிலில் இப்படி யார் விசாரிக்கப் போகிறார்கள் என்பதே எங்கள் கவலையாகிவிட்டது.

சாப்பாட்டுக் கதையை ஆரம்பித்தாலே இப்படித்தான் நீண்டுவிடும். ஜெயிலில் மதியத்திலும் மாலையிலும் மணியடிப்பார்கள். எல்லாக் கைதிகளும் கேட்கும்படி 'ப்யூகிள்' ஊதுவார்கள். உடனே சோறு வரும். இதனால் கைதிகள், 'மகராஜன் ஜெயிலிலே மணியடித்துச் சோறுபோடுகிறார்கள்!' என்று சொல்வது வழக்கம்.

8. 44-நெ. கைதி

கடின காவல் தண்டனை விதித்தால் ஜெயிலில் வேலை செய்ய வேண்டு மென்பது விதி. ஜெயிலில் வேலை யென்றால் வீட்டில் வேலை செய்வது மாதிரி யன்று. நாள் ஒன்றுக்கு ௮ மணி நேரம் வேலை செய்தாக வேண்டும். ஜெயில் அதிகாரிகள் தேக உழைப்பை எதிர்பார்க்கிறார்களே ஒழிய, மூளையும் வேலை செய்யும் என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள்.

நல்ல வேளையாக அரசியல் கைதிகளுக்குச் சாதாரணமாக வேலை கொடுப்பதில்லை. கைதிகளாகவே தாமாக ஏதாவது வேலை செய்தால் உண்டு. கூடலூரிலிருந்து இங்கு வந்திருந்த நண்பர்கள், கூடலூர் ஜெயிலில் நாள்தோறும் சில மணிநேரம் நூல் சுற்றும் வேலை அவர்களுக்குக் கொடுத்ததாக என்னிடம் சொன்னார்கள். ஆனால், வேலூரிலும் திருச்சியிலும் இருந்த எங்களுக்கு எந்த விதமான வேலையும் கொடுக்கப்பட்டதே யில்லை. ஆயினும், எங்களில் அநேகர் ஜெயில் அதிகாரிகளுக்கு உதவி செய்யும் வழியில் அநேக வேலைகள் செய்துவந்தனர்.

இவர்களில் 44-நம்பர் கைதி சேலம் ஜில்லா போர்டு தலைவர் ஸ்ரீமான் கெ. எ. நாச்சியப்பக் கவுண்டரைத்தான் முன்னணியில் வைக்கவேண்டும். அஸெம்பிளியில் இவரை நான் பார்த்த பொழுது கொஞ்சம் ஒதுங்கி யிருப்பவராகத் தென்பட்டார். சாதாரணமாக எல்லோரிடமும் பழகும் தன்மை இவருக்கு இல்லை யென்று நான் நினைத்தேன். காங்கிரஸ் பதவி ஏற்பதற்கு முன்பே இவர் சென்னைச் சட்ட சபையில் இருந்தவர். அந்தக் காலத்து ஜஸ்டிஸ் மந்திரிகளைச்

சட்டசபையிலே கேள்விகள் கேட்டுத் திணறவைத்து வந்தார். ஒவ்வொரு நாளும் சட்டசபை நடவடிக்கைகளைப் படிக்கும் பொழுது, இத்தனை கேள்விகள் கேட்பதற்கு இவருக்கு விஷயங்கள் எங்கே அகப்படுகின்றன என்று நான் ஆச்சரியப்பட்டதுண்டு. சட்டசபையில் வரவு செலவுத் திட்ட விவாதத்தைக் குறித்த காலத்தில் முடித்துக்கொள்ளவேண்டுமானால், 'தயவுசெய்து வெட்டுப் பிரேரணைகள் அதிகமாகக் கொடுக்காதீர்கள். நீங்கள் என்ன கேட்கிறீர்களோ அவைகளை நாங்கள் செய்துவிடுகிறோம்' என்று மந்திரிகள் இவரை வேண்டிக்கொண்டால், வெட்டுப் பிரேரணைகளை நூற்றுக் கணக்கோடு நிறுத்திக்கொள்வாராம். இல்லையானால், எந்தத் தினத்தில் சட்டசபையில் என்ன நடக்கவேண்டுமென்பதை இவரே தீர்மானம் செய்யக்கூடிய அளவு சக்தி வாய்ந்திருந்தாராம். காங்கிரஸ் சட்டசபை புகுந்தபின்பு இவர் தொந்தரவு கொடுப்பதேயில்லை. இவர் காலேஜிலிருந்து நேராகத் தாலூகா போர்டுக்கு வந்தவர். 'நீங்கள் ஜில்லா போர்டு தலைவராயிற்றே! உங்கள் ஜில்லாவில் ஜில்லா போர்டார் எத்தனை ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் நடத்துகிறார்கள்?' என்று கேட்டேன். '727 ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அவ்வளவு பள்ளிக்கூடங்களையும் நான் நேரில் பார்த்திருக்கிறேன்!' என்று பளிச்சென்று சொன்னார். நான் பதில் பேசவில்லை.

இவருடைய முகவாய்க்கட்டையைப் பார்த்தால், இவருடைய உறுதியும் யாருக்கும் சலுகை காட்டாத தன்மையும் நன்றாகத் தெரியும். ஹாஸ்ய உணர்ச்சி நிறைந்த இவர் எங்கள் பிளாக்கில் எப்பொழுதும் கலகலவென்று சிரிப்பதற்குக் காரணமாயிருந்தார்.

கடைத் தெருவிலிருந்து ஜெயிலுக்கு வரவேண்டிய சாமான்களெல்லாம் இவர் மூலமாகத்தான் வரவழைக்க

வேண்டும். வேண்டிய சாமான்களின் ஜாபிதாவைக் குறித்து வாரத்தில் இருமுறை ஜெயிலரிடம் அநுமதி பெறவேண்டும். பிறகு பஜாரிலிருந்து ஒரு வார்டர் வாங்கிக்கொண்டு வருவான். வந்ததும் அவைகளை அவரவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கவேண்டும்.

சாமான்களை அநுமதிக்கும் ஜெயிலர் மிகவும் வேடிக்கையாக நடந்துகொண்டார். ஸோப்பு அநுமதித்துக் கொண்டே இருப்பார். திடீரென்று அநுமதிக்கமாட்டார். ஒருவருக்கு அநுமதிக்கும் ஒரு சாமான் இன்னொருவருக்குத் தரப்பட மாட்டாது. எந்தச் சமயத்தில் எந்தச் சாமான் தரப்படும் தரப்பட மாட்டாது என்பது யாருக்குமே தெரியாது. ஆகவே நாங்கள் ஒரே சாமானைத் திரும்பத் திரும்ப எழுதிக்கொண்டே இருப்போம். ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் அது அநுமதியாகி வந்துவிடும் என்ற நம்பிக்கை மாத்திரம் எங்களுக்கு எப்பொழுதும் உண்டு. அப்படியே நடந்துகொண்டும் இருந்தது. ஒருவேளை ஜெயிலர் வேலைத் தொந்தரவின் மிகுதியால் சலித்துப்போய்ச் சில நாட்கள் சீட்டுக்களைப் பார்க்காமலே கையெழுத்துப் போட்டுவிடுவார் போலிருக்கிறது.

ஒரு தடவை ஸ்ரீ. டி. எஸ். சொக்கலிங்கம் ஒரு கைப் பெட்டியும், அந்தப் பெட்டியில் போடுவதற்குப் பாச்சா உருண்டைகளும் வேண்டுமென்று எழுதியிருந்தார். பெட்டி அநுமதிக்கப்படவில்லை. பாச்சா உருண்டைகள் இரண்டு டஜன் வந்துசேர்ந்தன! அவற்றை என்ன செய்வது என்று தெரியாமல் சிரித்தோம்!

இன்னொரு முறை டாக்டர் சுப்பராயன் சமஸ்கிருதத்தில் ஒரு புஸ்தகம் வேண்டுமென்று எழுதினார். அந்தப் புஸ்தகத்தின் பெயர், ஆசிரியர் பெயர், பிரசுரித்திருந்த கம்பெனியின் பெயர், கிடைக்கும் இடம் - இவைகள் ஒவ்

வொன்றையும் பார்த்து, ஒவ்வொன்றையும் அநுமதிப்பதற்கு அறிகுறியாக 'சரி' என்ற குறி போட்டிருந்தார் ஜெயிலர்!

ஜெயில் ஒரு விநோதமான இடந்தான். தேன் அநுமதிப்பார்கள், நெய் அநுமதிப்பார்கள். ஆனால், எந்தவிதமான எண்ணெயும் கொடுப்பதில்லை. நாமாகவும் வரவழைத்துக் கொள்ள முடியாது. ஸர்தார் வேதரத்தினம் பிள்ளை சத்தியாக்கிரகிகளில் மிகவும் ஒழுங்காக நடந்துகொள்பவர். யோசனை செய்து ஒருநாள் புஸ்தகத்தில் 'கொப்ரி-கா-தேல்' என்று ஆங்கிலத்தில் எழுதிவைத்துவிட்டார். ஜெயிலர் 'சரி' என்றார். ஒரு பெரிய தேங்காயெண்ணெய்ப் புட்டி ஜெயிலுக்குள்ளே வந்துவிட்டது! ஹிந்தி தெரியாத ஜெயிலர் அதை ஒரு ஹிந்திப் புஸ்தகம் என்று அநுமதித்திருக்க வேண்டுமென்று நான் தீர்மானம் செய்துகொண்டேன். ஹிந்தி படிப்பதன் அவசியத்தை உணர்ந்தேன். அன்று முதலே, அதுவும் ஸர்தார் வேதரத்தினம் பிள்ளையிடத்திலேயே, ஹிந்தி கற்கத் தொடங்கி, ஜெயிலில் இருக்குமளவும் கற்றுவந்தேன்.

'கோகோஜம்' ஜெயிலில் அநுமதித்து வந்தார்கள். இது வெறும் தேங்காயெண்ணெய்தான் என்பதை ஜெயில் அதிகாரிகள் அறியவில்லையென்று தோன்றுகிறது.

எங்களுக்கு இந்தச் சாமான்களையெல்லாம் ஜெயிலில் வரவழைத்துக் கொடுத்த ஸ்ரீ. நாச்சியப்பக் கவுண்டர் செய்து வந்த வேலை மிகவும் சிரமமானது, அபாரமானது. ஒரு தம்பிடிகூட விடாமல் ஒவ்வொருவருக்கும் பில் எழுதி, அவரவர் கையெழுத்தை வாங்கிக் கணக்குச் சரிபார்ப்பதென்றால், நாள் ஒன்றுக்கு சராசரி 12 மணி நேரம் வேலை செய்திருக்கிறார் என்றே சொல்லவேணும். சில நாட்கள் இரவில் 12 மணி வரை கண்விழித்து வேலை செய்வார்.

வகுப்பு ஒன்றும் கொடுக்காமல் இவரை வேலூர் சிறைக்கு ஆறு மாதம் கொடுத்து அனுப்பிவிட்டார் மாஜிஸ்டிரேட். எந்த வகுப்பு என்று குறிப்பிடாததால், இவ்வளவு உபயோகமாக இருந்த இவரை, முதல் நாள் வேலூர் சிறையில் எதில் வைப்ப தென்று தெரியாத புத்தி மயக்கத்தால், பயித்தியக்காரர்களை அடைத்துவைக்கும் கொட்டறையில் அடைத்து வைத்திருந் தார்கள். மறுநாள் தான் இவர் எங்களுடன் சேர்ந்துகொண் டார்.

மேமீ 12 உ விடுதலையாகித் திரும்பவும் சேலம் ஜில்லா போர்டுத் தலைவராகப் போகும் ஸ்ரீ. நாச்சியப்பக் கவுண்டர், ஜெயிலுக்கு வந்து ஓய்வெடுத்துக்கொள்வார் என்று அவர் தாயார் நினைத்து அனுப்பினராம். 37-வது வயதிலே ஸ்ரீ. கவுண்டருக்கு ‘ஓய்வு’ என்பதே என்னவென்று தெரியாது. போகிற போக்கைப் பார்த்தால், எந்த வயதிலும் இவர் ‘ஓய்வு’ எடுக்கவேண்டிய அவசியமில்லை யென்றே எனக்குத் தோன்று கிறது. ஏதாவது வேலையில்லாமல் போனல் இவருக்குப் பயித்தியம் பிடித்துவிடும். என்றென்றும் இவருக்கு வேலை யிருக்கவேண்டும். இப்பேர்ப்பட்ட நேரான நண்பருக்குத் தமிழ்நாட்டிலே பொதுவாழ்விலும் அரசியலிலும் எப்பொழு தும் இடம் உண்டு என்பது மாத்திரம் நிச்சயம்; சந்தேகமே யில்லை.

டெராடூன் சிறையிலிருக்கும் பண்டித ஜவாஹர்லா லுக்கு வரும் பழக்கூடைகளை யெல்லாம் அவருக்குக் கொடுப்பதில்லை என்றும், ஆகவே நண்பர்கள் தயவுசெய்து அவருக்குப் பழங்கள் அனுப்பவேண்டாமென்று கேட்டுக் கொண்டதாயும் சில மாதங்களுக்கு முன் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். டேராடூன் சிறையிலே பழக்கூடைகள் கொடுப்பதில்லை யென்றால், திருச்சி சிறையிலே அப்படி யில்லை. பழங்கள் வரலாம். ஆனல் எல்லாப் பழங்களையும்

கொடுப்பதில்லை. நூற்றுக்கு ஐம்பது அல்லது எழுபத்தைந்து வந்து சேராது. இந்தப் பழப்-பெருச்சாளிகள் ஜாஸ்தியாகிவிடவே ஜெலியில் அதிகாரிகளைக் கலந்துக்கொண்டு அரசியல் கைதி ஒருவர் மேல்பார்வையில் நண்பர்கள் அனுப்பும் சாமான்களை வரவழைப்பது என்று தீர்மானம் செய்து, ஸ்ரீ. டி. எஸ். சொக்கலிங்கத்தை அந்த வேலைக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

பிற்பகல் மூன்று மணிக்கு ஜெயில் வாசலுக்குப் போய், சூப்பிரண்டாவது ஜெயிலராவது தணிக்கை செய்தபிறகு வந்திருந்த சாமான்களைக் கொண்டுவந்து பெயர்களைச் சரி பார்த்துக் கொடுக்கவேண்டும். வேலையில்லாமல் திகைத்துக் கொண்டிருந்த 'தினமணி' ஆசிரியருக்கு வேலை அகப்பட்டதே போதும். ஒன்றும் களவு போகாதபடி மிகவும் திறமையாக இந்த வேலையை அவர் செய்துவந்தார். நூற்றுக்கு ஐம்பதுகூட வந்துசேராம லிருக்கும்பொழுது சும்மா வாயை மூடிக்கொண்டிருந்த நண்பர்கள், பின்னால் ஓரிரண்டு பழம் அழுகியிருந்தால்கூட, 'என் அழுகியிருக்கிறது?' என்று சொக்கலிங்கத்தைக் கேட்பார்கள்! காய் முற்றிப் பழமாகி, பழம் அதிகமாய்ப் பழுத்துவிட்டால் அழுகிவிடும் என்றுதான் பதில் வரும்!

ஸ்ரீ. சொக்கலிங்கம் வாட்டசாட்டமான ஆள். நேரில் கண்டதும் நம்மை அறியாமலே அவரிடம் மதிப்பும் மரியாதையும் ஏற்படும். தமிழ்நாட்டிலே பொதுவாழ்வில் ஈடுபட்ட முக்கியமானவர்கள் ஐவரைச் சொல்லவேணும் என்றால், நான் சொக்கலிங்கத்தை ஒருவராகச் சொல்லவேண்டும். தமிழ்நாட்டில் பாமரர்களிடையே அரசியல் விழிப்புக்குக் காரணமாயிருப்பவர் ஒருவரை மாத்திரம் சொல்லவேணும் என்றால், நான் எந்த விதமான சந்தேகமுமில்லாமல் அவர் பெயரைச் சொல்லுவேன். இவர், சின்ன வயதிலே யாரிடமும்

சொல்லிக்கொள்ளாமல் சபர்மதியிலுள்ள காந்திஜியின் ஆசிரமத்திற்கு ஓடிப்போய், அங்கே சிலகாலம் தங்கியிருந்தவர். நாம் விவாதத்தில் புகுந்தால் அவரை வெல்ல முடியாது. மிகவும் கண்டிப்பான மனிதர். வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசுவார். அதே மாதிரியே எழுதுவார். தாக்கி எழுதுவதென்றால் அவர் மாதிரித் தமிழ்நாட்டில் இன்று எழுத்தாளர் ஒருவர் இல்லை யென்பது நிச்சயம். அவர் எழுதியதை வாசிக்கும் பொழுதெல்லாம் அவர் கையிலிருப்பது பேனாவா அல்லது கூர்மையான வாளா என்று நான் சந்தேகப்படுவதுண்டு. அவர் ஜாதி மத வித்தியாசம் கொஞ்சமும் சகியாதவர். இவ் வருஷம் ஜனத்தொகைக் கணக்கு எழுதும் பொழுது, 'ஜாதி என்ன?' என்று ஜெயிலிலே கேட்டதற்கு, 'ஜாதியில்லை!' என்று சொன்னார். அவருக்குப் பிடிக்காதது தம்மைச் 'சொக்கலிங்கம் பிள்ளை' என்று அழைப்பதுதான். ஸ்ரீ. சொக்கலிங்கம் தம்மைச் சொக்கலிங்கம் என்றே அழைக்கப் பிரியப்படுகிறார். அவரை எல்லோரும் அரசியலில் 'வலதுசாரிக்காரர்' என்று தீர்மானமாக நம்புகிறார்கள். 'உங்களுக்கு ரொம்பப் பிடித்த அரசியல் கொள்கை என்ன?' என்று நான் ஒருநாள் அவரைக் கேட்டேன். அதற்கு அவர் 'ஸோஷலிஸம்!' என்றார். எனக்குத் தூக்கிவாரிப் போடவில்லை. ஏன்? அவர் ஒரு 'ஸோஷலிஸ்ட்' என்பதை நான் அறிவேன் — நிச்சயமாய் அறிவேன்.

தூரத்திலே இருந்தால் இந்த 27 நெ. கைதியின் குணங்களை நீங்கள் அறிய முடியாது. பழகப் பழக அவருடைய அரிய குணங்கள் உங்களுக்குத் தெரியவரும். 40 வயதிலே சொக்கலிங்கம் இரண்டாவது முறை ஜெயில் வாசம் செய்கிறார். 50 வயதிலே இந்த 'மாஜி ஜெயில் பறவை' என்ன செய்யும் என்று யாரால் சொல்ல முடியும்?


ஜெயிலில் சென்னைத் தினசரிகள் எல்லாம் அநுமதிக்கப்பட்டன. வேலூரைப் போலத் திருச்சியிலும் ஜெயில் தணிக்கை உண்டு. ஆனால் அவ்வளவு கடுமையில்லை. 'ஹிந்து' பத்திரிகையில்கூட காலம் காலமாகக் கறுப்பு மை தீட்டியிருப்பார்கள். 'ஆனந்த விகட'னில் பக்கம் பக்கமாக மை பூசிவிடுவார்கள். 'ஆனந்த விகடன்' அச்சடிப்பதற்கு மை ஜாஸ்தியாகச் செலவழிகிறதா, அல்லது அச்சடித்ததை அழிப்பதற்கு இங்கே மை அதிகம் செலவழிகிறதா என்று கூட நான் சந்தேகப்படுவதுண்டு. 'எங்காவது ஓரிடத்தில் மை பூசாமல் "தினமணி"யைக் கொடுக்க மாட்டேன்!' என்று தினந் தினம் பிடிவாதம் செய்துகொண் டிருந்தாராம் திருச்சி ஜெயிலர்!

ஜெயில் ஆபீஸிலிருந்து பத்திரிகைகளை வாங்கி வந்து கொடுத்துக்கொண்டிருந்தவர் கரூர் ஸ்ரீ. பி. எஸ். சாம்பசிவம். இவர் பூணூல் அணியாத பிராமண இளைஞர். இவர் எதற்காக ஜெயிலுக்கு வந்தார் என்று கேட்கும்படி அவ்வளவு அப்பாவி! ஒரு பொதுக்கூட்டத்தில் தலைமை வகித்ததற்காக இந்த 22 வயது இளைஞரை ஜெயிலுக்குள்ளே தள்ளிவிட்டார் வெள்ளைக்கார மாஜிஸ்டிரேட் ஒருவர். அந்த மாஜிஸ்டிரேட் தமது தீர்ப்பில் இவர் சுபாஷ் போஸின் 'முன்னணிக் கட்சி'யில் ஓர் அங்கத்தின ரென்று கூறினாராம். அப்பொழுது தான் இவருக்கு சுபாஷ் போஸ் 'முன்னணிக் கட்சி' ஒன்று அமைத்திருக்கிறார் என்பது தெரிந்ததாம்!

ஸ்ரீ. சாம்பசிவம்கூட ஜெயிலுக்கு வந்தபின் மிகவும் கெட்டிக்கார ராகிவிட்டார். சில சமயங்களில் சில பத்திரிகைகளைக் கறுப்பு மை பூசப்படாமலே கொண்டுவந்து விடுவார். 'இதை எப்படிச் செய்கிறீர்?' என்று ஒரு நாள் அவரைக் கேட்டேன். 'இது என்ன பிரமாதம்?' என்றார். வல்லவனுக்கு வழி சொல்லியா கொடுக்கவேணும்?



எஸ். கே. சடகோப முதலியார்,
எம்.எல்.ஸி.



பி. எம். காரியப்பா

அவருக்குக் கொடுத்த தண்டனைக் காலம் முடிவாகி விட்டது. ரூ. 250 - அபாராதத்தைக் கொடுக்க மறுத்து, மேலும் ஜெயிலில் இருக்கிறார்.

'நீங்கள் ஏன் உங்கள் அபாராதத்தைக் கொடுத்துவிட்டு வெளியில் போகக்கூடாது?'

'நான் இருக்கேனில்லையோ உங்கள் மாதிரியா? நன்ளுக் கொடுத்தேனே!'

திருச்சி சிறையில் கைதிகளுக்குப் பால் வாங்கிக் காய்ச்சிக் கொடுத்துக்கொண்டிருந்தவர் திருச்சி ஜில்லாவாசி ஸ்ரீ. ராஜா சிதம்பர ரெட்டியார். பத்து வருஷங்களுக்கு முன் ஒருநாள் அகஸ்மாத்தாக ஒரு முசாபரி பங்களாவில் சந்தித்த பிறகு இவரை நான் ஜெயிலிலேதான் சந்தித்தேன். அப்பொழுது இவருக்கு 26 வயது. ஆகவே கணக்குப் போட்டுப் பார்த்தால் 26-ம் 10-ம் 36 வயது ஆகிறது. ஸ்ரீ. ரெட்டியாரைப் பார்த்தால்தான் அவர் ராஜா சிதம்பர ரெட்டியார் என்று அழைப்பதற்குத் தகுதியுடையவர் என்று தெரியும். ஸ்ரீ. ரெட்டியார் எதற்காகத் தீவிரமாக அரசியலில் பங்கெடுக்காமலிருக்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. சகல வசதிகளும் இருந்தும் ஏன் இவர் இன்னும் முன்னணியில் வரவில்லையென்பதும் எனக்கு விளங்கவில்லை. வருங் காலத்திலே இவர் பெரிய பதவிகளுக்கு வந்தால் நான் ஆச்சரியப்பட மாட்டேன். அதற்குரிய அம்சங்கள் இவரிடம் இருக்கின்றன. வரவில்லையென்றாலும் நான் ஆச்சரியப்பட மாட்டேன். ஏன்? 36-வயதிலே இல்லாததா இனிமேல் நடந்துவிடப் போகிறது?

சுடச்சுடப் பால் கொடுத்தார் ஸ்ரீ. ராஜா சிதம்பரம். ஒரு வருஷமும் பால் கொடுக்கட்டுமே என்றுதான் ஒரு வருஷத் தண்டனை இவருக்குக் கிடைத்தது போலும்!

9. 'மனுப் பேசுதல்'

பத்து வயதுப் பையன் நெல்லூரிலிருந்து திருச்சிவரை டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்து வந்துவிட்டான். ஜெயிலையும் தேடித் தேடி வந்து சேர்ந்துவிட்டான். வெளியே நின்றுகொண்டு நெல்லூர் ஜில்லா போர்டுத் தலைவரைப் பார்க்க வேண்டுமென்று சொன்னான். அப்பொழுது கேம்ப் ஜெயிலைச் சுற்றி வெளியே தட்டி யடிக்காத சமயம். ஸ்ரீ. கோதண்டராம ரெட்டி தம்மைத் தேடிப் பத்து வயதுள்ள பையன் யார் வந்திருக்க முடியுமென்று வந்து பார்த்தார். அப்படியே மெய்மறந்து போனார். நெல்லூரில் அவரை நன்றாகக்கூடத் தெரியாத ஒரு பையனுக்கு இவ்வளவு தூரம் வந்து பார்க்க வேண்டுமென்ற வேட்கை இருந்ததை என்னென்று சொல்வது! ஒரு தடவை தம்முடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக ரயிலில் டிக்கட் இல்லாமல் தொத்திக்கொண்டார் இங்கிலாந்தின் பிரதம மந்திரி சர்ச்சில். ஸ்ரீ. கோதண்டராம ரெட்டியாரைப் பார்ப்பதற்காக ரயிலில் டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்து வந்தான் இந்தச் சிறுவன். ஒன்று தம் உயிரைக் காப்பதற்காக, மற்றொன்று தேசபக்திக்காக. ரயில் விதிகள், ஜெயில் விதிகள் எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னுடைய விதியையும் எதிர்த்து இந்தச் சிறுவன் ஜெயிலுக்கு வந்த காட்சி என் கண் முன்னே இன்றும் நிற்கிறது.

'மனுப் பேசுதல்' — இதுவும் ஜெயில் பாஷைதான். மனுப் பேசுதல் என்றால் கைதிகளைப் பார்க்கவேண்டுமென்று வெளியிலுள்ளவர்கள் — நண்பர்களாயினும் சரி, பந்துக்களாயினும் சரி — ஜெயில் அதிகாரிகளிடத்தில் மனுப்

போட்டு, அதிகாரிகள் சம்மதம் பெற்று அவர்களைச் சந்தித்துப் பேசுவது என்பதுதான். ஸ்ரீ. நாடிமுத்துப்பிள்ளை மனுப் பேசுகிறார் என்றால், அவர் நண்பர்களையோ பந்துக்களையோ சந்தித்துப் பேசுகிறார் என்று அர்த்தம்.

'ஸி' வகுப்புக் கைதிகள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஒரு லிகிதம் எழுதலாம். ஒரு லிகிதம் பெறலாம். ஒரு முறை மனுப் பேசலாம். அல்லது மனுப் பேசுவதற்குப் பதிலாக இன்னொரு லிகிதம் எழுதலாம்; இன்னொரு லிகிதமும் வாங்கிக்கொள்ளலாம்; லிகிதமே எழுத வேண்டாமென்றால் இரண்டு முறை மனுப் பேசலாம்.

'பி' வகுப்புக் கைதிகளுக்கு மாதம் ஒருமுறை மனுப் பேசுதலும் கடிதம் எழுதுவதும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. 'ஏ' வகுப்புக் கைதிகள் 15 நாட்களுக்கு ஒருமுறை மனுப் பேசலாம், கடிதம் எழுதலாம். இதை வாரம் ஒருமுறை மனுப் பேசுவதாகவோ அல்லது கடிதம் எழுதுவதாகவோ சூப்பிரண்டின் அநுமதியின்பேரில் மாற்றிக்கொள்ளலாம். இந்த அநுமதி மாத்திரம் சூப்பிரண்டு தாராளமாகக் கொடுத்துவந்தார். ஆந்திர தேசத்து நண்பர்கள் அநேகமாகக் காகிதங்கள்தான் எழுதிக்கொண் டிருந்தார்கள். தமிழ் நாட்டவர்கள் தம்மவர்களைப் பார்த்துப் பேசுவதற்கே பிரியப்பட்டார்கள்.

ஜெயில் விதிகள் மிகவும் கடுமையானவை. பார்க்க வரும் நேரமும் தினங்களும் ஜெயில் சூப்பிரண்டால் நிர்ணயிக்கப்படுகிறது. குறிப்பிட்ட தினங்களில் குறிப்பிட்ட நேரத்தில்தான் பார்க்க முடியும். மூன்று பேர்கள்தான் ஒரு தடவை ஒரு கைதியைச் சந்தித்துப் பேசலாம். கைதிகளெல்லோரும் வரிசையாக நிறுத்தப்படுவார்கள். ஊடே கம்பி போட்ட ஒரு தட்டி மறைவு. அப்பால் நண்பர்கள் வெயிலில் நிற்கவேண்டும். இப்படி அரைமணி நேரம் பேசிக்

கொண்டிருக்கலாம். ஜெயில் விஷயங்கள் பேசக்கூடாது. வேறு கைதிகளைப் பற்றிப் பேசக்கூடாது. அரசியல் சம்பந்தமாகப் பேசக்கூடாது. ஒரு ஜெயில் அதிகாரி எப்பொழுதும் கூடவே இருப்பார்.

'ஏ' வகுப்புக் கைதிகளுக்கு நல்ல வேளையாக இடைமறிக்கும் அந்தத் தட்டி கிடையாது. வந்தவர்களும் கைதிகளும் ஒன்றாக உட்கார்ந்து பேசலாம். ஆனால் டெபுடி ஜெயிலர் ஒருவர் கூடவே இருப்பார். மனைவி மக்களைப் பார்க்கும் பொழுது, 'இந்தப் பாவி ஏன் கூட இருக்கிறார்?' என்று தோன்றும். ஆனால் கைதி கைதிதானே!

ஜெயிலில் சாதாரண விதிகளுக்குப் புறம்பாக அடிக்கடி தம்முடைய ஆட்களைப் பார்த்துப் பேசுவதற்கு ஒரு தனி உத்தரவு வாங்கி வைத்திருந்தார் தஞ்சை ஜில்லா போர்டுத் தலைவர் ஸ்ரீ. வி. நாடிமுத்துப்பிள்ளை. செய்கோனில் அவருக்கிருந்த ஏராளமான சொத்துக்களைச் சரிவரப் பரிபாலிப்பது இந்தச் சமயத்தில் சங்கடமாயிருந்தது. அதற்காகவே இந்த அநுமதி அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. எந்த வேளையிலும் நண்பர்களைக் கண்டு பேசுவார். நாலு மாதம் சிறைவாசம் செய்த ஸ்ரீ. நாடிமுத்துப்பிள்ளை திருச்சி ஜெயிலில் இருந்தவர்கள் எல்லோரிலும் அதிகச் செல்வம் படைத்தவர். இவர் ஜெயிலுக்கு வருவாரென்று வெகு சிலர்கூட எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். இவருக்கு நாற்பது வயது கூட இன்னும் முடியவில்லை. மிகவும் சொகுசான நிலையிலே வாழ்க்கையை நடத்தியவர். முதல் தினம் வேலூர் சிறையிலே தனி அறையில் பூட்டப்பட்ட பொழுது, தூங்காமலே இரவு முழுதையும் கழித்தவர். ஜெயிலிலே சௌகரியங்களே கிடையாதென்பது தெரிந்திருந்தும், தம்முடைய ஏராளமான சொத்துக்களைப் பரிபாலிப்பதற்கு இந்த யுத்த சமயத்தில் சிரமங்கள் எத்தனையோ இருந்தும், தேச நிலை இடங்

கொடுக்காமலிருந்தும் ஜெயிலுக்கு வந்துவிட்டார். வந்தபின் எல்லோரிடமும் அன்பாகவும் பிரியமாகவும் பழகினர். இவர் எங்களை விட்டுப் போகும்பொழுது இவர் பிரிகிருரே என்று உண்மையாகவே நாங்கள் வருந்திேனம். கேம்ப் ஜெயிலி லிருக்கும் ரேடியோவில் பாட்டுக் கேட்கும் பொழுதெல் லாம் எனக்கு இவர் ஞாபகம் வரும். இவர் வாங்கி வைத்து விட்டுப்போன ரேடியோ அது.

ஜெயிலுக்கு யாரைப் பார்ப்பதற்கு யார் வந்தாலும் சரி, ஸ்ரீ. கே. சடகோப முதலியார் தட்டிக்கு இந்தப் பக்கம் நின்று அவர்களிடத்தில் ஒரு வார்த்தை பேசாமலிருக்க மாட்டார். 'நீங்கள் சவுக்கியமா? நாங்களெல்லோரும் சவுக்கியமாகத் தான் இருக்கிறோம்!' என்று ஒவ்வொருவரிடத்திலும் சொல் லுவார். 'ஸ்ரீ. சடகோப முதலியார் ஜெயிலுக்கு வரு வார் என்று சொன்னல் ஒருவரும் நம்பியிருக்க மாட்டார்கள். நானும் நம்பியிருக்க மாட்டேன்' என்று ஒருநாள் ராஜாஜி சொன்னர். மே மீ 24-உ விடுதலையான ஸ்ரீ. சடகோப முத லியார் வேகமாகவே வீட்டுக்குப் போயிருப்பார் என்று நம்பு கிறேன். ஏன் வேகமாக என்றல், அவர் வாழ்க்கையில் வேகம் ஒரு முக்கிய அம்சமாக இருக்கிறது. சின்ன வயதி லிருந்தே ஒரு கால் நன்றாக உபயோகப்படுத்த முடியாமல் போனலும் தேகப்பயிற்சி செய்தார்; விளையாடினர். சைக்கி ளில் சதா சவாரி செய்தார். 54 வயதில் சிறைக்குள்ளே சலிப் பில்லாமல் நடந்துகொண்டிருந்தார். ஜெயிலிலே இவ்வளவு சுறுசுறுப்பென்றல் வெளியில் கேட்க வேண்டுமா? அவரு டைய குமாரன் ஸ்ரீ. எஸ். எஸ். கிருஷ்ணசாமியுடைய மணம் நாங்கள் எல்லோரும் ஜெயிலில் இருக்கும் பொழுது நடந்தது. அனைவரும் தம்பதிகளை வாழ்த்தினேம். சிறையி லுள்ள தேசபக்தர்களின் வாழ்த்து அந்தத் தம்பதிகளின் வாழ்க்கையைச் சிறப்பிக்கும் அல்லவா!

ஜெயிலில் இருந்துகொண்டு கடிதங்கள் எழுதுவதும் பெறுவதும் மிகவும் சிரமமான காரியம். 'ஏ' வகுப்புக் கைதிகள் 14 நாட்களுக்கு ஒரு கடிதம் எழுதலாம் என்பது விதி. ஆனால் கடிதம் எழுதுவதற்குக் காகிதம் டெபுடி ஜெயிலர் கொடுக்கவேண்டும். அந்தக் காகிதத்தில் எழுதித் திரும்பவும் டெபுடி ஜெயிலரைத் தேடிப்பிடித்துக் கொடுக்கவேண்டும். அதற்கப்பால் ஆபீஸிலிருந்து தணிக்கைசெய்வதற்கு அதைப் போலீஸார்களுக்கு அனுப்புகிறார்களாம். போலீஸாரிடமிருந்து திரும்பவந்து போஸ்டாபீஸுக்குப் போகவேண்டும். இவ்வளவும் கழிந்து கடிதம் போய்ச் சேர்ந்தால், அதற்கு இரண்டு வாரங்கள் அல்லது மாதங்கள் ஆனாலும் நாம் ஆச்சரியப்படக்கூடாது. 'உங்கள் கடிதங்கள் ரயில் மூலமாகவோ அல்லது பஸ் மூலமாகவோ தபாலில் போகின்றன என்று நீங்கள் நினைத்துக்கொள்ளாதீர்கள்! கடிதங்களெல்லாம் அத்தனை தூரமும் நடந்துதான் போகின்றன!' என்றார் ஒரு நாள் 'திரிவேணி' ஆசிரியர் ஸ்ரீ. ராமகோடீச்வர ராவ். அவ்வளவு நாட்கள் ஆகும் அவைகள் விலாசதாரிடம் போய்ச் சேருவதற்கு. கைது செய்யப்படாத சத்தியாக்கிரகிகள் டில்லி நோக்கி நடப்பது போல், எங்களுடைய கடிதங்களும் ஊர்ந்து ஊர்ந்து என்றோ ஒருநாள் குறித்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்திருக்கும் என்று நாங்கள் திருப்தியுறுவோம்.

இன்று ஒரு கடிதம் ஒரு கைதிக்குக் கொடுக்கப்படுமானால் இன்னும் 14 நாட்கள் அவனுக்கு இன்னொரு கடிதம் கொடுக்கப்பட மாட்டாது. 14 நாட்களுக்கு ஒரு முறை ஒரு கடிதம் கொடுக்க வரும் ஜெயில் அதிகாரிகள், வந்திருக்கும் கடிதங்களைப் புரட்டி ஏதாவது ஒன்றைக் கொடுப்பார்கள்.

வேலூரில், கடிதங்கள் யாரிடமிருந்து வந்திருக்கின்றன என்பதையும், சமாசாரத்தின் சுருக்கத்தையும் எழுதி வந்து

எங்களுக்குக் காண்பிப்பார்கள். அவைகளில் எந்தக் கடிதம் வேண்டுமோ அதைச் சொன்னால் கொண்டுவந்து கொடுப்பார்கள்.

திருச்சியில் ஒரே அமளிதான். வந்த கடிதங்களில் ஏதாவது ஒன்றைப் பொறுக்கிவந்து கொடுப்பார்கள். அதைத் திறந்து பார்த்தால் கல்யாண அழைப்பாயிருக்கும். கல்யாணம் முடிந்து அடுத்த வாரம் இந்த அழைப்பை வாங்கி என்ன செய்வது? அல்லது ஒரு நண்பரின் தூர பந்துவின் மரணக் காகிதமா யிருக்கலாம். மனைவி மக்களிடமிருந்து வந்த கடிதங்கள், வியாபார சம்பந்தமான சமாசாரங்கள் அடங்கிய கடிதங்கள், உயிருக்குயிரான நண்பர்கள் எழுதிய கடிதங்கள் - எல்லாம் ஜெயில் ஆபீஸிலே செல்லரித்துக் கிடக்கும். கேட்டால், ஜெயில் விதிகள் குறுக்கே வந்து நிற்கும்.

திருச்சி சிறைக்கு நான் போனதும் எனக்கு ஒரு காகிதம் கொடுத்தார்கள். திறந்து பார்த்தால் அது கிறிஸ்மஸ் வாழ்த்து. அப்பொழுது ஜனவரி 15-உ என்று ஞாபகம். எத்தனையோ காகிதங்கள் காத்துக்கொண்டிருந்தும் அவைகளைக் கொடுக்க மறுத்துவிட்டார்கள். 'இனிமேல் எனக்குக் காகிதம் வேண்டியதில்லை. மனுப் பேசுதலாக மாற்றிவிடுங்கள்' என்று சூப்பிரண்டுக்கு எழுதி அனுப்பிவிட்டேன். திருச்சி சிறையிலிருந்த நாலரை மாதமும் நான் கடிதம் எழுதவுமில்லை, பெறவுமில்லை.

வேலூர் ஜெயிலில் ஒரு சம்பவம் நடந்தது. ஒரு நண்பருக்கு இரண்டு கடிதங்கள் வந்திருந்தன. ஒன்று அவருடைய மனைவியிடமிருந்து; மற்றொன்று வேறு ஒரு நபரிடமிருந்து. ஜெயில் அதிகாரிகள் அந்த நபரின் பெயரையும் சொன்னார்கள். நண்பர் அந்தப் பெயர் தம் சகோதரர் பெயர் என்றார். அவருக்குத் தர்ம சங்கடமாகிவிட்டது.

மனைவி கடிதத்தைப் பெறுவதா, சகோதரர் கடிதத்தைப் பெறுவதா? இரண்டில் ஒன்றுதான் கொடுக்கப்படுமென்றும் எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலா மென்றும் ஜெயிலர் சொன்னார். நண்பர் ஆலோசித்தார். ஒன்றும் புரியவில்லை. தலைவர் ராஜாஜியையே கேட்டுவிடுவ தென்று முடிவு செய்தார். அப்படியே கேட்டார். ராஜாஜி சொன்னார்: 'உங்கள் மனைவியின் கடிதம் முழுதும் காதலும் முத்தங்களுமாக இருக்கும். அவைகளை உங்கள் மனைவியிடமிருந்து பெற்றுக்கொண்டதாக நீங்கள் வைத்துக்கொள்ளுங்களேன். சகோதரரின் கடிதத்தில் குடும்ப சம்பந்தமான முக்கியமான விஷயங்களும், வியாபார சம்பந்தமான விஷயங்களும் இருக்கும். ஆகவே, உங்கள் சகோதரர் கடிதத்தையே வாங்கிக்கொள்ளுங்கள்.'

ஜெயில் ஆபீஸில் போய்ப் பார்த்ததில் லிகிதம் எழுதிய நபர் நம் நண்பருடைய சகோதரர் அல்லரென்றும், சகோதரர் பெயரே உள்ள ஒரு சிநேகிதர் என்றும் தெரியவந்தது. ஆகவே, சந்தேக ஆத்மாவாகிய நமது நண்பர் தம் மனைவியின் காதலையும் முத்தங்களையும் பெற்றுக்கொண்டு சிரித்துக் கொண்டே வந்து சேர்ந்தார்.

87 - ஆம் நம்பர் கைதி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மாஜி காரியதரிசி ஸ்ரீ. ஸி. பி. சுப்பையா முதலியார். அவர் பல தடவைகள் ஜெயிலுக்கு வந்தவர். அவர் சின்னக் குழந்தையாக இருக்கும் பொழுது ஒருதடவை லஜபதிராய் படத்தை வைத்துக்கொண்டு ஊர்வலம் வந்ததற்காகப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போய் மேஜையில் படுக்கவைத்து நாலைந்து அடி அடித்தார்கள். பல வருஷங்களுக்கு முன்னால் டாக்டர் டி. எம். நாயர் ஒரு ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டில் தலைமை வகித்துக்கொண்டிருக்கும் பொழுது அந்த மகாநாட்டில் தாம் பேசவேண்டுமென்று இவர் சொன்னாராம். இளம்

யைபயனுன இவரை அப்படியே தூக்கி வெளியே கொண்டு வந்து விட்டார்களாம்.

ஸி. பி. நல்ல வாசாலகர், சிறந்த பிரசங்கி, நிர்வாகத் திறமையுள்ளவர். அத்துடன் பெரிய புத்திசாலி. வெகு நாளாக அரசியலில் ஊறிப்போனவர்.

'நமக்கு வரும் லிகிதங்களை யெல்லாம் "ஸென்ஸார், ஸென்ஸார்" என்று உயிரை வாங்குகிருர்களே! என்ன தான் செய்கிருர்கள்?' என்று அவரிடம் ஒருநாள் சொன்னேன்.

'ஒன்றுமேயில்லை. இந்த லிகிதத்தைப் பாருங்கள்' என்ருர்.

'இது எது?'

'ஜெயிலில் நாம் இருக்கும் பொழுது ஸென்ஸார் செய்து கொடுத்ததுதான்!'

அந்தக் கடிதத்தில் அரசியல் விஷயங்கள் எழுதப்பட்டிருந்தன. அதுமாத்திரமல்ல. சத்தியாக்கிரக விஷயமாக ஜனங்கள் ஊக்கமாக இருக்கிருர்கள் என்றும் எழுதப்பட்டிருந்தது!

சிறையிலே நம் பந்துக்களோ நண்பர்களோ வந்து பார்க்கும் நாள் மிகவும் வரவேற்கத்தக்க நாள். அன்று சத்தியாக்கிரகிகள் அந்த வேளையை ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண் டிருப்பார்கள். சில சமயங்களில் மனைவி மக்களைப் பார்த்துவிட்டுத் திரும்ப வரும்பொழுது குழந்தைகளும் எங்களுடன் கூடவே ஜெயிலுக்குள் வந்துவிடும். ஒரு நாள் ஸ்ரீ. வி. வி. கிரி தம்முடைய குழந்தைகளைப் பார்த்து விட்டு வரும்பொழுது நாலு வயதுக் குழந்தையும் அழுது கொண்டே உள்ளே வந்துவிட்டது. அதைத் திரும்பவும் வெளியிலே அனுப்புவது சிரமமாகிவிட்டது. 'ஓ' என்று கதறி யழுதது அந்தக் குழந்தை.

மனுப் பேசி முடிந்ததும் நண்பர்களின் பரிதாப முகங்களைப் பார்க்கலாம். தகப்பனாரின் புத்திர வாஞ்சையின் உச்சஸ்தானத்தைப் பார்க்கலாம். மனைவியின் காதல் கலந்த சோகத்தைப் பார்க்கலாம். இவைகளை யெல்லாம் சகித்துக் கொள்ளலாம். ஆனால் குழந்தைகளின் அழுகையைச் சகிக்கவே முடியாது. தேம்பித் தேம்பி அழும் குழந்தையின் அன்பிலே ஆண்டவனையே காணலாம்.

கைதிகளின் மனைவி, தாயார், தகப்பனார், குழந்தைகள், நண்பர்கள் எல்லோரும் பார்த்துப் பேசிவிட்டுத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போவார்கள். கைதிகளும் அவர்களைத் திரும்பத் திரும்பப் பார்ப்பார்கள். இன்னும் 14 நாட்கள் ஜெயிலுக்கு வெளியே ஒருவரிடமும் பேச முடியாது; ஒருவரையும் பார்க்க முடியாது. வெளி உலகம் அடைபட்டு விடுகின்றது. திரும்பவும் ஜெயிலுக்குள்ளே போகும் பொழுது அவர்கள் கண்களுக்கு முன்னால் ஒரு மாசு படருகின்றது. மனைவி மக்களிடத்திலிருந்து மனிதனைப் பிரித்து வைப்பதற்கு மனிதன் கட்டிவைத்திருப்பது ஜெயில். இதைப் பார்க்கிலும் மனிதத்தன்மையற்றது உலகத்திலே வேறு ஒன்றும் இல்லை!



10. ‘பாம்பு! பாம்பு!’

‘என்னுடைய அறைகளிலும் அவற்றின் பக்கத்திலும் மூன்று நான்கு பாம்புகளும் காணப்பட்டன. இவற்றில் ஒன்றைப் பற்றிய செய்தி (ஜெயிலுக்கு) வெளியே எட்டிவிட்டது; அதைப்பற்றிப் பத்திரிகைகளில் பெரிய எழுத்துத் தலைப்புக்களும் போடப்பட்டன. தினசரி ஜெயில் வாழ்க்கையில் இப்படி ஒரு மாறுதல் ஏற்பட்டதை நான் விரும்பினேன். ஜெயில் வாழ்க்கையே உற்சாகமற்றது; ஒரே மாதிரியாயுள்ள அந்த வாழ்க்கையை மாற்றக் கூடிய எது நேர்ந்தாலும் வரவேற்கப்படும்.’

— பண்டித ஜவாஹர்லால் நேரு

திருச்சி சிறையிலே நாட்கள் செல்லச் செல்ல அதிகமாகிக் கொண்டே வந்தவைகளில் இரண்டைக் குறிப்பிட வேண்டும். ஒன்று சூரியனின் உஷ்ணம்; மற்றொன்று பாம்பு!

கடுமையான உஷ்ணம் தாங்க முடியாத அளவுக்கு வந்து கொண்டிருந்தது. 103, 104, 105, 106 டிகிரி உஷ்ணம் சர்வ சாதாரணமாய்விட்டது. காலை 7 மணிக்குக் கையிலெடுத்த விசிறி இரவு 7 மணிவரை கையிலேயே இருக்க வேண்டும். கீழே வைத்தால் வேர்வை கொட்டிக்கொண்டேயிருக்கும். உஷ்ணம் தாங்க முடியாமல் டாக்டர் சுப்பராயன் அரசாங்கத்தாருக்கு எழுதிக் கேட்டார். ‘சென்ற 1920 முதல் ஒவ்வொரு வேனிற்காலத்திலும், ஒன்று நான் இங்கிலாந்துக்குச் சென்றுவிடுவேன்; அல்லது உதகமண்டலத்திற்குப் போய்விடுவேன். இத்தகைய வேனிற்காலத்தை நான் பார்த்ததே இல்லை. ஆகவே மின்சார விசிறி ஒன்றும், தினம் ஐஸ் கட்டிகளும், என் செலவில் வரவழைத்துக்கொள்வதற்கு அநுமதி தரவேண்டும்’ என்று எழுதினார்.

‘இவைகளெல்லாம் அவசியத்திற்கு மிஞ்சிய வசதிகள்’ என்று பதில் கிடைத்தது. நமது டாக்டர் அத்துடன் விட

வில்லை. 'மனிதனுக்கு வசதிகள் அவசியம் அநாவசியம் என்று பிரிப்பது அந்தந்த மனிதனைப் பொறுத்துத்தானே இருக்கிறது. ஒருவருக்கு அவசியம் மற்றொருவருக்கு அவசியமில்லாம லிருக்கலாம். 20 வருஷங்களாக வெயிலின் கொடுமை என்னவென்று அறியாத எனக்கு மின்சார விசிறியும், ஐஸும் அவசியத்திற்கு மிஞ்சிய வசதிகள் என்று சொல்ல முடியுமா?' என்று எழுதிக் கேட்டார். அவர் விடுதலையாகும்வரை பதிலே யில்லை.

ஜெயிலிலே நாம் கஷ்டப்படுவதற்குப் பழகிக்கொள்ள வேண்டும். ஜெயிலிலுள்ள வார்டர்களும் ஏனைய அதிகாரிகளும் சின்னஞ் சிறு கஷ்டங்களை வேண்டுமென்றே கொடுத்துக்கொண் டிருப்பார்கள். நம் சாமான்களைச் சரியான நேரத்தில் கொடுக்கவில்லையானால் அவைகளைப் பற்றிக் கவலைப்படக் கூடாது. குடிக்கத் தண்ணீர் இல்லாமற் போவதும், உரிமை யிருந்தும் நண்பர்களைப் பார்க்க முடியாமற் போவதும் கஷ்டங்கள் தான். மூட்டைப் பூச்சிகள் ஆயிரக்கணக்காக இருந்தால், அவைகள் இருக்கத்தான் செய்யும். எண்ணெய் இல்லையென்றால் எண்ணெய் இல்லாமல் காலம் கழிக்க வேண்டும். எழுதுவதற்குக் காகிதங்களும் படிப்பதற்குப் புஸ்தகங்களும் கொடுப்பதற்குப் பல நாட்கள் தாமதமானால், சகித்துக் கொள்ளவேண்டும். டிஸம்பர் 13-உ நான் கைவசம் கொண்டு போன புஸ்தகங்களை மறுவருஷம் மார்ச்மீ 23-உ தணிக்கை செய்து என்னிடத்தில் கொடுத்தார்கள். 100 நாட்கள் தானே! புஸ்தகங்கள் தான் இப்படி யென்றால் படுக்கையையும் பல நாட்கள் கொடுக்கமாட்டார்கள். இரண்டு வேஷ்டிகளையே துவைத்துத் துவைத்துக் கட்டவேண்டுமென்று சொல்லுவார்கள்.

மனுப் பேசுவதற்கு நடுப்பகலிலே நெடுந்தூரம் நடந்து செல்ல வேண்டும். அப்படி ஒருநாள் சென்ற பொழுது,

மதுரை அஸெம்பிளி அங்கத்தினர் ஒருவர் தாகமெடுத்துத் தண்ணீர் கேட்டார். 'இது என்ன தண்ணீர்ப் பந்தலா?' என்று பதில் வந்தது. இதற்கெல்லாம் சும்மா வாயை மூடிக் கொண்டிருக்கவேண்டும். தினம் தினம் வரும் பால் ஒரு நாள் வரவில்லையென்றால் வரவில்லைதான். இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் தண்ணீர் போதிய அளவு இல்லை யென்று முறையிடுவதற்கு, அவர் ஆகாயத்தைக் காட்டி, 'ஆண்டவனைக் கேளுங்கள்!' என்று சொன்னால், பேசாமல் இருக்கவேண்டும். சமையலுக்குக் கொடுக்கப்படும் விறகு காயாமல் இருந்தால், சமையல் செய்யாமலும் சாப்பிடாமலும் இருக்க வேண்டியதுதான்.

இந்தக் கஷ்டங்களை யெல்லாம் ஜெயிலுக்கு வருபவர்கள் அநுபவிக்கத் தயாரா யிருக்கவேண்டும். ஜெயில் விதிகளின்படி நம் உரிமைகளைக்கூட நாம் கேட்டு வாங்க முடியாது. சாயங்காலத்தில் கொட்டறைகளில் அடைத்துப் பூட்டிவிட்டுப் போய்விட்டால் மனசைச் சமாதானப்படுத்திக் கொள்ளவேண்டும்.

நம் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்றால், அதிகாரிகளோடு மல்லுக்கு நிற்கத் தயாராகவேண்டும். சத்தியாக்கிரகி என்ன செய்ய முடியும்? உண்ணாவிரதம் இருக்கலாம்; அல்லது மாலையில் அறையில் தள்ளிப் பூட்டும் பொழுது உள்ளே செல்ல மறுக்கலாம். இவற்றை யெல்லாம் கண்டு அதிகாரிகள் பெரும்பாலும் இணங்கி வருவதுண்டு. ஆனால் சிறை விதிகளின்படி இவை பெரிய குற்றங்கள். பெரிய குறைகளை நிவர்த்திப்பதற்கே சத்தியாக்கிரகிகள் இந்த முறைகளைக் கையாளத் துணிவார்கள்.

திண்டுக்கல் சத்தியாக்கிரகி ஜனாப் அப்துல் சத்தார், தாம் காலையில் ஐந்து மணிக்குத் தொழவேண்டுமென்றும், அதற்காக ஒரு விளக்கு வேண்டுமென்றும் கேட்டார்.

ஜெயிலில் எங்கள் அறைகளுக்கு வெளியே கட்டித் தொங்க விடப்பட்டிருக்கும் லாந்தல் இரவு ஒன்பது மணியோடு நின்று விடும். அதற்கப்பால் ஒரே இருட்டுத்தான். ஜனுப் அப்துல் சத்தார் துடுக்கான ஆசாமி. 'எனக்குக் காலையில் விளக்குக்கு ஏற்பாடு செய்யவில்லையானல் நான் "லாக்-அப்"புக்குப் போகமாட்டேன்' என்ருர். வார்டர்கள், டெபுடி ஜெயிலர்கள், ஜெயிலர் எல்லோரும் வந்து வேண்டிக்கொண்டார்கள். 'எத்தனை வருஷம் ஜெயில் வாசமென்ருலும் கவலையில்லை. இதைக் குற்றமென்று நீங்கள் கருதினுல் என்ன தண்டனை வேண்டுமானுலும் நான் அடைவதற்குத் தயார். நான் காலையில் தொழவேண்டும். தொழுவதற்கு எனக்கு விளக்கு வேண்டும்' என்று நண்பர் பிடிவாதம் செய்தார். அன்றுமுதல் காலை நாலு மணிக்கு ஒரு வார்டர் வந்து விளக்கை ஏற்றி அவர் அறைக்கு வெளியே தூரமாகத் தள்ளி வைத்துவிட்டுப் போய்விடுவான்.

ஜனுப் அப்துல் சத்தார் வெற்றி பெற்ருர். மத சம்பந்தமான விஷயமா யிருந்ததால் இந்த வெற்றி எளிதில் கிடைத்தது. ஆனுல் ஜெயில் அதிகாரிகள் நினைத்தால், சின்னஞ்சிறு தொந்தரவுகள் எத்தனையோ கொடுக்கலாம். கைதி ஒருவர் சூப்பிரண்டைப் பார்த்து ஏதாவது பேசவேண்டுமென்ருல் ஜெயில் அதிகாரி யாராயிருந்தாலும் காலதாமதமில்லாமல் சூப்பிரண்டிடம் அவரை அழைத்துச் செல்ல வேண்டு மென்று விதி யிருக்கிறது. ஆனுல் இது நடைமுறையில் சாத்தியமாவதில்லை. ஒவ்வொன்றுக்கும் உக்கிரமாகச் சண்டை ஒன்றைக் கிளப்பினுல்தான் நடக்கும். மிஞ்சினுல் கெஞ்சுவார்கள், கெஞ்சினுல் மிஞ்சுவார்கள் சிறை அதிகாரிகள்.

இந்தக் கஷ்டங்களெல்லாம் நாங்கள் அநுபவிக்கப் பழகிக் கொண்டோம். கஷ்டப்படுவதற்காகவே சென்ற நாங்கள்

இவைகளைப் பொருட்படுத்தாமல் இருந்தோம். ஆனால், தங்கியிருக்கும் அறையில் பாம்பு வந்தால் என்ன செய்ய முடியும்? இந்தப் பெரிய பிரச்னையை நாங்கள் திருச்சி ஜெயிலில் அடிக்கடி அலசிப்பார்க்க வேண்டியிருந்தது. 'பாம்பென்றால் படையும் நடுங்கும்' என்பது ஒரு பாடா வதிப் பழமொழி. சத்தியாக்கிரகிகள் பாம்புகளுக்கிடையே, பாம்புகளுடனேதான் வாழ்ந்து வந்தார்கள். எத்தனை வித மான பாம்புகள்! நல்ல பாம்பு, பச்சைப் பாம்பு, கட்டுவிரி யன், சுருட்டைப் பாம்பு - எல்லாவிதமான பாம்புகளும் வந் தன. காட்சிச் சாலையில் இத்தனை விதவிதமான பாம்புகளை நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள். திருச்சி சிறையிலிருந்த சத்தியாக்கிரகிகளிடத்தில் பாம்பைப் பற்றிப் பேசாதீர்கள். பாம்பு விஷயத்திலே அவர்கள் நிபுணர்களாய்த்தான் இருப் பார்கள்.

முதலில் திருச்சி சிறைக்கு விஜயம் செய்த பாம்பு அசல் நல்ல பாம்பு. சுமார் ஐந்தடி நீளமிருக்கும். அதுவும் ராஜாஜி யிருக்கும் இடத்திற்கே வந்துவிட்டது. பிப்ரவரி மாதம் 9-உ காலை நாலு மணி யிருக்கும். பிளாக்கிலிருந்து விழித் தெழுந்து வெளியே போன ஒருவர் பாம்பை முதலில் பார்த்தார். சர்ப்பத்தைப் பார்த்ததும் அவர் சத்த மிட்டார். சர்ப்பம் சீறிற்று. எல்லோரும் எழுந்துவிட்டார்கள். சர்ப் பம் தலைமறைவாய்ப் போக விரும்பியது. நெல்லூர் ஜில்லா போர்டுத் தலைவர் ஸ்ரீ. கோதண்டராம ரெட்டியாரின் 'கேம்ப் காட்' உறையில் நுழைந்து அதைப் புகலிடமாகக் கொண் டது. இதற்குள் நாலைந்து பேர் சேர்ந்து கூடிவிட்டனர். மாஜி பார்லிமென்டரி காரியதரிசி ஸ்ரீ. பாபிநீடு உள்படப் பலர் பல தடிகளால் பாம்பைத் தாக்கினார்கள். அந்தக் கொடிய சர்ப்பத்தை நண்பர்கள் மரத்தில் கட்டித் தொங்க விட்டனர். டெபுடி ஜெயிலர் வந்து அதைப் பார்த்தார்.

வார்டர்களும் பார்த்தார்கள். பாம்பு வந்த செய்தி எப்படியோ வெளியிலுள்ளவர்களுக்கு எட்டி, 'தினமணி', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டது.

மூன்று நாட்களுக்குப் பின்னால், 'ஹிந்து' பத்திரிகையில் இந்தச் செய்தி தவறு என்று சூப்பிரண்டு மறுப்பு எழுதியிருந்தார். ஆனால் அவரைக் கேட்டபோது, அவர் தாம் பத்திரிகைக்கு அந்த மறுப்புச் செய்தி கொடுக்கவே இல்லையென்று ஒரே சாதனை சாதித்தார். 'தினமணி' 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைகளின் செய்திக்கு மறுப்பைப் பிரசுரிக்கும் பொழுது அப்பத்திரிகைகளிடத்தில் அவைகளுக்குச் செய்தி எங்கிருந்து கிடைத்தன என்று மற்றவர்கள் கேட்டிருந்தால் நலமா யிருந்திருக்கும்.

இந்த வருஷம் ஏப்ரல் மாதம் திருச்சி சிறைக்கு விஜயம் செய்த பாம்புகளை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். அப்பால் அவைகளை யார் யார் வரவேற்றார்கள் என்பதையும் சொல்லுகிறேன்.

ஏப்ரல் 7-உ ஸ்நான கட்டத்தில் அடிபட்ட பாம்புக்காக ஸ்ரீ. ஆர். எஸ். மாணிக்கத்திற்கு 10-நாள் தண்டனை வஜா அளிக்கப்பட்டது. ஏப்ரல் 16-உ 'கட்டு விரியன்' பாம்பு ஒன்று ஆறாவது பிளாக்கு முன்னால் வந்திருந்தது. அப்பொழுது அதிகாலை. மலபாரின் அஸெம்பிளி அங்கத்தினர் ஜனாப் முஹைதீன் குட்டி அதை மிதித்துவிட்டார். நல்ல காலமாக அது அவரைக் கடிக்கவில்லை. அந்தப் பாம்பு அவரால் கொல்லப்பட்டது. வடகிழக்குக் கோடியில் தஞ்சைச் சட்டசபை அங்கத்தினர் ஸ்ரீ. மாரிமுத்து ஒரு சுருட்டைப் பாம்பைக் கண்டு வழியனுப்பிவிட்டு வந்தார்.

19-உ கேம்ப் ஜெயிலிலிருந்து வெளிக் கோரங்கிக்குப் போகும் பாதையில் ஒரு கட்டுவிரியன் பாம்பை நான் கண்டேன். பின்னால் அதுவும் கொல்லப்பட்டது.

20-உ, மாமிச உணவு சமைக்கும் கைதி கிருஷ்ணன் நாயர் ஒரு நல்லபாம்பைக் கொன்று பாதி உயிருடன் சூப்பி ரண்டிடம் கொண்டுபோனுன்.

21-உ, கடலூரிலிருந்து வந்திருந்த சத்தியாக்கிரகி ஸ்ரீ. சின்னசாமி ரெட்டியார் தம்முடைய படுக்கையைப் பிரித்தார். உள்ளேயிருந்து ஒரு பச்சைப் பாம்பு கிளம்பியது. ஸ்ரீ. சின்னசாமி ரெட்டியார் அஹிம்சையைக் கைவிட்டுப் பாம்பை எமனுலகுக்கு அனுப்பினுர்.

26-உ ராஜாஜி பாரதி பாட்டுக்களைக் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தார். சாயங்காலம் ஆறு மணி. கட்டுவிரியன் குட்டி ஒன்று பாரதியார் பாட்டின் சுவையை அநுபவிக்க வந்தது. 'பாட்டின் பெருமையைப் பாம்பறியும்' என்று பாரதியாரே சொல்லியிருக்கிருர் அல்லவா? ஆனுல், டாக்டர் சுப்பராயன் அதை அநுபவிக்க விடவில்லை. பூட்ஸ் காலால் அதை நசுக்கிவிட்டார். ஸ்ரீ. முனிசாமி பிள்ளை இவ்விஷயத்தில் டாக்டருக்கு உதவி செய்தார்.

30-உயன்று, அதற்கு மறுநாள் விடுதலையாகும் ஸ்ரீ. கே. வெங்கடசாமி நாயுடுவுக்கு ஒரு பிரிவுபசாரம் செய்தார்கள். பழக் கூடையைத் திறந்தபொழுது ஒரு பாம்பு 'புஸ்'ஸென்று தலையை நீட்டியது. ஸ்ரீ. டி. ராமலிங்க ரெட்டியார் அதை எமனுலகத்திற்கு அனுப்பிவிட்டார்.

இச் சம்பவங்கள் ஏப்ரல் மாதத்தில் நிகழ்ந்தவை. அத்தனை பாம்புகளையும் நான் நேரில் பார்த்திருக்கிறேன். நான் பார்க்காத பாம்புகளைப் பற்றி இங்கே நான் சொல்லவில்லை.

வெறுங் காவல் தண்டனை அடைந்தவர்களுக்குத் தண்டனை வஜா கிடையாது. மூன்று மாதங்களுக்குக் குறைவாகக் கடின காவல் தண்டனை அடைந்தவர்களுக்கும் வஜா கிடையாது. அதிகாரிகள் விரும்பினுல் இவர்களுக்குப் பிரத்தியேகமாக வஜா கொடுக்கலாம்.

மூன்று மாதமும் அதற்கு மேலும் கடினகாவல் அடைந்தவர்களுக்கு சூப்பிரண்டு வஜா கொடுத்தாக வேண்டும். மிகவும் நல்ல நடத்தைக்கும், ஜெயில் விதிப்படி ஒழுங்காக நடந்துகொள்வதற்கும் இரண்டு நாள், சுறுசுறுப்புக்கும், கொடுத்த வேலையைத் திறம்படச் செய்ததற்கும் இரண்டு நாள் - ஆக நான்கு நாட்கள் ஒரு மாதத்திற்குத் தள்ளுபடி உண்டு.

கைதிகள் பாஷையிலே தண்டனை வஜாவை 'மார்க்' என்று சொல்லுகிறார்கள். 'நல்லா மார்க் கிடைத்தால் சீக்கிரம் போயிடலாம்!' என்று அவர்கள் சொல்லிக்கொள்வார்கள். சாதாரணமாகக் கொடுக்கும் மார்க்கைக் கைதிகள் 'ராணி மார்க்' என்று சொல்லுகிறார்கள். விக்டோரியா ராணி காலத்தில் ஜெயில் விதிகள் சீர்திருத்தப்பட்டதால் இதற்கு ராணி மார்க் என்று பெயர் வந்துவிட்டது.

ஜெயிலை விட்டு வெளியே போய் அங்குள்ள வேலைகளைச் செய்தால், மாதம் ஒரு நாள் வெளி 'மார்க்' கிடைக்கும்.

இந்த வஜாவைத் தவிர பிரத்தியேகமாக ஜெயில் சூப்பிரண்டு ஒரு வருஷத்திற்கு 30 நாட்களும், இன்ஸ்பெக்டர் ஜெனரல் 60 நாட்களும் கொடுப்பதற்கு அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். அரசாங்கத்தின் அனுமதி யில்லாமல் ஒரு கைதியின் தண்டனைக் காலத்தில் நாலில் ஒரு பங்குக்கு மேல் ஜெயில் அதிகாரிகள் வஜா செய்ய முடியாது.

சென்னை நகருக்கும், ஜெயில்கள் இருக்கும் ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஆலோசனை போர்டு ஒன்றை அரசாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். சிறைச்சாலைகளின் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தலைவர். ஜெயில் இருக்கும் ஜில்லாவிலுள்ள ஜில்லா ஜட்ஜ், அரசாங்கத்தாரால் நியமிக்கப் பெற்ற ஓர் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினர் — இவர்களைக் கொண்டது அந்த போர்டு. தண்டனைக் காலத்தில் மூன்றில்

இரண்டு பங்கு அநுபவித்துவிட்ட கைதிகளைத் தண்டனைக் காலம் முடிவடைவதற்கு முன்பே விட்டுவிடுவதற்கு இந்த போர்டார் அரசாங்கத்தாருக்குச் சிபாரிசு செய்யலாம்.

இந்தச் சலுகை நீண்டகாலத் தண்டனை கொடுக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வதற்காகத்தான் இருக்கிறது. இந்த போர்டு மூன்று மாதத்திற்கு ஒரு முறையாவது கூடவேண்டும். இந்த போர்டைக் கைதிகள் 'முக்கால் போர்டு' என்று எதற்காகச் சொல்லுகிறார்கள் என்று எனக்கு விளங்கவில்லை. ஒருவேளை, தங்களுடைய தண்டனையில் முக்கால் பாகம் அநுபவித்துவிட்டால், இந்த போர்டு உதவிக்கு வரும் என்று எதிர்பார்க்கிறார்கள் போலும்!

விஷ ஜந்துக்கள் மிகுந்தது திருச்சிராப்பள்ளி ஜெயில். தேள் வரும். வெளியிலே பார்த்திராத விதவிதமான பூச்சிகள் வரும், நட்டுவக்காலி பூரான்கள் ஏராளம். பெயர் தெரியாத ஜந்துக்கள், ஜல மண்டலிகள் பார்த்தவிடமெல்லாம் காட்சியளிக்கும். ஒரு பிளாக்கில் ஜல மண்டலிகள் வந்துகொண்டேயிருந்ததால் அதற்கு 'ஜல மண்டலி பிளாக்' என்றே பெயர் வைத்துவிட்டோம். பாம்புகளைப் பற்றியோ சொல்லத் தேவையில்லை.

விஷ ஜந்துக்களைக் கொல்லும் கைதிக்கு அதிகாரிகள் தண்டனை வஜா செய்து கொடுப்பதுண்டு. விஷத் தேள்கூட மூன்று நான்கு நாள் 'மார்க்' கொடுப்பதற்கு உதவி செய்யும். மார்ச் மாதம் ஒரு கட்டுவிரியன் பாம்பை அடித்ததற்காக அரியலூர் அஸெம்பிளி அங்கத்தினர் ஸ்ரீ. வி. வெங்கடாசலம் பிள்ளைக்கு 10 நாள் வஜா கொடுத்தார்கள்.

ஸ்ரீ. வெங்கடாசலம் பிள்ளை தம்முடைய ஆரோக்கியம் அவ்வளவு செவ்வையாக இல்லாமலிருந்தும் எங்களுக்குப் பரிமாறிக்கொண்டிருந்தார். உப்பாவது நெய்யாவதுதான் பரிமாறுவார். அவர் அடக்கமுள்ள மனிதர். 36 வயதி

லேயே, எந்தவிதமான சிந்தனைகளினால் அவர் தலை இவ்வளவு வழுக்கையாகிவிட்ட தென்பதை என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை. அவர், ஆறு மாதம் சிறைவாசம் செய்த பிறகு மேமீ 1-உ விடுதலையடைந்தார். அவர் கட்டு விரியன் பாம்பை அடித்திராவிட்டால் மேமீ 11-உ வரை விடுதலைக்குக் காத்திருக்க நேர்ந்திருக்கும்.

அவரைத் தண்டித்த அரியலூர் மாஜிஸ்டிரேட்தான் ஸ்ரீ. ஷண்முகசுந்தர முதலியாரையும், ஸ்ரீ. முத்துக் குமாரசாமியையும் தண்டித்தார். ஸ்ரீ. வெங்கடாசலம் பிள்ளைக்கு ஆறு மாதம். ஸ்ரீ. ஷண்முகசுந்தர முதலியாருக்கு ஆறு வாரமும் ரூ. 100 அபராதமும். யாரும் பிரியப்படும் இனிய குணங்கள் நிறைந்த ஸ்ரீ. முத்துக்குமாரசாமிக்கு ஒரு வருஷம். தண்டனை கொடுப்பதில் தாரதம்மியம் இருக்கிறது. ஒரே குற்றம்; ஆனால் பல விதமான தண்டனைகள். இது தான் சத்தியாக்கிரகத்தின் தனிப்பெருங் குணம் போலும்!

பாம்பு, பூரான், நட்டுவக்காலி இவைகளுக்கிடையே நமது சத்தியாக்கிரகிகள் வசித்தார்கள், வசிக்கிறார்கள். ஜெயிலில் பாம்புகள் வரும் செய்தி பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டு மென்று அவசியமில்லை. திருச்சி சத்தியாக்கிரகிகள், செத்த பாம்பை நாலணாவுக்கு வார்டர்களிடமிருந்து விலைக்கு வாங்கி, சூப்பிரண்டிடம் காண்பித்துத் தண்டனை வஜா கேட்கிறார்கள் என்று ஒரு கதை, ஏப்ரல் 17-உ சென்னைத் தமிழ்த் தினசரிப் பத்திரிகை ஒன்றில் வெளியிடப்பட்டிருந்தது. இதற்குப் பிரமாதமான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது. அந்தச் செய்தியை ராஜாஜியிடம் காண்பித்த பொழுது, 'Scandalous' (அவதூறானது) என்று சொன்னார்.

11. எங்கள் 'பிளாக்'

சாயங்காலம் ஆறு மணிக்கு சென்னை சைனாபஜாரில் நீங்கள் நடந்து போயிருக்கிறீர்களா? அங்குள்ளது போலவே அவ்வளவு சத்தம் எங்கள் வார்டில் இருக்கும். சேர்ந்தாற் போல் ஐந்து நிமிஷமாவது ஒருவர் மாறி ஒருவர் பேசாமல் இருக்கமாட்டார்கள். ஒரு வார்டிலுள்ள சுவர்கள் 13 அடி உயரமாவது இருக்கவேண்டு மென்பது ஜெயில் விதி. ஆனால் எங்கள் வார்டுச் சுவர்கள் 11 அடிக்கு மேலில்லை. எங்கள் பேச்சு இந்தச் சுவர்களுக்கு வெளியேயும் ஒலித்துக் கொண்டே யிருக்கும்.

வேலூரிலிருந்து திருச்சி ஜெயிலுக்கு வந்ததும் சுமார் 40 பேர்களை இந்த வார்டில் போட்டுவிட்டார்கள். ஒரே நீளமான வார்டு — 196½ அடி நீளம், 12 அடி அகலம். ஏதா வது திட்டம் போட்டுக் கட்டின கட்டடமாக இது தோன்ற வில்லை. செங்கலும் சுண்ணாம்பும் இருக்கும் அளவுக்குக் கட் டிக்கொண்டே போய் நிறுத்திவிட்டார்கள் என்று தோன்று கிறது. சில வார்டுகளில் ஓரிடத்தில் உயரமாகவும் இன்னோ ரிடத்தில் தணிவாகவும் இருக்கும்.

இவ்வளவு நீளமான பிளாக்குகளுக்கு ஒவ்வொரு பக் கமும் ஆறு சிறிய ஜன்னல்கள் உண்டு. அவைகளுக்குக் கதவுகளும் இல்லை. மேலே மங்களூர் ஓடுகள். எங்கள் வார் டுக்கு இரண்டே வாசல்கள். இரவு ஏழு மணிக்கு 'லாக்-அப்' ஆனால் காலை 5½ மணிக்குத்தான் திறந்து விடுவார்கள். அதி காலையில் எழுந்து படுக்கையிலே உட்கார்ந்திருப்போம். ஆனால் 5½ மணிக்குத்தான் கதவு திறக்கப்படும்.

இரவு நேரத்தில் அரசியல் கைதிகளுக்குத் துணையாக ஆயிரக் கணக்கான கொசுக்களும் இருக்கும். இந்தக் கொசுக்க

ளூடன் போராடும் 'சூ' 'சோ' என்ற சத்தம் ஒரு புறம். கொசுக்களைக் கையால் தட்டிக் கொல்லும் சத்தம் மற்றொரு புறம். காலையில், ஒவ்வொருவரும், தூங்குவதற்கு அவரவர் எவ்வளவு பிரயத்தனப்பட்டனர் என்றும், அது எப்படி வீணு யிற்று என்றும் கதை கதையாகச் சொல்லுவர். நாங்கள் எல்லோரும் கொசுவலைகள் வரவழைத்து வைத்துக்கொள்ள லாம் என்றாலும், ஜெயில் அதிகாரிகள் அநுமதித்து அவை கள் வருவதற்கு முன் பல நாட்கள் சென்றுவிட்டன. எனக் குக் கொசுவலை வந்து சேரும் பொழுது கொசு ஒன்றுகூட இல்லை.

பனியுடன் கொசுவும் பறந்து போயிற்று. கொசு உபத் திரவம் நீங்கிய பிறகு மூட்டை உபத்திரவம் ஆரம்ப மாயிற்று. பல நாள் இரவெல்லாம் மூட்டை வேட்டையாட வேண்டியதாயிற்று. பின்னால், பாம்புகள் வர ஆரம்பித் தன. இவைகளை நாங்கள் அடியோடு ஒழிப்பதற்கில்லை.

எங்கள் வார்டுக்குள்ளே நாற்பது சத்தியாக்கிரகிகள் இருந்தார்கள். எந்த நேரத்திலும் பத்து அல்லது பதி னைந்து தவளைகளாவது உள்ளே யிருக்கும். எறும்புகளும் ஏராளம். ஏழெட்டுப் பானைகளில் தண்ணீர் விட்டு வைத் திருக்கும். முப்பது முப்பத்தைந்து கட்டில்கள் குறுக் கும் நெடுக்குமாகப் போடப்பட்டிருக்கும். கட்டில்களைவிட அதிகமான பெட்டிகள், பழக் கூடைகள் அடுக்கியிருக்கும். கீழேயெல்லாம் மெத்தை, பாய், அல்லது கோணிப் பாய் விரித்துக் கிடக்கும். நிமிர்ந்து பார்த்தால் எங்கு பார்த்தா லும் கயிற்றுக் கொடிகள் கட்டியிருக்கும். நாற்பது பேர் களைக் கொண்டு ஆரம்பித்த இந்த வார்டில் நான் விடுதலை யடைந்த அன்று சுமார் பதினைந்து பேர்தான் இருந்தனர்.

ஒருவரைப் பற்றி நாம் வைத்திருக்கும் அபிப்பிராயம் நெருங்கிப் பழகும் பொழுது மாறலாம். இந்த அநுபவம்

சிறை வாழ்க்கையில் ஒரு தனி அம்சம். சிறையைப் போல் வேறு எந்த இடத்திலும் நாம் மற்றவர்களுடன் 24 மணி நேரமும் இடைவிடாமல் இருந்து தீரவேண்டிய நிர்ப்பந்தம் கிடையாது. ஆப்த நண்பர்களிடம்கூட ஒருவேளை சலிப்புத் தட்டலாம். சலிப்புக் காரணமாக விரக்தியும் உண்டாகலாம். இந்த விரக்தி நம்மைப் பாதிக்காமல் தடுத்துக்கொள்வது கஷ்டம்.

எங்கள் வார்டில் நாங்கள் ஒரே குடும்பத்தார் போல் பழகினோம், சிரித்தோம், விளையாடினோம், சண்டைகள் போட்டோம். ஒருவரையொருவர் கேலி செய்தோம். உக்கிரத்துடன் வாதாடினோம். ஆனால், கௌரவமாகவே இருந்தோம். ஆறு மாதங்களுக்குப் பின்னால் அங்கிருந்த நண்பர்களிடத்திலெல்லாம் என்னுடைய அன்பு அதிகமாகி யிருக்கிறதே ஒழிய, கொஞ்சமும் குறையவில்லை.

எங்கள் பிளாக்கைப் பற்றி நினைத்தால் என் கண் முன்னால் கம்பீரமாய்க் குதித்து முன்வந்து நிற்கும் உருவம் மட்டப்பாறைச் சிங்கம் ஸ்ரீ. ஆர். எஸ். வெங்கடராமய்யர் தான்.

அவர் தனிக் குணங்கள் படைத்தவர். அவருடைய குணங்களை அவரிடத்தில்தான் பார்க்கலாம். அவர் மாதிரி இன்னொரு மனிதர் தமிழ் நாட்டில் இல்லை யென்பது நிச்சயம். ஒரு தனிப் பாஷை, தனி நடை, தனிப் பார்வை, தனி நடவடிக்கைகள் உடையவர். எல்லாம் அவருக்குத் தனியாகவே இருக்கும்.

தீர்க்கமான முகம். அதைப் பார்த்தால் 'சிங்கம்' என்று நீங்களே சொல்லுவீர்கள். விசாலமான கண்கள்; பொருத்தமான அளவுள்ள மீசைகள்; அவர் அநுபவிக்கும் ஒவ்வோர் உணர்ச்சியும் முகத்திலே முழுதும் பிரதிபலித்துக் காணப்படும்.

கருங்காலப்பட்டி யென்பது மதுரை ஜில்லா மேலூர் தாலுகாவிலே ஒரு கிராமம். அங்கே 1920-ஆம் வருஷம் நடந்த சம்பவம்: ஒரு பொதுக்கூட்டத்தில் மட்டப்பாறை அய்யர் நூல் நூற்பதன் நன்மைகளைப் பற்றிப் பேசினர். கூட்டத்திலுள்ள ஒருவன் எழுந்திருந்து, 'தாங்கள் கொஞ்சம் நூற்றுக் காண்பித்தால் தேவலை' என்று சொன்னன். அங்கே ராட்டை ஒன்று இருந்தது. ஆனல் நமது 'சிங்கம்' தம்முடைய நண்பர் சுந்தரம்பிள்ளை நூற்றுக் காண்பிப்பார் என்று சொல்லிவிட்டு உட்கார்ந்துவிட்டார். ஸ்ரீ. சுந்தரம் பிள்ளை நூற்றுக் காண்பித்தார். 1920-ஆம் வருஷத்திலே ஸ்ரீ. அய்யருக்கு நூற்கத் தெரியாது என்பது என்னவோ உண்மைதான். ஆனல், நான் திருச்சி ஜெயிலிலே இருந்த சுமார் 5 மாதங்களும், இரவு பகலாய் அவர் நூற்றுக்கொண்டேயிருந்தார். காலை 6-மணிக்கு அவரை ராட்டையிலே பார்க்கலாம்; இரவு 10-மணிக்கும் ராட்டையிலே பார்க்கலாம்.

53-வயதான இவர் எதற்காக எப்பொழுதும் நூற்றுக் கொண்டே இருக்கவேண்டும் என்ற கேள்வியைக் கேட்டால், வேலை செய்யாமல் அவருக்கு இருக்க முடியாது என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். ஜெயிலுக்கு வெளியே இருக்கும் பொழுது எப்பொழுதும் ஏதாவது செய்துகொண்டேயிருப்பார். ஜெயிலுக்குள்ளே அத்தனை சக்தியையும் நூற்பதிலேயே செலவழிக்கிருர். நூற்று நூற்று, ஒருநாள் தலை சுற்றிவிட்டது. என்றாலும், நூற்பதை விடவில்லை அந்த மகா பிடிவாதம் பிடித்த மனிதர்!

பிராமண சமூகத்தில் இவ்வளவு தைரியமும் தீரமும் உள்ள ஒருவரை நான் பார்த்ததில்லை. பழமையில் கௌரவம் இருக்கிறது என்ற நம்பிக்கையுள்ள இவர், புதுமையிலும் பிரியம் கொள்ளுகிருர். அரசியலிலிருந்து சீக்கிரம் விலகிவிடவேண்டுமென்று அபிப்பிராயம் கொண்டிருக்கிருர்.



பி. எஸ். குமாரசாமி ராஜா,
எம். எல். ஸி.



ஆக்கூர் அனந்தாசாரியார்

ஆனல், இவர் இல்லாமல் தமிழ் நாட்டு அரசியல் பூர்த்தியாகாது. மட்டப்பாறை அய்யருக்கு ஓய்வு வேண்டிய அவசியமே இல்லே. நிஷ்களங்கமான அவருடைய உள்ளமும், மனேதிடமும், நெஞ்சழுத்தமும், ஏழைக்கிரங்கும் பெருந்தன்மையும் அரசியலில் அவசியம் தேவை.

பூசப்பாடி சஞ்சீவி ராஜா குமாரசாமி ராஜா எங்களுடன் ஒன்ருக இருந்துவந்தவர்களில் ஒருவர். அவர் யாரென்று திகைக்க வேண்டாம். ராமநாதபுரம் ஜில்லா போர்டுத் தலேவரா யிருந்த ஸ்ரீ. பி. எஸ். குமாரசாமி ராஜா தான் அவர். ஊர் ராஜபாளேயம். இந்த மனிதருக்குத்தான் எவ்வளவு ஞாபக சக்தி? 'ராஜம்பேட்டையில் யார் ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட்? அவருக்கு வயதென்ன? அவர் சம்பளம் என்ன? 1926-ஆம் வருஷம் சென்னேச் சட்ட சபையில் எத்தனே அங்கத்தினர்கள்? சர்வ கலாசாலேத் தமிழ்ப் பகுதியில் எத்தனே பேர் வேலே பார்க்கிருர்கள்? இப்பொழு திருக்கும் சென்னே அரசாங்க ஆலோசனேயாளர்கள் தாங்கள் வேலே ஏற்றதிலிருந்து என்னென்ன வேலேகள் செய்திருக்கிருர்கள்? காங்கிரஸ் பதவியேற்றதிலிருந்து ஹிந்து மத பரிபாலன போர்டில் யார் யாருக்கு என்னென்ன சம்பளத்தில் வேலே கொடுத்திருக்கிருர்கள்? பெல்லாரி, திருச்சியைப் பார்க்கிலும் உஷ்ணம் ஜாஸ்தியா, குறைவா?' இத்தகைய கேள்விகளேக் கேட்டு, உடனே யாராவது அத்தனேக்கும் பதில் சொல்ல முடியுமானுல், அது நமது குமாரசாமி ராஜாவால்தான் முடியும். நுணுக்கமான விஷயங்களே அவர் அவ்வளவு கவனமாக அறிந்து ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருக்கிருர்.

தமது ஜில்லா போர்டு நிர்வாகத்திலே எந்தவிதமான சிபார்சுக்கும் செவிசாய்க்க மாட்டார். ஆனுல் நியாயமாக விவாதம் செய்பவர்களிடம் அவருக்கு மரியாதை உண்டு.

அவர்கள் சொற்படி நடப்பார். முறை தவறிப் போனால், மாகாண காங்கிரஸ் கமிட்டியையும் மந்திரிகளையும்கூட அவர் எதிர்த்துப் போராடத் தயங்கமாட்டார். யாரானாலும் குற்றம் செய்தால் விடமாட்டார்.

வேளா வேளைக்குக் காரியங்களைச் செய்து முடிப்பதில் அவருக்கு நிகரானவர் திருச்சி ஜெயிலில் ஒருவரும் இல்லை. கொஞ்சமும் சலிப்பில்லாதவர். 'கீழிருந்து மேல்வரை எல்லாக் கமிட்டிகளிலும் இவர் இருக்கிறாரே!' என்று தமிழ் நாட்டில் சிலர் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். ஜெயிலில் அவருடன் நெருங்கிப் பழகியதிலிருந்து அவர் ஒவ்வொரு கமிட்டியிலும் இருக்கக் கிடைப்பது பெரும் பாக்கியம் என்று உணர்ந்தேன்.

ஆந்திர தேசத்தில் ஒரு முறை ஒரு கூட்டத்திற்குப் போயிருந்த பொழுது, பெயரைக் கேட்டும், ஆளைப் பார்த்தும், அவரை ஒரு நிஜ 'ராஜா' என்றே தீர்மானித்துவிட்டார்கள். இல்லை யென்று அவர் சொன்ன பிறகு, சில பேர்கள் மட்டுமே நம்பினார்களாம். பார்ப்பதற்கும் அப்படி ராஜாவாகவே அவர் இருப்பார்.

நாணயம், பொறுப்பு, கண்யம் — இவைகளுக்கு இருப்பிடம் ஸ்ரீ. ராஜா. சதா அரசியல் பிரச்னைகளையே அலசிக் கொண்டிருப்பார். ஒரு காரியத்தை அவர் செய்வதாக ஒப்புக்கொண்டால் நாம் சும்மா தூங்கலாம். அவர் செய்தே முடிப்பார்.

கோயம்புத்தூர் ஜில்லா போர்டுத் தலைவர் ஸ்ரீ. வி. கே. பழநிசாமி கவுண்டரும் எங்களுடன்தான் இருந்தார். அவர் மிகவும் அடக்கமான மனிதர். அனாவசியமாக ஒரு வார்த்தைகூடப் பேசமாட்டார். இவ்வளவு பெரிய ஜில்லாவுக்குத் தலைவராக இருந்த அவருக்கு ஆறு மாதந்தான் கொடுத்தனுப்பினார்கள் என்றால், எவ்வளவு அடக்கம் என்பது தெரி

யும். அவர் எப்பொழுதும் புஸ்தகம் படிப்பார், பத்திரிகை படிப்பார், அல்லது நூற்றுக்கொண்டிருப்பார். இதைத் தவிர வேறு ஒன்றும் செய்வதை நான் பார்த்ததில்லை. நாங்கள் சீட்டாடுவதில்கூட அவர் ஒரு நாளும் சேர்ந்ததில்லை. சீட்டே ஆடத் தெரியாதாம்!

'செம்மேடு' ஸ்ரீ. வி. ஸி. பழநிசாமி கவுண்டரைப் பற்றி நான் நினைக்கும் பொழுது, என்னையும் மீறி அன்பும் ஆனந்தமும் ஏற்படுகின்றன. தலைப்பாகையுடனும், பெரிய மீசைகளுடனும், அவரைச் சட்டசபையில் சந்திக்கும்பொழுதெல்லாம், அவர் ஒரு 'பெரிய' ஆசாமியாக இருக்கவேண்டுமென்று நான் எண்ணியதுண்டு. ஆனால் சிறையில் மீசையில்லை, தலைப்பாகை யில்லை, 'பெரிய' ஆசாமியும் இல்லை. பால் போன்ற உள்ளம். குழந்தை போன்ற வார்த்தைகள். சிரித்துக்கொண்டே அவர் பேசும் பொழுது, அவரிடத்தில் நாம் அன்பு வைத்துத்தான் ஆகவேண்டும். ஜெயிலுக்குள், ஜெயிலை மறந்து ஒருவர் இருந்தார் என்றால், அவர் இவர் தான்.

எங்கள் பிளாக்கில் மாத்திரம் அல்லாமல் எங்கள் ஜெயிலிலேயே அதிக உயரமா யிருந்தவர் யாரென்றால் அகத்தாபட்டி ஸ்ரீ. ஏ. கே. ஏ. ராமசந்திர ரெட்டியார்தான். ஒரு நாள் ஸ்ரீ. பி. கோபால் ரெட்டி தாமே அதிக உயரமானவர் என்றார். இரண்டு ரெட்டியார்களையும் சுவர் ஓரம் நிறுத்திப் பார்த்தோம். ஸ்ரீ. கோபால் ரெட்டி தோல்வியை ஒப்புக்கொண்டார். ஸ்ரீ. ராமசந்திர ரெட்டியார் உயரமான மனிதர். நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் உடையவர். கடவுளுக்கும் பயப்படாத மனிதர். அவர் ஒன்று சொன்னால் சொன்ன படியே நடப்பார்.

ஆயக்குடி ஸ்ரீ. பாலகிருஷ்ணன் எனக்கு அடுத்தாற் போல் சில மாதங்கள் இருந்தார். ஹரிஜன சகோதரர்களுக்

குள்ளே இவ்வளவு தாராளத்தன்மையுடையவரை நான் பார்த்ததில்லை. அடுத்தாற்போலிருந்த மோஹனூர் ஸ்ரீ. பெரியசாமி ஹிந்தி படித்துக்கொண்டே இருந்தார். ஸ்ரீ. ஆர். எஸ். மாணிக்கம் எப்பொழுதும் யார் யார் எப்படி யிருக்கிறார்கள், என்னென்ன செய்கிறார்கள், ஹரிஜனங்கள் சரியாகக் கவனிக்கப்படுகிறார்களா என்பதையெல்லாம் கவனித்துக் கொண்டே யிருந்தார்.

ஸ்ரீ. ஆக்கூர் அனந்தாச்சாரியைப் பற்றி அநேகர் கேள்விப்பட் டிருப்பார்கள். இவரிடத்தில் எனக்கு அலாதியான அன்பு உண்டு. அதோடு பயமும் உண்டு. பயம் ஏனென்றால், இவர் மிகக் கண்டிப்பான 'வாத்தியார்'. இவரிடம் ஹிந்தி கற்க வேணுமானால், நாம் 30, 40 வயதானவர்களாயிருந்தாலும், மறுபடி ஐந்து வயதுக் குழந்தை போல் ஆகிவிடவேண்டும். முன்னால் படித்த பாடங்களை ஒழுங்காக ஒப்பிக்கவேண்டும்; புதுப் பாடங்கள் சொல்லும் பொழுது, வளையில் போகும் எலியின் வாலைப் பார்த்துக்கொண்டிராமல், பக்தி சிரத்தையுடன் கேட்கவேண்டும். பாட விஷயத்தில் இவர் தாட்சண்யமே இல்லாதவர். ஒழுங்காய் ஹிந்தி கற்க வேணுமானால் இவரிடம்தான் கற்கவேண்டும் என்பதை நான் சிறையில் அறிந்துகொண்டேன்.

எங்கள் பிளாக்கிலே பாதிப் பாகத்தில் ஆந்திர சத்தியாக்கிரகிகள் இருந்தார்கள். மேலக் கோதாவரி ஜில்லா போர்டுத் தலைவர் டாக்டர் எம். ரங்கய்யா, குண்டூர் ஜில்லா போர்டுத் தலைவர் ஸ்ரீ. சந்திர மவுலி முதலிய ஆந்திர நண்பர்களை நான் மறக்கவே முடியாது. நண்பர்களை மட்டுமா? சிறிது காலம் தங்கியிருந்த அந்த பிளாக்கைக்கூட என்னால் இன்னும் மறக்க முடியவில்லை!

12. 'நப்போல் வளை'

சின்ன வயதில் 'நப்போல் வளை' என்று ஏதோ படித்தது ஞாபகமிருக்கிறது. ஆனால் அப்போது அதற்கு என்ன அர்த்தம் எங்கள் உபாத்தியாயர் சொல்லிக்கொடுத்தாரோ ஞாபகமில்லை. ஆனால், சிறையிலே நான் காலையில் விழித்து எழுந்திருக்கும் போது பலர் தங்கள் தேகத்தை 'ந'விலிருக்கும் மடக்குகளைவிட அதிகமாக மடக்கியும், நீட்டியும் தேகப்பயிற்சி செய்வதை நான் பார்த்தேன்.

'நப்போல் வளை' என்றால் இதுதான் போலிருக்கிறது!

ஜெயிலில் நடக்கும் தேகப்பயிற்சி பலவிதம். சிறையைச் சுற்றிச் சுற்றி ஓட்டம், உல்லாச நடை - இப்படிக் காலை மாலை தேகப்பயிற்சி செய்வது ஒரு புறம். கௌபீனதாரிகளாய் யோகாசனங்கள் செய்வது ஒரு புறம்.

காலையிலே தளர்ந்த நடை நடந்து ஜெயிலைச் சுற்றி வருபவர்களில் ஒருவர் வடசேரி ஸ்ரீ. பொன்னம்பலக் கவுண்டர். ஜெயில் திருச்சி ஜில்லாவிலேயே இருப்பதினாலோ என்னவோ கொஞ்சம் தாமதமாகவே இவர் சத்தியாக்கிரகம் செய்தார். இவர் மிருதுவான குணமுடையவர். நடவடிக்கைகள் எல்லாம் அப்படியே. வட ஆற்காடு ஜில்லா போர்டுத் தலைவர் ஸ்ரீ. பெருமாள்சாமி செட்டியாரிடம், ஒரு ஜில்லா போர்டுத் தலைவர் மோட்டார் கார் இல்லாமல் நிர்வாகம் செய்ய முடியுமா என்று கேட்டேன். 'முடியாது, கண்டிப்பாய் முடியாது!' என்று அவர் சொன்னார். ஸ்ரீ. குமாரசாமி ராஜாவைக் கேட்டேன். அவரும் முடியாது என்று சொன்னார். ஒரு ஜில்லா போர்டுத் தலைவராவது

முடியும் என்று சொல்ல முடியவில்லை. அப்பேர்ப்பட்ட முடியாத காரியத்தை, சுமார் இரண்டரை வருஷம் தலைவரா யிருந்து செய்தவர் நமது கவுண்டர். ஆகவே, எனக்கு அவர் மீது அபாரமான பிரியம். காலையிலும் மாலையிலும் அவர் நடந்து வரும்பொழுது எனக்கு அவருடைய இந்தச் சாமர்த் தியம்தான் ஞாபகத்துக்கு வரும். . . . .

இந்தியா படத்தை எடுத்துப் பார்த்தால் மைசூருக்குக் கிழக்கே சின்னஞ் சிறு தேசம் ஒன்று ஒட்டிவைத்த மாதிரி இருக்கும். அதுதான் குடகு மாகாணம். அது சுமார் 1250 சதுர மைல் விஸ்தீரணமுள்ளது. நேராக ஒரு சீப்-கமிஷனர் மூலம் இந்தியா கவர்ண்மெண்டால் ஆட்சி செய்யப்படுகின் றது. அது மலைப்பாங்கான பிரதேசம். அங்கே கிடைக்கும் பொருள்கள் ஆரஞ்சுப் பழம், காப்பிக் கொட்டை, ஏலம், கொஞ்சம் தேசபக்தர்கள். அங்கிருந்து ஐந்து பேர் திருச்சி சிறைக்கு வந்திருந்தனர். அவர்களில் நால்வர் சட்டசபை அங்கத்தினர். இந்த மாகாணத்திற்கு ஒரு குட்டிச் சட்ட சபை உண்டு. அதில் இருபது அங்கத்தினர்கள். இருபதில், பதின்மூன்று பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். பாக்கிப் பேர்கள் உத்தியோகஸ்தர்கள்.

97, 98, 99-ஆம் நம்பர்களுள்ள மூன்று குடகுக் கைதி களும் காலை ஐந்து மணிக்கு ஜெயிலைச் சுற்றி நடந்துகொண் டிருப்பார்கள். இவர்களில் ஸ்ரீ. காரியப்பா எப்பொழுதும் பேசிக்கொண்டே யிருப்பார். இவரும் மற்ற இரு நண்பர் களும் சேர்ந்து குடகுக்கு ஒரு தனித் திட்டம் தயாரித் திருக்கிறார்களாம். ஸ்ரீ. பெலியப்பா இந்தக் குடகு ஜில்லா போர்டுக்குத் தலைவர். அவர் மிகவும் கெட்டிக்காரர். ஸ்ரீ. கரும்பையாவும் குடகு தேசத்தில் மதிப்புவாய்ந்த தலைவர். இவர்கள் மூவரும் இரண்டே காரியங்கள்தான் செய்துகொண்டிருப்பார்கள். ஒன்று, நூல் நூற்றுக்கொண்

டிருப்பார்கள், அல்லது குடகைத் தனி மாகாணமாக்கி அதற்கு ஒரு மந்திரி சபை அமைக்கவேண்டும் என்று ஒவ்வொருவரிடத்திலும் சொல்லிக்கொண்டிருப்பார்கள்.

குடகு தனி மாகாணமாக இருக்கக்கூடாது, அதைச் சென்னை மாகாணத்துடன் சேர்த்துவிட வேண்டுமென்று விரும்புகிறார்கள் ஸ்ரீ. கே. எம். தேவய்யாவும், ஸ்ரீ. ஸி. எம் பூனச்சாவும். (இவர்கள் நம்பர்கள் 100, 101.) 'இந்த வயது சென்ற பெரியவர்கள் மந்திரிக ளாகவேண்டு மென்றுதான் தனி மாகாணம் கேட்கிறார்கள் என்று நாங்கள் குற்றம் சாட்டவில்லை; ஆனால் இவ்வளவு சின்னப் பிரதேசத்தைத் தனி மாகாணமாக்கிப் பணத்திற்குக் கஷ்டப்பட்டுக் குட்டிச் சுவராவதைப் பார்க்கிலும், சென்னை மாகாணத்துடன் சேர்ந்து கொள்ளலாம் என்றுதான் சொல்லுகிறேன்' என்று கூறு வார் ஸ்ரீ தேவய்யா. உண்மைதான். அந்தப் பிரதேசத்தில் யார் வேண்டுமானாலும் லைசென்ஸ் இல்லாமல் துப்பாக்கி வைத்துக்கொள்ளலாம். இந்த ஒரு சலுகைக்காகத் தனி மாகாணமாக இருக்கவேண்டு மென்று அபிப்பிராயப்படுவது உசிதமா? லட்சத்திற்குக் குறைவான ஜனத்தொகையுள்ள ஓரிடத்திற்குத் தனி மந்திரிகளும் வேண்டுமா?

இந்த விவாதம் எப்படி யிருந்தாலும் சீக்கிரம் கல்யா ணம் செய்துகொள்ளவேண்டு மென்று ஸ்ரீ. பூனச்சா ஏப்ரல் மாதத்திலேயே விடுதலையாகிப் போய்விட்டார். ஸ்ரீ.தேவய்யா மே மீ 17-உ விடுதலையானார். தனி மாகாண ஆசாமிகள் மூவ ரும் மேமீ 18உ விடுதலையானார்கள்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மாஜித் தலைவர் ஓமந்தூர் ஸ்ரீ. ராமசாமி ரெட்டியாரும் காலையில் உலாவுபவர்களில் ஒரு வர். உலகத்தின்மீதே ஒரு வெறுப்புத் தட்டியவர் போல் இவர் தோன்றுவார். ஜெயிலுக்குள்ளே யாராவது அந்நிய நாட்டு பிஸ்கோத்து வரவழைத்தால் இவர் ஒரு பெருமூச்சு விடு

வார். ஓவல்டின்னைக் கண்டால் பயந்து ஓடுவார். ஜெயிலில் காலையில் 'பன்' ரொட்டியைச் சாப்பிடுபவர்களைப் பார்த்து, 'அந்த ரொட்டியின் மேல் பளபளப்புக்காக முட்டை தடவு கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?' என்று ஒரு நாள் ஒரு போடு போட்டார். அவ்வளவுதான், சிலர் 'பன்' சாப்பிடுவதையே விட்டுவிட்டார்கள்.

'விதேசி சாமான்கள் யார் யார் வரவழைக்கிறார்கள் என்று ஒரு ஜாபிதா தயார் செய்யவேண்டும். இந்த அநியா யம் எங்காவது உண்டா?' என்று இவர் காட்டமாகப் பேசு வார். விதேசி சாமான்கள் வாங்குபவர்களை அலட்சியமாகப் பார்ப்பார். இவருக்கு 46 வயது ஆகிறது. ஆயினும் கோபம் அதிகமுடையவர். இவர் பதவிகளில் கொஞ்சமும் ஆசை இல்லாத உத்தமர். வேண்டுமென்றால் இவர் தென் ஆர்க் காடு ஜில்லா போர்டுக்குத் தலைவரா யிருக்கலாம். குற்ற மற்ற சீலமுடைய இவருக்கு, பிடிவாதத்திற்குப் பதில் தைரியம் அதிகமா யிருந்தால் இன்னும் செல்வாக்குடன் பிரகாசிப்பார்.

விவசாயிகள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே யிருக்கும் அசல் விவசாயி இவர். நிலத்திற்கு என்னென்ன உரம் போடவேண்டும், எப்படி உழவேண்டும் என்று ஸ்ரீ. ரெட்டியாரைக் கேட்டால்தான் தெரியும். விவசாயிகள் விஷ யத்தில் இவ்வளவு அன்பு வைத்திருப்பதனால்தான், ஸ்ரீ. ரெட்டியார் காங்கிரஸில் சந்தேகமில்லாமல் வலது சாரிக் காரரா யிருந்தும் இடது சாரி என்று அரசாங்கத்தார் அபிப் பிராயப்படுவதாக நான் கேள்விப்பட்டேன்.

ஸ்ரீ. ரெட்டியார் 9-நிர் கைதி. தண்டனை ஒரு வருஷம். வெளியே வந்த பின்னும் விவசாயிகளுக்கு நெடு நாள் இவர் வேலை செய்யவேண்டு மென்று நான் விரும்பு கிறேன்.

காலே நேரத்தில் மின்சார வேலி ஓரத்தில் உலாவிக் கொண்டிருப்பார் ஸ்ரீ. எல். கிருஷ்ணசாமி பாரதி. சென்ற சட்ட மறுப்பு இயக்கத்திலே தம் மனைவியுடன் சிறை சென்றவர் இவர். அப்பால் இந்தத் தம்பதிகள் சென்னை அஸெம்பிளியை அலங்கரித்தார்கள். இப்பொழுதும் இரண்டு பேரும் சிறையை அலங்கரிக்க வந்துவிட்டார்கள்.

போன தடவை ஜெயிலில் புகுந்த பொழுது ஸ்ரீ. பாரதி 112 பவுண்டு எடை இருந்தார்; வெளியே வரும்பொழுது 130 பவுண்டு எடை இருந்ததாக என்னிடம் சொன்னார். சாதாரணமாக ஜெயிலில் எடை கூடுவதென்றால் அதற்கு ஒரு தனி மனப்பான்மை வேண்டும். எல்லோருக்கும் அந்த மனப்பான்மை வருவது கஷ்டம். ஸ்ரீ. பாரதிக்கு அது உண்டு. ஜெயிலுக்கு வந்ததும் எடை போடுவார்கள். பின்னால் பதினைந்து நாளைக்கு ஒரு முறை எடை போட்டுப் பார்ப்பது வழக்கம். ஒவ்வொரு முறையும் கைதியின் நிறையை ஓர் அட்டையில் குறிப்பிட்டு அடையாளம் செய்வார்கள். எடை கூடக் கூட அடையாளம் மேல் நோக்கிப் போகும்; குறைந்தால் கீழ் நோக்கி வரும். ஸ்ரீ. பாரதியின் அட்டையை நான் ஜெயிலிலிருந்து வரும்பொழுது பார்த்தேன். மேலே இடமில்லை. புது அட்டை ஒன்று சேர்த்து ஒட்டிவைப்பதா என்ற பிரச்னை அதிகாரிகளுக்கு இப்பொழுது முன்னிற்கும்.

1, ஏகப்ப நாயக்கர் தெரு, கொருக்குப்பேட்டை, வண்ணாரப்பேட்டை, சென்னை - என்ற விலாசத்திற்கு நீங்கள் ஒரு கடிதம் எழுதி அனுப்பினால், அதை வாங்குபவர் நமது மாஜி சென்னை உதவி மேயர் ஸ்ரீ. பி. எம். ஆதிகேசவலு நாயக்கர் தான். ஜெயிலிலிருக்கும் பொழுது இவர்தான் சத்தியாக்கிரகிகளுக்கு வரும் கடிதங்களைச் சிறை ஆபீசிலிருந்து வாங்கிக் கொடுத்துக்கொண்டிருந்தார். இதற்காக இவருக்

குப் பதினைந்து நாள் தனியாகத் தண்டனை வஜா கொடுக்கப் பட்டது.

காலையில் 5 மணிக்கு கையில் ஒரு கம்பை வைத்துக் கொண்டிருப்பார். 'என்ன செய்கிறீர்கள்?' என்று கேட்டால், 'பாணா கற்றுக்கொடுக்கிறேன்' என்பார். கஸரத்து செய்வார். இதெல்லாம் செய்த பிறகு, கண்ணாடி முன்னால் உட்கார்ந்து மீசையை அழகுபடுத்திக்கொள்வார். ஸ்ரீ. ஆதிகேசவலுவிடம் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம்; ஒரு சிரிப்புச் சிரிப்பார். திரும்பவும் சொன்னால் இன்னும் உரக்கச் சிரிப்பார். கோபம் என்பதே இவருக்கு வராது. ஜெயில் அதிகாரிகளிடத்தில், முக்கியமாக ஜெயிலரிடம், இவர் ஓர் அளவு கடந்த பிரேமை கொண்டுவிட்டார். எங்களுக்கு வேலை செய்துவந்த கிரிமினல் கைதிகள்கூட ஜெயில் அதிகாரிகளைப் போலவே இவருக்கும் பயப்பட்டார்கள்.

ஏப்ரல் மீ 30-உ இவருக்குப் பிரிவுபசாரம் செய்யும் பொழுது ஸ்ரீ. ராமகிருஷ்ண ராஜு, 'ஸ்ரீ. நாயக்கருடைய சிரிப்பை நாளைமுதல் ஜெயிலில் நாம் கேட்க முடியாது. அது இல்லாமல் ஜெயிலில் நமக்குச் சந்தோஷம் குறைந்துவிடும். இவர் ஏன் சென்னை ரேடியோவிலிருந்து வாரம் ஒருமுறை சிரிக்கக்கூடாது?' என்று கேட்டார்.

எங்கும் எப்பொழுதும், எவர் முன்பும் சிரிப்பார் நமது நாயக்கர். அத்தகைய சிரிப்பு இந்திய அரசியல் வாழ்வுக்கு எவ்வளவு அனுகூலமாக இருக்கிறதென்பது நாயக்கரின் நடவடிக்கைகளைக் கவனித்துக்கொண் டிருந்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். இவர் மே மீ 1-உ விடுதலையானார்.

சிறையில் எத்தனையோ பேர்கள் தேகப்பயிற்சியின் நிமித்தம் ஆசனங்கள் செய்துவந்தார்கள். ஸோஷலிஸ்ட் நண்பர் ஸ்ரீ. பி. ஸ்ரீனிவாச ராவ் நாள்தவறாமல் பலவிதமான ஆசனங்களைச் செவ்வையாகச் செய்துவந்தார்.



எம். ஸி. வீரபாகுப் பிள்ளை,

பி.ஏ., பி.எல்.



டாக்டர் ஆர். நாகண்ண கவுடா,

எம். எஸ். ஸி., பிஎச். டி.

கர்நாடக மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவர் டாக்டர் ஆர். நாகப்ப கௌடாவும் ஆசனங்கள் செய்பவர். இவர் வயது நாற்பத்தாறு!

'டாக்டர்! நீங்கள் எத்தனை வருஷம் அமெரிக்காவில் இருந்தீர்கள்?' என்று கேட்டால், 'அமெரிக்காவில் நான் நாலு வருஷம் பி. எஸ்ஸி. படித்தேன்; அப்பால் எம். எஸ்ஸி. பின்னால் டாக்டர் பட்டம் கிடைத்தது. மொத்தம் ஒன்பதரை வருஷம்' என்பார். 'இந்த ஒன்பதரை வருஷங்களுக்கும் நான் அதிகம் பணம் செலவழித்திருக்க வேண்டுமென்று நினைக்கலாம். ஆனால், நான் படிக்கும் பொழுதே வேலை செய்து சம்பாத்தியமும் செய்தேன். ஆகவே எனக்குப் பணம் ஒன்றும் ஜாஸ்தி செலவாகவில்லை' என்றும் சொல்லுவார்.

அமெரிக்காவில், படிக்கும் பொழுதே வேலையும் செய்யலாம். எவ்வளவு எளியவர்களுக்கும் உயர்ந்த படிப்புப் படிப்பதற்கு இது உதவியாக இருக்கிறது. ஆனால் இங்கிலாந்திலோ அல்லது வேறு எந்த ஐரோப்பிய தேசத்திலோ இப்படிச் செய்வது அனுமதிக்கப்படவில்லை.

பெல்லாரி ஜில்லா போர்டுத் தலைவரான டாக்டர் கௌடா உயரமாக வளர்ந்து மெலிந்த உருவத்துடன் தோன்றுகிறார். இவர் தமாஷாகப் பேசிக்கொண்டிருந்தால் நேரம் போவதே தெரியாது.

சென்னை மாகாணத்திலுள்ள பெல்லாரி ஜில்லாவில் பாதி, தென் கன்னடம் ஜில்லா, தனி மாகாணமான குடகுப் பிரதேசம், மைசூர் சமஸ்தானம் முழுவதும், பம்பாய் மாகாணத்திலுள்ள வட கன்னடம், பீஜப்பூர், தார்வார், பெல்காம் ஆகிய ஜில்லாக்கள் — இவைகள் அனைத்தும் சேர்ந்தது காங்கிரஸ் கர்நாடக மாகாணம். இந்திய அரசாங்கம், சென்னை அரசாங்கம், பம்பாய் அரசாங்கம், மைசூர் சமஸ்தானம்- இவைகளிடமெல்லாம் இடைவிடாது போராடிக்கொண்டிருக்க


வேண்டும் கர்நாடக மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவர். டாக்டர் கௌடா நாலு பக்கங்களுக்கும் பிரயாணம் செய்து தம்முடைய வேலையைச் சிறப்பாகச் செய்துவந்திருக்கிறார்.

அமெரிக்காவில் விவசாயத்திலே பட்டங்கள் பெற்ற இவர், ஜெயிலில் தக்காளிக்காய் போட்டுப் பயிரிட்டுவந்தார். 'நான் போவதற்குள் கொஞ்சம் தக்காளிப் பழங்கள் கொடுப் பீர்களா?' என்று கேட்டேன். 'ஓ! கண்டிப்பாய்த் தரு வேன்!' என்றார். வரும்பொழுது கேட்டேன். செடிகள் சரியாக வளரவில்லை என்கிறார். இவருடைய அமெரிக்கப் படிப்பைக்கூட ஜெயில் மண் ஏமாற்றிவிட்டது. இவர் தலை கீழாக நின்றும் தக்காளிகள் காய்க்கவில்லை!

ஜெயிலில் 'தலைகீழாக' நின்ற இன்னொருவர் திருநெல் வேலி ஜில்லா போர்டுத் தலைவர் ஸ்ரீ. எம். சி. வீரபாகு. அளவுக்கு மிஞ்சி உடம்பு பருத்திருந்ததால், காலையில் ஓடுவ தாகத் தீர்மானித்து, வெகு வேகமாக ஜெயிலில் சுற்றிச் சுற்றி ஓடிவந்தார். தலைகீழாக நின்று ஆசனங்கள் செய்துவந் தார். இந்த முறைகள் இரண்டும் அவருக்கு வெகுவாகப் பயன்பட்டன என்று நினைக்கிறேன்.

ஸ்ரீ. வீரபாகு திருச்சிக்கு வந்ததும் ஒன்று செய்தார். 'இங்கே சாப்பாடு நன்றாக இருக்கிறது. சௌகரியமாக இருக்கிறோம். இந்த நிலைமையில் என்னுடைய எடைகூட அதிகமாகிவிடும்போலிருக்கிறது' என்று நண்பர் ஒருவருக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பிவிட்டார். அந்தக் கடிதத்தி லிருந்து சில பாகங்களைச் சென்னை ஆங்கிலப் பத்திரிகை யொன்றில் பிரசுரித்திருந்தார்கள். ஸ்ரீ. வீரபாகு என்ன எழுதினாலும் எடையில் ரொம்பவும் குறைந்துவிட்டார். ஜெயிலைவிட்டு வரும்பொழுது தம்முடைய அபிப்பிராயத்தை முழுதும் மாற்றிக்கொண்டிருப்பார் என்பதை மாத்திரம் நான் நிச்சயமாகச் சொல்லுவேன்.

'ஙப்போல் வளை' — இதன் அர்த்தம் சத்தியாக்கிரகக் கைதிகளைக் கண்டால் நன்றாக விளங்குகிறது. காலையில் எழுந்ததும் 'ங'வைப் போல் உடம்பை வளைத்து ஆசனங்கள் செய்துகொண்டிருக்கவேண்டும். முதலில் உருவத்தில் 'ங' வைப் போல் ஆகவேண்டும். பிறகு 'ங'வின் குணத்தைப் பெறவேண்டும். 'ங' தன் இன எழுத்துக்களாகிய 'ஙா' 'ஙி' முதலியவையெல்லாம் பயனில்லாமல் தான் மட்டும் நின்று பயன்படுகிறது. பயனில்லை என்பதற்காக மற்ற எழுத்துக்களைத் தள்ளாமல், இன்றுவரை சுற்றத்தாராகிய மற்ற எழுத்துக்களோடு விளங்குகிறது. நம் பாரத தேசம் முழுவதையும் ஒரு குடும்பமாகக் கொண்டு தழுவி அணைக்கும் குணம் பெருகுவதற்காகவே சிறை அன்பர்கள் 'ங'வைப் போல் வளைந்துகொண்டிருந்தார்கள் என்று தோன்றுகிறது.



13. இது திருச்சி !

ஜெயிலில் சந்தோஷமாகக் காலம் கழிக்கலாம் என்று சில நண்பர்கள் சொல்லுகிறார்கள். சிலர் உண்மையாகவே சந்தோஷமில்லாவிட்டாலும் கவலையில்லாமலாவது இருக்கிறார்கள். ஆனால் எனக்கு ஜெயிலில் சந்தோஷம் இருந்ததாகச் சொல்ல முடியாது. தேசத்திற்காகத் தியாகம் செய்யும் ஒருவன் கஷ்டங்களைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளலாம். கஷ்டங்களை எதற்காக அநுபவிக்கிறோம் என்ற நினைவின் காரணமாகச் சந்தோஷத்தை வருவித்துக் கொள்ளலாம். இது இயற்கைச் சந்தோஷமாகாது. உற்சாகத்திற்கு ஜெயிலில் இடமில்லை.

ஆயினும் ஜெயிலில் நான் மெய்மறந்திருந்த நாட்கள் சில உண்டு. இதற்குக் காரணமாயிருந்தது ஜெயில் ரேடியோ.

எங்கள் ஜெயிலில் இரண்டு ரேடியோக்கள் இருந்தன. ஒன்று ஸ்ரீ. நாடிமுத்துப் பிள்ளை வாங்கி வைத்திருந்தது. இது கேம்ப் ஜெயிலில் இருந்தது. மற்றொன்று தூத்துக்குடி ஸ்ரீ. துரைசாமி நாடார் 'கோரங்கி'யில் வைத்திருந்தது.

ஜெயில் ரேடியோவை நினைத்தால் மாஜி பார்லிமெண்டரி காரியதரிசி ஸ்ரீ. என். எஸ். வரதாச்சாரியை நினைக்காமல் இருக்க முடியாது. காலை 5½ மணிக்கு ரேடியோவுடன் இருப்பார். 'ரேடியோவுடன்' என்றால், ரேடியோ வேறு அவர் வேறு என்று பிரிக்க முடியாதபடி ரேடியோ பெட்டியைக் கட்டிக்கொண்டு அதோடு இரண்டறக் கலந்து அவர் உட்கார்ந்திருப்பார். ரேடியோ கேட்பதில் அவருக்கு அவ்வளவு ஆர்வம். இரவு 11 மணி வரை ரேடியோவிலேயே காத்துக்கொண்டிருப்பார்.

ஸ்ரீ. வரதாச்சாரி ரொம்ப நல்ல மனிதர். அவர் சத்தியாக்கிரகம் செய்த பிறகு நடந்த விசாரணையின் போது சென்னை மாஜிஸ்டிரேட், 'உங்களைப் போன தடவை எந்த வகுப்பில் வைத்திருந்தார்கள்?' என்று கேட்டார். வகுப்பைப் பற்றியே கவனிக்காதவர் இவர். 'எந்த வகுப்பு என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. எந்த வகுப்பு வேண்டுமானாலும் கொடுங்கள். நீங்கள் கேட்ட கேள்விக்குப் பதில் தருகிறேன்: என்னை "பி" வகுப்பில் வைத்திருந்தார்கள்' என்று சொன்னார்.

இந்திய சரித்திரத்தில் காந்தி சகாப்தத்திலே தமிழ் நாட்டில் அரிய சேவை செய்துவரும் முதன்மையான தொண்டர்களில் ஸ்ரீ. வரதாச்சாரி ஒருவர். காந்திஜியின் நிர்மாணத் திட்டத்திலும், போர்த் திட்டத்திலும் அன்று முதல் இன்று வரை தீவிரமாக ஈடுபட்டு வந்திருக்கிறார். அவர் ஆங்கிலத்தில் மட்டு மல்லாமல் சமஸ்கிருதத்திலும் வல்லவர். கூர்மையான அறிவுள்ளவர். மற்றும் தேசத் தொண்டுக்கு அவசியமான மன உறுதியும் அவருக்கு அதிகம்.

அவர் சட்டையே அணிவதில்லை. எப்பொழுதும் துருதுருவென்று ஏதாவது செய்துகொண்டிருப்பார். நெடுநாளாக அவர் ராஜாஜியிடம் நெருங்கிய தொடர்புகொண்டிருக்கிறார். சிறையிலும் அடிக்கடி ராஜாஜியுடனேயே இருப்பார். அவருடைய பிளாக்கில் பிரார்த்தனை நடக்கும்பொழுதுகூட அதை விட்டுவிட்டு, ராஜாஜியுடன் பகவத் கீதை படித்துக்கொண்டிருப்பார்.

ஸ்ரீ. வரதாச்சாரி மேமீ 17-உ விடுதலை யடைந்தார்.

எங்கள் ரேடியோவைச் சுற்றி மாலை நேரத்தில் எப்பொழுதும் கூட்டமா யிருக்கும். எவ்வளவு கூட்டமிருந்தாலும் விளையாட்டுக்கள் சம்பந்தமாகச் செய்திகள் சொல்லும்பொழுது அங்கே ஒருவர்கூட இருக்கமாட்டார். எல்லோ

ரும் அவசரமாகப் போய்விடுவார்கள். ஒருநாள் எனது வாலிப நண்பர் ஸ்ரீ. எச். சீதாராம ரெட்டியாரைப் பார்த்து, 'என்ன ஐயா, உங்களுக்குக்கூடவா விளையாட்டுக்களில் பிரியம் இல்லாமல் போய்விட்டது!' என்று நான் கேட்டேன். 'அரசியலில் கலந்த பிறகு எனக்கு கிரிக்கெட் புட்பால் முதலியவைகளில் பிரியம் குறைந்துவிட்டது' என்று அவர் சொன்னார். நமது தேசத்தில் விளையாட்டில் ஜனங்களுக்கு இருக்கும் சிரத்தைக் குறைவு எனக்கு அர்த்தமாவதே இல்லை.

சென்னை மாகாணத்திற்கும் மஹாராஷ்டிரத்திற்கும் நடந்த 'ரஞ்சி கப்' கிரிக்கெட் பந்தயத்தைச் சென்னையில் சேப்பாக்கத்திலிருந்து விளையாட்டு நடக்கும் பொழுதே ஒலி பரப்ப ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த மூன்று நாட்களும் அநுபவித்த சுகம் நான் ஜெயிலில் வேறு நாட்களில் அநுபவிக்கவில்லை. ஆயினும் முதல் நாள் நான் கேட்கப் போன பொழுது, டாக்டர் சுப்பராயனும் நானும்தான் இருந்தோம். இரண்டாவது நாள் கொஞ்சம் கூட்டம். மூன்றாவது நாள்கூடச் சில பேர்கள் வந்து கேட்டார்கள். ஆனால் பொதுவாக விளையாட்டைப் பற்றி இருக்கவேண்டிய உற்சாகமே தென்படவில்லை.

சாயங்கால வேளைகளிலே அலைகளில் மிதந்துவரும் சங்கீதத்தின் இனிமையைக் கேட்டோம், அநுபவித்தோம். சென்ற சட்டமறுப்பு இயக்கத்தில் 'ஏ' வகுப்புக் கைதிகளுக்குக்கூட ரேடியோ கிடையாதாம்.

தமிழ் வருஷப் பிறப்பு தமிழர்களுக்கு ஒரு நல்ல நாள். அந்த நாளிலேயே ஒரு தமிழருக்குப் பிறந்த நாளும் வருவதென்றால் அந்த மனிதர் பாக்கியசாலிதான். அந்த மனிதர்தான் கோரங்கியில் ரேடியோ வாங்கிவைத்த தூத்துக்குடி அஸெம்பிளி அங்கத்தினர் ஸ்ரீ. துரைசாமி நாடார். அன்று

அவருக்கு 46 வயது நிறைந்தது. அவர் தம்முடைய பிறந்த நாளைக் கொண்டாடிவிட்டு, புதுவருஷச் செய்திகளைக் கேட்க ரேடியோவைத் திருப்பினார். திருவாங்கூர் திவான் ஸர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யரும், புதுக்கோட்டை உதவி அட்மினிஸ்டிரேட்டர் கான்பஹதூர் கலிபுல்லா ஸாஹிபும், ஒரு பாதிரியாரும் யுத்தத்துக்கு உதவி செய்யவேண்டிய அவசியத்தைப் பற்றி ரேடியோவில் பேசினார்கள்.

ஸ்ரீ. துரைசாமி நாடார் ஜெயிலுக்கு வந்தபின் எடையில் குறைந்திருந்தார். அவருடைய எளிய வாழ்க்கையும், அடக்கமும், மனப் பக்குவமும் ஆச்சரியப்படத்தக்கவை. அவர் சில வருஷங்களில் அரசியல் வாழ்க்கை மாத்திரமல்லாமல், 'உலகமே மாயை' என்ற கொள்கைக்கு வந்து, அதற்கேற்றாற்போல் நடக்க ஆரம்பித்துவிட்டால், நான் ஆச்சரியப்பட மாட்டேன். ஏனென்றால் அதற்குப் பக்குவப் படுத்தும் முறையிலேயே அவர் தம்முடைய வாழ்க்கையைச் சரிப்படுத்திக்கொண்டு வருகிறார்.

ஜெயிலில் சங்கீதம் மாத்திரந்தான் சந்தோஷத்தைக் கொடுத்தது என்பதில்லை. அடிக்கடி தமாஷ் கச்சேரிகளும் நடந்துகொண்டிருந்தன. இந்த வேடிக்கைகளுக்குக் காரணமாயிருந்தவர் மாஜி பார்லிமென்டரி காரியதரிசி ஸ்ரீ. பாபி நீடு. சத்தியாக்கிரகிகள் வேலூரிலிருந்து புறப்பட்டுத் திருச்சி சிறைக்கு வருவதற்கு முதல் நாள் மத்தியானம் மரத்தடியிலே அவர் ஒரு கதம்பக் கச்சேரி நடத்தினார். ஆந்திர ஹரிஜன அஸெம்ப்ளி அங்கத்தினர் ஸ்ரீ. ஷண்முகம் தெலுங்கில் நந்தனார் காலக்ஷேபம் செய்தார். அது தமிழில் செய்தது மாதிரியே இருந்தது. தமிழ்க் கதை தானே! அந்தக் கச்சேரியில் ஜனப் முஹைறதீன் மரைக்காயர் பாடியும் ஆடியும் எங்களைக் களிப்பித்தார். இந்தக் கச்சேரிகளிலெல்லாம் எங்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க

வைத்தது ஸ்ரீ. கல்லூரி சுப்பராவ்தான். மாஜி பார்லிமெண்டரி காரியதரிசிகள் ஸ்ரீ. காளேஸ்வர ராவ், ஸ்ரீ. பக்தவத்ஸலம், ஸ்ரீ. வரதாச்சாரி, ஸ்ரீ. மூர்த்தி, ஸ்ரீ. பாபி நீடு இவர்கள் நடப்பதைப் போலும் பேசுவதைப் போலவும் அப்படியே நடித்துக் காட்டும் சக்தி ஸ்ரீ. சுப்பராவுக்கு இருந்தது. 'ஸ்ரீ. வரதாச்சாரி ரேடியோ கேட்டுவிட்டுப் போகும் காட்சி' என்று ஒன்று நடித்துக் காட்டினார். அப்படியே தத்ரூபமாய் இருந்தது. ஸ்ரீ. வரதாச்சாரி ஜெயிலைவிட்டுப் போனபின் நான் அடிக்கடி ஸ்ரீ. சுப்பராவை அவர் மாதிரி நடித்துக் காண்பிக்கச் சொல்லி அநுபவித்திருக்கிறேன்.

ஸ்ரீ. சுப்பராவ் தெலுங்கில் சிறந்த அறிவாளி. மிக எளிய குடும்பத்திலே பிறந்தவர். ஆந்திர மாகாண மகாநாட்டுக்கு அவர் ஒருமுறை தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜெயிலுக்கு வந்த பிறகு அவர் சட்டை போட்டுக்கொண்டதை நான் பார்த்ததில்லை.

இந்தக் குதூகலக் கச்சேரிகளிலெல்லாம் சித்தூர் வக்கீல் ஸ்ரீ. வரதாச்சாரி பாடுவார். தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து வந்திருந்த பல நண்பர்களும் பாடுவார்கள். தஞ்சை அஸெம்பிளி அங்கத்தினர் ஸ்ரீ. பூவராகனுடைய மருமகன் ஸ்ரீ. நாராயணன் நன்றாகப் பாடுகிறார். ஸ்ரீ. பூவராகனை மனுப் பேசுவதற்காக இவர் அடிக்கடி வந்திருக்கிறார். ஒருநாள் இவர் ஜெயிலுக்குள்ளேயே வந்துவிட்ட பொழுது, தவறி உள்ளே வந்துவிட்டாரோ என்று நான் நினைத்தேன். இல்லை, சத்தியாக்கிரகம் செய்து தண்டனை பெற்றே வந்திருந்தார். இவர் சதா பாடிக்கொண்டேயிருக்கிறார். பாடிக்கொண்டே வந்தார்; பாடிக்கொண்டே போவார். ஸ்நானம் செய்ய வரும்பொழுது பாட்டு — சாப்பிட்டுவிட்டுப் போகும்பொழுது பாட்டு — எப்பொழுதும் பாட்டில் இவருக்குப் பிரேமை. பாடவேணும் என்றால் பாடிவிடுவார்.

ஏப்ரல் மாதம் கடைசி நாள். மே மாதத்தில் விடுதலை யாகும் நண்பர்களெல்லோருக்கும் பிரிவுபசாரமாக அன்று ஒரு கச்சேரி ஏற்பாடு செய்திருந்தார் ஸ்ரீ. பாபி நீடு. அந்தக் கச்சேரியின் ஆரம்பத்தில் ஸ்ரீ. முனிசாமி பிள்ளை ஹிந்தியில் பிரார்த்தனைப் பாட்டுப் பாடினார். ஸ்ரீ. சுப்பராவ் வழக்கம் போல் நடித்துக் காண்பித்தார். இவையெல்லாம் விசேஷ மில்லை. ஆனால், பொப்பிலியிலிருந்து வந்திருந்த ஸ்ரீ. அங் கர்ஜாலா வெங்கடேசன் 'பொப்பிலி விதவை' என்ற ஒரு காட்சி நடத்திக் காண்பித்தார். தெலுங்கில் ஒரு மனிதன் — அல்ல — ஒரு மனுஷியின் நாடகம் இது. என்றும் மறக்க முடியாதபடி நான் அநுபவித்த நாடகங்களில் இது ஒன்று.

தஞ்சை ஜில்லா ஸ்ரீ. சடகோபாசாரியார் அன்று ஷேக்ஸ்பியரிலிருந்து சில வரிகள் சொன்னார். நடித்துக் கொண்டே சொன்னார். மிகவும் நன்றாக இருந்தது. ஸ்ரீ. சடகோபாசாரியை ஜெயிலுக்கு வருவதற்கு முன்னால் நீங் கள் பார்த்தால் வக்கீலென்று சொல்லவே முடியாது. அவரது தோற்றத்திலிருந்து அவரை நடிகரென்றே தீர்மானமாகச் சொல்லிவிடுவீர்கள். நடிப்பதில் மாத்திரமின்றிச் சித்திரங் கள் எழுதுவதிலும் வல்லவர்.

கர்நூல் ஹரிஜன அஸெம்பிளி அங்கத்தினர் ஸ்ரீ. நாகப்பா அன்று ஜால வித்தைகள் செய்து காண்பித்தார். இந்த நண்பர் ஒரு தனி ரகம். வெளியில் இவர் தையல் வேலை செய்துகொண்டிருந்தவர். சிறிது காலம் ஒரு பாங் கில் 'பியூன்' வேலை பார்த்திருக்கிறார். திடீரென்று அஸெம் பிளி அங்கத்தினராகிவிட்டார். இவர் எப்பொழுதும் பேசிக் கொண்டே யிருப்பார். யாரிடமும் பேசிக்கொண்டே யிருப் பார். ராஜாஜியுடன்கூட ஒருநாளாவது பேசாமலிருக்க மாட்டார்.

சில சமயங்களில் இவர் தேகப் பயிற்சிக்காக நடப்பார். நடப்பது விசித்திரமா யிருக்கும். ஒரு சமயம் ஒரு கையை யும், இன்னொரு சமயம் மற்றொரு கையையும் ஆட்டிக் கொண்டே போவார். இதெல்லாம் எதற்காகச் செய்கிறார் என்று தோன்றும். இவர் நல்ல கறுப்பு நிறம். ஆனால், சில சமயங்களில் வெள்ளைக்காரருடைய ‘ஹாட்’ வைத்துக் கொண்டு காட்சியளிப்பார். முதல் தடவை இவரைக் கண்ட தும் நம்முடைய அன்புக்குப் பாத்திரமாவார் என்று தெரி யாது. ஆனால் சீக்கிரத்தில் நம்மோடு ஒட்டிக்கொண்டு விடுவார். இவருக்கு எப்பொழுதும் சிரித்த முகம். தெலுங்கு, மலையாளம், தமிழ், ஹிந்துஸ்தானி, இங்கிலீஷ் இத்யாதி பாஷைகளிலே பேசி, தாமும் சிரித்து, எங்களையும் சிரிக்கவைப்பவர் இவர்தான்.

ஜெயில் கச்சேரிகளுக்குக் காரணமானவர் ஸ்ரீ. பாபி நீடு என்று மேலே சொன்னேனல்லவா? இவர் சாதாரண ஆசாமியல்ல. அமெரிக்கா தேசத்திற்குச் சென்று படித்தவர். காலஞ் சென்ற ஸ்ரீ. அன்னபூர்ண தேவியின் கணவர் இவர். அந்தச் சிறந்த தேச சேவகியை மனைவியாகப் பெற்ற பாக்கி யம்தான் இவர் வாழ்க்கையில் கிடைத்த அரும் பெரும் பாக்கி யம். அந்த அம்மையாரைப் பல வருஷங்களுக்கு முன் னேயே இவர் இழந்துவிட்டார். அந்த அம்மையாரைப் பற்றித்தான் காந்திஜி, ‘தேசீய ஆக்க வேலைக்காகத் தம் முடைய ஆபரணங்களைக் கொடுத்த முதல் ஸ்திரீ’ என்று முன் ஒரு முறை எழுதியிருக்கிறார்.

சங்கீதமும் நடிப்பும் எவ்வளவு சந்தோஷத்திற்கு இடமா யிருந்ததோ அவ்வளவு ஹாஸ்யத்திற்கு இடமா யிருந்தது ஜோஸ்யம் சொல்லுவது.

நாங்கள் ஜெயிலில் இருந்த சமயம் யுத்தம் மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. தினசரி வரும் செய்திகளிலிருந்து

ஒரு வேளை பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு நல்ல புத்தி வந்து, இந்தியா மந்திரியான எல். எஸ். அமெரி காங்கிரஸ் கோரிக்கையை நிறைவேற்ற முன்வந்து, சத்தியாக்கிரகிகளை விடுதலை செய்வார் என்பார் ஒரு நிபுணர். ஒருவர் பின் ஒருவராக நிபுணர்கள் கிளம்பி இத்தகைய ஜோஸ்யம் கூறுவார்கள். இப்படி 15 நாட்களுக்கு ஒரு முறை 'விடுதலை' ஜோஸ்யம் காதில் விழுந்துகொண்டே யிருக்கும். விசாகபட்டணம் அஸெம்பிளி அங்கத்தினர் ஸ்ரீ. வி. ஜெ. குப்தா சலியாத மனிதர். முன் சொன்ன ஜோஸ்யம் பலித்தாலென்ன, பலிக்காவிட்டாலென்ன? திரும்பத் திரும்ப அவர் ஜோஸ்யம் சொல்லச் சளைக்கமாட்டார். அவர் எல்லோருக்கும், 'விடுதலை, விடுதலை' என்று ஜோஸ்யம் சொல்லிக்கொண்டே வந்து, கடைசியில் தண்டனைக் காலம் முடிந்து மே மீ 24-உ தாம் மாத்திரம் விடுதலையாகிப் போய்விட்டார்.

ஸ்ரீ. முத்துராமலிங்கத் தேவர்கூட அடிக்கடி 'விடுதலை' ஜோஸ்யம் சொன்னார். 'என்ன ஐயா, உங்கள் ஜோஸ்யம் ஒன்றும் பலிக்கவில்லையே!' என்று ஒரு முறை நான் கேட்டேன். 'ஏப்ரல் மீ 12-உ என்னுடைய கணக்குகளெல்லாம் தப்பிப்போய்விட்டன. இனிமேல் நான் சொல்ல முடியாது' என்று அவர் கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டார்.

கை ரேகை பார்ப்பதிலும், ஜாதகம் பார்ப்பதிலும்கூட நாங்கள் சில மணி நேரம் கழிப்பதுண்டு. ஏறிக்கொண்டே வரும் சூரிய வெப்பத்தில், என்ன செய்வது என்று தெரியாமல் திகைப்பு ஏற்படும் சமயம்தான் இதற்கெல்லாம் ஏற்ற நேரம்.

மன்னார்குடி ஹரிஜனச் சட்டசபை அங்கத்தினர் ஸ்ரீ. குழந்தைவேலு நயினார் ஜாதகம் பார்த்துச் சொல்வார். அவர் சொல்லும் அநேகம் காரியங்கள் நடந்துகொண்டே வந்தன. அவர் 'விடுதலை' ஜோஸ்யம் சொல்லித் தம் பெயரைக்

கொடுத்துக்கொள்ளவில்லை. அந்தமட்டில் கெட்டிக்காரரா யிருந்தார். அஸெம்பிளி அங்கத்தினர்களில் இவரைத்தான் முதன்முதலில் 'ஸி' வகுப்பில் வைத்தார்கள். பின்னால் 'பி' வகுப்புக்கு மாற்றி, அதிலிருந்து 'ஏ' வகுப்புக் கொடுக்கப்பட்டது. கீழிருந்து மேல் வகுப்புக்கு வருபவர் களைப் பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். ஆனால் மாதக் கணக்காக 'பி' வகுப்பில் இருந்து வந்தவர்களைத் திடீரென்று 'ஸி' வகுப்புக்கு அனுப்புவதென்றால் அதைவிடக் குரூர மான செய்கை வேறொன்றுமில்லை.

தண்டனை கொடுக்கும் மாஜிஸ்டிரேட்டுகள் விநோத மானவர்கள். சட்டசபை அங்கத்தினர்களுக்கு 'ஸி' வகுப்பு, 'எம். பி., பி. எஸ்.' பட்டம், 'பி. ஏ., பி. எல்.' பட்டம் பெற்ற செல்வர்களுக்கெல்லாம் 'ஸி' வகுப்புக் கொடுப்பது ஒரு புறம் இருக்கட்டும். முதலிலே 'பி' வகுப்புக் கொடுத்து விட்டு, அப்பால் அரசாங்கத்தார் அதை 'ஸி' வகுப்புக்கு மாற்றுவார்களானால் அந்த சத்தியாக்கிரகிகள் மிகவும் கஷ் டப்படுவார்கள். ஜில்லா கலெக்டர்கள் தங்களுடைய சிபார் சைக் காலா காலத்தில் அனுப்பிவிடக் கூடாதா? வகுப்பு நிர்ணயம் செய்யும் சடங்கைத் துரிதப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

திருச்சி சிறையிலுள்ளவர்கள் எல்லோருக்கும் ஜனவரி மாதக் கடைசியில் 'ஏ' வகுப்புக் கொடுத்தனர் அரசாங் கத்தார். அரசாங்கத்தார் இந்த உத்தரவில் முத்திரை போட்டு அனுப்புவதற்கு முன்பே விடுதலையாகிப் போய்விட்டார் ஸ்ரீ. வெங்கடநாராயண ரெட்டியார். அவருக்கும் 'ஏ' வகுப் புக் கொடுத்திருந்தார்கள். அவரைப் பிடித்துக் கொண்டு வந்துதான் திரும்ப 'ஏ' வகுப்பில் வைக்க வேண்டும்! ஆலோசனையாளருடன் கூடிய அரசாங்கம் அவ்வளவு வேக மாக நடக்கிறது!

விசாகபட்டணம் காலேஜில் 'காந்தி' என்று ஒரு பையன் படிக்கிறான். அந்தப் பையனுடைய தகப்பனார் ஸ்ரீ. காந்திதாஸ் கிருஷ்ணமூர்த்தி எங்களுடன் சிறையில் இருந்தார். அவர் 1921-ல் ஜெயிலிலிருந்தபொழுது அந்தப் பையன் பிறந்தான். ஸ்ரீ. காந்திதாஸ் கிருஷ்ணமூர்த்தி தாடி வளர்த்துக்கொண்டிருக்கிறார். 'ஏன் தாடி வளர்க்கிறீர்கள்?' என்று அவரைக் கேட்டேன். 'முதலில் நான் ஜெயிலுக்குப் போனபொழுது தகடுகளைத் தீட்டிக்கூட க்ஷவரம் செய்ய அநுமதிப்பதில்லை. க்ஷவரக்காரர்களோ கிடையாது. ஆதலால் ஜெயிலில் இருக்கும்வரை க்ஷவரமே செய்துகொள்வதில்லை என்று அன்று பிரதிக்ஞை எடுத்துக்கொண்டேன்' என்றார்.

இவர் கண்ணாடித் துண்டுகளை அப்படியே கடித்துத் தின்று வேடிக்கை காட்டுவார். அதிலிருந்து நாங்கள் இவரைக் கண்டால் கண்ணாடி பாட்டில்களைக் கொஞ்சம் பந்தோபஸ்தாக வைத்துக்கொள்ள வேண்டியிருந்தது. இவர் கண்ணாடியைத் தின்பது எங்களுக்குப் பெரிய ஆச்சரியமாயிருக்கும்.

இவ்வாறு பற்பல விதமாக எங்களுடைய நேரம் போய்க்கொண்டிருந்தது. சங்கீதம், ஹாஸ்யம், நாடகம், ரேகை சாஸ்திரம், 'விடுதலை' ஜோஸ்யம், 'யுத்த' ஜோஸ்யம், — இவையெல்லாம் 24 மணி நேரத்தில் ஒரு பகுதியை இன்பகரமாகக் கழிக்க உதவி செய்தன. எல்லாவற்றிற்கும் மேலாக எங்கள் ரேடியோ பெட்டி செய்த உதவி அபாரமானது.

14. பொன்னுக்குட்டி


ஜெயிலில் இருக்கும் பொழுது ஒவ்வொரு பிளாக்குக்கும் சாதாரணக் கைதிகள் இரண்டு பேர்களை வேலை செய்வதற்கு ஜெயில் அதிகாரிகள் அநுமதித்திருந்தார்கள். சதா அவர்கள் பிளாக்கிலேயே இருக்கவேண்டுமென்பதில்லை. காலை சரியாக 6 மணிக்கு அவர்கள் கூட்டம் கூட்டமாக அழைத்துவரப்படுவார்கள். சமையல் செய்வதற்கான கூட்டம் ஒன்று; பிளாக் வேலைக்காரர்கள் கூட்டம் ஒன்று; தோட்டிகள் கூட்டம் ஒன்று. இந்த வேலையாட்களைச் சாயங்காலம் 6 மணிக்கு மீண்டும் அழைத்துக்கொண்டு போய் உள்ளே ஜெயிலில் பூட்டிவைத்து விடுவார்கள். மறு நாட் காலை 6 மணிக்குத் திரும்பவும் அழைத்து வருவார்கள். நாங்கள் இருந்த கேம்ப் ஜெயில் திருச்சி ஸென்ட்ரல் ஜெயிலுக்கு வெளியே இருந்தபடியால் இப்படி வேலைக்கு அனுப்பப்படும் ஆட்கள் சாதாரணமாய்ச் சமீபத்தில் விடுதலை செய்யப்படுபவர்களாய்த்தான் இருந்தார்கள். மேற்கொண்டு நீண்ட காலத் தண்டனை அநுபவிக்க வேண்டியிருந்தவர்களை இப்படி வேலைக்குக் கொண்டுவருவது கிடையாது. ஒரு வேளை அவர்கள் ஓடிவிடுவார்கள் என்ற பயம்தான் இதற்குக் காரணம் என்று நான் தெரிந்துகொண்டேன். வெளி வேலைக்குக் கொண்டுவரப்படும் கைதிகளுக்குத் தண்டனைக் காலம் முடிய இரண்டு மாதங்களுக்கும் குறைவாக இருந்தால்தான், அனுப்புவது வழக்கம். சில சமயங்களில் விடுதலைக்குச் சில நாட்கள் இருப்பவர்களும் வருவார்கள். நாங்கள் அவர்களுடன் நன்றாய்ப் பழகுவதற்கு முன்பே அவர்கள் போய்விடுவார்கள்.



— ‘ஸி’ வகுப்புக் கைதி —

ஜெயில் விதிகளை

மீறுகிறவர்களுக்கு இத்தகைய விலங்குகள் போடப்படும்.



— தூக்கு மேடை —

எங்கள் பிளாக்கில் இரண்டு மாதம் வேலை செய்தான் பொன்னுசாமி என்ற ஒரு விசுவகர்மப் பையன். அவனுக்கு இருபது வயதுதான் இருக்கும். களங்கமற்ற முகம். நிறமோ கறுப்பு. ஆனால் முகத்திலே களை இருந்தது. சுறுசுறுப்பான பையன். நல்ல புத்திசாலி. அவன் ஜெயிலுக்கு வர வேண்டியவன் என்று எனக்குத் தோன்றவில்லை.

'ஏண்டா ஜெயிலுக்கு வந்தாய்?'

'பொம்பிளை கேஸ், ஐயா!'

'அதென்னடா அது?'

ஒருவர் வீட்டில் ஒரு பெட்டியைத் தூக்கிக்கொண்டு போய்விட்டதாகக் கேஸ் போட்டுவிட்டார்களாம் போலீஸ்காரர்கள்.

'இதற்கும் பெண்ணுக்கும் என்ன சம்பந்தம்?'

'அதைத்தான் புருஷன் சேர்ந்துகொண்டு இப்படிச் செய்துவிட்டான்!'

கள்ள நட்பின் விளைவாக இவன் ஜெயிலில் இருக்கிறான் என்பதை நான் லேசாக ஊகித்துக்கொண்டேன்.

'ஏன், உனக்குக் கல்யாணம் ஆகவில்லையா?'

'ஆயிட்டுது. அது இன்னும் மனுஷியாகவில்லை.'

இந்தப் பையன் இவ்வளவு சிறுவனாக இருந்தும் உலகத்தை நன்றாக அறிந்திருந்தான். இனி தான் சம்பாதிக்கும் பொருளையெல்லாம் வீணாக விரயம் செய்யாமல், தன் மனைவி ராஜத்தினிடமே கொடுப்பதாக எங்கள் முன்னால் பிரதிக்ஞை எடுத்துக்கொண்டான்.

சைக்கிள், கைக்கடிகாரம், பூட்ஸ் இவைகளெல்லாம் தன்னிடம் இருப்பதை அவன் அடிக்கடி எங்களிடம் சொல்லுவான். நாங்கள் அவனைப் 'பொன்னுக்குட்டி' என்றே அழைத்தோம். அவன்மீது அவ்வளவு பிரியம் எங்களுக்கு.

கல் வேலை செய்வது அவன் தொழில். என்னுடன் இருந்த சேலம் சட்டசபை அங்கத்தினர் ஒருவர் அவனிடம் ஒருநாள் பேசிக்கொண்டிருந்தார்:

'என்னடா, உனக்கு நன்றாய் வேலை செய்யத் தெரியுமா?'

'என்ன சாமி, காலையிலே தலையைச் சீவிவிட்டுக் கொண்டு, கையில் வாச் கட்டி, சைக்கிளில் ஏறிப் போனால், சாயங்காலம் ஒரு ரூபாயுடன்தான் திரும்புவேன்!'

'அந்தப் பணத்தை யெல்லாம் என்ன செய்தாய்?'

ஒரே சிரிப்புச் சிரித்துக்கொண்டே, 'என்ன சாமி, அதுதான் ஜெயிலிலே இருக்கேன்!' என்றான்.

'கல்லில் என்னென்ன செய்வாய்?'

'நாய், குதிரை எது வேண்டுமானாலும் அடிப்பேன்.'

'நன்றா யிருக்குமா அந்த நாய்? வேட்டை யாடுமா?'

'அடிச்சுத் தூக்கிவிடும் போதே பாதி உயிர் வந்து விடுமே! வேட்டையா? பேஷா ஆடலாம்?'

என்ன அற்புதமான கலை! அஜந்தா குகைகள், மகாபலி புரம் முதலிய இடங்களிலுள்ள சிலைகள், தென்னாட்டிலுள்ள கோயில்கள் எல்லாம் இந்தக் கலையின் உயர் சிகரந்தானே! இவற்றை நிர்மாணித்தவர்களின் வழி வந்தவனான எங்கள் பொன்னுக்குட்டி, 'கல்லில் உயிருள்ள நாயைப் பொறித்துக் கொடுப்பேன்' என்று சொன்ன பொழுது, கலையின் மேன்மையை உணர்ந்திருந்த இந்தப் பையனைப் பார்த்து நான் சந்தோஷமடைந்தேன்.

பொன்னுக்குட்டிக்குப் பின்னால் எங்கள் பிளாக்கில் வேலை செய்தவன் ஸ்ரீனிவாசன். இவன் கள்ளுக்கடையிலே கள் விற்றுக்கொண்டிருந்தவன். கொள்ளைக் குற்றத்திற்காக ஜெயிலுக்கு வந்திருக்கிறான். பொன்னுக்குட்டிக்கும் இவனுக்கும் ரொம்ப வித்தியாசம். என்றாலும் இவனும் நன்றாக வேலை செய்துகொண்டிருந்தான். வேஷ்டிகள் துவைத்துக்

கொடுப்பான். பிளாக்கைச் சுத்தப்படுத்தி வைப்பான். மற்றும் ஏவின வேலைகள் செய்வான்.

நாங்கள் இவனையும் 'சிமாச்சு' என்று அன்பாகத்தான் அழைத்து வந்தோம். நான் விடுதலையான மே மீ 23-உ இவனும் விடுதலையானுன்.

'சிமாச்சு' எப்படி யிருப்பான் என்று சொல்லவேண்டு மானுல், அவன் குரங்கு மாதிரி இருக்க மாட்டான் என்று சொன்னுல் போதும்.

பிளாக்கில் வேலை செய்பவர்களை நாங்கள் தேடும்போது காண முடியாது. வார்டர்களுக்கெல்லாம் அவர்கள் பயப்பட வேண்டும். பகல் முழுதும் வேலை இருக்கும். ஜெயில் முழுதும் பெருக்கவேண்டும். அடுத்த நாள் சாப்பாட்டுக்கு வேண்டிய சாமான்களை, மூன்று மணி வெயிலில் ஜெயி லுக்குள்ளே போய், நாலு நாலரை மணிக்குக் கொண்டுவர வேண்டும். சாப்பாட்டுப் 'படித்தனம்' என்பதற்கு ஆங்கிலத்தில் 'ரேஷன்' என்று சொல்லுவார்கள். இந்த 'ரேஷன்' கொண்டுவருவதை, 'லேஷனுக்குப் போகணும்', 'டேஷனுக்குப் போகணும்,' 'ரோஷனுக்குப் போகணும்' என்று பலவிதமாக உச்சரித்து வந்தார்கள் இந்த வேலைக் காரர்கள்.

வேதாரண்யத்திலிருந்து வந்திருந்தான் எங்கள் தோட்டி குஞ்சன் சாம்பான்.

'நீ ஊரில் இந்த வேலை செய்திருக்கிருயா?' என்று அவனைக் கேட்டேன்.

'இல்லை — இங்கே வந்துதான் இந்த அநியாயம்!'

'உனக்கு எப்பொழுது விடுதலை?'

'என் கட்டை*யைப் பாருங்க, சாமி!'

---

* கட்டை என்பது ஒரு தத்தாகத் தகடு. அதில் பெயர், தண்டனை, விடுதலைத் தேதி எல்லாம் பொறித்திருக்கும்.

'உனக்கு மார்க் எவ்வளவு?'

'அஞ்சு நாள், சாமி.'

'அப்பொழுது ஏப்ரல் மாதம் விடுதலை.'

'அதென்ன சாமி? நாலாவது மாசமா, அஞ்சாவது மாசமா?'

'நாலாவது மாசம்.'

இந்தக் கைதிகளுக்கு ஆங்கில மாசங்கள் தெரியாது. முதல் மாசம், இரண்டாவது மாசம், மூன்றும் மாசம்........ என்று சொன்னால்தான் தெரியும்.

எங்கள் வேஷ்டிகளை வெளுப்பதற்கு ஜெயிலில் வண்ணார்கள் இருந்தார்கள். ஆனால், எங்களிடத்தில் வேஷ்டிகளை வாங்கிக்கொண்டு போக வருபவர்கள் அவர்களல்ல. முதன் முதலில் திருச்சி ஜெயிலில் எங்களிடமிருந்து வாங்கிக் கொண்டுபோன வேஷ்டிகள் எல்லாவற்றையும் வெளுத்துக் கொண்டு வந்து ஒரே குவியலாகக் குவித்துப் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். சுமார் 1000 வேஷ்டி, ஷர்ட், குட்டை இவைகளைப் பிரித்து அவரவர் சாமான்களை எவ்வளவு அழகாக எடுத்துக்கொள்ள முடியும்!

பின்னால் ஜெயில் அதிகாரிகளுக்குக் கொஞ்சம் அறிவு பிறந்தது. ஒவ்வொருவர் துணியையும் ஒவ்வொரு பொட்டணமாகக் கட்டி, நம்பர் போட்டு வாங்கிக்கொண்டு போய், ஒழுங்காகப் பத்து நாட்களுக் கொருமுறை கொண்டுவந்து கொடுத்தார்கள். ஜெயிலில் 'வெளுத்த உடை' என்று 10 நாட்கள் கழித்துக் கொண்டுவருவது, நாம் கொடுத்தபடியே இருக்கும். தண்ணீரில் நனைத்துத் திரும்பவும் மடித்துக் கொண்டுவந்து விடுவார்கள் என்று நான் நினைக்கிறேன்.

ஜெயிலில் நன்றாகச் சலவை செய்த வேஷ்டியோ அல்லது ஷர்ட்டோ போட்டுக்கொண் டிருந்தால் அது வெளியே யிருந்து வந்ததாக இருக்கவேண்டு மென்பதை நாம் தீர்மான

மாக முடிவு செய்துகொள்ளலாம். சத்தியாக்கிரகிகளைப் பார்க்க வரும் நண்பர்களெல்லாம் இந்த மாதிரியான உடைகளில்தான் அநேகமாய்ப் பார்த்திருப்பார்கள்.

திருச்சி சிறையில் ஒருவருக்கப்பால் ஒருவராக நான்கு க்ஷவரக்காரர்கள் வந்து போனார்கள். சுப்பிரமணியம், பழனி, ஷண்முகம்! எவ்வளவு அழகான பெயர்கள்! ஜெயில் அதிகாரிகள் கொடுத்த ஒரு கத்தி, ஒரு கத்திரி, ஒரு கிராப் வெட்டும் மிஷின் இவைகளை வைத்துக்கொண்டு இருநூறு பேருக்கு அவர்கள் வேலை செய்ய வேண்டும். அவர்களில் தூத்துக்குடி ஷண்முகம் ஏதோ ஜாமீன் கேஸில் வந்திருந்தான்.

'இது என்ன சாமி? "கோழிக் கால்" கத்திரி வேணும் - பெரிய "மணிக் கத்தி" வேணும் — வேலை செய்யணும்! இது சும்மா கடனைக் கழிக்கிற மாதிரித்தான்!' என்று ஷண்முகம் அடிக்கடி சொல்லுவான். '"பி" மார்க் மிஷின் சாமி இது! "ஏ" மார்க்குத்தான் நல்லது. அது ஜெயிலிலே எங்கே கொடுக்கப் போறான்கள்?' என்று அவன் வருந்துவதுண்டு. ஆயினும், 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்றபடி, இருக்கிற ஆயுதங்களை வைத்துக்கொண்டு, ஷண்முகமும் அவன் கூட்டாளிகளும் நாங்கள் தாடி வளர்க்கும் மகரிஷிகள் ஆகிவிடாதபடி உதவி செய்து வந்தார்கள்.

எங்களுக்காவது சுமாரான கத்திகளும் மிஷினும் கொடுக்கப்பட்டிருந்தன. 'ஸி' வகுப்புக் கைதிகளுக்கு தீட்டிய வெறும் இரும்புப் பட்டைக் கத்திகள் பயன்பட்டு வந்ததற்கு இவை எவ்வளவோ மேல் என்று நாங்கள் திருப்தி அடைந்தோம்.

இவ்வாறு, ஜெயிலுக்குள்ளும், வெளியே இருப்பது போல் நானாவிதத் தொழில்களும் தெரிந்தவர்கள் இருந்து வந்தார்கள். சிறைவாசிகளும் ஒரு சிறு சமூகந்தானே!

அவர்களுக்குள்ளும் வண்ணார்கள், நாவிதர்கள், தோட்டிகள் முதலிய தொழிலாளர்கள் உண்டு. ஆனால், கடைசியாகச் சொன்ன தோட்டிகள் மட்டும் சில ஜெயில்களில் சில சமயங்களில் 'தட்டிப்' போய்விடுவார்கள். அப்பொழுதுதான் பிற ஜாதி ஆட்கள், அந்தத் தொழிலை செய்தறியாதவர்கள், அதைச் செய்யும்படி நியமிக்கப்படுகிறார்கள். ஜெயிலுக்கு இடைவிடாமல் தோட்டிகள் கிடைத்துக்கொண்டு வருவதற்கு 'ஸி. டி. ஆக்ட்' என்ற சட்டம் மிகவும் பயன்படுகிறது. இந்தச் சட்டப்படி அநேகம் குறவர்கள் போலீஸ் ஸ்டேஷனில் ஆஜர் கொடுக்க வேண்டும்; அநேகர் போலீஸாருக்குத் தகவல் கொடுக்காமல் ஊரைவிட்டு வெளியேறக் கூடாது. இந்த இரண்டு விதிகளையும் மீறியவர்கள் உடனே சிறைக்கு அனுப்பப்படுவார்கள். சிறைக்கு உள்ளே வந்ததும், இவர்கள் 'தோட்டிகள்' ஆகிவிடுவார்கள்!

ஜெயிலைப் பற்றி நினைக்கும் பொழுதெல்லாம், கறுப்புக் கட்டம் போட்ட அரைக் கைச் சட்டையும், அரைக் கால்சட்டையும், காவடி யெடுப்பவர்கள் அணியும் குல்லாவைப் போன்று காதையும் தலையையும் மறைக்கும் குல்லாவையும் அணிந்துகொண்டு திரியும் நூற்றுக் கணக்கான கைதிகள் தான் மனக் கண் முன்பு காட்சி யளிப்பார்கள். கைதியின் உடைகளில் மகா விகாரமானது கட்டம் போட்ட குல்லா தான். அதை அணிந்தவுடன் மனிதன் வானரம் போல் தோன்றுவான். வெளியே ஜனங்கள் அணியும் 'காந்தி குல்லா' மாதிரி ஒரு குல்லாவைக் கைதிகளுக்கு ஏன் கொடுக்கக்கூடாது? மனிதன் தன்மதிப்பை இழந்து, தன்னைத் தானே இழிவாகக் கருதிக்கொள்ளச் செய்யும் நடவடிக்கைகள் சிறையில் ஏராளமா யுண்டு. அவற்றில் முதலாவதாகச் சொல்லக் கூடியது சிறை உடை — அதிலும் முக்கியமானது இந்த வானரக்-குல்லாதான்.

சிறைச்சாலைகள் மனிதரைச் சீர்திருத்த ஏற்பட்டவை. ஆனால் இதற்கு விபரீதமாக, சிறு குற்றங்கள் செய்து சிறை புகுந்தவர்கள், அங்கேதான் பெருங் குற்றங்கள் செய்யக் கற்றுக்கொள்கிறார்கள். சிறையிலே எந்தக் கைதியும் கையில் பணம் வைத்துக்கொள்ள அநுமதி கிடையாது. உள்ளே நுழையும் பொழுதே, ஜெயில் வாசலிலேயே கைவசமுள்ள காசுகளை வாங்கிவிடுகிறார்கள்; துணிமணிகளைக் கூடப் பிடுங்கிக்கொண்டு விடுகிறார்கள். நிர்வாணமாக்கி அங்க சோதனை போடுகிறார்கள். ஆயினும், பின்னால் எப்படியோ கைதிகளிடம் சில்லறையாகப் பணம் வந்துவிடுகிறது. இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், சில கைதிகள் கைவசமுள்ள பணத்தை வார்டர்களுக்குத் தெரியாமல் பந்தோபஸ்துச் செய்யும் முறையைக் கண்டு நான் ஆச்சரியமடைந்ததனால்தான். இந்தக் கைதிகள் பணத்தைப் பைகளில்தான் போட்டு வைக்கிறார்கள். எந்தப் பைகளில்? அவரவர் தொண்டைக் குள்ளேயே மென்மையாயுள்ள உள் தோலில் சிறு பை மாதிரிக் குழி செய்து, அந்த இடத்தில் பணத்தை வைத்துக்கொள்கிறார்கள். கைவிரல்களால் அவர்கள் தொண்டைகளைத் தட்டிப் பார்த்தால் கலகலவென்று ஓசை கேட்கும்.

மனிதர்கள் சமூகமாய்ச் சேர்ந்து வாழ ஆரம்பித்ததிலிருந்து, குற்றம் புரியும் மனிதர்களைத் தண்டிக்கவும், ஒதுக்கி வைத்துச் சீர்திருத்தவும் எத்தனையோ பரீட்சைகள் நடந்து வருகின்றன. இவற்றுள் ஜெயில் ஒன்று. ஜெயிலில் தள்ளப்படும் கைதிகள் தங்களை அங்கே அனுப்பிய சமூகத்திடம் துவேஷம் கொண்டு, அதன் பிடியிலிருந்து எப்படியெல்லாம் தப்பலாம் என்றும், முன்னால் அகப்பட்டுக்கொண்டபடி மீண்டும் அகப்படாமல் தப்பி, மேற்கொண்டு தம் காரியங்களை எப்படி நடத்தலாமென்றும் ஆலோசிப்பதற்கு அங்கே போதிய சாவகாசம் இருக்கிறது. அத்துடன் சிறு குற்றங்

கள் செய்தவர்களும், வழக்கமாகக் குற்றம் புரிவதே தொழிலாகக் கொள்ளாதவர்களும், பெரிய குற்றவாளிகளுடனும், 'கறுப்புக் குல்லா'க்களுடனும் வைக்கப்படுவதால், அவர்கள் அதிகமாய்க் கெட்டுப்போக வழி ஏற்படுகிறது. கோழிக் குஞ்சு திருடியவர்களும் கொள்ளையடித்தவர்களும் ஒன்ருக வைக்கப்படுகிருர்கள். சிறிய குற்றவாளிகளுக்குப் பெரிய குற்றவாளிகள் ஆசாரியர்க ளாகிவிடுகிருர்கள்.

ஜெயிலில் எங்களுக்கு வேலை செய்தவர்கள் கைதிகள். எங்களை மேல் பார்த்துக்கொண் டிருந்தவர்கள் வார்டர்கள். எங்கள் முகாம் ஜெயிலில் வேலை செய்த வார்டர்கள் பதினைந்து பேர்கள்தான். அவர்கள் எங்கே அரசியல் கைதிகளுக்குச் சாதகமாக இருந்துவிடுகிருர்களோ என்று அடிக்கடி அவர்களை மாற்றிக்கொண்டு வந்தார்கள் மேலதிகாரிகள். மொத்தத்தில் வார்டர்கள் நல்லவர்கள். இவர்களுக்கு ஆரம்பச் சம்பளம் பதினுறு ரூபாய். இரவு நேரத்தில்கூட இவர்கள் வேலை பார்க்க வேண்டும். மிகவும் குறைந்த சம்பளத்திலே வேலை செய்யும் இவர்களிடத்தில் எனக்கு எப்பொழுதும் அநுதாபம் உண்டு. இவர்களுக்கு எப்பொழுதும் வேலை. அதுவும் மனத்துக்குப் பிடித்தமில்லாத வேலை. பதினுறு ரூபாய் சம்பளத்திலே, உடுப்பைப் போட்டுக்கொண்டு,கையில் துப்பாக்கி தாங்கி ஜெயிலைக் காத்து வரும் 'கார்டு'களும் இவர்கள்தான். வெளியே மதில் சுவரைச் சுற்றிக் காவல் செய்யும் 'ஸெண்ட்ரி' களும் இவர்கள்தான். வார்டர்கள் தங்கள் வாழ்க்கையின் முக்கியமான பாகத்தை, கொலை, களவு முதலிய குற்றங்கள் புரிந்த கைதிகளோடு ஜெயிலிலே கழிக்கிருர்கள். ஆதலால், இவர்களையும் 'ஜன்ம தண்டனை' பெற்றவர்கள் என்று சொல்லலாம்.

திருச்சியில் டெபுடி ஜெயிலர்கள் மூன்று பேர் இருந்தார்கள். சாப்பாட்டுச் சாமான்களை வாங்கிக் கொடுத்து மேல்

பார்த்து வருவதற்கு ஒருவர்; உள் ஜெயிலில் ஒருவர்; எங்கள் முகாம் ஜெயிலுக்கு ஒருவர். ஜெயிலருக்கும் சூப்பிரண்டுக்கும் அனுவசியமாய்ப் பயப்படுவதைத் தவிர, மற்றப்படி இவர்கள் கௌரவமாகவே நடந்துகொண்டார்கள். அரசியல் கைதிகள் வந்தபின் திணறும்படியான வேலை வந்தது. வேலூரிலிருந்து வந்திருந்த ஒரு டெபுடி ஜெயிலர் வேலை மிகுதியால் எடையில் சுமார் 10 பவுண்டு குறைந்து போனார்.

ஜெயிலரா யிருந்தவர் ஸ்ரீ. மஹாதேவன் பிள்ளை. இவர் நல்லவர். ஆனால், அரசியல் கைதிகளிடத்தில் எப்படி நடந்துகொள்ளவேண்டு மென்று தெரியாததால், சில சமயம் கஷ்டப்பட்டார். மேலீடாகக் காரியங்கள் செய்யச் சொன்னால், இவர் மிகவும் ஆடம்பரமாகச் செய்து முடிப்பார். கஷ்டப்பட்டு வேலை செய்வது, அபாரப் புத்திசாலித் தனத்தை உபயோகப்படுத்தி வேலைகளை முடிப்பது என்றால், இவருக்கு முடியுமோ முடியாதோ என்ற சந்தேகம் எனக்கு எப்பொழுதும் உண்டு.

முதலில் இந்தத் திருச்சி ஜெயிலுக்கு சூப்பிரண்டாக இருந்தவர் பின்னால் அலிப்புர ஜெயிலில் தடியடிப் பிரயோகத்திற்குக் காரணமாக இருந்ததாகச் சொல்லப்படும் வெள்ளைக்காரர் ஸ்ரீ. ஹௌ. திருச்சியில் இருக்கும்வரை இவர் சரியாக இருந்தார். அலிப்புரத்தில் எப்படி யிருக்கிறார் என்று எனக்குத் தெரியாது. இவர் நெடுங் காலமாய்ப் பதவி வகிப்பதால், பழைய சத்தியாக்கிர இயக்கத்தில் வந்த கைதிகளிடமும் அதிகப் பரிசயமுடையவர்.

தம் வேலைக் காலம் முடிந்து பென்ஷன் வாங்கிக்கொண்டிருந்த திருச்சிவாசி ஸ்ரீ. ராயலுசாமிப் பிள்ளை மூன்று மாதம் சூப்பிரண்டாக இருந்தார். இவருக்கும் ஜெயிலருக்கும் எப்பொழுதும் சண்டை நடந்துவந்ததாகச் சொல்லப்பட்

டது. இது எவ்வளவு தூரம் உண்மையென்பது எனக்குத் தெரியாது. ஆனால், இவர் சூப்பிரண்டு வேலையை விட்டுப் போனபோது சந்தோஷப்பட்டவர்களில் நான் ஒருவன். இவர் வெகு காலமாக ஜெயில் சம்பந்தப்பட்ட பல வேலைகளிலிருந்து, இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆபீஸிலும் வேலை பார்த்து அநுபவம் பெற்றவர்.

கடைசியில் சூப்பிரண்டாக வந்தவர் வெள்ளைக்காரர். அவர் பெயர் கேப்டன் ஹிட்சின். அவர் கொஞ்சம் பருத்த ஆகிருதி யுடையவர். அவர் வந்து இரண்டு மூன்று நாட்கள் வேலை பார்ப்பதற்குள் ஒரு சம்பவம் நடந்தது. விறகு ஈரமாகவே வந்துகொண்டிருக்கிறதென்று சொல்லி, சமையல் செய்வதில்லை என்று நாங்கள் முடிவு செய்துவிட்டோம். தினம் ஈரக் கட்டைகளை வைத்துக்கொண்டு என்ன செய்வது? ஜெயிலர் கண்டிராக்டரிடத்தில் சரியாகப் பார்த்து வாங்கினால்தானே! கேப்டன் ஹிட்சினுக்கும் கோபம் வந்து விட்டது. 'மஹாதேவன் பிள்ளை! இந்த ஜெயிலில் இந்தியாவின் அறிவாளிகள் இருக்கிறார்கள், தெரியுமா? அவர்களுடன் நீர் ஒத்துழைத்து அவர்களைத் திருப்தி செய்யாமற் போனால், உம்மை நான் வெளியே போகச் சொல்ல நேரிடும்' என்றார்.



15. மாஜி ஜெயில் மந்திரி

'1912-ஆம் வருஷம் மே மீ எனக்கு விவாகமாகிச் சில நாட்களில் ராஜாஜி எனக்கு ஒரு மாலை அணிவித்தார். ராஜாஜியிடமிருந்து இன்னொரு மாலை என் கழுத்தில் விழுவதற்கு நான் 29 வருஷங்கள் காத்துக்கொண்டிருக்க வேண்டியிருந்தது. இதற்கிடையே எத்தனையோ சந்தர்ப்பங்களில் எனக்கு ராஜாஜி பூமாலை போட்டிருக்கலாம். ஆனால் அப்படிச் செய்யவில்லை. ஆகவே இன்றைய சம்பவத்தை என் வாழ்நாளின் மூன்று முக்கிய சம்பவங்களில் ஒன்றாக நான் கருதுகிறேன். ஒன்று எனக்கு மணமான தினம். மற்றொன்று நான் இங்கிலாந்து சென்ற தினம். இன்னொன்று இன்றைய தினம்' என்று மே மீ 4-ந்தேதி தம்முடைய பிரிவுபசாரத்திற்குப் பதிலளிக்கையில் திருச்சி சிறையில் டாக்டர் சுப்பராயன் சொன்னார். டாக்டர் சுப்பராயனுக்கு ஒரு மாலையிட்டுத் தம் இரு கரங்களையும் அவர் சிரசில் வைத்து ஆசீர்வதித்துவிட்டு, அப்பொழுதுதான் உட்கார்ந்தார் ராஜாஜி.

தம்முடைய வாழ்க்கையில் மூன்று சம்பவங்களை முக்கியமாகச் சொன்னார் டாக்டர். இந்த மூன்று சம்பவங்களைக் கவனித்தால், அவருடைய குணங்களையும், அவரிடமுள்ள விசேஷங்களையும் நாம் அறிந்துகொள்ளலாம்.

சேலம் ஜில்லாவில் பெரிய ஜமீன்தார் டாக்டர் சுப்பராயன். ஏனைய ஜமீன்தார்களைப் போலிருந்தால், இன்று டாக்டர் சுப்பராயனைக் கவனிக்கவேண்டிய அவசியமே இராது. அதுவும் பல தமிழ்நாட்டு ஜமீன்தார்களென்றால், குடி, விபசாரம், மிதமிஞ்சிய கடன், வீண் படாடோபம், ஏழைகளை வருத்தும் தன்மை இவைகளுக்கெல்லாம் அவர்

கள்தான் இருப்பிடம். பொதுவாக இருக்கும் நிலைமை இது. இத்துடன் அவர்களுக்குக் கல்வியும் அவ்வளவாக இருக்காது. முப்பது வயதிலேயே மிதமிஞ்சிய செய்கைகளினல் நரம்புக்கட்டுக் குலைந்து, ரத்தசுத்தி செய்துகொண்டிருப்பார்கள். வேறு சில நல்ல ஜமீன்தார்களும் இருக்கலாம்.

டாக்டர் சுப்பராயன் கல்வி கேள்விகளில் சிறந்தவர். அவர் ஆக்ஸ்போர்டில் பி. ஸி. எல். பட்டம் பெற்று, பின்னுல் டாக்டர் பட்டம் வாங்கியவர். அவர் வகித்த பதவிகள் அனந்தம். அவர் அகில இந்திய கிரிக்கெட் பெடரேஷன் தலைவர், மாஜி பிரதம மந்திரி, மாஜி சிறை மந்திரி, இப்பொழுது மாஜி கைதி.

நமது டாக்டர் சமூக சீர்திருத்த விஷயங்களில் மிகவும் துணிவுள்ளவர். சமூகக் கட்டுத்திட்டங்களை உதறித் தள்ளிவிட்டு, ஸ்ரீமதி ராதாபாய் அம்மையாரை அவர் மணந்து கொண்டது தைரியமான காரியம். அந்தக் காலத்திலே, அதுவும் ஒரு ஜமீன்தாரிக்கு அதிபதியான கவுண்டர் ஒருவர், தம் சமூகத்தை விட்டு அயல் சமூகத்தில் மணந்துகொள்வதானல், மிகவும் கஷ்டமான காரியம்.

சென்ற யுத்தத்திலே யுத்த மந்திரி லார்ட் டார்பிக்கு டாக்டர் சுப்பராயன் உதவி அந்தரங்கக் காரியதரிசியாக இருந்தார். உதவி அந்தரங்கக் காரியதரிசிக்குத்தான் யுத்தம் நடக்கும் இடங்களிலிருந்து வரும் செய்திகள் முதன் முதலில் வரும். இரவும் பகலும் தந்திகள் வந்துகொண்டேயிருக்கும். இந்தத் தந்திகளை முதலில் படிக்கவேண்டியது இந்த அந்தரங்கக் காரியதரிசிதான். இங்கிலாந்து நடத்திய யுத்தத்தில், வெள்ளையர் ஒருவருக்குச் செய்திகள் தெரிவதற்கு முன்பே, நமது டாக்டருக்குத் தெரிந்துவிடும். அது மாத்திரமல்ல. அந்தச் செய்திகளில் எவற்றை உடனே யுத்த மந்திரிக்குக் காட்டவேண்டும் என்பதையும் இவரே

தீர்மானிக்கவேண்டும். யுத்த மந்திரி வீட்டிலேயே இவரும் வசிக்கவேண்டும். 'நான் அந்தரங்கக் காரியதரிசியாயிருந்த சமயத்தில், இரண்டு நாட்கள்தான் இரவில் மந்திரியைப் படுக்கையிலிருந்து எழுப்பி முக்கியமான செய்திகள் தெரிவித்திருக்கிறேன். மற்றவைகள் எல்லாம் எனக்கு முக்கியமாகத் தெரியவில்லை' என்று என்னிடம் அவர் சொன்னார்.

'இந்தச் செய்திகள் நேற்று இரவு வந்தன. தங்களைத் தூக்கத்திலிருந்து எழுப்பவேண்டிய செய்திகள் இவை என்று எனக்குத் தோன்றவில்லை' என்று அநேக நாட்களில் காலையில் லார்டு டார்பியிடம் கூறுவாராம். டார்பி பிரபு செய்திகளைப் படித்துவிட்டு, 'சுப்பராயன்! தாங்கள் நினைத்தது சரியே!' என்று எப்பொழுதும் ஆமோதிப்பது வழக்கம். டாக்டர் சுப்பராயன் முதலில் பார்த்த தந்திகள், பிறகு யுத்தக் காரியாலயத்திலிருந்து ஒழுங்கு செய்யப்பெற்றுப் பொது ஜனங்களுக்குத் தரப்பட்டு வந்தன.

சென்ற மகா யுத்தத்தில் இவ்வளவு நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருந்த ஒருவர், இந்த யுத்தத்தில் எதற்காக யுத்த எதிர்ப்புக் கோஷங்கள் செய்து கைதியாக வேண்டும்? அந்த யுத்தத்திலே இங்கிலீஷ்காரர்கள் ஜெயிக்க வேண்டுமென்று எண்ணி, இந்த யுத்தத்திலே அவர்கள் தோற்கவேண்டுமென்று விரும்புகிறாரா? இல்லை. அல்லது, அன்றிருந்த தேச பக்தியைப் பார்க்கிலும் இன்று அவருக்கு அதிகமாகி விட்டதா? இல்லை. பிரிட்டிஷ் அரசாங்கத் தலைவர்களின் குறுகிய பார்வையும், ராஜதந்திரக் குறைவுமே டாக்டரை இந்த நிலைக்குக் கொணர்ந்துவிட்டன.

டாக்டர் சுப்பராயன் இங்கிலாந்திலிருக்கும் பொழுது பல பிரமுகர்களுடன் நேரில் பழகியிருக்கிறார். தனிப்பட்ட வெள்ளையர்கள் மீது அவருக்கு விருப்பம் உண்டு. ஆங்கில நாகரிகத்தில் அவருக்குப் பற்று இருக்கிறது. ஆங்கிலேயரின்

நிர்வாகத் திறமையையும், தேசபக்தியையும் அவர் மிகவும் பாராட்டுகிறார். ஆங்கில மக்களிடம் அவருக்குத் துவேஷ மில்லை, வெறுப்பில்லை.

அவர் தம்முடைய மூன்று குமாரர்களையும், ஒரே பெண்ணையும் இங்கிலாந்திலே படிக்கவைத்தார். அவரும் அவர் மனைவியாரும் இங்கிலாந்தில் பட்டம் பெற்றவர்கள். குடும்பமனைத்தும் ஆங்கில நாகரிகத்திலே ஈடுபட்டிருந்தது. தந்தையும் தனயரும், தாயும் மகளும் இங்கிலாந்திலே படித்து, தேசபக்திக்கு மாத்திரமல்லாமல் நிர்வாகத் திறனுக் கும் எடுத்துக் காட்டாக இருக்கும் இன்னொரு குடும்பம் — தமிழ் நாட்டில் மாத்திரம் அல்ல — இந்தியாவிலேயே வேறு பார்க்க முடியாது.

சென்னைச் சதி வழக்கில் முதல் எதிரி ஸ்ரீ. சுரேந்திர நாத் மோஹன் குமாரமங்கலம் டாக்டர் சுப்பராயனுடைய கடைசிக் குமாரர். இங்கிலாந்திலேயே பிறந்தவர்! இருந்தும் வெள்ளைக்கார மாஜிஸ்டிரேட்டால் விசாரணை செய்யவேண்டிய அவசியமில்லை என்றும், இந்திய அதிகாரியே போதுமென் றும் சொல்லுகிறார். முதல் குமாரர் ஸ்ரீ. பரமசிவம் கிர்க்கி யுத்த தளவாடங்கள் செய்யும் ஆலையின் முதல் அதிகாரியாக இருக்கிறார். இரண்டாவது குமாரர் ஸ்ரீ. கோபால் குமார மங்கலம் கல்கத்தாவில் டாடா கம்பெனி மானேஜர் ஸ்ரீ. மோஹேந்திராவுக்கு அந்தரங்கக் காரியதரிசியாக இருக்கிறார். குமாரி பார்வதி இங்கிலாந்திலே படித்துக்கொண்டிருக்கிறார். 'எங்களைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் படித்துவிட்டே வருவேன்' என்று ஆக்ஸ்போர்டிலிருந்து தைரியம் சொல்லுகிறார் ஜெயிலிலிருக்கும் தம் பெற்றோர்க ளுக்கு. ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன் வேலூர் சிறையில் கைதியாக இருக்கும்பொழுது மற்ற ஸ்திரீகளுக்கு நூல் நூற் பதற்குக் கற்றுக் கொடுத்தார். குழந்தைகளைப் பராமரிக்கும்

முறைகளைக் கற்றுக்கொடுத்து வந்தார். வைத்தியத்தில் ஆபத்துக்காலத்தில் முதலில் செய்யவேண்டிய சிகிச்சையைப் பற்றியும் கற்றுக் கொடுத்திருக்கிறார். இவற்றோடு தையல் வகுப்பும் நடத்தினார். இவ்வளவெல்லாம் செய்ததற்கு, தண்டனையில் ஒரு மாதம் வஜா தருவதாகக்கூட சூப்பிரண்டு மேஜர் ஜில்ஸிங் சொன்னாராம். ஆனால், 'எனக்கு ஆறு மாதமும் ஜெயிலில் இருக்கவேண்டும். தங்களுடைய இந்தச் சலுகை வேண்டாம்' என்று சொல்லிவிட்டு, தண்டனைக் காலம் முடிவடைந்து, மே மீ 21-உ தான் விடுதலை யடைந்தார் ஸ்ரீமதி ராதாபாய்.

டாக்டர் சுப்பராயன் தியாகமும் மிகவும் சிறந்தது. ஆங்கிலேயர் மாதிரியே சுகமாக வாழ்ந்துவந்த டாக்டர் ஜெயிலுக்கு வந்ததே பெரிய தியாகம் என்று நான் நினைத்தேன். அவருடைய வாழ்க்கையில் எத்தனையோ தியாகங்கள் செய்திருக்கிறார் என்பதைப் பின்னால் உணர்ந்தேன். ஜெயிலில் இருந்த பொழுது, அவர் பிரதம மந்திரியாக இருந்த சமயம் நடந்த சம்பவம் ஒன்றை என்னிடம் சொன்னார்.

1929ஆல், டாக்டர் பிரதம மந்திரியாயிருந்த சமயம், புது வருஷப் பட்டங்கள் வழங்கும் சந்தர்ப்பம். இரவு கவர்னரின் அந்தரங்கக் காரியதரிசியிடமிருந்து ஒரு 'போன்' செய்தி வந்தது. அவருக்கு 'ஸர்' பட்டம் கிடைத்திருப்பதற்காகக் காரியதரிசி ஸ்ரீ. கிரீன், டாக்டருக்கு வாழ்த்துத் தெரிவித்தார்.

'உடனே நான் கவர்னரைப் பார்க்கவேண்டும்!' என்றார் டாக்டர்.

'இப்பொழுதா? இரவு பத்து மணிக்கா?'

'ஆம், நான் லார்டு கோஷனைப் பார்த்துத்தீர வேண்டும்!'

'சரி!'

இரவு பத்து மணிக்கு மேல் கவர்னர் மாளிகைக்குப் போனார் நமது டாக்டர்.

லார்டு கோஷன் திகைத்தார்.

'இது என்ன இது? எனக்கு "ஸர்" பட்டமா?'

'ஆம்!' என்று சந்தோஷத்துடன் தெரிவித்தார் கோஷன் பிரபு.

'வேண்டியதில்லை!'

கவர்னருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை; ஆச்சரியப்பட்டார். இந்தியாவில் ஒரு மாகாண மந்திரி 'ஸர்' பட்டத்தை மறுக்கிறார்! கவர்னரால் இதை நம்ப முடியவில்லை. மேலும், கவர்னர் வைசிராயிடத்தில் இதை எப்படிச் சொல்லுவார்?

'என்னுடைய பெயரைக் கண்டிப்பாய் அடித்துவிட வேண்டும்'! என்று சொல்லிவிட்டு டாக்டர் போய்விட்டார்.

அன்று இரவு பத்திரிகைகளுக்குக் கொடுத்த புது வருஷப் பட்டங்களின் ஜாபிதாவில் டாக்டருடைய பெயரின் மேல் துண்டுக் காகிதம் ஒன்றை ஒட்டி மறைத்திருந்தார்கள்.

சில தினங்களுக்குப் பின்னால் ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயனைக் கவர்னர் மாளிகையில் சந்தித்த லார்டு கோஷன், 'தங்களை "லேடி சுப்பராயன்" என்று நான் அழைக்கும் பெருமையை எனக்குத் தங்கள் கணவர் டாக்டர் சுப்பராயன் மறுத்துவிட்டார் என்பது தங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டார்.

'தெரியாதே! அப்படி அவர் மறுத்திருந்தால், அது முற்றிலும் சரிதானே! அரசியலிலிருந்து விலகும் ஒருவருக்குத்தான் பட்டம் வேண்டும். என்னுடைய கணவருக்குத் தேச சேவை செய்துவருவதற்கு இன்னும் எத்தனையோ வருஷங்கள் இருக்கின்றனவே! இப்பொழுது அவருக்கு

எதற்காகப் பட்டம்?...இந்தச் சம்பவத்தை என்னிடத்தில் கூடச் சொல்லவில்லையே அவர்!'

ஸ்ரீமதி ராதாபாய் அம்மையார் டாக்டரின் மனோ பாவத்தை முழுதும் ஒத்திருப்பவர்.

தம்முடன் கூட இருந்த இரண்டு மந்திரிகள் இன்னும் அவருடைய செய்கையை மன்னிக்கவில்லை யென்று டாக்டர் என்னிடம் சொன்னார். அந்த இரண்டு மந்திரிகளுக்கும் 'ஸர்' பட்டம் கிடைப்பதை நமது டாக்டர் தடுத்ததாக அவர் களுக்கு எண்ணம். ஓரளவு உண்மைதானே! அதற்கு முன் னெல்லாம் முதல் மந்திரிக்கு 'ஸர்' பட்டம் கொடுத்துவிட்டு, ஆறு மாதங்களுக்கு அப்பால் மற்ற மந்திரிகளுக்குக் கொடுப்பார்கள். ஆனால் முதல் மந்திரியே வேண்டாமென்று சொன்னதால், மற்ற மந்திரிகளுக்குக் கொடுப்பது சம்பிர தாயத்திற்கு விரோதம் அல்லவா?

ஜெயிலில் டாக்டர் சுப்பராயன் எப்பொழுதும் ஒரு சாதாரணக் கதர் பனியனும், கால் சட்டையும் அணிந்து கொண்டிருந்தார். ஜெயிலிலுள்ள ஒவ்வொருவரிடமும் அவர் நேரில் பேசிப் பழகினர். யாரைக் கண்டாலும் ஓரிரண்டு வார்த்தைகள் பேசாமல் இருக்கமாட்டார். அவர் ஆங்கிலம், பிரெஞ்ச், லத்தீன், தமிழ் முதலிய பாஷைகளில் விசேஷப் பாண்டித்யம் பெற்றிருக்கிறார். அவருடைய மேஜையில் ஏராளமான புஸ்தகங்கள் இருந்தன. ஜெயிலுக்கு வந்தபின் சமஸ்கிருதம் கற்கத் தொடங்கி, நூற்றுக்கணக்கான ரூபாய் களுக்குப் புஸ்தகங்கள் வாங்கிவிட்டார்.

விளையாட்டுக்களிலே அவருக்கு அத்யந்தப் பிரியம். கிரிக்கெட், டென்னிஸ், கோல்ப், பில்லியர்ட்ஸ் முதலியவை ஆடுவார். ஆனால் கிரிக்கெட்டில்தான் அவருக்கு மோகம். முன்பெல்லாம் அகில இந்திய கிரிக்கெட் பெடரேஷனுக்கு கிரிக்கெட் தெரியாத சுதேச மன்னர்கள்தான் தலைவர்களா

யிருந்து வந்தார்கள். இவர் தலைவராக வரும்பொழுது கோடிக்கணக்கான சமஸ்தான வரும்படியைச் சாப்பிட்டுவந்த சுதேச மன்னர்கள் இவரைப் பார்த்துப் பொறுமை கொண்டார்கள்; கேலியும் செய்தார்கள். 'அந்நிய நாட்டிலிருந்து கிரிக்கெட் கோஷ்டிகள் வரவழைக்க வேண்டுமானால் லட்சக் கணக்காகப் பணம் வேண்டுமே — இவர் என்ன செய்கிறார் பார்க்கலாம்!' என்றுகூட வரட்டு ஜம்பம் பேசினார்கள். ஆனால், நமது டாக்டருக்குச் சுதேச மன்னர்களிடையேயும் பல ஆப்த நண்பர்கள் இருக்கிறார்கள். எல்லோரும் ஆச்சரியப்படும்படியாக, பெடரேஷன் நிர்வாகத்தை இவர் நடத்தி வருகிறார். இவர் திரும்பவும் சென்னை கிரிக்கெட் பெடரேஷனுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்ற செய்தியை ஒரு நாள் ஜெயில் ரேடியோவில் கேட்டோம்.

மூன்று நாட்கள் சென்னைக்கும் மகாராஷ்டிரத்திற்கும் 'ரஞ்சி ட்ரோபி' என்ற பரிசுப் போட்டி நடந்துகொண்டிருந்தது. சேப்பாக்கத்தில் போடும் ஒவ்வொரு பந்தையும் நமது டாக்டர் ரேடியோவில் பார்த்தார். 'எனக்கு இந்தப் போட்டியைப் பார்த்துக்கொண் டிருப்பதாகவே தோன்றுகிறது!' என்றார். சென்னையில் உள்ளவர்கள் 'அவுட்' ஆகும்பொழுதெல்லாம் கையைப் பிசைந்துகொள்வார். கிரிக்கெட் பயித்தியம் பிடித்தவர் போல் அவர் இருந்தார். ஆனால் போட்டி முடிந்ததும், 'எந்தக் கட்சி ஜெயிக்க வேண்டுமோ அந்தக் கட்சிதான் ஜெயித்தது என்பதில் சந்தேகமில்லை. நமது சென்னைப் பையன்கள் அடுத்த தடவை இன்னும் நன்றாக ஆடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்' என்று சொன்னார் டாக்டர். ஸ்ரீ. சுப்பராயன் ஜெயிலிலிருக்கும் பொழுது எப்பொழுதும் கிரிக்கெட் ஆடுவது போலவே ஞாபகம் கொண்டிருந்தார். திடீரென்று கையைத் தூக்கிக்கொண்டு 'போல்' செய்வார்; மட்டையைப் பிடிப்பது போல் கைகளை வைத்துக்

கொண்டு 'பேட்' செய்வார். யாராவது கிரிக்கெட்டைப் பற்றிப் பேசிவிட்டால், அவ்வளவுதான் — உடனே ஒரு பிரசங்கம் நடக்கும். சில புஸ்தகங்களையும் கொண்டுவந்து வாசிக்க ஆரம்பித்துவிடுவார். அவர் மிகவும் பிரியமாக வாசிப்பவை ஷேக்ஸ்பியர் நாடகங்களும், கிரிக்கெட் புஸ்தகங்களுந்தான்.

டாக்டர் சுப்பராயனுக்குக் குதிரைப் பந்தயங்களில் பிரியம் உண்டு. இவருக்குக் குதிரைப் பந்தயங்களில் இருக்கும் பிரியத்தைச் சிலர் தவறாக எண்ணுவார்கள். குதிரைப் பந்தயத்தில் இவர் பணம் கட்டுவதில்லையென்று சிறையில் உறுதியாகத் தெரிவித்தார். இவர் சென்னை 'ரேஸ் கிளப்பில்' 'ஸ்டீவார்டா' யிருக்கும் பொழுது, யுத்த நிதிக்குப் பணம் கொடுக்க வேண்டுமென்று ஒரு பிரேரணை வந்தது. அதை இவர் எதிர்த்துத் தோற்கடித்தார்.


'நல்ல குதிரைகள் உற்பத்தியாவதற்குக் குதிரைப் பந்தயம் அவசியம் என்று நான் கருதுகிறேன்' என்று டாக்டரிடம் சொன்னேன். 'உண்மைதான்' என்றார் டாக்டர். ஆனால், சத்தியாக்கிரகிகளில் ஒருவராவது எங்கள் கட்சியில் சேரவில்லை.

ஆறுமாதச் சிறைவாசத்திற்குப் பின்பு டாக்டர் சுப்பராயன் வெளியே யிருக்கிறார். அவர் விடுதலையானார்; ஆனால் தேசம் இன்னும் விடுதலை யாகவில்லை. இதை அவர் மறக்க முடியாது. அவர் விரும்பி யிருந்தால், பட்டத்திற்கு மேல் பட்டம், பதவிக்கு மேல் பதவி என்று பெற்று மகிழ்ந்திருக்கலாம். இதற்கு அவர் அரசாங்கத்திற்கு 'நல்ல பிள்ளையாக' நடந்திருக்க வேண்டும். ஆனால், டாக்டர் தேச சேவையில் ஈடுபட்டு நெடுந் தூரம் வந்துவிட்டார். எட்டாத உயரத்தில் நின்று லட்சியம் ஒளி வீசுகிறது. அந்த லட்சியத்தை எட்டிப் பிடிக்க, அவர் சிறிதும் தளராது முன்னேறுவார் என்பதில் ஐயமில்லை.

16. சிறையிலிருக்கும் சக்கரவர்த்தி

'எல்லோரும் ஓர் குலம்
எல்லோரும் ஓரினம்
எல்லோரும் இந்நாட்டு
மன்னர் — நாம்
எல்லோரும் இந்நாட்டு
மன்னர்!'

என்று பாடிவிட்டுப் போனார் பாரதியார். அடிமை நாட்டில் எல்லோரும் எப்படி மன்னர்களாக முடியும்? ஒவ்வொரு இந்தியனுடைய மனத்திலும், 'நான் ஓர் மன்னன்' என்ற எண்ணம் தோன்றவேண்டுமென்பதே பாரதியாரின் ஆசை. திருச்சியில் சிறைப்பட்டுக் கிடந்த அரசியல் கைதிகள் எல்லோருக்கும் இந்த மனப்பான்மை வந்துவிட்டது. அவர்கள் ராஜாக்க ளாகிவிட்டார்கள். சித்தூர் ஸ்ரீ. ராமகிருஷ்ண ராஜா, ஸ்ரீ. குமாரசாமி ராஜா இவர்களை நான் சொல்லவில்லை. பெயருக்கு முனையில் இயற்கையாகவே அவர்களுக்கு 'ராஜா' என்று அமைந்திருக்கிறது. தங்கள் செய்கைகளின் மூலம் எல்லா அரசியல் கைதிகளும் 'ராஜா' பட்டம் வாங்கிக் கொண்டார்கள். இந்த ராஜாக்களுக் கெல்லாம் ராஜாவாக விளங்குகிறார் ஒருவர். அவரைச் சக்கரவர்த்தி என்று அழைக்காமல் வேறெப்படி அழைப்பது? அந்தச் சக்கரவர்த்தியும் ஏற்கெனவே 'சக்கரவர்த்தி' என்ற தம் மூதாதையர்களின் பட்டத்தை உடையவர்தான். அவர்தான் நமது சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார். அவரைத்தான் 'ராஜாஜி' என்று நாமெல்லாரும் அன்புடன் அழைக்கிறோம்.



‘ராஜாஜி’



ஸ்ரீ. எஸ். சத்தியமூர்த்தி, எம். எல். ஏ.

ராஜாஜி கைது செய்யப்பட்ட பொழுது, ஜெர்மன் ரேடியோ அந்தச் செய்தியை, 'ராஜா ஆப் கோபாலபுரம் என்பவர் கைது செய்யப்பட்டு, ஒன்றரை வருஷம் தண்டனை விதிக்கப்பட்டு, ஒரு சுரங்கத்தில் தள்ளப்பட்டார்!' என்று அறிவித்தது.

ராஜா, ராஜாஜி, சக்கரவர்த்தி எதுவாயினும் சரி, திருச்சி சிறையிலே அவர் உண்மையாகவே சக்கரவர்த்தியாக விளங்குகிறார். மேதாவிகளும் படிப்பாளிகளும் நிறைந்தது திருச்சி முகாம் ஜெயில். இவர்களெல்லோரும் ராஜாஜியிடம் பணிவுடனும் மரியாதையுடனும் நடந்துகொள்கிறார்கள். காரணம்? அவருடைய சீரிய நடத்தைதான் நம் மனத்தைக் கவர்ந்து பணியவைக்கும் அபூர்வ சக்தி.

ராஜாஜிக்கு 62 வயதாகிறது. காலே $5\frac{1}{2}$ மணிக்கு ஒரு நாளும் அவரைப் படுக்கையில் காண முடியாது. காப்பி சாப்பிட்டு முடிந்ததும் 'வால்மீகி' வகுப்பு ஆரம்பமாகிவிடும்; 10 மணி வரை நடக்கும். பிறகு, சாப்பிடும் இடத்திற்கு, ஒரு கையில் பீங்கான் தட்டுடனும், மற்றொரு கையில் உட்காருவதற்குரிய சிறிய கோரைப் பாயுடனும் அவர் புறப்படுகிறார். எல்லோருடனும் இருந்து சாப்பிடுகிறார். அவர் சாப்பிடுவது புனர் பாகம் செய்த சாதம். அதிலும் மிகக் குறைவாகவே உண்ணுகிறார். பகல் 12 மணி முதல் 1 மணி வரை ஷேக்ஸ்பியரும் உருது வகுப்புக்களும் நடத்துகிறார். உஷ்ணம் அதிகரிக்கவே ராஜாஜி நீல நிறக் குட்டை யொன்றைத் தண்ணீரில் நனைத்துத் தலையில் கட்டிக்கொள்வார். ஏனெனில் ஐஸ், மின்சார விசிறி இவைகள் ஜெயிலில் அனுமதிக்கப் படவில்லை. சரியாக 3 மணிக்கு 'கிளாசரி' வகுப்பு. பௌதிகம், பூகோளம், ரஸாயனம் இவை போன்ற எல்லா சாஸ்திரங்களிலுமுள்ள பல ஆங்கில வார்த்தைகளுக்குச் சரியான தமிழ்ப் பதங்கள் கண்டுபிடிப்பது இந்த வகுப்பின் வேலை.

இந்த வகுப்பு 2 மணி நேரம் நடக்கிறது. அப்பால் சாப் பாட்டு மணி அடிக்கும்வரை குறள், சிலப்பதிகாரம், கம்ப ராமாயணம், பெரிய புராணம், பாரதியார் பாட்டுக்கள் இவை களைக் கொண்ட சில வகுப்புக்கள் நடக்கும். சாப்பிட்ட பின் ஆங்கிலக் காவியங்கள், காளிதாசனின் சாகுந்தலம், உபநிஷ தங்கள் இவைகளில் ஒன்றிரண்டு நடைபெறும். இத்தனை வகுப்புக்களிலும் ராஜாஜி கலந்துகொள்கிறார் என்பது மாத் திரமில்லை ; அவ்வளவையும் ராஜாஜியே நடத்தி வருகிறார். இவ்வளவுக்கும் பின்னால் ராஜாஜி நித்திரையும் செய்கிறார்.

வேலை மிகுதியால் அவர் களைப்படைந்து விடுவார் என்று நினைப்பது சகஜந்தானே ! அதுதான் இல்லை. அவர் தம்முடைய சொந்த வேலைகள் அனைத்தையும் தாமே செய்து வருகிறார். பிளேட்டுகளைக் கழுவுகிறார். படுக்கை தட்டிப் போட்டுக் கொள்கிறார். ஒரு நாள் இரவு படுக்கை தட்டிப் போடும் பொழுது, மட்டப்பாறை அய்யர், ‘நான் போடட்டு மா ?’ என்று போனார். ‘வேண்டாமே ! என்னுடைய வேலை களை நான் செய்யக்கூடிய சக்தியை இன்னும் இழந்துவிட வில்லை !’ என்று சொன்னார் ராஜாஜி.

ராஜாஜி முதலில் கைது செய்யப்பட்டது 1921-ஆம் வருஷம் டிஸம்பர் மாதம். ஜெயிலில் கைதியின் சரித்திரத் தைக் குறித்து வைக்கும் அட்டைக்கு ‘ ஹிஸ்டரி போர்டு ’ என்று பெயர். ராஜாஜியின் ‘ ஹிஸ்டரி போர் ’டில் அதிகா ரிகள் என்ன எழுதி வைத்திருக்கிறார்கள் தெரியுமா ?

ரிஜிஸ்டர் நம்பர் - 8398
அனுமதித்த தேதி - 21—12—21
அப்பீல் செய்ய
மறுத்த தேதி - 24—12—21

பெயர் - ஸி. ராஜகோபாலாசாரி,
இந்திய தேசிய காங்கிரஸ்
பொதுக் காரியதரிசி.
படிப்பு - ஸி.

'ஸி' என்றால் எழுதப் படிக்கத் தெரியாது என்று அர்த்தம்!

'இந்தியாவில் மிகவும் முக்கியமான அரை டஜன் மனிதர்களில் ராஜாஜியும் ஒருவர்' என்கிறார் ஜான் கந்தர் என்ற புகழ்பெற்ற பத்திரிகை நிருபர். இதே ராஜாஜியைத்தான், எழுதப் படிக்கத் தெரியாத கைதி என்றார் வேலூர் சிறை அதிகாரி. நமக்கு என்ன தோன்றுகிறது? அந்த வேலூர் சிறை அதிகாரியைப் பார்த்து, ராஜாஜி எழுதியுள்ள 'தம்பீ வா!' 'இதையும் படி' என்ற புஸ்தகங்களைப் படிக்கச் சொல்லலாம் போல் தோன்றுகிறது அல்லவா?

ராஜாஜி 1921-ஆம் வருஷம் ஜெயிலில் இருந்தார். 1941-ஆம் வருஷமும் ஜெயிலில் இருக்கிறார். இதற்கிடையிலும் ஜெயிலில் இருந்திருக்கிறார். இன்னும் எத்தனை எத்தனை சிறைகளில் இருக்க நேருமோ, தெரியாது.

'ஜெயிலில் இருக்கும் பொழுது உங்கள் உடம்பைப் பற்றி நீங்கள் அடிக்கடி நினைப்பீர்கள். ஜெயில் அதிகாரிகள் கொடுக்கும் சின்னஞ் சிறு கஷ்டங்கள் மிக அதிகமாக இருக்கும்' என்று ஒரு சமயம் ராஜாஜி சொன்னார். சிறை வாழ்க்கை அனுபவித்தவர்களுக்குத்தான் இதன் உண்மை தெரியும்.

திருச்சி சிறையில் மூட்டைப் பூச்சிகள் லட்சக் கணக்கில் பெருகிவிட்டன. இவைகளைத் தொலைப்பதற்கு 'பிளிட்' வேண்டுமென்று ராஜாஜி கேட்டார். ஏற்கனவே வேஷ்டிகள் துவைப்பதற்குக்கூட ஸோப் கொடுப்பதற்கு மறுத்த சிறை அதிகாரிகள் இதையும் கொடுக்க மறுத்துவிட்டார்கள்.

ராஜாஜி கவர்ண்மெண்டுக்கு ஒரு தந்தி கொடுத்தார். 'பிளிட், ஸோப் போன்ற சுகாதாரத்திற்குரிய வசதிகள் சொந்தச் செலவிலும் ஜெயிலில் மறுக்கப்படுகின்றன. உடனே கொடுக்கும்படி ஜெயில் சூப்பிரண்டுக்கு உத்தரவு செய்யுங்கள்' என்று எழுதி, தம்முடைய சொந்தச் செலவில் தந்தியை அனுப்பும்படி ஜெயில் சூப்பிரண்டுக்கு அனுப்பினர். ஜெயில் சூப்பிரண்டைத் தவிர வேறு கதிதான் ஒன்றுமில்லையே! ஆனல் ஜெயில் அதிகாரிகள் என்ன நினைத்தார்களோ? மறு நாள் காலையில், ஜெயில் டாக்டர், கையில் 'பிளிட் கன்'னும் 'லோஷ'னும் எடுத்துக்கொண்டு, 'என்னென்ன செய்யவேண்டும், சொல்லுங்கள்! காத்துக்கொண்டிருக்கிறேன்!' என்று கூறும் முகபாவத்துடன் வந்து சேர்ந்தார்.

'கரையாளர்! உங்கள் கட்டிலைத் தூக்கி வெளியில் போட்டு உங்கள் பிளாக்கிலுள்ள எல்லோருக்கும் வழி காட்டுங்கள்......ஹூம்...' என்ருர் ராஜாஜி.

சில தினங்களில் மூட்டைகள் எல்லாவற்றையும் ஒழித்துவிட்டோம். மனிதர் ரத்தத்தை உறிஞ்சும் பூச்சி வர்க்கத்தை ஒழிப்பதில் ராஜாஜிக்கு எவ்வளவு திறமை இருக்கிறது!

'எவ்வளவோ கட்டுத் திட்டங்களுடன் வாழ்ந்தும், ஜெயிலைப் பற்றியும் நம்முடைய தேசத்தின் நிலைமையைப் பற்றியும், எனக்கு நானே எவ்வளவு சமாதானம் சொல்லிக் கொண்டாலும், திடீரென்று சில சமயம் என் ஹிருதயம் பல ஹீனம் அடைகிறது. அதற்கு ஒருவிதமான காரணமும் சொல்வதற்கில்லை' என்று தம்முடைய முதல் ஜெயில் வாழ்க்கையைப் பற்றி ராஜாஜி சொன்னர். ஆனல் திருச்சி சிறையில் சதா சந்தோஷமாக இருக்கிருர். ஸ்ரீ. நாகப்பாவைத் தனியே வைத்துக்கொண்டு சில சமயம் ஷேக்ஸ்பியர் சொல்லிக்கொடுக்கிருர் என்ருல், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்.

ஒரு நாள், ஸ்ரீ. கே. வி. ஆர். சாமி சாப்பிட்டுக்கொண் டிருந்தார். இவர் அஸெம்பிளியில் நாள் ஒன்றுக்குச் சராசரி 10, 15 கேள்விகள் கேட்பார். ஒவ்வொன்றுக்கும் உப கேள்விகளும் போட்டுவிடுவார். 'இவருக்கு இன்னும் கொஞ்சம் சாதம் போடுங்கள். நன்றாகச் சாப்பிட்டால்தான் உபகேள்விகள் கேட்க முடியும்!' என்றார் ராஜாஜி. 'இந்தச் சாப்பாட்டைச் சாப்பிட்டால் உபகேள்விகள் கேட்பதற்கு இவர் உயிருடன் இருக்கமாட்டாரே!' என்றார் இன்னொரு சத்தியாக்கிரகி. 'இருந்தாலும் முன்னால் கேட்ட ஆதிக் கேள்விகள் இருந்துதானே தீரும்! அவைகள் போதாவோ?' என்றார் ராஜாஜி.

எல்லோரும் சிரித்தார்கள்.

சங்கீதமும், சமஸ்கிருதத்தில் கொஞ்சம் பாண்டித்யமும் சிறை வாழ்க்கைக்கு மிகவும் அவசியமென்று ராஜாஜி கருது கிறார். சமஸ்கிருத காவியங்களிலுள்ள அரிய பொக்கிஷங் களை ராஜாஜி அடிக்கடி பார்த்து அநுபவிக்கிறார். 'வேறு ஒருவரும் பாடுவதற் கில்லையானால் ஸ்ரீ. அண்ணாமலைப் பிள்ளையின் சங்கீதமாவது வேண்டும்!' என்று கட்டாயப் படுத்துகிறார்.

அரசியல் சம்பந்தமாக ராஜாஜி சிறையில் எப்படி நடந்து கொள்கிறார்?

'சென்னையில் நடந்த முஸ்லிம் லீக் மகாநாட்டின் அக்கி ராசனப் பிரசங்கத்தைப் படித்தீர்களா?' என்று, அந்தப் பிர சங்கம் பத்திரிகைகளில் வந்த தினத்தில், இன்னொரு மாஜி மந்திரி ராஜாஜியைக் கேட்டார். 'நான் படிக்கவில்லை' என் றார் ராஜாஜி. ஒருவேளை பின்னால் படித்திருப்பார். 'ஜெயிலுக் குள்ளே வரும்பொழுது அரசியலை நாம் மறந்துவிட வேண் டும்' என்பதுதான் ராஜாஜியின் அபிப்பிராயம். தற்கால அர சியல் நிலைமையைப் பற்றி அபிப்பிராயம் கூற அவர் கண்டிப்

பாக மறுக்கிறார். 'மீண்டும் சிறைக்கு வரவேண்டியது தானே! தங்களுடைய அபிப்பிராயம் என்ன?' என்று விடுதலையாகும் சத்தியாக்கிரகக் கைதிகள் அவரைக் கேட்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் அவர் ஒரே மாதிரியான பதில் தான் சொல்லுகிறார்: 'நானும் உங்களைப் போலவே சிறையில் இருந்துகொண்டிருக்கிறேன். பத்திரிகை மூலமாகக் கிடைப்பதைத் தவிர வேறு ஒரு தகவலும் எனக்குத் தெரியாது. உள்ளே இருந்துகொண்டு வெளியிலுள்ள நிலைமையைச் சரிவர அறிந்து ஒரு முடிவு கட்டுவது முடியாது. உங்களுக்கு எத்தகைய அபிப்பிராயமும் கூற முடியாது. ஆனால் ஒன்றுமாத்திரம் நிச்சயம். காந்திஜி ஒருபோதும் தவறான வழியில் நம்மை அழைத்துச் செல்லமாட்டார். அவரோ வெளியில் இருக்கிறார். அவர் இஷ்டப்படி நடவுங்கள். ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் அவரை நேரில் கண்டு பேசித் தீர்த்துக்கொள்ளுங்கள்.'

இதுதான் சத்தியாக்கிரகத்தைப் பற்றி அவருடைய அபிப்பிராயம். இப்படியிருக்க, பம்பாயில் நடந்த ஒரு மகாநாட்டில் என்னவோ தீர்மானம் நிறைவேற்றினால் அதற்கும் ராஜாஜிக்கும் சம்பந்தம் ஏற்படுத்துவது கோகுலாஷ்டமிக்கும் குலாம் காதருக்கும் முடிச்சுப் போடுவதுதான்!

'உங்களுக்கு எங்கேயாவது உளுக்கிக்கொண்டதா? தோல் சம்பந்தமாக வியாதி இருக்கிறதா? உடம்பு நோகிறதா? இதோ இங்கே வாருங்கள். நான் குணப்படுத்திவிடுகிறேன்' என்று யாராவது திருச்சி சிறையில் உங்களைக் கூப்பிட்டால் அவர்தான் ஆந்திர கேசரி ஸ்ரீ. பிரகாசம்.

காலை 4 மணி முதல் இரவு 11 மணி வரை வேலை செய்து வருகிறார். காலை 5 மணிக்கு ஜெயிலைச் சுற்றி நடந்துகொண்டிருப்பார். இரவு பத்துமணிக்கு மேல் திரும்பவும் அதே

மாதிரி நடக்கிறார். இடையில் எத்தனையோ வேலைகள் செய்கிறார். ஹரிஜனங்களைக் கூட்டிவைத்து வகுப்பு நடத்திக்கொண்டிருப்பதில் அவருக்கு அலாதியான இன்பம்.

ஒத்துழையாமை இயக்கத்தில் சேரும் சமயத்தில் பாரிஸ்டரா யிருந்த இவர், மாதம் ஒன்றுக்கு ரூ. 8000 சம்பாதித்துக்கொண்டிருந்தார். காங்கிரஸ் மந்திரி சபையில் மாதம் ரூ. 500-க்கு வேலை பார்த்தார். அரசாங்கத்தார் இவருக்காக ஜெயிலில் மாதம் ஒன்றுக்கு ரூ. 9 செலவழிக்கிறார்கள்!

கொஞ்சம் பெரிதான நீல நிஜாரும் ஷர்ட்டும் அணிந்துகொண்டு, ஜெயிலில் பம்பரம் போல் சுற்றிக்கொண்டு வருகிறார் மாஜி மந்திரி ஸ்ரீ. வி. வி. கிரி. சாயங்கால நேரத்தில் வேலை செய்யும் கைதிகளுக்குத் தம் கையாலேயே சாதம் பரிமாறிவிட்டுத்தான் அவர் சாப்பிட உட்காருவார். இன்ஸ்பெக்டர் ஜெனரல் அல்லது அட்வைஸர் வரும்பொழுது ஏதாவது சொல்லவேண்டுமானால், அதற்கு ஸ்ரீ. கிரியைத்தான் நாங்கள் ஏற்பாடு செய்வது வழக்கம். 'நான் சொல்வதை அட்வைஸர் கேட்கவில்லையானால் அதற்கு வழி என் கையில் இருக்கிறது. உங்களுக்குச் சொல்லுகிறேன். அழகாக ஒரு "ஸ்டிரைக்" நடத்திக் காண்பித்துவிடுவேன். இவர்கள் அப்பொழுது வழிக்கு வந்துவிடுவார்கள்' என்று சொல்லுவார் ஸ்ரீ. கிரி. நல்லவேளையாக 'ஸ்டிரைக்' ஒன்றும் நடக்கவில்லை!

மாஜி விவசாய மந்திரி ஸ்ரீ. முனிசாமி பிள்ளை சத்தியாக்கிரகிகள் அனைவருக்கும் நூற்பதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்தார். ஜெயிலிலிருந்தாவது விடுதலை யடையலாம்; ஆனால் இவர் கையில் ஒரு சிட்டம் நூல் கொடுக்காவிட்டால், ஒரு சத்தியாக்கிரகியையும் 'விடுதலை' செய்ய

மாட்டார். சிட்டங்களை அவர் காந்திஜிக்கு அனுப்பப் போகிறாராம்.

ஸ்தல ஸ்தாபன மந்திரியாயிருந்த ஸ்ரீ. பி. கோபால்ரெட்டி தமிழ் அதிகமாய்ப் படித்துக்கொண்டிருக்கிறார். அவர் தமிழ்ப் படிக்கும் வேகத்தில், எங்கள் பிளாக்கிலிருந்த 'பெண்'ணை அடித்துக்கொண்டு போய்விட்டார். கேட்டால், 'முடியாது, நான் படித்துவிட்டுத்தான் கொடுப்பேன்!' என்கிறார்.

நமது மந்திரிகளிலே டாக்டர் ராஜன் ஒரு தனி ரகம். ஓட்டம் சாட்டமுள்ள இடங்களில் அவரைக் காண முடியாது. பனியன்கூட அணியாமல், ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்தபடியே, அவர் ஏதாவது எழுதிக்கொண்டேயிருப்பார். கிராமவாசிகள் தாமாகவே படித்து அப்பியாசம் செய்து கொள்வதற்கு ஏற்ற 'கிராம வைத்தியன்' என்ற நூலை அவர் தமிழில் எழுதிக்கொண்டிருக்கிறார். எழுத்து வேலையை விட்டால், தக்ளியில் நூல் நூற்றுக்கொண்டிருப்பார்.

ராஜாஜிக்குக் காப்பிதான் உயிர் என்பது தமிழ்நாடு முழுவதும் அறிந்த விஷயம். அந்தக் காப்பியைத் தினந்தோறும் காலை 6-30 மணிக்கு ராஜாஜிக்குக் கொண்டுபோய்க் கொடுக்கும் சேவையை டாக்டர் ராஜன் செய்து வருகிறார். எனவே, அவர் சிறையில் ராஜாஜியின் உயிர்க் குயிராக விளங்குகிறார் என்று சொல்லலாம். ஸ்ரீ. ராஜனிடமிருந்து காப்பி வாங்கிக் குடித்த பிறகுதான் ராஜாஜிக்கு உயிர் வரும்.

ஸாவர்க்கர், வ. வெ. சு. அய்யர் முதலிய தீரர்களோடு சீமையில் வாழ்ந்துவந்த டாக்டர் ராஜன், திருச்சியில் சிறைக் கோட்டத்தில் எங்களுடன் வசித்துவந்தார் என்பது எங்களுக்கு ஒரு பாக்கியமல்லவா?



கே. கணேசன்,
பி.ஏ., பி.எல்.




க. சந்தானம்

பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ.

ஏப்ரல் மாதம் 13-ஆம் தேதி தமிழ்ப் புது வருஷம். காலை $7\frac{1}{2}$ மணி. என்னுடைய பிளாக்கிலிருந்து வெளியே பார்த்தேன். ஸ்ரீ. முனிசாமி பிள்ளை, கையில் ஒரு தட்டுடன், ஸ்ரீ. பிரகாசம் பக்கம் திரும்பி நின்றுகொண்டிருந்தார். அந்தத் தட்டிலிருந்த குங்குமத்தை எடுத்து ஸ்ரீ. பிரகாசம் ராஜாஜிக்கு ஒரு திலகம் இட்டு ஆசீர்வதித்தார். இந்த அன்பு நிறைந்த காட்சியில் ஆந்திர - தமிழ் - ஹரிஜன ஐக்கியத்தைக் கண்ட நான் மனம் உருகிப் போனேன். சிறையிலிருக்கும் சக்கரவர்த்தியின் வாழ்வில் மிகவும் பிரகாசமான நாள் இது என்பதை எத்தனை பேர் அறிவார்கள்!

'என்ன, பார்த்துக்கொண்டேயிருக்கிறீர்கள்! பத்திரிகைக்கு எழுதிவிடலாம் என்ற எண்ணமா?' என்று ஸ்ரீ. முனிசாமி பிள்ளை என்னைக் கேட்டார். 'இல்லை! இல்லை! புஸ்தகமாகவே போட்டுவிடலாம் என்ற ஆலோசனைதான்!' என்றேன். சிரித்துக்கொண்டே அவர் உள்ளே போய்விட்டார்.



17. 'போய் வருகிறேன்!'

நான் ஜெயிலிலிருந்து விடுதலையாவதற்கு முதல் நாள், மே மீ 22-உ. எனக்கு முன்பு விடுதலையான நண்பர்க ளெல்லாம் ஒரு வழக்கத்தை ஏற்படுத்திவிட்டார்கள். சுமார் 200 அரசியல் கைதிகளிடத்திலும் போய்த் தனித் தனியாக விடைபெற்றுக் கொள்ளும் வழக்கம் இருந்து வந்தது. இந்த வேலையைச் சில நண்பர்கள் இரண்டு மூன்று நாட்களாகவும் செய்து வந்தார்கள்.

ஒவ்வொருவரிடத்திலும் நாம் அநேகமாகப் பழகியிருப் போம். ஆறு மாசம் ஜெயிலில் தினம் தினம் சந்தித்து விட்டு, நம்முடைய வாழ்நாளில் மறக்க முடியாத ஓர் நட்பை ஏற்படுத்திக்கொண் டிருப்போம். ஆகவே, அவர்களிடத்தில் விடைபெற்றுக்கொள்ளும் பொழுது நம்முடைய உணர்ச்சி உச்சஸ்தானத்தை அடைகிறது. நாம் வெளியே செல்லு கிறோம்; மற்றவர்கள் உள்ளேயே யிருப்பார்கள்.

முதல் பிளாக்கில் இருந்த வக்கீல் ஸ்ரீ. சடகோபாசாரி யாரிடம் நான் விடைபெற்றுக்கொள்ளும் பொழுது ஜெயிலி லிருந்த நண்பர்களின் சித்திரங்கள் பல வரைந்திருப்பதை என்னிடம் கொடுத்தார். எம். ஏ. பி. எல். படித்த அட்வ கேட்டுக்குச் சித்திரம் எழுதும் அவ்வளவு திறமை இருந் ததைப் பற்றி நான் பிரமித்துவிட்டேன். டாக்டர் சுப்ப ராயன் 'ஆகாய கிரிக்கெட்' ஆடுவதை இவர் தம் பென்ஸிலால் வரைந்திருந்தார். ராஜாஜியை ஜெயிலில் அவர் சாதாரண மாக இருக்கும் உடையுடன் எழுதியிருந்தார். இன்னும் எத்தனையோ படங்கள்! இந்த அன்பர் சமஸ்கிருதம் படித்

தவர். தமிழும் படித்துச் சிலப்பதிகாரத்திற்கு ராஜாஜி யுடன் சேர்ந்து வியாக்யானம் செய்துகொண் டிருக்கிறார். இவருடைய மைத்துனர்கள் இரண்டு பேர், ஐ. ஸி. எஸ். பரீட்சையில் தேறி, வட இந்தியாவிலே உத்தியோகம் பார்க் கிறார்கள்.

இதே பிளாக்கில்தான் இருந்தார் ஸ்ரீரங்கம் முனிசிபல் தலைவர் ஸ்ரீ. சே. வாசுதேவன். இவ்வளவு சின்ன வயதில் இன்னொருவர் இந்தியாவில் எங்காவது ஒரு முனிஸிபா லிட்டிக்குத் தலைவராக இருப்பார் என்று எனக்குத் தோன்ற வில்லை. இவர் எப்பொழுதும் ஆங்கில நாவல்கள் படித்துக் கொண் டிருப்பார்; அல்லது 'பிரிட்ஜ்' ஆடிக்கொண் டிருப் பார். சாயங்காலமானால் ஒரு நிஜாரும் ஜோடும் மாட்டிக் கொண்டு நடக்க ஆரம்பித்துவிடுவார். இவர் எப்பொழுதும் இனிய முகத்துடனே யிருப்பார்.

அடுத்த பிளாக்கிலிருந்த மாஜி பார்லிமென்டரி காரிய தரிசி ஸ்ரீ. பக்தவத்சலத்தையும், ஸ்ரீ. அண்ணாமலைப் பிள்ளை யையும் பார்த்து விடைபெற்றுக்கொள்ளும் பொழுது எனக்கு ஓரளவு துக்கம் வந்தது.

ஸ்ரீ. அண்ணாமலைப் பிள்ளை ஜெயிலுக்கு வரும் பொழுது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசியாக இருந்தார். இன்னொரு காரியதரிசியான ஸ்ரீ. சத்தியமூர்த்தி சென்னைக் குப் போகவே, திருச்சி ஜெயிலில் இருந்த காரியதரிசி இவர் ஒருவர்தான். திருச்சியோ தமிழ் நாட்டின் மத்தியில் இருப் பது. ஜெயிலில் இருந்து விடுதலையாவோர்க் கெல்லாம், 15 அல்லது 20 பேர்களுக்குச் சேர்த்து, வாரா வாரம் ஒரு பிரிவுபசாரம் நடத்தி வந்தார்கள் ஸ்ரீ. பக்தவத்சலமும் ஸ்ரீ. அண்ணாமலைப் பிள்ளையும் சேர்ந்து. இவ்வளவு பொறுப்புத் தமக்கு உண்டு என்று ஸ்ரீ. அண்ணாமலைப் பிள்ளை நினைத் தார். ஸ்ரீ. பக்தவத்சலமும் அவருக்கு உதவியாக இருந்தார்.

ஸ்ரீ. அண்ணாமலைப் பிள்ளை சிறையில் ஆங்கிலம் கற்று வந்தார். ஆங்கிலத்தில் பிரசங்கம் செய்யவும் பிரயத்தனப் பட்டுக்கொண்டிருந்தார். தமிழில் அவர் பிரசங்கத்தைக் கேளாதவர் அபூர்வம். தமிழ் நாடெங்கும் அவர் பேச்சின் ஆவேசமும் அலைகளும் வீசிக்கொண்டே யிருந்தன. நெடு நாளாகத் தேசத்தொண்டு செய்துவருபவர் அவர். நிர்மாண வேலை, பிரசாரம், தேர்தல் போர், சட்டமறுப்பு, சிறை வாசம் - எல்லாம் அவருக்கு மிகவும் சகஜம்.

அடுத்த பிளாக்கில் இருந்தவர் தென் கன்னடத்தி லிருந்து வந்திருந்த ஸ்ரீ. ஸ்ரீனிவாச மல்லையாவும் மாஜி பார்லிமென்டரி காரியதரிசி ஸ்ரீ. ஏ. பி. ஷெட்டியும். ஸ்ரீ. மல்லையா கர்நாடக மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவர். நல்ல அறிவாளி. அவருக்கு ஒன்பது மாதம் சிறைத் தண்டனை.

முன்னால் கோரங்கியைப் பற்றி எழுதி யிருக்கிறேன் அல்லவா? அங்கே போனவுடன் நான் முதலிலே பார்த்தது சேலம் ஸ்ரீ. எ. சுப்பிரமணியத்தைத்தான். பல வருஷங் களுக்கு முன்னால் இவர் சென்னை டிராம் வண்டிகளுக்கு வர்ணம் பூசிக்கொண்டிருந்தார். பின்னால் தேச சேவையில் ஈடுபட்டு ஒப்பற்ற தொண்டு செய்திருக்கிறார். தமிழ் நாட்டி லுள்ள பிரசங்க மேடைகளிலெல்லாம் பிரபலம் பெற்ற ஸ்ரீ. சுப்பிரமணியம், பத்து வருஷங்களுக்கு முன்னால் கைவிடப்பட்ட சித்திரம் எழுதும் தொழிலை இப்பொழுது ஜெயிலில் மேற்கொண்டிருக்கிறார். சித்திரத்திற்கும் கையைப் பழக்கிவிட்டார். பார்த்தது பார்த்தபடியே சத்தி யாக்கிரகிகளைத் தம் நோட்டுப்புஸ்தகத்தில் போட்டு வைத் திருக்கிறார். இவருக்கு மணமாகி இரண்டு வருஷம் பூர்த்தி யாகவில்லை. எனினும், தாம் ஜெயிலுக்கு வந்தது போதா தென்று, தம் மனைவியும் சிறைபுக வேண்டுமென்று அவர்

விரும்பினர். ஆனல், சில தலைவர்கள் அதை விரும்பவில்லை யென்று எனக்குத் தெரியும். இதில் ஸ்ரீ. சுப்பிரமணியத் துக்கு ரொம்ப வருத்தம்.

கோரங்கியில் காலையிலே அபேதவாத வகுப்புக்கள் நடத்திக்கொண்டிருக்கும் இளைஞர் கூட்டம் ஒன்று உண்டு. இவர்களில் அநேகம் பேர் அனந்தப்பூர் ஜில்லாவிலிருந்து வந்திருந்தவர்கள். ஸ்ரீ. நாகி ரெட்டி என்ற இளைஞருக்கு சுமார் 20 வயது இருக்கும். காசியில் படித்துவிட்டு சட்டக் கல்லூரியில் வாசிக்கும்பொழுது அரசாங்கத்தாரால் ஜெயிலுக்கு அனுப்பிவைக்கப்பட்டவர். இவர் படிக்காமல் இருக்கும் நேரமே கிடையாது.

இந்த வகுப்புக்களிலே ஸ்ரீ. எம். ஆர். வெங்கடராமன் தான் முக்கியமாகத் தோன்றுபவர். இவர் கோயம்புத்தூர் விவசாயக் கல்லூரிக்குப் பிரின்ஸிபாலா யிருந்த ஸ்ரீ. ராம சாமி சிவன் குமாரர். சென்னையில் அட்வகேட்டா யிருந்தார். எல்லோரிடமும் கண்யமாகப் பழகுவார். சிறந்த அறிவாளி. நன்றாக விவாதிக்கும் திறமை யுடையவர். இவர் தீவிர அபேதவாதி என்பதில் எந்தவிதச் சந்தேகமும் கிடையாது. இவர் எங்களுடன் ஜெயிலில் இருக்கும் பொழுதே இவர்மீது இன்னொரு கேஸ் போடப்பட்டது. அதற்கு, மேலும் 18 மாதம் தண்டனையும் கிடைத்தது. அதே சமயத்தில் இவருடைய மனைவியும் இறந்துவிட்டார். சகிக்க முடியாத இந்தக் கஷ்டங்களையெல்லாம் பொறுத்துக்கொண் டிருக்கிறார் ஸ்ரீ. வெங்கடராமன். இவருடைய கொள்கை மாறவேண்டு மென்று இவருடைய தகப்பனர் சில புஸ்தகங்களை ஜெயி லுக்கு அனுப்பியிருந்தார். தந்தைக்கு ஸ்ரீ. வெங்கடராம னிடத்தில் இன்னும் நம்பிக்கை இருக்கிறது. ஆனல், ஸ்ரீ. வெங்கடராமன் கொள்கை மாறுவார் என்று எனக்குத் தோன்றவே யில்லை.

திண்டுக்கல் சட்டசபை அங்கத்தினர் ஸ்ரீ. குப்புசாமி அய்யரின் குமாரர் ஸ்ரீ. கணேசன் கோரங்கியில்தான் இருந்தார். அட்வகேட் கணேசன் யாரிடமும் வெகு சுலபமாகப் பழகிவிடுவார். அவருடைய முகத்தைப் பார்த்து எந்தச் சித்திரகாரனும் ஒரு படம் போடவேண்டும் என்று எண்ணுவான். சித்திரகாரர்கள் முதலில் படம் போட்டுப் பழக வேண்டுமானால், ஸ்ரீ. கணேசன் முகத்தைப் போட்டுப் பழகலாம். அவ்வளவு முக்கியமான முகம். ஒரு சரிவிலே அவரைப் பார்த்தால், அப்படியே உங்களுக்குப் பிடித்துவிடும். உலகத்திலே சில பேர்களுடைய முகங்களைப் பார்த்தால் மறக்கவே முடியாது. அந்த முகங்களில் ஒன்று ஸ்ரீ. கணேசனின் முகம். இவர் ஜெயிலுக்கு வந்தபின் கிராப்பு வைத்துக்கொண்டார். இவரிடம் நான் மிகவும் துக்கத்துடன் விடை பெற்றுக் கொண்டேன். நான் மிகவும் நெருங்கிப் பழகிய நண்பர்களில் இவர் ஒருவர்.

மதுரை ஜில்லா போர்டுத் தலைவர் ஜனாப் அப்துல் காதரிடம், நான் 'போய் வருகிறேன்' என்று சொன்ன பொழுது, வியப்புடன் பார்த்தார். 'நாமுந்தான் சத்தியாக்கிரகம் செய்தோம். இவரும் செய்தார். இவர் மாத்திரம் ஏன் ஆறுமாதத்தில் போகவேண்டும்?' என்று சொல்வது போல் தோன்றிற்று. இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மாத்திரமல்லாமல், டவுன் நியூஸன்ஸ் சட்டப்படியும் இவர் கைதிசெய்யப்பட்டவர்!

ஜனாப் அப்துல் காதர் வத்தலக்குண்டில் பெரிய பணக்காரர். இவருக்கு முதலில் 'பி' வகுப்பு அளிக்கப்பட்ட பொழுது அநேகர் ஆச்சரியப்பட்டார்கள். அவ்வளவு சுக வாழ்வு நடத்தியவர். ஜெயிலுக்கு வந்த பொழுது, அதுவும் வேலூரில் இருக்கும் பொழுது, மிகவும் தளர்ந்திருந்தார். திருச்சிக்கு வந்ததும் உடல் நிலை திருந்திச் சந்தோஷமா

யிருந்தார். இந்தப் பெருஞ் செல்வர் தம்முடைய எல்லா வேலைகளையும் தாமே செய்துவருகிறார்.

மத்திய சட்டசபை அங்கத்தினர் ஸ்ரீ. அனந்தசயனம் அய்யங்கார் மிகவும் சாதாரணமாகப் பழகும் அசாதாரண மனிதர். காலையில் கோரங்கிக் கிணற்றில் தண்ணீர் இறைக்கும் கைதிகளுக்குத் தேசீயப் பாட்டுக்கள் பாடுகிறவர் இவர்தான். அந்தப் பாடல்களைப் பாடிக்கொண்டே அத்தனை கைதிகளும் தண்ணீர் இழுப்பார்கள். ‘சாமி அய்யா பாடும் போது எங்களுக்குத் தண்ணீர் இழுக்கும் கஷ்டமே தெரியவில்லை’ என்று ஒரு கைதி சொன்னான்.

மற்றொரு மத்திய சட்டசபை அங்கத்தினர் ஸ்ரீ. கே. சந்தானம். இவர் ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஆசிரியரா யிருந்தவர். நான் ஜெயிலைவிட்டு வரும்பொழுது இவர் கோரங்கியிலேயே இருந்தார். தீர்க்கமாக சமஸ்கிருதம் படித்திருந்த சிலருள் ஸ்ரீ. சந்தானம் ஒருவர். இவர் எப்பொழுதும் நூல் நூற்றுக்கொண்டிருப்பார்; படித்துக்கொண்டிருப்பார்; அல்லது ‘செஸ்’ விளையாடிக்கொண்டிருப்பார். முதன்மையாகச் சொல்லக்கூடிய சிந்தனையாளரில் இவர் ஒருவர்.

விழுப்புரம் முனிசிபல் தலைவர் ஸ்ரீ. எஸ். சிதம்பரய்யர் கொஞ்சம் தாமதமாகவே ஜெயிலுக்கு வந்தவர். நான் கைதியாகித் தண்டனை யடைந்து வேலூருக்குப் போனபோது விழுப்புரத்தில் ஒரு நண்பரை, ‘ஸ்ரீ. சிதம்பரய்யர் எப்பொழுது சத்தியாக்கிரகம்?’ என்று கேட்டேன். ‘அவர் செய்யப் போவதில்லை!’ என்று ஒருவன் திடீரென்று பதில் சொன்னான். ‘கண்டிப்பாகச் செய்வார்’ என்றேன். இதற்குள் என்னுடன் வந்த போலீஸ் உத்தியோகஸ்தர்கள் அந்த நபரை என்னிடம் பேசுவதினின்றும் தடுத்துவிட்டார்கள். எட்டுத் தினங்களில் ஸ்ரீ. சிதம்பரய்யர் தண்டனையாகி வேலூர் சிறைக்கு வந்துவிட்டார்.

திருச்சி சிறையிலிருக்கும் பொழுது எத்தனையோ ஊர்களிலிருந்து பலாப் பழங்கள் வந்தன. மலபார், திருச்சி, சேலம் இந்த ஜில்லாக்களின் பலாப் பழங்களைப் பார்க்கிலும், வேறு எந்தப் பலாப் பழங்களைப் பார்க்கிலும், ஸ்ரீ. சிதம்பரய்யர் வரவழைத்துத் தந்த பலாப் பழங்களே சிறந்தவையாயிருந்தன.

ஸ்ரீ. கோட்டி ரெட்டி கோரங்கியி லிருந்தவர்களில் முக்கியமான ஒருவர். ஜெயிலுக்கு வந்த பின்பு இவர் மீசையை எடுத்துவிட்டார். இவருடைய மனைவி கடப்பா ஜில்லா போர்டுத் தலைவி ஸ்ரீமதி ராமசுப்பம்மா திருச்சிக்கு வந்து தம் கணவரைப் பார்த்த பொழுது, 'உங்களை யார் மீசையை எடுக்கச் சொன்னது?' என்று கோபித்துக் கொண்டாராம். ஆகவே திரும்பவும் மீசை வளர்த்துவிட்டார் ஸ்ரீ. கோட்டி ரெட்டி.

மலபாரிலிருந்து வந்திருந்த ஸ்ரீ. ராகவ மேனன் சென்னை அஸெம்பிளியில் நான் நன்ருய்ப் பழகியவர்களில் ஒருவர். போன முறை வேலூர் ஜெயிலில் 'அலிபாபா கிளப்' என்று ஒன்று இவர் நடத்தி வந்ததாக என்னிடம் சொன்னார். அங்கே அரசியல் கைதிகள் இருந்தார்களாம். 'அலிபாபாவும் நாற்பது......ளும்' என்று அந்தக் கிளப்புக்குப் பேர் வைத்துக் கொண்டார்களாம். அதற்குத் தலைவர் ஸ்ரீ. ராகவ மேனன்.

சென்னைச் சட்டக் கல்லூரியில் வாசித்து மாணவர் இயக்கத்துக்குப் பலம் கொடுத்துவந்த ஸ்ரீ. ஆர். அச்சுதன் இவர் குமாரர். தந்தையைப் போல் குமாரரும் தேச சேவை செய்து, இந்தியப் பாதுகாப்புச் சட்ட விதிகளின் கீழ்க் கைதியாகி ஜெயிலில் இருக்கிருர். ஆனல், ஸ்ரீ. அச்சுதன் திருச்சி ஜெயிலில் இல்லை; அவர் சத்தியாக்கிரகியும் இல்லை.



டி. வி. ராமஸ்வாமி,
பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ.



எம். அனந்தசயனம் அய்யங்கார்
பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ.

இராமநாதபுரம் ஜில்லா போர்டுக்குத் திரும்பவும் உப தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாகனேரி ஸ்ரீ. ஆர். வி. சுவாமிநாதனிடத்தில் நான் விடை பெற்றுக்கொள்ளும் பொழுது அவருடைய மனவருத்தம் கண்களிலே தெரிந்தது. ஜெயிலில் இருக்கும் பொழுதே மீண்டும் உபதலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அளவுக்குச் செல்வாக்கு வாய்ந்தவர் இவர். பல வருஷங்கள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினராக இருந்திருக்கிறார். இன்னும் இளைஞராகவே இருக்கிறார்.

அடுத்தாற்போல் இருந்தவர் கும்பகோணம் அட்வகேட் ஸ்ரீ. ஸி. எல். ஆராவமுதய்யங்கார். இவர் ஆங்கிலத்தில் நல்ல எழுத்தாளர். ஜெயிலில் தம் மனத்தில் எழுந்தவைகளை வெகு ரஸமாக எழுதி வைத்திருக்கிறார். என்னிடம் பக்கம் பக்கமாக வாசித்துக் காட்டினார். ஒவ்வொரு பக்கத்திற்கும் பல தடவைகள் நான் சிரித்தேன். சிரித்துக் கொண்டே அவரிடத்தில் விடைபெற்றுக் கொண்டேன்.

தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து பல நண்பர்கள் வந்திருந்தார்கள். தஞ்சை திருச்சி இந்த இரண்டு ஜில்லாக்களுக்கும் திருச்சியில்தான் சிறை இருக்கிறது. ஸ்ரீ. பூவராகன் சென்னை அஸெம்பிளி அங்கத்தினர். இவர் வெகு சீக்கிரமாகவே ஜெயிலுக்கு வந்தவர்களில் ஒருவர். இவருக்குச் சில்லறை மாதங்களா யில்லாமல் முழு வருஷத் தண்டனை. இவர் எல்லோருக்கும் உதவியாக இருப்பவர்.

இவர் சிறையிலிருக்கும் பொழுது ஒருநாள் இவருடைய தாயார் இறந்துவிட்டதாக யாரோ ஒரு பொய்த் தந்தியை அனுப்பிவிட்டார்கள். அதைக் கண்டதும் இவர் துடிதுடித்து விட்டார். அப்பால் அந்தச் செய்தி பொய் என்று தெரிந்ததும், நாங்கள் எல்லோரும் இவருடன் சேர்ந்து சந்தோஷப்பட்

டோம். அந்தப் பொய்த் தந்தி இவருடைய மாத்ரு பக்தியை விளக்க உதவிற்று.


இவ்வாறு ஆங்காங்கு அமர்ந்திருந்த ஒவ்வொரு நண்பரிடமும் சென்று விடை பெற்றுக்கொண்டேன். 'மறந்து விடக் கூடாது! போய்வருகிறேன்!' என்பேன். அவர்கள், 'ஆஹா!' என்பார்கள். அய்யம்பேட்டை பஞ்சாயத்து போர்டுத் தலைவர், திருவாரூர் ஸ்ரீ. குப்புசாமிபிள்ளை, காஞ்சிவரம் முனிசிபல் தலைவர் டாக்டர் பி. எஸ். ஸ்ரீனிவாசன் முதலிய நண்பர்கள் மறக்க முடியாத முறையில் என்னுடன் பழகியவர்கள். நான் விடுதலை யடைந்த பின்னும், டாக்டர் ஸ்ரீனிவாசன் கைகளில்லாத பனியனும் நிஜாரும் அணிந்து, என் கண் முன்பு நிற்பது போலிருக்கிறது. ஸ்ரீ. குப்புசாமிபிள்ளை ஜெயிலுக்கு வந்த பிறகு இரண்டே ஜோலிகள்தான் முக்கியமாகச் செய்துவந்தார். ஒன்று, தாடி மீசை வளர்ப்பது; மற்றது, இவற்றை வளர்ப்பது அவசியந்தானா என்று ஆராய்வது. இப்படி ஒவ்வொருவரைப் பற்றியும் சில விசேஷங்கள் உண்டு. அவை வெறும் உடைகளைப் பற்றியோ, குணங்களைப் பற்றியோ இருக்கலாம். ஆனால் அவை மெல்லிய பட்டு நூல்களைப் போல் அந்தந்த நண்பர்களை நம்மோடு சேர்த்துப் பிரிக்க முடியாமல் கட்டிவிடுகின்றன.

ஜெயிலில் கைதிகள் உபயோகிக்கக்கூடாத வார்த்தை ஒன்றுதான் உண்டு. அதுதான் 'போய்வருகிறேன்' என்பதிலுள்ள '**வருகிறேன்**' என்ற சொல். சாதாரணக் கைதிகளிடம் 'போய்வருகிறேன்' என்று யாராவது சொன்னால், அவர்களுக்கு மகா கோபம் வந்துவிடும். 'நாங்கள்தான் இன்னும் இங்கே இருந்து தொலைகிறோம். நீ ஏன் இன்னும் இந்த நரகத்திற்கு "வருகிறேன்" என்கிறாய்?' என்பார்கள் ஆனால், சத்தியாக்கிரகிகளுக்குப் 'போதலும்' 'வருதலும்' ஒன்றுதான் அல்லவா!



கே. சக்தி வடிவேலு கவுண்டர்,

எம்.எல்.ஏ.



கே. எஸ். பெரியசாமி கவுண்டர்,

எம்.எல்.ஏ.

18. விடுதலை

1941-ஆம் வருஷம், மேமீ 23உ, வெள்ளிக்கிழமை காலை. அதிசீக்கிரமாகவே நான் எழுந்துவிட்டேன். அன்று தான் என் விடுதலை நாள்.

ஜெயிலில் விடுதலை தினத்திற்கு முதல் நாள் இரவு தூக்கம் சரியாக வருவதில்லை யென்று முன்பு விடுதலையான நண்பர்கள் பலர் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். மதுரை ஜில்லாவைச் சேர்ந்த ஸ்ரீ. கே. சக்திவடிவேல் கவுண்டர் இப்படியே தூக்கமில்லாம லிருந்தார். ஸ்ரீ. 'சக்தி' ஜெயிலில் சந்தோஷமாகத்தான் இருந்தார். அனாவசியமாகத் தம்மை ஒன்றுக்கும் வருத்திக்கொள்ள மாட்டார். சென்ற அஸெம்பிளித் தேர்தலில் ஸர் பி. டி. ராஜனைத் தோற்கடித்தவர் இவர்தான். இவரைப் பார்த்தால், 'இவரா ஸ்ரீ. பி. டி. ராஜனைத் தோல்வியடையச் செய்தார்!' என்று ஆச்சரியமுண்டாகும். ஸ்ரீ. சக்திவடிவேல் கவுண்டர் கோரங்கியிலிருந்தவர்களில் ஒருவர். இவர்கள் முதலில் அங்கே இருக்கும்பொழுது சாதாரணக் கைதிகளையும் அங்கே அடைத்து வைத்திருந்தார்கள். இரவு 'லாக்-அப்' ஆனதும், அந்தக் கைதிகள் ஜெயிலில் கொடுக்கும் கம்பளிகளின் மூலம் ஒரு கொட்டறையிலிருந்து இன்னொரு கொட்டறைக்கு டம்ளர்களில் தண்ணீர்வைத்து அனுப்புவதைப் பார்த்துப் பார்த்து ஸ்ரீ. கவுண்டர் ஆச்சரியப்படுவதுண்டு.

ஸ்ரீ. கவுண்டரைப் பார்த்த பொழுது, ஒரு நாள், ' "நான்தான் ஸ்ரீ. பி. டி. ராஜனைத் தோற்கடித்தேன்!" என்று ஓர் அட்டையில் எழுதி, காலையில் நீங்கள் எழுந்திருக்

கும் பொழுது உங்கள் கண்ணில் படும்படியாக உங்கள் அறையில் நான் போடப் போகிறேன்' என்று சொன்னேன். இதற்குக்கூட அவர் அசையவில்லை. ஸ்ரீ. 'சக்தி' மேமீ 14உ விடுதலையானார். மதுரை ஜெயிலிலிருந்த தம் சகோதரரையும் அழைத்துக்கொண்டு அவர் ஊருக்குப் போயிருக்கிறார்.

மேமீ விடுதலையான முக்கியஸ்தரில் ஒருவர் அஸெம்பிளி அங்கத்தினர் ஸ்ரீ. டி. வி. ராமஸ்வாமி. இவர் ஸ்ரீ. கிரியின் மாமனார். நரைத்த தலையும் முதிர்ந்த தேசபக்தியும் உடையவர். இவர் அழகாகப் பாடுவார். பிரார்த்தனை செய்யும் பொழுது இவர் முதலில் பாடவும், மற்றவர்கள் பின்னால் பாடுவார்கள்.

முதல் நாள் பார்க்காதவர்களைக் காலையிலேயே சென்று கண்டு விடைபெற்றுக்கொண்டேன். அந்த நேரத்தில் சிறை வாழ்க்கையின் பல அம்சங்கள் உள்ளத்தில் தோன்றித் தோன்றி மறைந்தன. விடுதலையாகும் சமயத்தில் ராஜாஜியையும் பார்த்து ஆசி பெற்றுக்கொண்டேன்.

கேம்ப் ஜெயில் வாசலில் திரும்பவும் நண்பர்களிடம் விடைபெற்றுக்கொண்ட காட்சி மிகவும் உருக்கமாயிருந்தது. வீட்டுக்குப் போகிறோம் என்பது சந்தோஷமாயினும், விட்டுப் பிரியும் நண்பர்கள் யார் யார் என்பதைப் பார்க்கும் பொழுது, துக்கம் பொங்கி வந்தது. ஜெயிலினிடத்தில் எவ்வளவு வெறுப்பு இருந்ததோ, அவ்வளவு பிரியம் அந்த ஜெயில் வாசிகளிடத்தில் இருந்தது. மனம் ஊசலாடிக் கொண்டிருக்கும் அந்த நிலைமையில், டெபுடி ஜெயிலர் என்னை ஆபீஸுக்கு அழைத்துச் சென்றார்.

ஜெயில் ஆபீஸில் சாமான்களைப் பரிசோதிக்கும் சடங்கு நடந்தது. பின்னால் அங்க அடையாளங்களைச் சரி பார்த்து, 'இவர்தான் விடுதலையாக வேண்டியவர்' என்று

தீர்மானித்து, அதற்குப் பின்னால் என்னை விடுதலை செய்தார்கள். ஊருக்குப் போவதற்கு ரயில் 'வாரண்ட்' ஒன்றும் கொடுத்தார்கள்.

ஜெயில் வாழ்க்கையில் எனக்கு உணர்ச்சி அளவுகடந்து விட்ட முக்கியமான சமயங்கள் நான்குதான்: கைதியாகும் சமயம்; தண்டனை கொடுக்கப்படும் சமயம்; முதல் நாள் சாயங்காலம் ஜெயிலுக்குள்ளே கொட்டடியில் வார்டர் பூட்டும் சமயம்; கடைசியாக விடுதலையாகும் சமயம்.

சிறையை விட்டு வெளியே வந்தவர்களிடம் பல நண்பர்கள் சிறை வாழ்க்கை எப்படியிருந்தது என்று விசாரிப்பார்கள். இந்தக் கேள்வியை ஒருசமயம் நான் ஜெயிலுக்குள்ளேயே ஒரு நண்பரிடம் கேட்டேன். அவர்தான் குட்டப்பாளையம் ஸ்ரீ. கே. எஸ். பெரியசாமி கவுண்டர். அவர், முன்னால் 'பித்தன்' என்ற பத்திரிகையை நடத்திவந்தவர். அவரிடம் நான், 'ஜெயில் எப்படியிருக்கிறது, பெரியசாமி?' என்று கேட்டதும், அவர் பதில் சொல்லவில்லை; — ஆனால், உடனே தமது பெட்டியைத் திறந்து, ஒரு காகிதத்தை என்னிடம் கொடுத்தார். அதில் கீழ்க்கண்ட விஷயம் எழுதப்பட்டிருந்தது:

'கிளி நேர்த்தியான தங்கக் கம்பியால் செய்த கூண்டில் அடைக்கப்பட்டிருக்கிறது. அழகிய இள நங்கை பாலும் பழமும் உபசரித்து உபசரித்து ஊட்டுகிறாள். தேன் மொழியில் இனிய செந்தமிழைக் கொஞ்சுதலோடு போதிக்கிறாள். இருபத்திநான்கு மணி நேரமும் கிளிக்கு ஓய்வுதான். பறந்து பறந்து பசிக்குப் பழம் தேடி அலையவேண்டாம். குச்சியும் கோலும் சேர்த்துக் கூடு கட்டவேண்டாம். நிம்மதியாக நிர்விசாரத்தோடு உண்டு உறங்கலாம். குமரியோடும் குழந்தைகளோடும் கோலாகலமாகப் பேசிக் காலம் கழிக்கலாம்.

‘ ஆனால், அந்தோ! கூண்டுக் கிளி தூங்கி விழுந்து ஏக்கம் பிடித்து இடிந்து கிடக்கிறது. எண்ணமெல்லாம் விடுதலையாய், ஏக்கமே உருவாய், தன்னையே வெறுத்துத் தவிக்கிறது.

‘ இந்த மாகாணத்திலுள்ள அறிவாளிகள், கலைவிற்பன்னர்கள், தேசபக்தர்கள் இவர்களில் பலர் என்னுடன் இங்கிருக்கிறார்கள். அவர்கள் என்னுடன் அன்புடனும் ஆதரவுடனும் கூடிப் பழகுகிறார்கள். வேண்டிய அளவு ஓய்வு இருக்கிறது, அறிவு வளர்ச்சிக்கும், கலைப் பயிற்சிக்கும், பொழுது போக்குக்கும் படிக்கப் பல புஸ்தகங்கள் கிடைக்கின்றன. தேடிப் பிடித்துப் பழக்கம் செய்துகொள்ள வேண்டிய தன்மையுடைய பல மேதாவிகள் பக்கத்திலேயே இரவு பகலாய் இருந்து வருகிறார்கள்.

‘ வெளியிலோ ஓய்வு கிடையாது. குடும்பத் தொல்லை, மற்றவர்கள் தொல்லை ஓயாமல் இருந்தே தீருகின்றன. சிறையிலிருக்கும் இந்த ஆறுமாத காலத்தில் அதிகம் படித்து அறிவை விசாலப்படுத்திக்கொள்ள வேண்டும்; தனித்திருந்து சிந்திக்கும் சக்தியை வளர்க்கவேண்டும்; அவ்வப்போது மனத்தில் எழும் எண்ணங்களைத் தமிழில் எழுதிப் பழகவேண்டும்; கட்டுத் திட்டமான வாழ்க்கை வாழ்ந்து தேகத்தைத் திடப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நான் போட்டிருந்த திட்டங்களில் ஒன்றுகூட நிறைவேறாமல் போய்விட்டது.

‘ சிறை யென்றால், பறவையானாலும்,
மிருகமானாலும், மனிதனானாலும், ஒரு
தேசமேயானாலும் ஒன்றுதான்! ’

———

Printed at the Jupiter Press, Madras.

இந் நூலிலுள்ள 26 உருவப் படங்களில், 'ராஜாஜி', ஸ்ரீ சத்தியமூர்த்தி, ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கம் மூவருடைய படங்களைத் தவிர மற்றவை யெல்லாம் சேலம் ஸ்ரீ ஏ. சுப்பிரமணியம் எழுதியவை. இவர் சென்னைச் சட்டசபை அங்கத்தினர். பன்முறை சிறை சென்ற தேசபக்தர்.

SHAKTI PRESS LTD., MADRAS